STIAN COLLEGE KOPAY
R TRUTH & JUSTICE

# பணம்

1992 1993



வர்த்தக மாணவர் மன்றம்

யா / கிறிஸ்த்தவக் கல்லூரி

கோப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தக மாணவர் மன்றத்திற்கும்,
"பற்று"வுக்கும் எமது வாழ்த்துக்கள்!

வர்த்தக நிறுவனங்களின் தேவையா?
அலுவலகப் பாவனைப் பொருட்களா?
வீட்டும் பாவனப் பொருட்களா?

சிறந்த தரம்! நிதான விலை!! உத்தரவாதம்!!!
இவற்றுடன் கூடிய மரத் தளபாடங்களைப்
பெற்றுக்கொள்ள

**கலைத் தளிர் மரத்தளபாட நிலையம்**
பலாலி வீதி,

**கோண்டாவில் சந்தி.**

தரம் நிறைந்த, சுவை மிகுத்த பாண் வகைகளைப்
பெற்றுக் கொள்ளவும், உள்ளூர் உற்பத்திகளான

- **குரக்கன் பணிஸ்**
- **கேக் வகைகள்**
- **கம்பு பிஸ்கட்**
- **பணிஸ் வகைகள்**

மற்றும் உள்ளூர் தானிய பிஸ்கட் வகைகளுக்கும்

மற்றும் பிஸ்கட் வகைகளுக்கும்

நீங்கள் நாடவேண்டிய இடம்

**மதுரம் பாண் உற்பத்தி நிலையம்**
பலாலி வீதி, உரும்பிராய்.
(கற்பக விநாயகர் ஆலய முன்பாக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்று

# 1992 1993

மலர்க் குழு:
செல்வன் ஆ. ஜெயபாலசிங்கம்
செல்வி செ. ஜெயசுதா

அட்டைப்பட ஓவியம்:
இராதாகிருஷ்ணன்

## வர்த்தக மாணவர் மன்றம்
## யா/கிறீஸ்தவக் கல்லூரி
## கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்று இதழுக்கு எனது வாழ்த்துக்கள்!

அறிவுப்பசிக்கு அருவிருந்தாய் அமைந்திருக்கும்
நிறைந்த புலமைக்கும் நிறைவாக நிமிர்ந்துநிற்கும்
குறைவில்லா வளமெல்லாம் குன்றாது விளங்கிநிற்கும்
தரமான கல்லூரி கோவைக்கோர் பெருமைதரும்.

எம்மக்கள் எல்லோரும் ஏற்றமுடன் கல்வி பெற,
அறியாமை இருள்நீக்க அயராது பாடுபடும்
அதிபரதும் ஆசான்கள் அனைவரதும் முயற்சியினால்
மன்றங்கள் பல அமைத்து மாணவரை வளப்படுத்தும்.


அஞ்ஞானம் அகற்றிட விஞ்ஞானத் துறையிலும்
வளமான வாழ்வுபெற வணிகத் துறையிலும்
கலங்காமல் களிப்படைய கலைத்துறையிலும்
கருத்துடனே கடமையுடன் கல்விதனைக் கற்றிடுவர்.

காலத்தின் இடர்கள் பாதிப்பை தந்திடினும்
கருதிய கருமத்தை கணமேனும் மறவாமல்
சீரான அறிஞர்களின் சிறப்பான கருத்துக்களை
பேரேட்டில் பதித்த மன்றப்பணியதனைப் பாராட்டி

சுந்தரத் தமிழில் சொற்களை வடித்தெடுத்து
சுவையான வாழ்த்ததனை சுதந்திரமாய்க் கூறுகின்றேன்.
வணிகமன்றத்தின் வளமான வளர்ச்சிக்கு
பற்றுடன்பற்றிப் பல மலர்கள் மலரவேண்டும்.

யா/ கோப்பாய்க் கிறீஸ்தவக் கல்லூரி, சி. சிவலிங்கம்
கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தியாகத்தின் வேள்வியிலே
# தீபங்கள் ஆனோர்க்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் ஆசியுரை...

விஞ்ஞானத்தின் விந்தைமிகு மாற்றங்களை விஞ்சி, பண்டைக் காலத்தில் பண்டமாற்றுத் துறையாக விளங்கிய வாணிபம் இன்று நவீன உத்திகளுடன் கூடிய முன்னணித்துறையாக விளங்குகின்றது. இத்தகைய சிறப்புமிகு துறை இலங்கையின் கல்வி கலைத்திட்ட அமைப்பில் தொழில்நுட்பக் கல்வியின் ஒரு கூறாக அமைக்கப்பட்டுள்ளது. பெருந்தொகை மாணவர் விரும்பிக் கற்கும் ஓர் துறையாகத் திகழ்கின்றது எனின் அது மிகையாகாது.

எமது கல்லூரியின் வணிக மன்றத்தினர் கையெழுத்துப் பிரதியாகப் பல நூல்களை வெளியிட்டனர். இன்று அவர்களின் அணையாத ஆர்வம் காரணமாக வணிகததுறைக்கு நல்லதொரு வழிகாட்டி நூலாகப் 'பற்று' என்னும் நூலை வெளியிடுகின்றனர். எமது கல்லூரி வரலாற்றில் வணிக மன்றத்தின் இத்தகைய செயற்பாடு பாராட்டுக்குரியதே.

இன்றைய கஷ்டம்மிகு காலகட்டத்திலும் மன்றத்தின் செயற்பாடு வியப்புக்குரியது ஒன்று. ஆசிரியர் மாணவர் இருவரின் கூட்டு முயற்சியாலும் மாணவரது கூட்டுணர்வாலும் இம் மன்றம் திறம்பட செயலாற்றுவதுடன் பொதுத் தேர்வுகளில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை தேடித் தருகின்றனர்.

'பற்று' என்னும் நூல் மாணவர்க்கு வணிகத் துறை சார்ந்த பல விடயங்களை சாறாகப் பிழிந்து ஊட்டுகின்றது. அறிவுத் தாகம் தீர்க்கின்றது.

இம் மன்றத்தின் செயற்பாடுகளில் ஆர்வமுடன் உழைக்கும் ஆசிரியர்கள் மாணவர்கள் யாவரும் பாராட்டுக்குரியவர்கள். 'பற்று' என்னும் மலர் குறிஞ்சி மலராகத் திகழாமல் மல்லிகையாக மணம் வீச வேண்டும். இம் மன்றம் மென்மேலும் வளர்ச்சி உற்று சிறந்த தொண்டாற்றிட எனது நல்லாசிகள்.

வாழ்க வணிக மன்றம்!


வளர்க அதன் சேவை!

கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி
கோப்பாய்

த. முத்துக்குமாரசாமி
அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எமது கல்லூரி வளர்ச்சியில்
எமது அன்பான அதிபர்



திரு. த. முத்துக்குமாரசாமி, B. A. Dip - in - Ed.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடமாநிலக் கல்விப் பணிப்பாளரின் ஆசியுரை

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் வணிக மன்றத்தினர் "பற்று" என்ற சஞ்சிகையை வெளியிடுவதை அறிந்து அளவில்லா ஆனந்தம் அடைகின்றேன். கல்லூரியின் உன்னதமான வளர்ச்சிக்கும், உயர்வுக்கும் முழுமையாகத்தம்மை அர்ப்பணித்து அரும்பணியாற்றும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் இச்சந்தர்ப்பத்தில் பாராட்டுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். கோப்பாய் கிறீஸ்தவகல்லூரி எழில் மிகு இயற்கைச் சூழ்நிலையில் அமைந்துள்ளது. இயற்கை அழகில் தனித்துவமாக விளங்குவதுபோல கல்வி அழகிலும் தனித்துவத்தைப் பேணுகின்றது. கல்லூரியின் வளர்ச்சியிலே அதிபர் திரு. த. முத்துக்குமாரசாமி தம்மை முழுமையாக அர்ப்பணித்து சிறந்தமுறையில் பணியாற்றுகின்றார். அண்மைக் காலங்களில் இருந்து சகலதுறைகளிலும் கல்லூரி, முன்னணிக்கு வந்துகொண்டிருக்கிறது. இக்கல்லூரியிலே பல்வேறு மன்றங்கள் அமைந்து அதன் செயற்பாடுகள் ஊடாக மாணவர்களது அறிவு விருத்தியையும், ஒழுக்கத்தினையும் சிறப்பாகப் பேணிவருகின்றார்கள். ஆண்டுதோறும் மன்றங்களின் வெளியீடுகள் வெளிவருகின்றன. அந்த வகையில் வணிக மாணவ மன்றத்தினரும் தங்களது கன்னி முயற்சியாகப் பற்றினை வெளியிடுகின்றனர்.

வணிகத்துறை சார்பான நல்ல பல ஆக்கங்களை மலரில் உள்ளடக்கி உள்ளனர். அறிவுப்பசியில் வாடியிருக்கும் மாணவர்களுக்கு ''வாடும் பயிருக்கு வான்மழை போல்" இச் சஞ்சிகை அமைந்துள்ளது. இதில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் மாணவர்களது வணிகக்கல்விக்கு ஊக்கம் தரும் என்பது எனது நம்பிக்கை. கல்லூரி அமைந்துள்ள பிரதேசம் பண்டைக்காலத்தில் பல அறிஞர்களை உருவாக்கித்தந்து தமிழ்மக்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பெருமைசேர்த்த ஊர் என்பதுவும் இவ்விடத்தில் நினைவு கூரத்தக்கது. இந்த வரலாற்று நிகழ்வுகளை மனம்கொண்டு கல்லூரியின் சகல செயற்பாடுகளும் அமையவேண்டும் என விரும்புகிறேன். எதிர்காலத்திலும் நல்ல பல அறிஞர்களையும் வணிகத் துறைசார்ந்த வல்லுநர்களையும் கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரியின் வணிகமாணவ மன்றத்தினர் உருவாக்கித் தர வேண்டும். கல்லூரியின் வரலாற்றைப் பின்நோக்கிப் பார்க்கின்ற பொழுது கடந்தகாலத்திலும் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் பொற்காலமாகத் திகழ்ந்துள்ளது. மீண்டும் அந்தப் பொற்காலத்தைப் புதுப்பித்துக்கொள்ள முற்பட்டிருக்கும் இவ்வேளையில் பொற்காலம் வருவதற்குரிய ஒளிக்கீறுகள் தென்படுகின்றன. நிச்சயமாக ஒளி மிக்க, வளம் மிக்க, சிறந்த கல்லூரியாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

பற்றில் பற்றுவைத்து வணிகக் கல்விக்கு வளமூட்டும் நோக்குடன் மலர் வெளிவருகின்றது. திரைகடல் ஓடித் திரவியம் தேடும் ஆர்வம் பண்டைய காலம்தொட்டே இருந்து வருகின்றது. இன்றைய உலகில் மிக விரைவாக வளர்ந்துள்ள துறைகளில் வணிகத்துறையும் ஒன்று. விஞ்ஞானத் தொழில்நுட்பத் துறைகள் விருத்தி கண்டதுபோல வாணிபமும் விரிவு கண்டுள்ளது. இத்துறைசார்ந்த நுட்பங்கள் பல உள. இந் நுட்பங்களையும் அறிவினையும் மாணவர்கள் அறிந்து கொள்ளவும் அதனை விருத்திசெய்யவும் வணிக மன்றத்தினர் தொடர்ந்து பணியாற்ற வேண்டும். பற்று எல்லோரிலும் பற்றி விரிவடைந்து வளரவேண்டுமென இறைஅருளை வேண்டுகின்றேன்.

நன்றி.

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

இரா. சுந்தரலிங்கம்



# பிரதிக் கல்விப் பணிப்பாளர் (வர்த்தகம்)
## அவர்களின்
# ஆசிச்செய்தி

யா/ கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி ''பற்று'' என்னும் கன்னி மலரை வெளியிட்டு வர்த்தக் கல்வித்துறைக்கு மெருகூட்டுதலையிட்டு பெருமையும் பெருமிதமும் அடைகின்றேன்.

பல இன்னல்கள், நெருக்கடிகள் மத்தியிலும் இந்தஇதழை வெளியிட அரும்பாடுபட்டவர்கள் அனைவரையும் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

காலத்தின் தேவையை உணர்ந்து பயனுறுதிமிக்க ஆக்கங்களை தன்னகத்தே கொண்டிருக்கும் இம்மலர் வர்த்தகக் கல்வியை மேற்கொள்வோர் அனைவருக்கும் பேருதவியாக அமையும் என்பது வெள்ளிடைமலையாகும்.

தொடர்ந்துவரும் ஒவ்வொரு ஆண்டும் "பற்று'' பயன்மிக்க ஆக்கங்களுடன் வெளிவரவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

வாழ்க! வளர்க! "பற்றின்'' பணி.

சி. சிவராசா
பி. க. ப.

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
93-06-24



மருதனார்மடம் கல்விக்கோட்ட

## பிரதிக் கல்விப் பணிப்பாளரின்

# ஆசியுரை

யா/கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி வணிக மாணவர்மன்றம், வணிக சஞ்சிகை ஒன்றினை வெளியிட முன்வந்ததையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன். இவ்வகைப் பாடசாலைச் சஞ்சிகைகள் மாணவர்களின் முழுமையான கல்வி வளர்ச்சிக்கு வழி வகுப்பதனால் இச்சஞ்சிகைக்கு நல்ல வரவேற்பு இருக்குமென நம்பலாம்.

வளர்ச்சி அடைந்து வரும் ஒரு நாட்டில் வர்த்தகக்கல்வி முக்கியத்துவம் பெறுவதால் இன்று மாணவர்களின் நாட்டம் வர்த்தகக் கல்வியில் திரும்பி இருப்பதை நாம் எல்லோரும் அறிவோம். இது வரை காலமும் விஞ்ஞானக் கல்விக்கு மாணவர்களிடம் இருந்த நாட்டம் இன்று வணிகத்துறைக் கல்வியில் திரும்பியுள்ளதால பெரும எண்ணிக்கையிலான மாணவர்கள் வணிகத்துறையில் உயர்கல்வி பெற முன்வந்துள்ளனர். இவர்களின் கல்வித் தேவைகளை இதுபோன்ற சஞ்சிகைகள் பூர்த்து செய்ய வேண்டும். வணிகத் துறைக்கல்வியில தேர்ச்சி பெற்ற பலரின் கட்டுரைகளை உள்ளடக்கும் இச் சஞ்சிகையால் மாணவர்கள் பயன் பெறவேண்டும்.

இன்றைய கஷ்டமான சூழ்நிலையிலும் மாணவர்களின் வர்த்தகக் கல்வி மேம்பாட்டினைக் கருத்தில் கொண்டு இச் சஞ்சிகையினை வெளியிட முன்வந்த வணிக மாணவ மன்றத்தினரின் முயற்சி பாராட்டப்படத்தக்கது. இம் மாணவர்களுக்கு பக்கபலமாக நின்று வழிகாட்டி அவர்களை ஆக்கபூர்வமான முறையில் செயற்பட வைத்த அதிபரினதும் ஆசிரியர்களினதும் பணி விரும்பத்தக்கது.

இவ்வகைச் சஞ்சிகைகள் தொடர்ந்தும் வெளிவந்து மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை வளமாக்க உதவவேண்டும் என வாழ்த்துகிறேன்.

| | |
|---|---|
| கோட்டக்கல்வி அலுவலகம், | **இ. சிவானந்தன்** |
| மருதனார் மடம் | பிரதிக் கல்விப் பணிப்பாளர் |
| 23. 06. 1993 | மருதனார் மடம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். பல்கலைக்கழக

வணிக முகாமைத்துவத் துறைத்தலைவரின்

# ஆசிச்செய்தி


உலகின் எந்தவொரு சமூகத்தின் வளர்ச்சியும் இன்று வணிக முகாமைத்துவ வளர்ச்சியுடன் இணைந்ததாகக் காணப் படுகின்றது. இன்று வர்த்தகக்கல்வி பெரும்பாலான மாணவர் களைக் கவரும் துறையாகவும் மாறியுள்ளது. இதன் காரண மாகவே பெரும்பாலான தமிழ் மாணவர்களும் இன்று வர்த் தக்கல்வியை விரும்பிக்கற்கின்றனர்.

தமிழ் மாணவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என்ற பயன்தரு பணிகளில் ஒன்றாகவே வர்த்தக சஞ்சிகைகள் வெளியிடப்படுகின்றன. இத்தகைய பணியில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் வர்த்தக மாணவர் மன் றம் ஈடுபட்டிருப்பது பெருமைக்குரியதாகும்.

மிகக் கடினமான இச் சூழ்நிலையில் ''பற்று'' என்ற வர்த் தகத்தின் அடிநாதத்தை தனது பெயராகக்கொண்டு கன்னி வெளியீடாக இச்சஞ்சிகைவெளிவருகின்றது. இப்பணிஎதுவிதத் தடையுமின்றி எதிர்காலத்திலும் தொடரவேண்டுமென வாழ்த் துவதுடன், எனது பாராட்டையும் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி யடைகின்றேன்.

மா. நடராச்சுந்தரம்
வணிக முகாமைத்துவத் துறைத் தலைவர்,
யாழ். பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மன்றப் பொறுப்பாசிரியரின்

## ஆசியுரை

யா/ கோப்பாய் கிறீஸ்தவக்கல்லூரி வணிக மாணவர் மன்றம் முதன்முதலாக "பற்று" சஞ்சிகையை வெளியிடுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். மன்றத்தின் நீண்டநாள் ஆசை இன்று நிறைவேறுகின்றது. நடப்பு வருட நிர்வாகிகள் முழு மனதுடனும், சிறந்தமுறையிலும் செயற்படுகின்றனர். இவர்களது முன்மாதிரி வளர்ந்துவரும் மன்றத்தின் எதிர்கால நிர்வாகிகளுக்கும் வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை.


கன்னி முயற்சியாக மலர் வெளிவருகின்றது. எனினும் பொலிவுடனும், மாணவர்களது அறிவுப்பசியைப் போக்கவல்ல நல்ல பல ஆக்கங்களைக்கொண்டதாகவும் மலர் காணப்படுகின்றது. வளர்ந்துவரும் வணிகக்கல்விக்கு பற்று வளமூட்டும் வகையில் தொடர்ந்து வெளிவரவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

நன்றி.

யா/ கோப்பாய் கிறீஸ்தவக்கல்லூரி,
கோப்பாய்.

வை. தவராசா
பொறுப்பாசிரியர்,
வர்த்தக மாணவர் மன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தலைவரின்

## பார்வையில்....



எமது கல்லூரியின் வளர்ச்சிப் படிகளில் அண்மைக்காலம் தொட்டு இன்றுவரை பொற்காலம் என்றால் மிகையன்று. சிறப்பும் வனப்பும் மிக்க அழகிய இயற்கைச் சூழலில் அமைந்து அறிவொளி பரப்பி வருகின்றது கிறீஸ்தவ கல்லூரி. வணிக மாணவர் மன்றம் கன்னி முயற்சியாக பற்று சஞ்சிகையை வெளியிடுகின்றது. ஆக்கமும் ஊக்கமும் தந்து எங்களை வழிப்படுத்திய அதிபரின் செயற்திறன் சஞ்சிகை வரவுக்கு உந்து சக்தியாக இருக்கின்றது. மலர் வரவுக்கு மெய்வருத்தம் பாராது அல்லும் பகலும் உழைத்த மன்றத்து உறுப்பினர்களின் செயற்பாடுகள என்றும் நினைவு கூரத்தக்கது. கன்னிவெளியீடான பற்று தொடர்ந்து ஆண்டு தோறும் உள்ளங்களைப் பற்றிக் கொள்ளக் கூடிய வகையிலே வெளிவர மன்றம் செயலாற்றும். மன்றத்தின் பணிகள் வணிகக்கல்விக்கு வளம் ஊட்ட இறையருளை வேண்டுகின்றேன்.

நன்றி

இ. ர்குமார்
தலைவர்

கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி, வர்த்தக மாணவர் மன்றம்
கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செயலாளர் பார்வையில்

''அறிவினிலே தெளிவு நெஞ்சிலே உறுதி

அகத்திலே அன்பினோர் வெள்ளம்'' என்ற பாரதி கூற்றுக்கு அமைய வணிக மன்றத்தினர் கருமம் ஆற்றினார்கள். அவர்களது மனம் நிறைந்த சேவை மன்றம் துரிதகெதியில் வளர்வதற்கு உதவியது. பல்வேறு சிரமங்கள் மத்தியிலும் மலரை வெளியிடுவதில் மாணவர்கள் காட்டிய ஆர்வம் வருங்கால மாணவர்களுக்கு வழிகாட்டியாக அமையுமென நம்புகின்றேன். வணிகத்துறை வளம்பெற்று வளர்வதற்கு மன்றம் தொடர்ந்து பணிபுரியும். பற்று அனைத்து துறைசார்ந்தவர்களையும் பற்றிநின்று வணிகத்துறை சிறப்புற ஆண்டுதோறும் வெளிவருவதற்கு முயற்சிகள் எடுக்கப்படவேண்டும். இதற்கு இறையருளை வேண்டுகின்றேன்.

நன்றி.

கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி,
கோப்பாய்.

கே. என். சுதாஜி
செயலாளர்,
வர்த்தக மாணவர் மன்றம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வணிக மன்ற

# ஆரம்பத் தலைவரின்

## பார்வையில்...

நீண்டநாட்களுக்கு முன் கண்ட கனவு இன்று நிறைவேறுகின்றது. ''பற்று'' மாணவர்களைப் பற்றிக்கொள்ளும் வகையில் வெளிவருவது எங்கள் உள்ளங்களை மனம்நெகிழ வைக்கின்றது. கிறீஸ்தவக் கல்லூரியில் வர்த்தக மாணவர் மன்றத்தை நிறுவிய காலகட்டத்தில் வருடாவருடம் மலர் வெளியிடக்கூடியவாறு மன்றச்செயற்பாடுகள் அமையவேண்டும் என ஆவலுற்றோம். ஆனால் கடந்தகாலத்தில் செய்யமுடியாமல் போய்விட்டது துரதிர்ஷ்டவசமானது. இன்று மன்றத்தைச் சிறப்பாக இயக்கிவருவதுடன் அழகும்,சிறப்பும்மிக்க பற்று வெளியிடப்படுகின்றது. பற்று மாணவர் உள்ளங்களைப் பற்றிக் கொள்ளவேண்டும் எனவும், தொடர்ந்தும் வெளிவரவேண்டி இறைவனை வேண்டுகின்றேன்.

நன்றி.

ஆ. ஜெயபாலசிங்கம்
*ஆரம்பத் தலைவர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து...

கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரியின் வர்த்தக மன்றம் மாணவர்களது அறிவியல் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு அரிய பல பணிகளை ஆற்றிவருகின்றது. ஆர்வமும் செயற் திறனும் மிக்க மாணவர்கள் மன்றத்தின் வளர்ச்சிக்கு தமது பங்களிப்பை நல்கிவருகின்றனர். இம் மன்றத்தினரின் அரு முயற்சியால் வெளிவரும் பற்று என்ற சஞ்சிகை மாணவர்களின் அறிவுப்பசிக்கு நல்விருந்தாகும் என்பதில் ஐயமில்லை. ஆக்க பூர்வமான பல அம்சங்களை தன்னகத்தே கொண்டுள்ள பற் றுப்போல் தொடர்ந்தும் மாணவர்களுக்கு பயனளிக்கக்கூடிய நூல்கள் வெளிவரவேண்டும். அதற்கு வர்த்தகமன்றத்தினருக்கு எல்லாம்வல்ல இறைவன் துணைநிற்கவேண்டும். மன்றம் தன் பணிகளை இனிதே தொடர மனம்நிறைய வாழ்த்துகின்றேன்.

ஆசிரியர்

வர்த்தக மாணவர் மன்றம்.
யா/ கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமதுரை...

எமது வர்த்தக மாணவர் மன்றம் கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரியில் 1992 பங்குனி 20ஆம் தேதியன்று செல்வன் ஆ. ஜெயபால சிங்கம் அவர்களின் தலைமையில் உயிர்பெற்று இன்று ஓர் அகவையை முடித்துக்கொண்டுள்ளது.

இம்மன்றம் உருவாக்கப்பட்ட ஓரிரு வருட காலப்பகுதியினுள்ளேயே இவ்வாறான ஓர் கன்னி மலரினை வெளியீடுசெய்வதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம். ஆதலால்......

எமது மன்றத்தின் முதலாவது மலராக பற்று மலரினை உங்கள் கரங்களில் மகிழ்வுடன் அளிக்கின்றோம்.

இம் முயற்சிக்கு அல்லும் பகலும் உற்றதுணையாக இருந்த அதிபர், உப அதிபர், பொறுப்பாசிரியர், இதழாசிரியர், பெரும் பொருளாளர், மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரது ஆலோசனையும், ஊக்குவிப்பும், மாணவர்களின் அன்பான ஒத்துழைப்பும் பேருதவியாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் குறுகியகாலத்தில் கட்டுரைகளை எழுதிஉதவிய விரிவுரையாளர்கள், மாணவர்கள் தரமானவற்றைத் தெரிவுசெய்த ஆலோசனைக்குழுவினர், விளம்பரங்களைத் தந்துதவிய வர்த்தக ஸ்தாபனத்தினர், பற்றுச்சீட்டுகளை சிறந்தமுறையில் விற்பனைசெய்து உதவிய மாணவர்கள் ஆகியோரது பெருமன சேவையினை இம் மலர் பிரதிபலிக்கின்றது.

மேலும் அடுத்துவரும் வருடங்களிலும் பற்றுமலர் மென்மேலும் சிறப்புடன் அரிய பல பயன்தரு கட்டுரைகளைத் தாங்கி வெளிவர வேண்டும்என மனதார வாழ்த்துகின்றோம்.

நன்றி.


**வர்த்தக மாணவர் மன்றம்**
யா/ கிறீஸ்தவ கல்லூரி
கோப்பாய்,
1993.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழாண்டு நிர்வாகக் குழு 1992 - 1993

| | | |
|---|---|---|
| காப்பாளர் | - | திரு த. முத்துக்குமாரசாமி (அதிபர்) |
| | | திரு. இ. சகாதேவன் (உபஅதிபர்) |
| உபகாப்பாளர் | - | திரு. இ. சந்திரன் |
| பொறுப்பாசிரியர் | - | திரு. வை. தவராஜா |
| தலைவர் | - | செல்வன் இ. ரகுமார் |
| உபதலைவர் | - | செல்வி தி. தேன்மலர் |
| செயலாளர் | - | செல்வன் கே. என். சுதாஜீ |
| உபசெயலாளர் | - | செல்வி கு. சத்தியபாமா |
| பொருளாளர் | - | செல்வி தி. உமாதேவி (ஆசிரியை) |
| உபபெருளாளர் | - | செல்வன் பா. சண்முகநாதன் |
| பத்திராதிபர் | - | செல்வன் ஆ. ஜெயபாலசிங்கம் |
| | | செல்வி செ. ஜெயசுதா |
| விளம்பர முகாமையாளர் | - | செல்வன் ச. மகிந்தன் |
| | | செல்வன் கா. காந்தரூபன் |
| | | செல்வன் பா. கணேசராசா |
| | | செல்வன் க. பிரசாந்தன் |
| | | செல்வன் சுதர்சன் |
| விற்பனை முகாமையாளர் | - | செல்வன் இ. ரவிக்குமார் |
| | | செல்வி மு. ரேணுகா |
| | | செல்வி ம சுஜாதா |
| உதவி நிர்வாகக் குழு | - | செல்வன் தா. தயானந்தன் |
| | | செல்வன் க. செல்வரஞ்சன் |
| | | செல்வி சு. பத்மினி |
| | | செல்வி பா. வளர்மதி |
| | | செல்வி கு. ரஞ்சினி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இருப்பவர்கள்: (இடமிருந்து வலம்)

செல்வி தி. உமாதேவி (பெரும் பொருளாளர்) செல்வன் ஆ. ஜெயபாலசிங்கம், திரு. வை. தவராஜா (மன்றப் பொறுப்பாசிரியர்.) திரு. த. முத்துக்குமாரசாமி (அதிபர்) செல்வன் இ. ரகுமார் (தலைவர்) திரு. இ. சகாதேவன் (உப அதிபர்) செல்வன் ந. சுதாஜீ (செயலாளர்) திரு. சி. சந்திரன் (உப காப்பாளர்.)

நிற்பவர்கள் | ம் வரிசை: (இடமிருந்து வலம்)

செல்வி மு. ரேணுகா, செல்வி கு, ரஞ்சினி, செல்வி பா. வளர்மதி. செல்வி தி. தேன்மலர், செல்வி



**இருப்பவர்கள்:** (இடமிருந்து வலம்)

செல்வி தி. உமாதேவி (பெரும் பொருளாளர்) செல்வன் ஆ. ஜெயபாலசிங்கம், திரு. வை. தவராஜா (மன்றப் பொறுப்பாசிரியர்.) திரு. த. முத்துக்குமாரசாமி (அதிபர்) செல்வன் இ. ரகுமார் (தலைவர்) திரு. இ. சகாதேவன் (உப அதிபர்) செல்வன் ந. சுதாஜீ (செயலாளர்) திரு. சி. சந்திரன் (உப காப்பாளர்.)

**நிற்பவர்கள் 1 ம் வரிசை:** (இடமிருந்து வலம்)

செல்வி மு. ரேணுகா, செல்வி கு, ரஞ்சினி, செல்வி பா. வளர்மதி. செல்வி தி. தேன்மலர், செல்வி செ. ஜெயசுதா, செல்வி மு. சத்தியபாமா, செல்வி ம. சுஜாதா, செல்வி சு. பத்மினி

**நிற்பவர்கள் 2 ம் வரிசை** (இடமிருந்து வலம்

செல்வன் பா. கணேசராஜா, செல்வன் பா. சண்முகநாதன், செல்வன் ச. மகிந்தன், செல்வன் வெ. சுதர்சன், செல்வன் கா. காந்தரூபன்.

**இடம் பெறாதவர்கள்:**

செல்வன் க. பிரசாந்தன், செல்வன் இ. ரவிக்குமார், செல்வன் தா. தயானந்தன் செல்வன் க. செல்வரஞ்சன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்றின் பயன்கள்


**விடயம்** **பக்கம்**

வாழ்த்து

அதிபர் கருத்து

ஆசியுரைகள்

பொறுப்பாசிரியர் கருத்து

மன்றத் தலைவர் கருத்து

மன்றச் செயலாளர் கருத்து

ஆரம்பகால மன்றத் தலைவர் கருத்து

இதழாசிரியர் கருத்து

எமதுரை

வர்த்தக மாணவர் மன்றம் – 1993

**வர்த்தகமும் நிதியியலும்:**

1. இலங்கையின் தனியார்மயப்படுத்தலும், மக்கள் மயப்படுத்தலும் 1
2. பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழு 5
3. விற்பனையை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் விளம்பரத்தின் பங்கு 9
4. கணக்கியல் விகிதாசாரங்கள் 13
5. வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் 19

**கணக்கியல்:**

6. கணக்கியல் தகவல்களும் அதன் இயல்புகளும் 21
7. இலங்கைக் கணக்கீட்டு நியமம் 10 (S. L. A S. 10) 25
8. சொத்துக்களின் வகைப்படுத்தல் 29
9. தொகுதிக்கடன் மீட்டல் 33
10. பொதுக் கம்பனியின் பங்கு வழங்கல் 41


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயம் பக்கம்

**பொருளியல்:**

11. வறுமையும் இலங்கையில் அதன் போக்கும் 49
12. இலங்கையின் ஏற்றுமதி நோக்கிய கைத்தொழிலில் தயாரித்த ஆடையின் பங்கு 57
13. கோப்பாய்க் கிராம வளங்களும் – பயன்பாடும் 61
14. இலங்கைப் பொருளாதாரத்தில் கிராமிய விவசாயம் 65
15, வருமான விட்டப் பாய்ச்சல் அல்லது வருமானச் சுற்றோட்டம் 69
16. சிக்கனக் கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்களும் கிராமியப் பொருளாதாரமும் 73

**புவியியல்:**

17, ஒரு நாட்டின் வருமானமும் அது அந்நாட்டின் அபிவிருத்தியில் ஏற்படுத்தும் தாக்கங்களும் 75

**அரசியல்:**

18. குறைவிருத்தி நாடுகளில் பொருளாதார அச்சுறுத்தலை ஏற்படுத்தும் நவகாலனித்துவம் 79

**இந்து நாகரிகம்:**

19. வரலாற்றுக்கு முற்பட்ட ஈழத்தில் இந்துமதம் 87

**அளவையியல்:**

நியாயத்தொடை அனுமானம் 91
நன்றியுரை
கல்லூரி கீதம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் தனியார் மயப்படுத்தலும் மக்கள் மயப்படுத்தலும்

கந்தையா தேவராஜா
சிரேஷ்ட விரிவுரையாளர்
வணிக முகாமைத்துவதுறை,
யாழ். பல்கலைக்கழகம்

## 0.1 அறிமுகம்

இலங்கை சுதந்திரமடைந்த காலப் பகுதியிலிருந்து தேசிய மயமாக்கல் என்ற கொள்கை பிரபலம் பெற்று வந்துள்ளது. இதன் காரணமாக தனியாரிடமிருந்த பல முயற்சிகள் அரசுக்குச் சொந்தமானவையாக மாற்றம் பெற்று வந்தன. உற்பத்தித் துறையிலும் சரி, வர்த்தகத்துறையிலும் சரி அரசாங்க நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாயிற்று. குறிப்பாக 1956-1976க்கு இடைப்பட்ட இரு தசாப்த காலங்களில் அரசநிறுவனங்கள பெருமளவில் உருவாக்கப்பட்டன. இந்த வரிசையிலேயே 1957-ம் ஆண்டில் கைத்தொழிற் கூட்டுத்தாபனச் சட்டமும் 1970-ல் வியாபாரக கூட்டுத் தாபனச் சட்டமும் 1972-ல் விவசாயக கூட்டுத்தாபனச் சட்டமும் உருவாக்கப்பட்டு பல கூட்டுத்தாபனங்கள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன. அத்துடன் வேறுபல விசேட சட்டங்களும் உருவாக்கப்பட்டு புதிய கூட்டுத்தாபனங்கள் நடைமுறைக்கு வந்ததுடன் 1972-ல் தனியார் வியாபார சுவீகரிப்புச் சட்டம் இயற்றப்பட்டு தனியாருக்குச் சொந்தமான பல முயற்சிகள் அரசுககு உரித்தானவையாக மாற்றப்பட்டன.

இலங்கை அரசாங்கம் படிப்படியாகப் பல்வேறுபட்ட துறைகளிலும் தனது தலையீட்டினை அதிகரித்துவந்தது. இதன் காரணமாக மினசாரம், காப்புறுதி, போக்குவரத்து, வங்கி, தொடர்பாடல் போன்ற சேவைத் துறைகளிலெல்லாம் அரசாங்கமே ஏகபோக உரிமையையும் கொண்டிருந்தது. ஆனாலும் காலப்போக்கில் மூலதனப் பற்றாக்குறை, திறனற்ற நிர்வாகம், அளவுக்கதிகமான வேலைவாய்ப்பு, அரசியற் தலையீடு, ஆக்கச் செலவுக் கட்டுப்பாட்டின்மை போன்றனவற்றால் அரசுக்குச் சொந்தமான முயற்சிகள் திறனற்றவையாக மாறத் தொடங்கின. இந்நிலைமை அந்நிறுவனங்கள் நட்டமடையவும் அதன் காரணமாக திறைசேரிக்குச் சுமையாக மாறவும் வழி வகுத்தன. இத்தாக்கத்தை நிவர்த்திப்பதற்காக 1977-ல் பதவிக்கு வந்த அரசினால் முன்வைக்கப்பட்ட கோட்பாடே தனியார் மயமாக்கலாகும்.

## 2.0 தனியார் மயப்படுத்தல்

அரசுக்குச் சொந்தமான முயற்சிகளை தனியாருக்குச் சொந்தமாக மாற்றம் செய்தலே தனியார் மயப்படுத்தலாகும். இது இலங்கையில் மட்டுமன்றி உலகின் பல நாடுகளிலும் கைக்கொள்ளப்படும் ஒரு நடவடிக்கையாகும். பிரிட்டனில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட இந் நடவடிக்கை, சீனாவிலிருந்து செக்கோசிலவாக்கியா வரையான சமதர்ம நாடுகளிலும், இந்தியா, பாகிஸ்தான் போன்ற குறைவிருத்தி நாடுகளிலும் இடம்பெற்றுவரும் பிரபலமான செயற்பாடாகும். இந்த வரிசையிலேயே இலங்கையிலும் தனியார் மயமாக்கம் முக்கியம் பெறும் நடவடிக்கையாக மாறியுள்ளது. உலகவங்கி, சர்வதேச நாணயநிதியம், உதவி வழங்கும் நாடுகளின் குழு ஆகியன இலங்கை அரசாங்கத்தின் பொறுப்புகளைக் குறைக்கும் படியும், அரச தலையீடுகளைக் கட்டுப்படுத்தும்படியும், முயற்சிகளை இலாபகரமாகக்கொண்டு நடாத்தும் படியும் கேட்

டுக்கொண்டதற்கிணங்கவே தனியார் மயப்படுத்தல் இலங்கையில் அறிமுகமாகியது.

தனியார் மயப்படுத்தல் என்பது அரசுக்கு சொந்தமான முயற்சிகளைத் தனியாருக்குஉடமையாக்குவது எனப் பொருள் கொள்ளப்படும். ஆனால் திரு. அன்ரன் பாலசூரியா அவர்களின் கருத்துப்படி தனியார் மயப்படுத்தல் இவ்வாறு குறுகிய நோக்கில் பார்க்கப்படக்கூடாது என்றும் பரந்த நோக்கில் இது பார்க்கப்பட வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. இவரது கருத்துப்படி அரசியல் தலையீடு கொண்ட, வணிக நோக்கமற்ற பொதுத்துறை நிறுவனங்களை, இலாப நோக்குடையதும், அரசியற் தலையீடற்றதுமான தனியார் துறைக்கு மாற்றுவதே தனியார் மயப்படுத்தல் எனக்கொள்ளப்படுகின்றது. மறுபுறத்தில் தனியார் மயப்படுத்தல் என்பது சோஷலிசத்தை முதலாளித்துவம் சுவீகரிப்பது என்றோ, அரச சொத்துக்களை விற்று தனியார் இலாபம்பெறும நடவடிக்கையென்றோ அர்த்தம்கொளளப்படல் ஆகாது. உலகில் இடம்பெறும் மாற்றங்களுககேறப இலங்கையும் மாற்றமடையவேண்டியிருப்பதனால் இலங்கையில் பொருளாதார முறைகளிலும மாற்றம் கொண்டுவரப்படுதல் வேண்டும். எனவேதான் தனியார் மயப படுத்தலை குறுகிய வட்டத்தில் நோக்காது பொருளாதார ஜனநாயகம் என்ற பரந்த வட்டத்தில நின்று பார்க்கவேண்டுமென கொள்ளப்படுகின்றது.

இலங்கையிலே எந்தகைய முயற்சிகளை தனியார் மயப்படுத்தவேண்டும் என்பதனை ஆராய 1985-ம் ஆண்டில் ஜனாதிபதியால ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக் குழுவின் ஆலோசனைப்படி திறைசேரிக்குச் சுமையாக அமைகின்ற முயற்சிகளை தனியாரிடம் ஒப்படைத்து விடவேண்டும்எனக் கூறப்பட்டது. இந்த ஆலோசனைப்படி:

1. உடமைகளை முழுமையாக மாற்றுதல்.
2. உடமைகளைப் பகுதியளவில் மாற்றுதல்,
3. முகாமையை தனியாரிடம் ஒப்படைத்தல்.
4. தனியாரைப் போட்டியாக இயங்கவிடுதல்.

என்ற நான்கு கோணங்களில் தனியார் மயப்படுத்தல் கொண்டுவரப்பட்டது. இதற்கிணங்க 1987-ல் ''பொதுக் கூட்டுத்தாபனங்களையும் அரசுக்குச் சொந்தமான கம்பனிகளையும் பொதுக் கம்பனிகளாக மாற்றும் சட்டம்'' என்ற ஒன்று இயற்றப்பட்டது. இதன்கீழ் பால், புடைவை, சீனி, வடிசாலை, மின்சாரம், போக்குவரத்து, காப்புறுதி, வங்கித்தொழில் போன்றவற்றில் தனியார் மயமாக்கல் கொண்டுவரப்பட்டது. இத்தகைய தனியார் மயமாக்கல் நாட்டில் முதலாளித்துவக கொள்கைகளை வளாத்துத தனியாா தனியுரிமையை (Private Monopoly) ஏற்படுத்தும் என அரசியல் இலாபம பெறும் குறுகிய நோக்கும் கொணடோரால் எடுத்துரைக்கப்பட்டது. இதிலிருந்தும அரசு தனனைக காப்பாறறிக கொள்ள அறிமுகப்படுத்தியதே ''மக்கள் மயமாக்கல்'' என்பதாகும.

## 3,0 மக்கள் மயமாக்கல்

மக்கள் மயப்படுத்தல் என்பதற்கு விசேடமான கொள்கையோ அல்லது நடைமுறைகளோ கிடையாது. அரசியல்வாதிகளின தவறான பிரச்சாரத்தை நீக்குவதறகாகவே இக்கொள்கை அறிமுகபபடுத்தப்பட்டது. இதன் காரணமாகவே தனியார் மயப்படுத்தலின் தூய்மைப்படுத்திய பதமே மககள் மயப்படுத்தல் எனக் கூறப்படுகின்றது. கிளாஸ்கோ பல்கலைக்கழக பேராசிரியரின் கருத்துப்படி வெளிநாடுகளில் கடைப்பிடிக்கப்படும் தனியார் மயமாக்கலே இலங்கையில் மக்கள் மயமாக்கலாகக் காணபபடுவதாகக் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் தனியார் மயப்படுத்தல். நடவடிககைக்கும் மக்கள் மயப்படுத்தும நடவடிக்கைக்குமிடையே வேறுபாடுகள அதிகம் இல்லை; ஆனால் தனியார் மயமா

கலை விரும்பாத பொதுமக்கள் மக்கள் மய மாக்கலை வரவேற்கின்றனர். இதன் காரணமாகவே பல தனியார் நிறுவனங்கள் மக்கள் மயப்படுத்தப்பட்டுள்ளன. இதில் மூல தனம் திரட்டுவதில் மட்டுமே வேறுபாடுகள் உள்ளன. இதன்படி,

| | |
|---|---|
| உள்நாட்டு வெளிநாட்டுக் கம்பனிகள் | 60% |
| பொதுமக்கள் | 30% |
| தொழிலாளர் | 10% |

என்ற வகையில் மூலதனம் இடப்படும். இதில் தொழிலாளருக்குமட்டும் இலவசமான பங்குகள் வழங்கப்படும். இத்தகைய மக்கள் மயமாக்கப்படும் கம்பனிகளின் பங்குகளை திறைசேரியின் செயலாளர் வைத்திருப்பார். எனவே அவர் ''கேள்வி விற்பனை'' என்ற அடிப்படையை பொதுமக்களுக்கும் வெளிநாட்டுக் கம்பனிகளுக்கும் பங்குகளை விற்பனை செய்வார். எனவே தான் மக்கள் மயமாக்கப்படும் கம்பனிகளின் பங்குகளுக்குக்கூட மிக அதிகமான விலை பெறக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

## 4.0 மக்கள் மயப்படுத்தலின் நன்மைகள்

இலங்கை அரசாங்கம் மக்கள் மயப்படுத்தலை மிக வேகமாகவே மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது. இதற்குக் காரணம் இந்த மக்கள் மயப்படுத்தலினால் பல நன்மைகளைப் பெறமுடியும் என இருப்பதனாலாகும். குறிப்பாக,

1. அரசாங்க நிறுவனங்கள் எதிர்நோக்கும் நிதிப்பிரச்சினைகளைப் போக்கி மக்கள் மயப்படுத்தும் கம்பனிகளினால் பல மூலகங்களிலிருந்து நிதியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

2. இலாப நோக்கத்தை வலியுறுத்த முடிவதனால் அரச நிறுவனங்கள் அடைந்த நட்டத்தைத் தவிர்த்து திறைசேரியின் சுமையைக் குறைப்பதுடன் இலாபத்தை உழைத்துக் கொள்ளமுடிகின்றது.

3. வெளிநாட்டுக் கம்பனிகள் முதலீடு செய்ய முன்வந்திருப்பதனால் அந்நியத் தொழில்நுட்பங்களை இலகுவில் பெற்று நாட்டின் அபிவிருத்தியைத் துரிதப் படுத்தமுடியும்.

4. உரக் கூட்டுத்தாபனம் போன்ற அரச நிறுவனங்களுக்கு வழங்கிவந்த மானியங்கள் எதிர்காலத்தில் திறைசேரியினால் தவிர்த்துக் கொள்ளப்படமுடியும்.

5. பொதுமக்களால் தெரிவுசெய்யப்படும் இயக்குனர் சபையைக் கொண்டிருக்க முடிவதனால் திறனுள்ளவர்களை இயக்குனர் சபையில் கொண்டிருக்கமுடியும்.

6. அரச நிறுவனங்கள்போல் அல்லாது தேவைப்படும் தீர்மானங்களை விரைவாக எடுக்கவும் நடைமுறைப்படுத்தவும் முடியும்.

7. தேவைக்கதிகமான வேலைவாய்ப்பினைக் குறைத்துக்கொள்ள முடிந்திருப்பதனால் மேல்மிஞ்சிய ஊழியர் என்ற குறையைத் தவாக்க முடிகின்றது.

8. அரசியல் தலையீட்டினைக் குறைத்துக் கொள்ள முடிந்திருப்பதனால சுதந்திரமாக நிறுவனங்களை இயக்கிக்கொள்ள முடிகின்றது.

9. அரச நிறுவனங்களைப்போல் அல்லாது மக்களுக்கு நல்ல சேவையை வழங்கக் கூடிய சாத்தியத்தை மக்கள் மயமாக்கப்பட்ட கம்பனிகள் கொண்டிருக்க முடியும்.

10. ஊழியர்களை இலவசமான பங்குகள் மூலம் பங்குதாரராக சேர்த்துக்கொள்வதனால் அவர்களது வருமானம், அந்தஸ்து ஆகியவற்றை உயர்த்திக் கொள்ளமுடிந்திருப்பதுடன் அவர்களிடமிருந்து தன்னிச்சையான ஒத்துழைப்பையும் பெறறுக்கொள்ள முடியும்.

இவைபோன்ற பல்வேறு நன்மைகளைப் பெற்றுத்தரும் என்ற காரணத்தினாலேயே மிகவேகமாக அரச நிறுவனங்கள் மக்கள் மயமாக்கப்பட்ட கம்பனிகளாக மாற்றம் பெற்றுவருகின்றன. குறிப்பாக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை உரக் கூட்டுத்தாபனம்.
இலங்கை தோற்பொருள் கூட்டுத்தாபனம்

இலங்கை ரயர்க் கூட்டுத்தாபனம்

யுனைட்டெட் மோட்டோர்ஸ் லிமிட்டட்

லங்கா மில்க் வூட்ஸ் (C. W.E)லிமிட்டட்

துல்கிரிய எரக்ஸ்ரைல் லிமிட்டட்

பூகோட ரெக்ஸ்ரைல் லிமிட்டட்

சிலோன் ஒக்சிஜின் லிமிட்டட்

போன்ற நிறுவனங்களெல்லாம் மக்கள் மயமாக்கப்பட்ட கம்பனிகளாக மாற்றப்பட்டுள்ளன. இவற்றைவிட வேறுபல அரச கம்பனிகளும் பொதுக் கூட்டுத்தாபனங்களும் மக்கள் மயமாக்கப்பட்டிருப்பதனைக் காணமுடியும். இதற்குக் காரணம் இத்தகைய மக்கள் மயமாக்கப்படும் நடவடிக்கையால் பல நன்மைகள் கிடைக்கமுடியும் என்பதாகும்.

## 5.0 மக்கள் மயமாக்கலின் குறைபாடுகள்

மக்கள் மயமாக்கல் பல நன்மைகளைப் பெற்றுத்தரும் எனக் கருதப்பட்டபோதும அது நடைமுறையில் பல பாதிப்புக்களையும ஏற்படுத்தி வருவதனைக் காண முடிகின்றது. குறிப்பாக;

1. தனியாரே பொருளாதாரத்தில் முதலிடம் பெறுநிலையை மககள் மயபபடுத்தல் கொண்டுவரும் என்பதனால் அது நாட்டில் தனியார் தனியுரிமை என்கின்ற நிலையை ஏற்படுத்திவிட முடியும்.
2. இலாபத்தை உச்சப்படுத்த வேண்டும் என்ற குறிக்கோளில் வேலைவாய்ப்புக்கள் குறைக்கப்படுவதுடன் தொழிலாளர் சுரண்டப்படும் நிலையும் உருவாகும்.
3. உரம் போன்ற சில உற்பத்திகளுக்கு அரசு வழங்கிவரும் மானியம் நீக்கபபடுவதனால் அவற்றின் ஆக்கச் செலவு அதிகரிக்கப்படுவதுடன் விற்பனை விலையும் அதிகரிக்கப்படும்.
4. அரச நிறுவனங்கள் தனியாருக்குச் சொந்தமாக மாறிவருவதனால் அரசாங்க நிறுவனங்களிடம் கிடைத்துவந்த சேவைகள் எதிர்காலத்தில் கிடைக்க முடியாமல் போய்விடும்.
5. இருப்போருக்கும் இல்லாதோருக்குமான இடைவெளி அதிகரித்து வரக்கூடும் என்பதனால் நாட்டில் வருமானமின்மை ஏற்படும் சாத்தியம் உருவாகும்.

என்பதான குறைபாடுகள் மக்கள் மயப்படுத்தலினால் உருவாகும். இருந்தபோதும் மக்கள் மயப்படுத்தல் பெற்றுத்தரும் நன்மைகளைவிட குறைபாடுகள் மிகக் குறைவாக இருப்பதனாலேயே அந்த நன்மைகளை அனுபவிக்கும் நோக்குடன் மக்கள் மயப்படுத்தல் வேகமாக இடம்பெறுகின்றது.

## 6-0 முடிவுரை

மக்கள் மயப்படுத்தலானது இப்பொழுது குழந்தைப் பருவத்திலிருக்கும் ஒரு நடவடிக்கையாகும். எனவேதான் இந்த நடவடிக்கையினை விமர்சிக்கக் கூடாதென பிரபல விமர்சகரான திரு. மேவின் டி சில்வா என்பவர் கருத்து வெளியிட்டுள்ளார். மக்கள் மயப்படுத்தும் கம்பனிகளினால் அரசாங்கத்தின் தேவையற்ற சுமை குறைக்கப்பட முடிந்துள்ளது. மறுபுறத்தில் பலவகையான உற்பத்துகள் அதிகரிக்கப்படவும் முடிந்துள்ளது. குறிப்பாக தோற்பொருள உற்பத்தி, வடிசாலை உற்பத்தி போன்றவை அதிகரிக்கப்பட முடிந்திருப்பதுடன் தொழில்நுட்ப அபிவிருத்தியும் ஏற்படத் தொடங்கியுள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக வெளிநாட்டுமுதலீடுகள் உயர்ந்திருப்பதுடன் ஏற்றுமதி வருமானமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பலவேறுபட்ட கோணங்களிலும மககள் மயப்படுத்தலானது நன்மைகளைப பெற்றுத்தருவதனால் எதிர்காலத்தில மேலும் பல அரச நிறுவனங்கள் மக்கள் மயப்படுத்தப்பட்ட கம்பனிகளாக மாற்றப்பட முடியும். இதனூடாக நாடும் மக்களும் பெருமளவு நன்மைகளை அனுபவிக்க முடியும் என்பதில் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு
## Securities And Exchange Council

★ **B.S. BASILJENATHAS B. B. A**

எந்த ஒரு நாட்டினதும் பொருளாதார அபிவிருத்திக்கு மிக முக்கியமான அம்சமாக நிதி காணப்படுகின்றது. இதனால் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் நிதி நிறுவனங்களின் செயற்பாடுகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. நிதி நிறுவனங்களின் செயற்பாடுகள் எந்த அளவிற்கு வளர்ச்சியை நோக்கியுள்ளன என்பதன அடிப்படையிலேயே நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை மதிப்பிடலாம், இவ் வகையில் நாட்டின் நிதிச் சந்தை அமைப்பு முக்கியமானதாகும்.

நிதிச்சந்தையினை பணச்சந்தை, மூலதனச் சந்தை எனப்பாகுபடுத்தலாம். தொழில் முயற்சிக்கு தேவையான குறுங்கால நிதி வழங்கும் நிறுவனங்கள், மற்றும் தனிப்பட்டவர்களை உள்ளடக்கியதாக பணச்சந்தை காணப்படுகின்றது. அதேவேளை நீண்டகால நிதி வழங்கும் நிறுவனங்கள் தனிப்பட்டவர்களைக் கொண்டதாக மூலதனச்சந்தை காணப்படுகின்றது. இம் மூலதனச் சந்தையில் பலதரப்பட்ட அமைப்புக்கள் செயற்படுவதைக் காணலாம். குறிப்பாக ஆவணங்களை வழங்கும் இல்லங்கள், முதலீட்டு நம்பிக்கை ஸ்தாபனம், அலகு பொறுப்பாட்சி ஸ்தாபனங்கள், நிதிக்கம்பனிகள், தோற்றுவிப்பாளர்கள், ஒப்புறுதியளிப்போர், பங்குப்பரிவர்த்தனை நிலையம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

ஓர் மூலதனச் சந்தையில் காணப்படுவோரை அடிப்படையில் இரு பகுதிகளாகப் பிரித்து நோக்கலாம்.

★ பணத்தை பிணையங்களில் முதலீடு செய்து அதன்மூலம் இலாபம் அல்லது வட்டியை உழைக்க விரும்புவோர்.

★ தம்மிடமுள்ள பிணையங்கள் அல்லது புதிய பிணைப் பத்திரங்களை பிறப்பித்து நீண்டகால நிதியினைப் பெற்று தொழில் முயற்சியை ஆரம்பிக்க அல்லது விஸ்தரிக்க விரும்புவோர்.

ஓர் நியாயபூர்வமான மூலதனச் சந்தையைப் பேணவேண்டுமாயின், அச்சந்தையில் காணப்படுவோரை ஒழுங்குபடுத்தி, வழிநடத்தவும் முதலீட்டாளரின் நலனைப் பாதுகாக்கவும் வேண்டியது, இன்றியமையாததாகும்.

அண்மைக் காலமாக இலங்கையில் பிணையங்கள் பரிமாற்று அதிகரித்து வருவதால் அவற்றுடன் தொடர்புடைய அமைப்புக்களை கட்டுப்படுத்தி வழிநடத்தி முதலீட்டாளர்களின் நலனைப் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும், இவ்வகையில் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு அமைக்கப்பட்டு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தையும் அலகு பொறுப்பாட்சி ஸ்தாபனத்தையும் செயற்படுத்துவதைக் காணலாம்.

1985-ம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட கொழும்பு ஆணவமாற்று அமைப்பு (Colombo Securities Exchange Ltd) ஸ்தாபிக்கப்பட்ட போது இலங்கையில் பொதுக் கம்பனிகளின் பங்குகளைக் கொள்வனவு செய்து மூலதனத்தை ஈடுபடுத்தும் முதலீட்டாளரின நலன்களைப் பேணிப்பாதுகாக்கும் பொருட்டு பங்குச்சந்தை நடவடிக்கைகளை கட்டுப்படுத்தி வழிநடத்துவதற்குஓர் பிணையங்கள் பேரவை (Securities Council) அமைக்கப்படவேண்டிய தேவை உணரப்பட்டது. இங்கிலாந்து, ஜப்பான், ஜேர்மனி, கொங்கொங், சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இந் நோக்கங்களை நிறைவேற்ற இத்தகைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணையங்கள் பேரவைகள் செயற்படுகின்றன. எனவேதான் இலங்கையிலும் இத்தகையதோர் அமைப்பை உருவாக்க 1987ம் ஆண்டு 36-ம் இலக்க பிணையங்கள் பேரவைச் சட்டம் கொண்டுவரப்பட்டு 1987-ல் பிணையங்கள் பேரவை (Securities Council ஸ்தாபிக்கப்பட்டது. பின் அலகுப் பொறுப்பாட்சி ஸ்தாபனங்களுக்கு அனுமதி வழங்கல் உட்பட சில மேலதிக அதிகாரங்களைப் பெறும் வகையில் 1991 யூலை 5-ம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1991-ம் ஆண்டு 26-ம் இலக்க பிணையங்கள் பேரவை (திருத்தச்) சட்டத்தின் மூலம் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு எனப் பெயர் மாற்றப்பட்டு செயற்படுகினறது.

இங்கு பிணையங்கள் என்பது கூட்டிணைக்கப்பட்ட ஸ்தாபனங்கள் அல்லது அலகு பொறுப்பாட்சி ஸ்தாபனங்கள் அலலது அரசினால் வழங்கப்பட்ட அல்லது வழங்க உத்தேசிக்கப்பட்ட கடன்பத்திரம பங்குத்தொகுதிகள், நிதிகள், முறிகள் அல்லது பத்திரஙகள் போன்றவற்றைக் குறிக்கும. ஆனால் நாணயமாற்று உண்டியல் அல்லது வாக்குறுதிப் பத்திரங்கள் அல்லது வங்கியினால் வழங்கப்படும் வைப்புச்சான்றிதழ்கள் என்பவற்றைக் கருதாது.

பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு எனபதற்கு பின்வருமாறு விளக்கமளிக்கலாம்: ''இலங்கையில் பிணையங்கள சந்தையை ஒழுங்குபடுத்தி பிணையங்கள் வர்த்தகம் செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள பங்குப்பரிவர்த்தனை நிலையம், அலகுப் பொறுப்பாட்சி ஸ்தாபனம், பங்குத் தரகர்கள் என்பவற்றிற்கு அனுமதி வழங்கி, கட்டுப்படுத்தி, வழிநடத்தி அவற்றின் முதலீட்டாளர்களின் நலனைக் காக்கும் அமைப்பு பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவாகும். இதில் மத்திய வங்கியன் துணை ஆளுநர், திறைசேரியின் துணைச் செயலாளா, கம்பனிப்பதிவாளர், பட்டயக்கணக்காளர், சங்கத் தலைவர் ஆகியோருடன் நிதி, சட்டம், தொழில் ஆகியவற்றில் அனுபவம் பெற்ற (அமைச்சரவையால் நியமிககப்படும்) ஆறு பேரும் காணப்படுவர்,

பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு பின்வரும் குறிக்கோள்களைக் கொண்டு செயற்படுகின்றது:

★ பிணையங்களை நீதி நியாயத்துடன் விற்பனை, கொள்வனவு செய்யக் கூடிய ஓர் அமைப்பை ஏற்படுத்தல்.

★ பிணையங்களில் முதலீடு செய்வோரின் நிதிசார் நலனைப்பாதுகாத்தல்.

★ பிணையங்களிற்கான சந்தையின் உயர் தொழில் தரத்தைப் பேணல்

★ நிதி நட்டங்களை எதிர்நோக்கும் முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதற்கு ஈடுசெய் நிதியை நடைமுறைப் படுத்தல்.

பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக் குழுவின் அதிகாரங்களை நோக்குமபோது அது பின்வரும் கடமைகளைப் புரிவதற்கான அதிகாரங்களைப் பெற்றுள்ளது:

★ வியாபாரத்தளத்தை நடாத்துவதற்கு அனுமதி வழங்கலும் காலத்திற்கு காலம் அவை தொடர்பான அறிவுத்தல்களை வழங்கல்.

★ பங்குத்தொகுதி தரகர்களாகத் தொழிற்படும் நிறுவனங்களிற்கு அனுமதி வழங்கல்.

★ பங்குத் தொகுதி தரகர்களுக்கு வருடாந்த அனுமதி வழங்கல்.

★ பொதுக் கம்பனிகள் பங்குத் தொகுதி தரகர்களின் நடவடிக்கைகளை பரிசிலனை செய்தல்,

★ பங்கு வியாரத்தின் போது தரகு நிறுவனங்களின் தவறுகளினால் முதலீட்டாளர்களுக்கு ஏற்படும் இழப்புக்களுக்கு நட்டஈடு பெற்றுக் கொடுத்தல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ பங்குச்சந்தை அபிவிருத்தி தொடர்பாக அரசுக்கு ஆலோசனை வழங்கல்.

★ பங்குச் சந்தை தொடர்பான அரசின் செயற்திட்டங்களையும் கொள்கைகளையும் நடைமுறைப்படுத்தல்.

★ முதலீட்டாளரின் நன்மைக்காகச் சில கம்பனிகளின் பங்குகள் கைமாற்றம் செய்யப்படுதலை தடுத்தல் அல்லது தாமதித்தல்.

★ பங்குத்தொகுதித் தரகர்களாலும், நிரற்படுத்தப்பட்ட கம்பனிகளினதும் தவறான நடவடிக்கைகள் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு உரிய பிரபல்யம் கொடுத்தல்.

1991 ம் ஆண்டு பிணையங்கள் பேரவைத் திருத்தச் சட்டத்தின் வாயிலாக பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு பின்வரும் மேலதிக அதிகாரங்களைப் பெறறுள்ளது.

★ அலகு பொறுப்பாட்சி ஸ்தாபனங்களை உருவாக்குவதற்கும் அவற்றை நிர்வகிப்பதற்கும் முகாமைக் கம்பனிக்கு அனுமதி வழங்கல்.

★ அலகு பொறுப்பாட்சி ஸ்தாபனம் பொதுமக்களை முதலீடு செய்யுமாறு கோரும் முன்விபரணம் அல்லது விளம்பரத்தை விடயத்திற்கு ஏற்றவாறு வெளியிடுவதற்கு இவ் ஆணைக்குழுவின் எழுத்தினாலான முன அங்கீகாரத்தை பெற்றிருக்க வேண்டும் எனக் கட்டுப்படுத்தல்.

★ அனுமதி பெற்ற பங்குப்பரிவர்த்தனைக்கு அல்லது அனுமதி பெற்ற அலகுப்பொறுப்பாட்சிஸ்தாபனத்தின் முகாமைக்கம்பனி அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது பங்குத் தரகர் அல்லது பங்கு வியாபாரிகளிற்கு காலத்திற்குக் காலம் கட்டுப்பாடுகளை விதித்தல்.

★ பங்கு முதலீட்டாளரின் நலன் கருதி அனுமதிபெற்ற பங்குப்பரிவர்த்தனை அமைப்பின் நிர்வாகத்தையும் முகாமையையும் பொறுப்பேற்றல்.

★ பங்குப்பரிவர்த்தனை நிலையத்தின் இயக்குனர்சபைக்கு நான்கு பிரதிநிதிகளை நியமித்தல்.

★ நிதி ஆவணங்களை வாங்குதல் அல்லது விற்றல் அல்லது கொடையாக வழங்குதல் என்பவற்றிற்கு இவ் ஆணைக்குழுவிடம் முன்கூட்டியே அனுமதியைப் பெறவேண்டும்.

★ நிரற்படுத்தப்பட்ட கம்பனியின் பங்குகளை வைத்திருப்பவர் இறப்பின், அவருக்குச் சொந்தமான பங்குகளைப் பிறிதொருவருக்கு கைமாற்ற முன் இவ் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெறவேண்டும்.

இலங்கையில் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தோற்றம் பிணையங்களிற்கான சந்தை அமைப்பில் ஓர் திருப்புமுனையாக அமைகின்றது. இலங்கையின் வரலாற்றில் மூலதனச் சந்தை அமைப்பு மிக நீண்டகாலமாக வளர்ச்சி குன்றிக் காணப்பட்டது. தற்போது அதன் வளர்ச்சியில் இவ் ஆணைக்குழு அதிக பங்களிப்பை ஆற்றி வருவதைக் காணலாம். நிதிச் சந்தையின் அபிவிருத்திகருதி சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவராண்மை நிலையத்தின் உதவியுடன் நடைபெறும் வேலைத் திட்டங்களையும் இது மேற்பார்வை செய்து உதவுகின்றது. கடந்த மூன்று ஆண்டுகளில் இவ் ஆணைக்குழு ஏழுபங்குத் தரகர்களுக்கும நான்கு அலகு பொறுப்பாட்சி ஸ்தாபனங்களிற்கும் அனுமதியளித்திருப்பதைக் காணலாம. இப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு இலங்கையின் பிணையங்களுக்கான சந்தையின் முக்கியமான மைல்கல்லாக விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகக் கலை வளர

'பற்று' இதழுக்கு

நல்லாசிகள்

# செல்வி சுஜாதா மகேந்திரன்

அன்பளிப்பு

பழைய வீதி,

இருபாலை, கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனையை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் விளம்பரத்தின் பங்கு

**கே. என். சுதாஜீ**
13-ம் ஆண்டு வர்த்தகப்பிரிவு

பொருள் ஒன்றின் வருகையையும் அப்பொருள் தொடர்பான பயன்தரு விடயங்களையும் நுகர்வோர் உலகிற்கு வெளிப்படுத்துவதற்கான ஓர் விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கை எனக் கொள்ளப்படுவதே விளம்பரமாகும்.

பணச் செலவுடன் மேற்கொள்ளப்படும் இந்த விளம்பரத்தினூடாக மக்கள் பொருட்களைப்பற்றி அறிந்து கொள்வதோடு மட்டுமன்றி அப்பொருட்களை வாங்கிக் கொள்ள விற்பனை நிறுவனங்களை நோக்கி செல்வார்கள் என்ற எதிர்பார்க்கையுடன் ஒரு பொருளின் விற்பனையை நீண்டகாலத்திற்கு அதிகரிக்கச் செய்வதற்கென உற்பத்தியாளனால் மேற்கொள்ளப்படும் ஒரு நடவடிக்கையேவிளம்பரமாகும்.இங்கு ஒரு பொருளைப் பார்ப்பதற்கு முன்னரே அதனை வாங்கவேண்டும் என்ற விருப்பத்தினை வரவழைப்பதாக விளம்பரம் காணப்படும்.

தற்காலத்தில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய பெருமளவான வெகுஜன சாதனங்களைப் பயன்படுத்துவதனூடாக விளம்பரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக,

★ புதினப் பத்திரிகை
★ வானொலி
★ தொலைக்காட்சி
★ திரைப்படம்
★ சஞ்சிகை
★ சுவரொட்டி
★ துண்டுப் பிரசுரம்
★ மஞ்சள் பக்கம் கொண்ட தாள்களைப் பயன்படுத்துதல்
★ போட்டிகளை நடாத்துதல்
★ காட்சி அறைகளை நிறுவி விளம்பரம் செய்தல்

போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறான விளம்பர வழிமுறைகளின் ஊடாக விளம்பரங்களை மேற்கொள்ள முற்படுகையில் தெரிவு செய்யப்பட்ட விளம்பர ஊடகத்தை பொருத்தமானதாகவும், தகுந்த முறையிலும் சிறப்பாகப் பயன்படுத்தினால் அவை ''பயனுறுதி'' மிக்கதாய் அமையும்.

ஒரு நிறுவனமானது தனது உற்பத்திப் பொருளுக்கான விளம்பர ஊடகங்களைத் தெரிவுசெய்யும் போது பின்வரும் காரணிகளை கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமானதாகும்: குறிப்பாக,

★ விளம்பரத்திற்கான செலவு
★ சந்தையின் பருமன்
★ பொருளின் வகை
★ நுகர்வோரின் தன்மை
★ போட்டி விளம்பரம்
★ கிடைப்பனவு என்பன ஆகும்.

தற்கால நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் விளம்பரங்கள் பெரும்பாலும்

★ பொருள் பற்றியது
★ நிறுவனம் பற்றியது
★ ஆலோசனை பற்றியது
★ தேவை பற்றியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற அடிப்படையில் 4 வகைக்குள் அடக்கப்படும்.

0 இங்கு பொருள் பற்றிய விளம்பரம் ஒரு பொருளின் விற்பனையை உயர்த்துவதற்கு பயன்படுத்தப்படுகிறது.

உதாரணம்:- உள்ளூர் உற்பத்தியான ''ரேஸ்ரி'' ஜாமிற்கான விளம்பரம்.

0 நிறுவனம் பற்றிய விளம்பரம் ஒரு நிறுவனத்திற்கு வரும் வாடிக்கையாளரது எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக பயன்படுத்தப்படுகிறது.

உதாரணம்:- வீனஸ் தங்க மாளிகைக்கான விளம்பரம்

0 ஆலோசனை பற்றியது பொதுமக்களுக்கு ஆலோசனையை வழங்குவதற்கு பயன்படுத்தப்படுகிறது.

உதாரணம்:- விமானக் குண்டுவீச்சிலிருந்து உயிர் தப்பிக்கொள்வதற்கான விளம்பரம்.

0 தேவைபற்றியது ஏதாயினும் பொருட்களையோ அல்லது ஆட்களையோ பெற்றுக் கொள்வது தொடர்பாக கொண்டிருக்கும் தேவையை வெளிப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

உதாரணம்:- i காவல்துறையினரின் பதவி வெற்றிடம் தொடர்பான விளம்பரம்.

ii விக்னா கல்வி நிறுவனத்தின் தளபாடத்திற்கான விளம்பரம்.

இத்தகைய விளம்பரமானது விற்பனை நடவடிக்கையில் ஓர் பிரதான தொழிற்பாடாகக் காணப்படுகிறது. பொருட்களின் விற்பனையையும், பணிகள் சேவைகளின் விற்பனையையும் தூண்டுவதற்கே பெரும்பாலும் விளம்பரம் மேற்கொள்ளப்படுகிறது. இன்னும் சுருங்கக் கூறின் ''விற்பனையின் உயிர்நாடி விளம்பரம்'' எனக் கருதப்படுகிறது. பொருட்களையும் சேவைகளையும் விற்பனை செய்வதற்கு விளம்பரம் மிகவும் இன்றியமையாதது என்பது அனைவராலும் (உற்பத்தியாளர்+விற்பனையாளர்+ஏனையோர்) முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும்.

ஆனால் விளம்பரமானது வீண்செலவு எனவும் வீண்செலவு அல்ல எனவும் பலர் பல விதமான கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். உண்மையில் விளம்பரமானது ஒரு பொருளின் கேள்வியில் ஏற்படுத்தும் தாக்கத்தினைப்பொறுத்தே அது அவசியமானதா அவசியமற்றதா எனக் கொள்ள முடியும்.

குறிப்பாக விளம்பரமானது பொருள் ஒன்றின் கேள்வியை குறைக்குமாயின் அது வீண்செலவு எனவும், கேள்வியைஅதிகரிக்கச் செய்யுமாயின் அது பயனுள்ளசெலவு என்றும் கொள்ளப்படுவதுண்டு.

ஆனால் பொதுவாக விளம்பரமானது பொருளிற்கான கேள்வியை அதிகரிப்பதாகவே காணப்படுவதனால் அது ஓர் வீண் செலவாகி விடுவதில்லை.

ஒரு பொருளின் உற்பத்தியை பெருமளவில் மேற்கொள்ளவும், அதனை நீண்ட காலத்திற்கு நீடிக்கவும், மக்களின் தேவைகளை பூர்த்தி செய்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் விளம்பரமே உதவுகின்றது.

விளம்பரத்தின் பணிகளாக நாம் பின் வருவனவற்றை இனங்காண முடியும்:

★ சந்தையில் புதிய உற்பத்திப் பொருட்களை அறிமுகப்படுத்துதல்.

★ அறிமுகப்படுத்தப்பட்ட பொருட்களை நுகர்வோரை வாங்குமாறு தூண்டுதல்.

★ உற்பத்தி நிறுவனம் ஒன்றின் தொழில் நன்மதிப்பினை உருவாக்கலும் உயர்த்தலும்.

★ உற்பத்திப் பொருள் பற்றிய தகவல்களை நுகர்வோருக்கு அளித்தல்.

★ உற்பத்தியையும் விற்பனையையும் மேம்படுத்துதல்.

★ உற்பத்திப் பொருட்களின் தரத்தையும், கேள்வியையும் உயர்த்தல்.

★ உற்பத்திப் பொருள் பற்றிய தகவல்களை விற்பனையாளருக்கு அளித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ குறித்த ஓர் உற்பத்தி நிறுவனத்தின் வியாபாரக் குறியையும், பண்டப் பெயரையும் (Trade mark and Brand name) ஏனைய உற்பத்தி நிறுவனங்கள் பயன்படுத்தாது பாதுகாப்பளித்தல்.

என்பதான தொழிற்பாடுகளை விளம்பரத்தின் பணிகளாகக்கொள்வர். இத்தகைய விளம்பரமே நுகர்வோர் உலகிற்கு நேற்றுவரை ஆடம்பரத்தேவைகளாகக் காணப்பட்டவற்றை இன்றைய அத்தியாவசிய தேவைகளாக மாற்றியமைத்துள்ளது எனலாம்.

இத்தகைய விளம்பரத்தின் மூலம் நுகர்வோரும், விற்பனையாளரும், உற்பத்தியாளரும் பெறும் நன்மைகளைப் பின்வருமாறு வெளிப்படுத்தலாம்.

## நுகர்வோர் பெறும் நன்மைகள்:

1. புதிய பொருட்களின் வருகையை உடனுக்குடன் அறிந்து கொள்ளமுடிவதுடன் அவற்றைக் கொள்வனவுசெய்து தேவைக்கேற்ப பயனைப்பெறமுடிதல்.

2. சிறந்த விளம்பரத்தின் மூலம் பொருட்களின் விற்பனை அதிகரிக்கப்பட்டு அவற்றிற்கான விலை குறைக்கப்படுவதால் நுகர்வோரின் செலவினம் குறைக்கப்பட்டு வாழ்கைத்தரம உயர்வதைப்பேணமுடியும்.

3. பொருட்களைபயன்படுத்தும்முறை, பயன்படுத்தும்போது கடைப்பிடிக்க வேண்டிய எச்சரிக்கைகள் போன்றவற்றை விளம்பரம் மூலமும் அறிந்துகொள்ள முடிகிறது.

4. பொருட்களைப் பற்றிய விளம்பரத்தை படிக்கும்போது நுகர்வோர் உழைத்து சம்பாதித்துப் பொருட்களை வாங்க வேண்டும் என்ற ஆர்வத்தைப் பெறுகிறார்கள்.

## விற்பனையாளர் பெறும் நன்மைகள்

### மொத்த விற்பனையாளர் பெறும் நன்மைகள்

1. விளம்பரம் மூலம் பொருட்களின் விலை, தரம் என்பவை பற்றி அறிய முடிவதால் தரகர்கள் மூலம் நாம் ஏமாற்றப் படுவதை தவிர்க்கலாம்.

2. விளம்பரம் மூலம் விற்பனை அதிகரிக்கப் படுவதால் விற்பனையை தூண்டவென வழங்கப்பட வேண்டிய கழிவுகள், சலுகைகள் போன்றவைகளை ஓரளவிற்கு குறைக்க முடியும்.

3. சிறந்த விளம்பரத்தின் மூலம் விற்பனை துரிதமாக்கப்படுவதால் ஒவ்வொரு பொருளிற்குமான களஞ்சியப்படுத்தல செலவு, பராமரிப்புச் செலவு என்பன குறைக்கப்படுகிறது.

4. உற்பத்தியாளர் வெளியிடும் விளம்பரங்களில் இருந்து பொருள் மற்றும் அவற்றின் பயன்பாடுகள் பற்றி அறிந்து கொள்ள முடிவதுடன் விற்பனையை விரிவுபடுத்தி இலாபத்தைப் பெற முடிகிறது.

5. ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகள் ஏற்றுமதிக்குத் தயாராக உள்ள பொருட்களைப் பற்றிய விபரங்களை தெரியப்படுத்தவும் இறக்குமதி பொருட்கள் பற்றிய விபரங்களை அறியவும் விளம்பரம் வகை செய்கிறது.

### சில்லறை விற்பனையாளர் பெறும் நன்மைகள்

1. விளம்பரம் மூலம் அறிமுகப்படுத்தப் படும் புதிய பொருட்களை சில்லறை விற்பனையாளர் அறிந்து மொத்த விற்பனையாளரிடம் அவற்றை கொள்வனவு செய்து விற்பனை செய்ய முடியும்.

2. பொருளின் தரம், விலை, பாவனை முறை, சிறப்புத்தன்மை, போன்றவற்றை நுகர்வோர் விளம்பரம் மூலம் அறிவதால் சில்லறை விற்பனையாளர் தமது விற்பனையை இலகுவாக நடத்த முடிகிறது.

3. சிறந்த விளம்பரத்தின் மூலம் விற்பனை துரிதமாக்கப்படுவதால் சில்லறை விற்பனையாளர் தமது விற்பனையை விரிவாக்க முடிகிறது.

4. இலகுவான விற்பனை மூலம் விற்பனை துரிதமாக்கப்பட்டு இலாபம் அதிகரிக்க வாய்ப்பாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இமயத்தின் சிகரம் எவரெஸ்ட்
ஈழத்தின் சிகரம் பனைவளம்"
பனை வளத்திலிருந்து

★ சுவைமிகு உணவுவகைகள் ★ கைப்பணிப் பொருட்கள்
★ அலங்காரப் பொருட்கள் ★ பாவனைப்பொருட்கள் ★ பானவகைகள்

இவற்றைப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

# தெ. ப. பொ. உ. வி. கூ. சங்க
# கூட்டுறவு அங்காடி

இருபாலைச்சந்தி, கோப்பாய்.

மேலும் வைபவங்களுக்குத் தேவையான இரும்புக் கதிரைகளை
குறைந்த வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

இடம்: தலைமைக் காரியாலயம்:

வலிகிழக்கு (தென்பகுதி) தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக்
கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

## வைத்திய நிலையம்

டாக்டர் அ. கணேசமூர்த்தி R-M-P

# MEDICAL CLINIC

*Doctor A. Ganeshamoorthy R. M. P.*

இருபாலை கோப்பாய்

# கணக்கியல் விகிதாசாரங்கள்
## Accounting Ratios

★ *A.* ஜெயபாலசிங்கம்
13-ம் ஆண்டு வர்த்தகப்பிரிவு

உற்பத்தி வர்த்தக நிறுவனங்களின் செயற்பாடுகள் திறமையாக செயற்படுகின்றனவா? செயற்படவில்லையா? என மதிப்பிட்டுக் கொள்வதற்கு உதவியான கருவியே கணக்கியல் விகிதங்கள் ஆகும். தனிமனிதனில் உடல்நிலையின் சுகநிலையை அறிந்து கொள்ள அவனது உடலில் காணப்படும் வெப்பநிலை, இரத்தோட்ட, இரத்தமுக்கம். நாடி, நாளம் ஆகியவற்றின் இயக்கம் என்பவற்றை ஒரு வைத்தியர் கவனத்தில் கொண்டு குறிப்பிட்ட நபரது சுகநிலையை எவ்வாறு அறிந்து கொள்கின்றாரோ அது போலவே ஒரு நிறுவனத்தின் கணக்காளன் நிறுவனத் தகுதியை அறிய கணக்கியல் விகிதங்களைப் பயன்படுத்துவான். இக்கணக்கியல் விகிதங்களை வைத்துக் கொண்டு நிறுவனம் திறமையாக இயங்குகின்றதா? இயங்கவில்லையா? என்பதனை மதிப்பிட்டுக்கொள்ள முடியும்.

நிதிக்கூற்றுக்களில் இருந்து தயாரிக்கப்படும் கணக்கியல் விகிதங்கள் எண்ணிறைந்தனவாக காணப்படும். எனினும் அவற்றை பின்வரும் மூன்று பிரிவுகளாகப் பிரித்து நோக்கலாம்:-

(1) இலாபத் தன்மை விகிதங்கள்.
(2) கடன் தீர்க்கும் தன்மை விகிதங்கள்.
(3) முதலீட்டு விகிதங்கள்.

### (1) இலாபத்தன்மை விகிதங்கள் (Profitability Ratios)

இவ்விகிதமானது நிறுவனம் ஒன்றுஇலாபம் உழைக்கும் செயற்பாட்டின் வினைத்திறனையும் நிறுவனத்தினால் உழைக்கக் கூடிய நிதி இயலுமையையும் அளவிடப் பயன்படுகின்ற விகிதங்களாகும். இலாபத்தன்மையை அளவிடப்பயன்படுத்தப்படுகின்ற விகிதங்களில் முக்கியமானதும் முதன்மையானதுமான சில விகிதங்களை இங்கு நோக்குவோம்.

### (2) ஈடுபடுத்திய முதல் மீதான வருவாய் வீதம் (ROCE)

Return on Capital Employed Ratio

நிறுவனத்தின் இலாபத் தன்மையை மதிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படும் முக்கியமான முதன்மை விகிதமாகும். நிறுவனத்தில் ஈடுபடுத்தப்பட்ட முதலுக்கும் அதனால் உழைக்கப்பட்ட இலாபத்துக்கும் (தேறியலாபம்) இடையிலான தொடர்பினை நூற்று வீதத்தில் மதிப்பிடுவதன் மூலம் இவ்விகிதம் கணிக்கப்படும். அதாவது ஈடுபடுத்தப்பட்ட மூலதனத்திற்கு உழைக்கப்பட்ட தேறியலாபம் என்ன நூற்று வீதமாக உள்ளது எனக்காட்டுவதாகும் இதனை பின்வருமாறு கணிப்பிட்டுக்கொள்ளப்படும்.

$$\text{ROCE} = \frac{\text{இலாபம்} \times 100}{\text{ஈடுபடுத்திய மூலதனம்}}$$

ஒரு நிறுவனமானது ஈடுபடுத்திய முதல் மீதான வருவாய் வீதத்தை அதிகரிப்பதற்கு பல வழிகளைக்கையாள முடியும். அவற்றுள் ஒன்றாக விலையை அதிகரிப்பதன் மூலம் இலாபத்தை அதிகரித்து POCE அதிகரிக்கலாம். ஆனால் பலத்த போட்டியான சந்தை நிலைமையில் இது சாத்தியப்படப் போவதில்லை. ஏனெனில் சிறிய விலை அதிகரிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பானது பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தி விடுவதாகும். அதாவது விலை அதிகரிப்பானது விற்பனை வருவாயில் வீழ்ச்சியை ஏற்படுத்துவதுடன் நிறுவனத்தை மூடவேண்டிய நிலைமையும் ஏற்படும். மேலும் விலை அதிகரிப்பானது வாழ்க்கைத் தரத்தைப் பாதிப்பதுடன் செலவுத் தூண்டல் பணவீக்கத்துக்கும் வழிவகுக்கும்.

இரண்டாவது வழியாக விலையை அதிகரிப்பதற்குப் பதிலாக ஈடுபடுத்திய மூலதனத்தைக் குறைப்பதன் மூலம் ROCEயை அதிகரிக்கலாம். நிறுவனத்தில் சரியான முறையில் பயன்படுத்தப்படாத மூலதனத்தை வெளியகற்றுவதன் மூலம் இதனை அடையலாம். இது நிறுவனததின் சீரான இயக்கத்தையும், உறுதித் தன்மையையும் பாதிகாது. அத்துடன் நிறுவனத்தின் சிக்கனத்திற்கும் வளங்களில் உச்ச உபயோகத்திற்கும் வழிவகுக்கும்.

மூன்றாவது வழியாக விற்பனையை (விற்பனைப் புரள்வை) அதிகரிப்பதன் மூலம் POCEயை அதிகரிக்கலாம். இது விலைக் குறைவு ஊடாக சாத்தியப்படும். ஒரு நிறுவனமானது ROCEயை உயர்த்திக் கொள்வதற்கு மேற்படி உபாயங்கலை கையாள்வதுடன் பினவரும் முகாமைத்துவ உபாயங்களும் உதவுகின்றன.

(1) சரியான முதலீட்டுத் தீர்மானம்.

(2) மூலதனத்தைத் திறனாகப் பயன்படுத்தல்.

(3) திரவங்சொத்துக்களின் திறனை முகாமை.

(4) சிறந்த சரக்கிருப்புக் கட்டுப்பாடு.

5) அடுத்திட்டமிடல்.

(6) சிரமக் குறைப்பு நடவடிக்கை.

(7) பண்முகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளல்

(8) சிறந்த முகாமைத்துவ தகவல் முறைமைகளைக் கடைப்பிடித்தல்

## 3) மொத்தலாப வீதம்:-

நிறுவனத்தின் மொத்தலாபத்தினை மையமாகக் கொண்டு கணிக்கப்படும் வீதமாகும். இது நிறுவனத்தின் விற்பனைக்கு உழைக்கப்படும மொத்தலாபம் என்ன நூற்று வீதமாக அமைந்திருக்கின்றது என பதை காட்டுவதாகும். வழமையில் மொத்த லாபமானது கொள்வனவு, விற்பனையால் உதைக்கப்படும் இலாபததைக் குறிக்கும். ஆதலால் இவ் மொத்தலாப வீதததை அதிகரிக்க

(1) பொருளுக்கான விற்பனை விலை அதிகரித்தல்.

(2) விற்ற கணக்கின் கொள்விலையை கட்டுப்படுத்தல்.

இதற்மைய விற்பனையை உயர்த்துதல், கொள்வனவுச் செலவை இழிவுபடுத்தல் இருப்பைப் பாதுகாததல் ஆகியன மூலம் மொத்தலாப வீதத்தினை உயர்த்தலாம். இதனை பின்வருமாறு கணிபபிடலாம்.

$$\text{மொத்தலாப வீதம்} = \frac{\text{மொத்தலாபம் X 100}}{\text{விற்பனை}}$$

## (4) தேறியலாபவீதம்:-

ஒரு நிறுவனத்தின் விற்பனைக்கும் தேறியலாபம் என்ன நூற்றுவீதமாக காணப்படும் என்பதை அறிய இவ்வீதம் தயாரிக்கப்படுகின்றது. அதாவது நிறுவனத்தின் விற்பனைக்கு உழைக்கப்படும் தேறியலாபம் என்ன நூற்று வீதமாக அமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் என்பதைக்காட்டும். இவ்விகிதமே நிறுவனங்களது செலவுக் கட்டுப்பாடுகள் எவ்வளவு திறமையாக மேற்கொள்ளப்படுகின்றன என்பதனை எடுத்துக்காட்டுவதனால் நிறுவனங்களின் முகாமைத் திறமையை கணிப்பிடும் மிகமுக்கிய வீதமாக இது கருதப்படும். இவ்வீதத்தை உயர்த்த மொத்தலாபத்தினை உயர்த்தல், ஏனைய வருமானங்களை உயர்த்தல், செலவுகளை இழிவுபடுத்துவதன் மூலம் அடையலாம். இதனை பின்வருமாறு கணிப்பிட்டுக் கொள்ளலாம்.

$$\text{தேறியலாபவீதம்} = \frac{\text{தேறியலாபம்} \times 100}{\text{விற்பனை}}$$

## (5) இயக்கச்செலவு வீதம்:-

நிறுவனம் ஒன்றை இயக்குவதனால் ஏற்படும் மொத்தச் செலவுகள் அதன் விற்பனைக்கு என்ன நூற்றுவீதமாக அமைந்துள்ளன என கணிப்பிடுவதாகும். அதாவது விற்பனைக்கு இயக்குச் செலவு என்ன நூற்றுவீதமாகக் காணப்படுகிறது என்பதனை கணிப்பதற்காக தயாரிக்கப்படுகின்றது. இதனை பின்வருமாறு கணிப்பிடலாம்.

$$\text{இயக்கு செலவுவீதம்} = \frac{\text{இயக்கச்செலவு} \times 100}{\text{விற்பனை}}$$

## (II) கடன் தீர்க்கும் தன்மை விகிதங்கள் (Solvency Ratios)

நிறுவனத்தின் கடன் தீர்க்கும் தன்மை தொடர்பான விகிதங்கள் கடந்தகால நிதிக் கூற்றுக்களில் இருந்தே கணிப்பிடப்படுகின்றன. ஆனால் கடன் தீர்க்கும் தன்மை நிகழ்காலம் பற்றியதாக இருக்கும். நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்ட காலத்திற்கும் நிகழ் காலத்திற்கும் இடையில் நிறுவனத்தின் கடன் தீர்க்கும் தன்மையில் மாற்றம் ஏற்பட்டிருக்கலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவை தொடர்பான செம்மையாக்கல்களை நிதிக் கூற்றுக்களில் மேற்கொண்ட பின்னரே விகிதங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். கடன் தீர்க்கும் தன்மை விகிதங்களை குறுங்காலம் நீண்டகாலம் என இருவகையாக நோக்கலாம்.

## (I) குறுங்காலம்:- திரவத்தன்மை

குறுங்காலம் தொடர்பான கடன் தீர்க்கும் தன்மை விகிதங்களை திரவத்தன்மை விகிதங்கள் என அழைப்பர். நாளாந்தநடவடிக்கைகளுக்கு தேவையான தொழிற்படுமுதல் நிறுவனத்தில் இருக்கின்றதா? என்பதை அறிய திரவத்தன்மை விகிதம் பயன்படுகின்றது. பொதுவாக நிறுவனங்களினால் குறுங்கால திரவத்தன்மையை மதிப்பிட பின்வரும் இரு விகிதங்கள் முதன்மையாக பயன்படுத்தப்படுவதை நோக்குவோம்.

### அ] நடைமுறை விகிதம்:-

இது ஒரு நிறுவனத்தின் நடைமுறைச் சொத்தை நடைமுறைப்பொறுப்புடன் ஒப்பிடும் விகிதமாகும். அதாவது நடைமுறைச்சொத்து நடைமுறைப்பொறுப்பின் எத்தனை மடங்காக உள்ளது. என்பதனை இவ்விகிதம் தரும். இவ்விகிதத்தினைப் பயன்படுத்தியே ஒரு நிறுவனத்திற்கு கடனை கொடுக்கலாமா கொடுத்தால் கடன் மீளப் பெறமுடியுமா என்ற முடிவினை இலகுவில் மேற்கொள்ள இவ்விகிதம் பயன்படும். இது பின்வருமாறு கணிப்பிடப்படும்.

$$\text{நடைமுறை விகிதம்} = \frac{\text{நடைமுறைச் சொத்து}}{\text{நடைமுறைப் பொறுப்பு}}$$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விகிதமானது 1. 8: 1 இற்கும் 2:1 இடையில் இருத்தல் ஏற்றுக் கொள்ளத்தக்கது என நிதிப் பகுப்பாய்வாளர்கள் கருதுகின்றனர்.

### ஆ] வினாவு விகிதம் அல்லது திரவவிகிதம்:-

வினாவுச் சொத்து அல்லது திரவச் சொத்துஎன்று நடைமுறைச் சொத்திலிருந்து சரக்கிருப்பினை நீக்குவதன் மூலம் கணிப்பிடப்படும். எனவே திரவத்தன்மை கொண்ட சொத்துக்களுக்கு நடைமுறைப் பொறுப்புஎன்ன விகிதமாக அமைந்துள்ளது என கணிப்பிடுவதாகும். இதனை பின்வருமாறு கணிப்பீடு செய்யப்படும்.

$$\text{விரைவு விகிதம்} = \frac{\text{நடைமுறைச்சொத்து} - \text{சரக்கிருப்பு}}{\text{நடைமுறைப் பொறுப்பு}}$$

வினாவுவிகிதம் 0. : 1 இற்கும் 1: 1 இற்கும் இடையில் இருத்தல் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கது என நிதிப்பகுப்பாய்வாளர்கள் கருதுகின்றனர்.

எனினும் வங்கிமேலாதிக்கப்பற்று நடைமுறைப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டிருந்து அது வினாவுக்காலத்தில் திருப்பிச்செலுத்தப்பட மாட்டாது எனத் தெரியவரின் வினாவு விகிதத்தினை பின்வருமாறு கணிப்பிடல் வேண்டும்.

$$\text{வினாவுவிகிதம்} = \frac{\text{நடைமுறைக் சொத்து} - \text{சரக்கிருப்பு}}{\text{நடைமுறைப்பொறுப்பு} - \text{வ. மே. பற்று}}$$

இவற்றைவிட திரவத்தன்மையை மதிப்பிட பின்வரும் விகிதங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

I) இருப்புச் சுழற்சி விகிதம்:- விற்றசரக்கின் கொள்விலைக்கும் சராசரி இருப்புக்கும் இடையிலான தொடர்பினை சராசரி இருப்பின் எத்தனை மடங்காக விற்ற சரக்கின்கொள்விலை இருக்கும் என்பதனை இதன் மூலம் கணிக்கலாம்.

$$\text{இருப்புசுழற்சி விகிதம்} = \frac{\text{விற்ற சரக்கின் கொள்விலை}}{\text{சராசரிஇருப்பு}}$$

II பணம் சேகரிக்கும்காலம்:- வருமதியாளர் அல்லது கடன்பட்டோர் எத்தனை நாட்களுக்கு ஒருதடவை பணத்தினைச் செலுத்துகிறார்கள் என்பதனைக் கணிப்பிட இவ்விகிதம் பயன்படுகிறது. இது பின்வருமாறு கணிப்பிடப்படும்.

$$\text{பணம் சேகரிக்கும் காலம்} = \frac{\text{கடன்பட்டோர்}}{\text{நாளாந்தகடன்விற்பனை}}$$

வருமதியாளர் சுழற்சிவிகிதம்:- ஒருவருடத்தில் வருமதியாளர் எத்தனை தடவைகள் பணத்தினைச் செலுத்தியுள்ளார் என்பதனை கணிப்பிடுவதாகும். இதனை பின்வருமாறு கணிப்பிடப்படும்.

$$\text{வருமதியாளர்சுழற்சி விகிதம்} = \frac{\text{கடன்விற்பனை}}{\text{கடன்பட்டோர்}}$$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**III பணம் செலுத்தும் காலம்:-** சென்மதியாளர் அல்லது கடன் கொடுத்தோர்க்கு எத்தனை நாட்களுக்கு ஒருதடவை பணம் செலுத்தப்படுகின்றது என்பதனை இதன் மூலம் அறியலாம்.

$$\text{பணம் செலுத்தும் காலம்} = \frac{\text{கடன் கொடுத்தோர்}}{\text{நாளாந்த கடன்கொடுத்தோர்}}$$

சென்மதியாளர் சுழற்சி விகிதம்:- சென்மதியாளருக்கு ஒருவருடத்தில் எத்தனை தடவைகள் பணம் செலுத்தப்பட்டது என்பதைக் கணிப்பிடும் விகிதமாகும்.

$$\text{செய்மதியாளர் சுழற்சி விகிதம்} = \frac{\text{கடன் கொள்வனவு}}{\text{கடன் கொடுத்தோர்}}$$

## (2) நீண்டகாலம் கடன் தீர்க்கும் தன்மை.

நீண்டகால நிதிஸ்திரத்தன்மையையும் மூலதன அமைப்பினையும் மதிப்பாய்வு செய்வதற்கு இவ்விகிதங்கள கணிப்பிடப்படுகின்றன. நிறுவனங்களின் இருக்கும் நீண்டகால தயினை மையமாகக் கொண்டு கணிப்பிடப்படுகின்ற மூலதன இணைப்பு விகிதத்தை இங்கு அவதானிப்பாம்.

**மூலதனஇணைப்புவிகிதம்:-** நிலையான வருமானத்தை உழைக்கும் முதலுக்கும் சாதாரண பங்குதாரர் நிதிக்கும் இடையிலான தொடர்பினை மூலதன இணைப்பு விகிதம் எனபர்.

முன்னுரிமைப்பங்கு முதல்:- நிலையான வட்டியுடைய கடன் முதல் (தொகுதிக்கடன்) ஒருபுறமாகவும் உரிமைமுதல, (சாதாரணபங்குகள), ஒதுக்கங்கள (இலாபநட்டக்கணக்கு மதயுடபட) ஆகியவை மறுபுறமாகவும வைத்து நோக்கபபடும விகிதமாகும். இதனை பின வருமாறு கணிபபிடப்படுப.

$$\text{மூலதன இணைப்புவிகிதம்} = \frac{\text{முன.பங்குமுதல்} + \text{நிலையான வட்டி உடைய கடன்முதல்}}{\text{சாதாரண பங்குதாரரது நிதி}}$$

இவ்விகிதம் 1.1 எனஅமைதல் நன்று எனவும் 1:1 இதிலும் பார்க்க கூடுதலாக இருப்பின் உயர் இணைப்பு எனவும 1:1 இலும பார்க்க குறைவாக இருப்பின் தாழ் இணைபபு எனக் கூறப்படினும் A.R ஜென்னிங்ஸ என்பர் தனது ''நிதிக் கணக்கியல் 2'' என்ற நூலில் 0.6:1 இலும் பார்க்க இவ்விகிதம் கூடுதலாக இருப்பின் உயர் இணைப்பு எனவும். 0.2:1 இலும் பாரக்க குறைவாயின் தாழ் இணைபபு எனவும் கூறியுள்ளார்.

மூலதன இணைப்பு விகிதத்தினை கணிப்பிடுவதற்கு பின்வரும் வாய்ப்பாடுகளும் சிலவேளைகளில் பின்பற்றப்படுகின்றது.

$$\text{மூலதனஇணைப்புவிகிதம்} = \frac{\text{முன்உரிமைபங்குமுதல்} + \text{நிலையானவட்டியுடைய கடன்முதல்}}{\text{சாதாரண பங்குமுதல்}}$$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

$$\text{மூலதன இணைப்புவிகிதம்} = \frac{\text{மு. பங். முதல் + நி. வ. உ. கடன்முதல்}}{\text{மு. ப. நிதி. + மு. ப. முதல் + நி. ப. உ. கடன் முதல்}}$$

எனினும் முதற்கூறிய வாய்பாடே பொதுவாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது.

## முதலீட்டு விகிதங்கள்: [Investment Ratios]

இவ்விகிதமானது இலாபத்தன்மையுடனும், திரவத்தன்மையுடனும் தொடர்புடைய விகிதமாகும். பொதுவாக நிறுவனத்தில் ஏறகனவே பங்குகளை வைத்திருப்போர் அதனை விற்பனை செய்ய விரும்பின் அல்லது எதிர்கால முதலீட்டாளர்கள் பங்குகளைக் கொள்வனவு செய்யவிரும்பின் பங்குகள் தொடர்பாக கிடைக்கூடிய வருமானம் பங்கின் பெறுமதி ஆகியன எதிர்காலத்தில் எவ்வாறு அமையும் என்பதனை முன்னுணர வேண்டிய நிலையில் உள்ளனர். இதற்கு உதவியாக பின்வரும் விகிதங்கள் கணிப்பிடப்படுகின்றன.

(1) பங்கு ஒன்றிகான உழைப்பு விகிதம்:- (Earnings per Share Ratio)
(2) விலை உழைப்பு விகிதம்:- (Price Earnings Ratio)
(3) உழைப்பு விளைவு விகிதம்:- (Earnings Yield Ratio)
(4) பங்கு ஒன்றிற்கான பங்குலாம்:- Dividend Per Share)
(5) பங்கு இலாப விளைவு விகிதம்:- (Dividend Yield Ratio)
(6) சாதாரண பங்கு ஒன்றிக்கான தேறிய புத்தகம் பெறுமதி:- (Net Book Palue Per Ordinary Share)
(7) பங்கு இலாபசார்பு விகிதம்;- (Dividend Coverage Ratio)

உசாத்துணை நூல்
Accounting Policies And
Accounting Standards
MR. B. RALACHANDRAN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
## Foreign Employment Bureau

★ செல்வி தி. தேன்மலர்
13 ஆம் ஆண்டு
வர்த்தகம்.

இலங்கைக்கான அன்னியச் செலாவணியை திரட்டித்தரும் மார்க்கங்களில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முக்கிய இடத்தை வகிக்கின்றது. இவ்வேளையில் அவ்வேலைவாய்ப்பின் நன்மைகளை மேலும் பெறும் நோக்கில் அச்செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தி மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். இவ்வகையில் 1985-ம் ஆண்டு 21-ம் இலக்க வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்திற்கமைய 1985 ம் ஆண்டு மே மாதம் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தொழிற்பயிற்சி அமைப்பின்கீழ் ஒரு தனிப்பட்ட கூட்டுத்தாபனமாக அமைக்கப்பட்டு இயங்க ஆரம்பித்தது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்கு ஆட்களைத் திரட்டும் பொழுது பல மோசடி நடவடிக்கைகள் இடம் பெறுவதால் இதனை உருவாக்கு அவ்விதமான மோசடி நடவடிக்கைகளைத்தடுக்க அல்லது குறைக்க உதவும் எனும் யோசனையில் அமைக்கப்பட்டது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் குறிக்கோள்களை நோக்கும் பொழுது

I. வெளிநாட்டில் வேலை பார்க்கும் இலங்கையர்களுக்கு சேமலாபங்களை வழங்குவதே இப்பணியகத்தின் பிரதான குறிக்கோளாகும்.

II. வெளிநாடுகளில் தொழில் நாடும் இலங்கையர்களுக்கு புதிய வேலைவாய்ப்புக்களை உண்டாக்குவதற்கு உதவிபுரிதல்.

III. இலங்கையர்கள் பிறநாடுகளில் வேலை வாய்ப்புத் தொடர்பான விபரங்களை பெறக்கூடியதாக ஒரு தகவல் வங்கியை உருவாக்கிச் செயற்படுத்தல்.

IV. இலங்கையில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர்களின் அபிவிருத்திக்கு உதவுதல்.

V. இலங்கையில் செயற்படும் வெளிநாட்டு தொழில்முகவர்கள் பிறநாட்டு முகவர்களுடன் தொழில் நிபந்தனை. தொடர்பான உடன்படிக்கைகளை மேற்கொள்ள உதவுதல்.

VI. இலங்கையர்களை வெளிநாட்டு வேலை முகவர் நிலையங்களுக்கான ஆள் திரட்டலுக்கேற்ப அனுமதிகளை தொழில் முகவர் நிலையங்களுக்கு வழங்கலும் சேவைக் கட்டணத்தை அறவிடலும்

VII. வெளிநாட்டு அரச அதிகாரிகள் தொழில் உடமையாளர்கள், தொழில் முகவர்கள் ஆகியோருடன் உடன்படிக்கைகளை ஏற்படுத்தல்

VIII. இலங்கையில் உள்ள தொழிற் திறமைகளுக்கு ஏற்றவாறு பிறநாடுகளில் வேலை வசதிகளை பெற்றுக்கொடுத்தல்

IX. வெளிநாடுகளில் வேலைவாய்ப்பைப் பெறும் இலங்கையர்களுக்கு வழங்கப்படும் ஆவணங்களின் சட்டத்தன்மையை பரிசோதனை செய்தல்.

X. வெளிநாடுகளில் வேலைவாய்ப்புக்களைப் பெறும் இலங்கையர்களுக்கு பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பணியகம் வெளிநாடுகளில் பணியாற்றுவோரின் நலனைப் பாதுகாக்க 1989-ம் ஆண்டில் தொழிலாளர் நலன் நிதியமொன்றை ஸ்தாபித்துள்ளது. இது பிறநாட்டில் வேலை செய்யும் இலங்கையரின் நிதிசார் நலனைப் பாதுகாப்பதுடன், அவர்களின் குடும்ப அங்கத்தவர்களின் நலனைப் பாதுகாத்தல் என்பவற்றுடன் இலங்கையர் நிரந்தரமாக நாடு திரும்பியபின் அவர்களுக்கான புனர்வாழ்வுத் திட்டத்தை மேற்கொள்ளல். தகுந்த தொழில் முயற்சியை மேற்கொள்ள ஆலோசனைப் சேவைப் பயிற்சித் திட்டங்களை ஏற்படுத்தல் என்பனவற்றையும் மேற்கொள்கின்றது.

இப்பணியகம் 1989ல் அப்போது பதவியில் இருந்த ஜனாதிபதியின் ஆணைக்கமைய வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு உதவும் மத்திய நிலையத்தை அமைத்தது இதற்கு உதவியாக இலங்கை வங்கி மக்கள் வங்கி எயர்லங்காவன் விமானச் சீட்டுப் பிரிவு குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் கடவுச் சீட்டுப் பிரிவு ஆகியவையும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது, இது இலங்கையர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான பல வசதிகளை இலகுவாகப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் அமைக்கப்பட்டது.

இப்பணியகம் வெளிநாடுகளில் வேலை பார்க்கும் இலங்கையர்கள் சார்பான சேவைகளுக்காக திறைசேரியில் இருந்து பணம் பெறுவதில்லை. அனுமதிபெற்ற தொழில் முகவர் நிலையங்கள் வேலை பெற்றுக் கொடுத்தவர்களிடமிருந்து அறவிடும் அனுமதிக் கட்டணமான ரூபா 2700 தொகையில ரூபா 700 ஐயும் அனுமதி பெற்ற தொழில் முகவர்களிடமிருந்து அறவிடும் வருடாந்த அனுமதிக்கட்டணமான 10000/- வருவாயைக்கொண்டுசெயற்படுகின்றது.

இனி வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அண்மைக்கால சாதனைகள் பற்றி நோக்குவோம். இப்பணியகம் நிறுவப்பட்ட 1985-ம் ஆண்டு முதல 1992-ம் ஆண்டு முடியும் வரை அனுமதியளிக்கப்பட்ட தொழில் முகவர் நிலையங்கள மூலம் 239. 563 இலங்கையர்கள் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர். இதே காலப்பகுதியில் 1149 தொழில் முகவர் நிலையங்கள் சோதனைகள் நடாத்தப்பட்டு 07. நிலையங்கள் தகுதியற்றவை என்பதனால் அனுமதி ரத்துச் செய்யப்பட்டது. மேலும் 2030 சட்ட விரோதமான தொழில் முகவர் நிலையங்கள்மீது பொலிசார் மூலம் தலையிட்டு வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதுவரை, வெளிநாடுகளில் வதியும் போதே 11309 இலங்கையர்களின் தொழிலுடன் சம்பந்தப்பட்ட காரியங்களின் பிணக்குகளைத் தீர்க்க உதவப்பட்டது. இதனால் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கும் குடும்பத்தவர்களுக்கும் ரூபா 95 இலட்சம் இப்பணியகத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

இதுவரை இப்பணியகத்தால் வழங்கப்பட்ட க்ஷேமலாப சேவைகளை நோக்கும் போது இப்பணியகம் ரூபா 77 இலட்சம் செலவிட்டது. அத்துடன் வெளிநாடுகளில் வீட்டுப் பணிப்பெண்களாக தொழில் புரியும் இலங்கையர்களுக்கான இலவச காப்புறுதித் திட்டம் ஒன்றின் மூலம் ரூபா 109 இலட்சம் செலவிட்டது. குவைத் பிரச்சினை காரணமாகவும் எதிர்பாராத சூழ்நிலை காரணமாகவும் வெளிநாடுகளில் தவிப்புக்குள்ளான இலங்கையரை நாட்டிற்குக் கொண்டுவர ரூபா 35 இலட்சத்தை இப்பணியகம் செலவிட்டது.

மேலும் இதன் பயிற்சித் திட்டங்களை நோக்கும்போது வேலை தேடும் இலங்கையர்கள் சிறந்த வேதனமும் சேவை நிபந்தனைகளும் பெற்றுக் கொள்ள வழிசெய்யும் விதத்தில் பணிப்பெண்களுக்கும், ஜூக்கி மெஷின் இயக்கும் பணியாளர்களுக்கும் விசேஷ பயிற்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் வேலை நாடுபவர்களின் தேவைக்காக, ஆங்கிலம் பேசக்கற்றுக் கொள்ளவும் உதவிபுரிகின்றது.

இவ்வாறு இப்பணியகம் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதுடன் நின்றுவிடாது, தொழில் செய்யும் போதும் நாடு திரும்பிய பின்னும் தொழிலாளரின் நலனில் அக்கறை கொண்டு செயற்பட்டு மக்களுக்கும் நாட்டிற்கும் உதவும் உறுதிப்பாட்டுடன் காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்கியல் தகவல்களும் அதன் இயல்புகளும்

★ N. வன்னியசிங்கம்
B. Sc. (B Ad) Hons.
யா/வைத்தீஸ்வரா கல்லூரி
யாழ்ப்பாணம்.

இலாபநோக்குடைய நிறுவனங்கள் தமது இலக்கினை இலகுவாகச் சென்றடைய முறையான திட்டமிடலையும், வழிநடத்தலையும் மேற்கொள்ளவேண்டிய நிலையிலுள்ளன. திட்டமிடலையும், வழிநடத்தலையும் மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு பலதரப்பட்ட பல்வேறு தீர்மானங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கும். எனவே சிறந்த தீர்மானங்கள் எடுக்கப்படுவதற்குத் தேவையான, முறையான கணக்கியல் தகவல்கள் வழங்கப்படல் அவசியமாகும். எந்த நிறுவனமாயினும் அதன் கொடுக்கல் வாங்கல்களை முறையாகப் பதிந்து கொள்வதன்மூலம் பெறப்படுகின்ற தரவுகளை நடைமுறைப்படுத்தி வழங்குவதற்கு அந்த நிறுவனத்தில் கணக்காளர்கள் இருப்பார்கள். அவர்களால் வழங்கப்படுகின்ற தரவுகளை நடைமுறைத் தகவல்களாக வழங்கினால் அதனையே கணக்கியல் தகவல்கள் என்பர்.

இக்கணக்கியல் தகவல்களை கணக்கியலாளர் இரண்டாகப் பிரிப்பர்

1. நிதிக் கணக்கியல் தகவல்கள்,
2. முகாமைக் கணக்கியல் தகவல்கள்

நிதிக் கணக்கியல் தகவல்கள் என்பது நிறுவனங்களால் ஒவ்வொரு நிதியாண்டின இறுதியிலும் தயாரிக்கப்படுகின்ற இலாப நட்டக் கணக்கும் ஐந்தொகையும், காசுப் பாய்ச்சல், நிதிப்பாய்ச்சல் கூற்றுக்களாகும். இவை காட்டும் தகவல்கள் நிறுவனத்திற்கு வெளியேயுள்ள கணக்கியல் தகவல்களைப் பயன்படுத்துவோருக்குப் பெரிதும் உதவும். முகாமைக் கணக்கியல் தகவல்கள் என்பது நிறுவனங்களை நிர்வகிப்போர் அந் நிறுவனத்தில் மேற் கொள்ளப்படும் தீர்மானங்களுக்கும், நெறிப்படுத்தலுக்கும் தேவையான தகவல்களைக் குறிக்கும். இத்தகவல்கள் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளுக்கேற்ப ஆழமானதாகவும் விளக்கமானதாகவும் இருத்தல் அவசியமாகும்.

ஒரு நிறுவனத்தின் கணக்கியல் தகவல்களை நிறுவனத்திற்கு உள்ளேயும், வெளியேயும் பயன்படுத்துவர். நிறுவனத்திற்கு உள்ளே முகாமையினரே இத்தகவல்களை பயன்படுத்துவோராவர். நிறுவனத்திற்கு வெளியே உள்ளவர்கள், குறித்த நிறுவனத்தினால் வெளியிடப்படுகின்ற நிதிக்கூற்றுக்கள், அவை சம்பந்தப்பட்ட விளக்கத்துடன் கூடிய குறிப்புக்கள் ஆகியவற்றிலேயே தங்களது நிறுவனம் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளுக்கு ஏற்ற தீர்மானங்களை எடுப்பதற்கு அத்தகவல்களிலேயே தங்கியிருக்க வேண்டியவர்களாகவுள்ளனர். அதனால் நிதிக் கணக்கியல் தகவல்கள் பின்வருவன சார்ந்தவையாக இருத்தல் வேண்டும்:

1. நிறுவனத்தின் சொத்துக்கள், பரிப்புக்கள சம்பந்தமான பூரண தகவல்கள்.
2. எதிர்கால இலாபமீட்டக்கூடிய சாத்தியக கூறுகள் தென்பட்டால் அவை சம்பந்தமான தகவல்கள்.
3. நிறுவனத்தின் சொத்துக்களில் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் பற்றிய உண்மையான தகவல்கள (சொத்து விற்பனை, சொத்துமறுமதிப்பீடு சம்பந்தமாக இலாபமீட்டப் பெற்றல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. நிறுவனத்தின் சொத்துக்களில் நட்ட மீட்டப்பெற்றால் அதுபற்றிய விளக்கத்துடன் கூடிய தகவல்கள்;

5. ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றம் ஏற்பட்டால் அம்மாற்றங்களுடன் கூடிய தகவல்கள்.

6. எந்தக் கணக்கீட்டுக் கொள்கைகளின டிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டனவோ அது பற்றிய தகவல்கள்.

7. நிதிக் கூற்றுக்களை பயன்படுத்துவோர் தம் வசதிகருதி சேர்த்துக் கொள்ளப் படுகின்ற தகவல்கள்.

கணக்கியல் தகவல்களைப் பின் வருவோரே முக்கியமாகப் பயன்படுத்துகிறார்கள்.

1. முகாமையினர் (பொது)
2. நிதித்திட்டமிடுவோர் (நிதி முகாமை)
3. உற்பத்தியாளர் (உற்பத்தி முகாமை)
4. சந்தைப்படுத்துவோர் (சந்தைப் படுத்தும் முகாமை)
5. உரிமையாளர்
6. வளங்களை ஒதுக்கீடு செய்வோர் (வள அணி முகாமை)
7. கடன் கொடுத்தோர் (வங்கி போன்ற)
8. ஊழியர்கள் அல்லது பிரதிநிதித்துவ தொழிற் சங்கங்கள்
9. வாடிக்கையாளர் அல்லது பொதுமக்கள்
10. அரச முகவர்கள் (இறைவரி திணைக்களம்)

முகாமையினரைப் பொறுத்தவரையில் ஆளுபவரும் கொண்டு நடத்துபவர்களும் அவர்களாயிருக்கின்றமையால் முழுமையான முகாமை, நிதிக் கணக்கியல் தகவல்கள் இவர்களுக்கு பூரணமாக தேவைப்படுகின்றன. நிதிக்கணக்கியல் தகவல்களைப் பலரும் பயன்படுத்துவதனால் அத்தகவல்கள் சில விசேட அம்சங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவையாவன:

| | |
|---|---|
| 1. அறியப்படு தன்மை:- | இலகுவாக விளங்கக்கூடிய சொற்பிரயோகமும் அமைப்பும் |
| 2. ஒப்பீட்டுத்தன்மை:- | நிறுவனங்களுக்கு நிறுவனமும் அதே நிறுவனத்தின் ஆண்டிற்கு ஆண்டும் ஒப்பிடக்கூடியதாக இருந்தல் வேண்டும். |
| 3. காலம் தவறாத் தன்மை:- | ஒரு தகவல் காலப்போக்கில் வழக்கொழிந்து போகலாம். எனவே தீர்மானங்களுக்கு ஏற்ற தகவல்கள் உரிய நேரத்தில் வழங்கப்பட வேண்டும். |
| 4. ஏற்புடைத் தன்மை:- | நல்ல தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டும். எவரும் ஏற்கக் கூடியவாறு அமைவது நல்லது. வியக்கக் கூடியவாறு அல்லது ஒத்துக்கொள்ள முடியாதவாறு தகவல்கள் அமையக் கூடாது. |
| 5. சரிபார்க்கும் தன்மை:- | உறுதிச்சான்றுகள், பற்றுச் சீட்டுக்கள், பட்டியல்கள் போன்ற உறுதி ஆவணங்களுடன் கூடியதான தகவல்களாக இருத்தல் வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் வழங்கப்படவும் மாட்டாது. உ+ம் பெறு. மதியவு தொகை. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சாயலிலாத் தன்மை;- எவருக்கும் சாதக, பாதக விளைவுகளை உண்டுபண்ணாதவாறு நடுவு நிலைமையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். ஏனெனில் நிதிக்கூற்றுக்களை அனேகம்பேர் பயன்படுத்துகிறார்கள் என்பது முன்பு விளக்கப்பட்டுள்ளது.

ஒரு நிறுவனம் நிதிக்கூற்றுக்களைத்தயாரிப்பதற்கு எந்தக் கணக்கியல் கொள்கைகளைப் பின்பற்றியதோ அக் கொள்கையையும் அதனுடன் கூடிய விசேட குறிப்புக்களையும் விளக்கமாக குறிப்பு வடிவில் கொடுக்க வேண்டும் என்பது முக்கிய விடயமாகும். ஏனெனில் ஒவ்வொரு கணக்காண்டு காலப்பகுதியிலும் கணக்கீட்டுக் கொள்கைகள் மாறுபடாமல் தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டும். ஏற்கனவே பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் அல்லது கணக்கியல் முறைமைக்கு பதிலாக வேறு கொள்கைகள் அல்லது முறைமைகள் பின்பற்றப்படுமானால் அவையும் வெளிக்காட்டப்படல் அவசியமாகும்.


இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்
(எபிரேயர் 13 : 8)

கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி வர்த்தக மாணவர்களை
கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து என்றும் ஆசிர்வதிப்பாராக
என்று நல் வாழ்த்துக்கள் அளிக்கின்றோம்

# கானான் ஜெப ஆலயம்

இருபாலை, கோப்பாய்.

குறைந்த செலவில் நிறைவான உணவாகவும் போஷாக்குக் குறைவை நீக்கவும்

**பாவியுங்கள் "ஜீவாகாரம்"**

இதில் 100 gr. ஜீவாகாரத்தில் 17 gr, புரதமும் 100 கிலோ கலோரி (சக்தியுமுண்டு)
உங்கள் தேவைக்கு ஏற்ப தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

- வளர்ந்துவரும் குழந்தைகட்கும்
- கர்ப்ப தாய்மார்களுக்கும்
- பாலூட்டும் தாய்மார்களுக்கும்
- போஷாக்கு குறைவான குழந்தைகளுக்கும்
- ஏனைய யாவருக்கும் சிறந்த சத்துணவு

இது முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட ஓர் உப உணவாகும்.

இவ்வுணவு பொரி அரிசி மா, வறுத்த சோயா மா, வறுத்த உழுத்தம்மா ஆகியவற்றினால் தயாரிக்கப்பட்டது. 100 கிலோ மாவில் 16·5 புரதமும் 400 கி. கலோரி சக்தியும் அடங்கியுள்ளன, மேலும் இதில் உடம்பிற்குத் தேவையான விட்டமின்களும் மின்னறல்களும் அடங்கியுள்ளன.

**ஜீவாகாரம்**

**அண்ணா தொழிலகம்**
**இணுவில்.**

தொலைபேசி: 021—23412
021—23413

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவரின் வணிக மன்ற செயற்பாடுகள் மேலும்வளர எமது வாழ்த்துக்கள்.

**ஸ்ரீ துர்க்கா தேவி**
**வைத்திய நிலையம்**

**சகல ரோக சிகிச்சை**
**நிலையம்**

இருபாலைச் சந்தி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

பற்று இதழுக்கு
நல்வாழ்த்துக்கள்.

★

★

★

**சிறிராம்ஸ்**

இருபாலை,
கோப்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கணக்கீட்டு நியமம் - 10

## S, L A S - 10

ச. மகிந்தன்
13-ம் ஆண்டு வர்த்தகப்பிரிவு

இந்த நியமம் நிலையான சொத்துக்களின் மீழ்மதிப்பீடு தொடர்பான மிகை பற்றியோ அல்லது வழமைக்கு மாறான முன்னையகால விடயங்கள் கணக்கீட்டு கொள்கையிலான மாற்றங்கள் என்பவை தொடர்பானவை பற்றியோ கருத்திற் கொள்ளவில்லை. இந்த நியமத்தின்படி வழமையான நடவடிக்கைகள் என்பது ஒரு வியாபார முயற்சியினால் பொதுவாக மேற்கொள்ளப் படுகின்ற வியாபார நடவடிக்கைகளுடன் அம்முயற்சியை மேலும் விரிவாக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்படுகின்ற முழு அளவிலான நடவடிக்கைகளை குறிக்கும் இந்த நியமத்தின்படி வழமைக்கு மாறான விடயங்களை இரண்டு வகையிற் பிரிக்கலாம்.

### அபூர்வமான விடயங்கள்

### (EXCEPTINAL IIEMS)

ஒரு முயற்சியின் வழமையான நிகழ்ச்சி விடயங்களில ஒன்றாக இருப்பதுடன அந் நிகழ்வின் அல்லது நடவடிக்கையின் அளவிற்கு அல்லது அந்நிகழ்வில் குறிப்பிடக் கூடிய ஒன்றாக இருப்பதுடன் அக்குறித்த நிதியாணடு காலததிற்கான நிதியறிக்கைகளை உண்மையானதும் நியாயமானதுமாக தயாரிப்பதற்கு பிரததியேக வெளிப்படுத்தல் வேண்டி நிற்பதுமான விடயங்களே அபூர்வமான விடயமாகும் அபூர்வமான விடயம் தொடர்பான கணககீடானது வழமையான விடயங்களுடன் உள்ளடககப்பட்டு ஒரு முயற்சியின இலாப நட்டத்தை கணிப்பதற்கு பயன்படுத்தப்படும். எனினும் அந்நிகழ்வின் அபூர்வமானதன்மையினையும் அளவினையும் வெளிப்படுத்தும் நோக்குடன் அவை நிதி அறிக்கையில் பிரத்தியேகமாக வெளிப்படுத்த வேண்டும். இதன்மூலம் ஒரு நிதியறிக்கையை பயன்படுத்து வோருக்கு உண்மையானதும் நியாயமானதுமான கருத்துகளை கொடுக்க வேண்டும். ஒரு கம்பனியை பொறுத்தமட்டில் அபூர்வமான விடயம் என கருதப்படுபவை.

i) நிரந்தரமான ஒரு வாடிக்கையாளரிடம் இருந்து வரவ்வேண்டிய தொகையை பதிவழித்தலும் குறிப்பிடக்கூடிய அளவு இருப்பும அல்லது குறைவேலை பதிலளிக்கப்படுவதும் ஆகும்

ii) சாதாரண வியாபாரத்தின் நிலையான சொத்துக்கள் விற்பனையால் ஏற்படும் நட்டம் அல்லது இலாபம், கணிசமான அளவு தொகையாக இருந்தால் அவை கட்டாயம் குறிப்பிடபபடல் வேண்டும்.

iii) ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கை அடிபபடையில் ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ளப்படுகின்ற பதிவழிப்புக்கள் தவிர்ந்த ஏனைய அருவச் சொத்துக்களின் பதிவழிப்பு

iv) நீண்டகால ஒப்பந்தங்கள் மீதான நட்டத்திற்கான அசாதாரண ஏற்பாடு (சரககிருப்பு பிரதியீட்டு ஒதுக்கம் நிலையான சொந்த பிரதியீட்டு ஒதுக்கம்)

v) நட்டயீட்டுதொகை தீர்க்கப்படும் போது ஏற்படும்மிகை பெருமளவில் காணப்படின் (தியழிவு)

vi) தொடர்ச்சியான இலாப இழப்பிற்காக செய்யப்படும் தொகைகள்

vii) அன்னிய மாற்றுவீதத்தால் ஏற்படும் நட்டம் / லாபம் (அன்னிய நாணய கடனை பெற்றிருந்தால் இது ஏற்படும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) அசாதாரண விடயம்

ஒரு முயற்சியின் வழமையான நடவடிக்கைகட்கு புறம்பானவையாக இருப்பதுடன் அவை முக்கியமானவையாகவும் அத்துடன் திரும்பத் திரும்ப மீண்டும் நிகழாதவை என எதிர்பார்க்கப்படுபவையாகவும் இருக்க வேண்டும். இவை அபூர்வமான விடயங்களையோ அன்றி முயற்சியின் அசாதாரண விடயங்களையோ உள்ளடக்காது. இத் தன்மைகளைக் கொண்டவையே அசாதாரண விடயங்களாகும். கம்பனிகளைப் பொறுத்தமட்டில் நிறுவனத்திற்கு நிறுவனம் தொழிற்பாடுகளில் வேறுபடுவதனால் ஒரு நிறுவனத்திற்கு அபூர்வமான விடயம் என்று கருதப்படுபவை ஒரு நிறுவனத்திற்கு அசாதாரண விடயமாகவும் ஒரு நிறுவனத்திற்கு அசாதாரண விடயம் என்று கருதப்படுபவை இன்னோர் நிறுவனத்திற்கு அபூர்வமான விடயமாகவும காணப்படுகின்றன. ஒரு நிறுவனத்தின் குறித்த காலபகுதிக்கான அசாதாரண விடயங்கள் இலாப நட்டக் கணக்கிலே அக்காலப் பகுதிக்கான பங்கு லாபம் போன்ற பதிவுகளுக்கு முன்னமே காட்டப்பட வேண்டும். ஒவ்வொரு அசாதாரண விடயங்களும் தனித்தனியே நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்த வேண்டும். எனினும் ஒரே வகையான அல்லது மாதிரியான நடவடிக்கைகளினால் ஏற்படும் தொகையை மொத்தமாகவும் காட்டலாம். அதாவது வரிமிகை பற்றாக்குறை சென்றாண்டு இலாப நட்டக் க/கு மீதியுடன சீராக்க வேண்டும. சில வேளைகளில் கடந்த ஆண்டு இலாபத்துடன் சம்பந்தப்படக் கூடிய சீராக்கமும் செய்யப்பட வேண்டுமானால் அவையும இதில் வெளிப்படுத்தப்பட வேண்டும். ஒரு நிறுவனத்தைப் பொறுத்தவரையில் அசாதாரண விடயம் என்று கருதப்படுவன.

i) ஒரு நிறுவனத்தின் பொறித்தொகுதியை அல்லது கணக்கீட்டு கொள்கையை கைவிடின் அல்லது பொறித் தொகுதி போன்ற சொத்துக்களின் பௌதீகத்தன்மையிலே மாற்றங்களைக் கொண்டுவரின் அல்லது ஓர் திட்டத்தைக் கைவிடுதல் போன்ற நிகழ்வினால் ஏற்படுத்தப்படும் மாற்றமும் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

ii) மீண்டும் விற்பனவு நோக்கில் உபகம் பனிகளிலே செய்யப் படுகின்ற முதலீடுகளில் ஏற்படும் மாற்றம்

iii) சாதாரண வியாபார நடவடிக்கைகளைத் தவிர்த்து நிலையான சொத்துக்களை விற்பதனால் முக்கியமாக நட்டம் தோன்றின் அல்லது அந்நட்டம் கணிசமான அளவு தொகையாக இருப்பின் அல்லது சில நிலையான சொத்தை வெளிக்காட்டாது விடின் அவை குறிப்பிடப்படவேண்டும் (மறைவொதுக்கம்) இங்கிலாந்து காணிகட்டிடம்

iv) குறித்த நிதியாண்டு காலப்பகுதியிலே அசாதாரண சூழ் நிலையினால் நிலையான சொத்தில் ஏற்பட்ட பெரும் வீழ்ச்சி (பழைமையாகல்)மாறாக(மெருகேறல்)

v) அரசாங்கம் ஏனைய சட்ட அமைப்புக்களின் தலையீடுகளினால் நிறுவனத்தின் உடமைகள் உடமையாக்கப்படின் காட்டப்படவேண்டும்.

## முன்னைய கால விடயங்கள்

முன்னைய காலவிடயங்கள் என்பது கணக்கியலில் கொள்கையில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது அடிப்படை பிழைகளைத் திருத்துவதால் முன்னைய வருடங்களில் ஏற்படக்கூடிய முக்கியமான சீராக்கங்களைக் கருதுவதாகும். மீண்டும் மீண்டும் ஏற்படும் திருத்தங்கள் முன்னய வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீட்டின் செம்மையாக்கல்கள் முன்னைய காலவிடயங்களில உள்ளடங்கா. எனவே முன்னைய கால விடயங்கள் என்பன மிகவும் அரிதானவை. காலத்திற்குக் காலம் தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்கள் அவை தயாரிக்கப்படும் சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் கணக்கீட்டு மதிப்பீடுகளையும் உள்ளடக்கும். உதாரணம் ஐயக்கடன். இருப்புக்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கிழப்பு, தேய்மானம் அளிக்கப்படும் சொத்துக்களின் சிக்கனபயன்தரு ஆயுள் காலம் என்பன மேலதிக தகவல்கள் பெறப் படுவதாலும் தொடர்ந்து ஏற்படுகின்ற அனுபவங்களினாலும் புதியநிகழ்வுகளின் காரணத்தாலும் தீர்மானம் எடுப்பதும் மீள் மதிப்பீடு செய்வதும் அவசியமாகிறது. இவ் வகையான நிகழ்வுகள் வழமையாக மேற் கொள்ளப்பட்டு வந்த கணக்கீட்டு மதிப்பீ டுகளை பிழையெனவும் சுட்டிக்காட்டலாம். எனினும் இவ்வாறானமீழ்மதிப்பீடுகளி னால் ஏற்படுகின்ற மாற்றங்கள் அவை ஏற் பட்ட காலத்திற்கு மட்டுமன்றி எதிர் காலத்தையும் பாதிக்குமாயின் எதிர் கால க/குகளிலும் தாக்கல் செய்யப்பட வேண்டும். மதிப்பீடுகளின் மாற்றத்தின மீதான தாக்கம் முக்கியமானதாயின அது அக்காலப் பகுதிக்கான நிதிக் கூற்றுக்களால் வெளிபடுதலின கீழ் வெளிப்படுத்தப்பட வேண்டும்

ஒரு காலப்பகுதிக்கான நிதிக்கூற்று முன்னய கால நடவடிக்கைகளுடன் தொடர் புடைய இலாபம் அல்லது நட்டத்தை உள் ளடக்கியிருக்கலாம். இங்குகூறப்படுகின்ற இலாபம அல்லது நட்டம் மதிப்பீடுகளின உள்ள மாற்றத்தால் ஏற்படுவதல்ல. இவை முகாமை உரிமையாளர் தவிர்ந்த ஏனையோ ரின் தீர்மானங்களினாலும் கணிப்பீட்டினா லும் ஏற்படுவதாகும். இத்தகைய நிகழ்வுக ளையே முன்னையகால சீராககமாகக் கொள்ளலாம். உதாரணம வருமானவரி க/குகளை தீர்த்தல் வழக்கில் இருந்த சம்பந் தப்பட்ட தொகைகளைத் தீர்த்தல் எனப வற்றைச் சுட்டலாம். குறித்த நிதியாண்டிற் கான இலாபநட்டத்தினை அறிய முற்படும் போது முன்னைய கால சீராக்கம் தவிர்க் கப்படவேண்டும். நிதிக்கூற்றுகளில் முன் னைய கால சீராக்கங்கள் முன்னைய ஆண் டின் இலாபநட்டக் க/கு மீதியிலே இருந்து சீராக்கப்படுவதுடன் நிதிக் கூற்றுகளில் முன் னைய கால சீராக்கங்களின் விபரமும் வெளிப்படுத்தட்படவேண்டும்.

## கணக்கீட்டு கொள்கையிலான மாற்றங்கள்

ஒவ்வொரு நிதியாண்டு காலப்பகுதி யிலும் கணக்கீட்டு கொள்கைகளில் மாற்றம் ஏற்படாமல் அவை தொடர்ந்தும் பின்பற்ற வேண்டும் என்பது பொதுவான கோட் பாடாகும். ஏற்கனவேபின்பற்றப்பட்டகணக் கீட்டு கொள்கைகள் அல்லது கணக்கியல் முறைமைக்குப் பதிலாக வேறு கொள்கைகள் பின்பற்றப்படுமானால் அதனையே கணக் கீட்டுக் கொள்கையில் ஏற்படும் மாற்றம் என்பர். கணக்கீட்டு கொள்கையில் மாற்றம் ஏற்படின் அவை அதற்கான காரணங்களு டன் வெளிப்படுத்தப்பட வேண்டியது நிறு வனங்களின் சிறப்பியல்பே,

கணக்கீட்டு கொள்கையில் மாற்றம் ஏற்படும்பொழுது புதிய கொள்கையின் அடிப்படையில நடப்புகால மாற்றம் தொடர்புடைய கடந்தகாலத்திற்கான தொகைகள் மீள் கணிப்பிடப்படும். முன் னைய காலத்துற்குரிய திரண்ட செம்மை யாக்கல்கள் ஆரமப மீதியாக உள்ள இலாப நட்ட க/கு மீதியில் இருந்து சீராக்கப்பட வேண்டும். இச்சந்தர்ப்பத்திலே கணக்கீட்டு கொள்கையில ஏற்பட்ட மாற்றத்தின் கார ணமும் கடந்த நடப்பு வருட நிதிக்கூற்றுக ளில அதன தாககத்தையும் வெளிப்படுத்த வேண்டும். இவ்வாறான கணக்கீட்டு கொள்கைமாற்றங்கள் உரியகாலத்திற்கு செயற்படுத்தபபடும்போது அதன் கடந்த கால நிகழ்வுகளையும அதனால் எதிர்காலத் தில் ஏற்படக்கூடிய விளைவுகளையும் வெளி கொணர வேண்டும். அவ்வாறு வெளிக் கொணரப்பட்ட விடயங்களை அடிப்படை யாக கொண்டு தயாரிக்கப்படுகின்ற நிதிக் கூற்றுக்கள் எதிர்கால நிதிதிட்டமிடலுக்கும் செயற்படுத்தலுக்கும் வழிகோலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்று இதழுக்கு

நல்வாழ்த்துக்கள்

# வீனஸ் தங்க மாளிகை





**தங்க வைர நகை வியாபாரம்**

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்.

22 கரட் தங்க நகைகள் குறித்த காலத்தில்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

**187, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொத்துக்களின் வகைப்படுத்தல்
# CLASSIFICATION OF ASSETS

★ S. K. பிரபாகரன் B. B. A. (S. pl)

சாதாரணமாக, நிறுவனங்களில் காணப்படுகின்ற பயன்பாடும் பெறுமதியுமுடைய பொருளியல் வளங்களை சொத்துக்கள் எனக் குறிப்பிடலாம். நிறுவனங்கள் தமது நிதிநிலைமையினை வெளிப்படுத்தும் முகமாக ஓர் குறிப்பிட்ட திகதியில் ஐந்தொகையின் மூலமாக சொத்துக்கள் (Assets), பொறுப்புக்களை (Liablite s)வெளிப்படுத்துகின்றன. இவ்வாறு ஐந்தொகையில் சொத்துக்களை வெளிப்படுத்தும்போது அவை வேறுபட்ட தலையங்கங்களின் கீழ் வகைபபடுத்தப்படுவதை நாம் அவதானிக்க முடியும். இவ்வாறான வகைப்படுத்தலுக்குரிய அடிப்படை அம்சங்களை நாம் ஆராயமுடியும்.

## 1) தொழிற்படும் சொத்துக்களும், தொழிற்படாச் சொத்துக்களும்:

### Operating and Non - Operating Assets

கொடுக்கப்பட்டதான ஓர் குறித்த காலப்பகுதியில ஓர் வியாபாரத்தின் தொழிற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சொத்துக்களைத் தொழிற்படும் சொத்துக்கள் எனக் குறிப்பிடமுடியும. தொழிற்படும் சொத்துக்கள் என்பதனுள் தொழிற்பாடுகளில் நேரடியாகப் பயன்படுத்தப்படும் நிலம், கட்டடங்கள், தொழிற்சாலைகள், பொறியும் பொறிவிருட்சமும என்பனவும், தொழிற்பாடுகளில் உதவிக்காக (Supporting) தேவைப்படும் சேவை வசதிகளும் உள்ளடங்குகின்றன. உதாரணமாக சேவைவசதிகள் என்பது ஓர் உற்பத்திக் கம்பனியைப் பொறுத்து அதற்கான மின்வலு வளங்கள் அதன் சொநத (own) மின்சாரப் பொறியின் மூலம் வழங்கப்படுவதனைக் குறிப்பிடலாம்.

வேறுபட்ட காரணங்களுக்காக நிறுவனத்தின் தொழிற்பாடுகளில் ஈடுபடுத்தப்படாதிருக்கும் சொத்துக்களை தொழிற்படாச் சொத்துக்கள் எனக் குறுப்பிடலாம். இதற்கு உதாரணங்கள் வருமாறு:

(i) நிர்மாண நிலையில் இருக்கும் தொழிற்சாலை.

உதாரணம்: நடைபெறும் வேலைகள். (Work in progress)

(ii) மேலதிகமான சொத்துக்கள். (Redundant Assets)

(iii) தேவைக்கு மிகையான சொத்துக்கள். (Assets Surplus of Needs)

(iv) உதிரிப்பாகங்கள் இன்மையினால் பயன்படுத்த முடியாது இருக்கும் சொத்துககள் (Idling Assets)

தொழிற்படாச் சொத்துக்களை வருமாறு குறித்துக் காட்டலாம்.

தொழிற்படாச் சொத்து =

உபயோகிக்க முடியாத சொத்துக்கள் + நடைபெறும் வேலைகள் + எதிர்கால பயன்பாட்டிற்கு என குறித்து இருக்கும் சொத்துக்கள் + நன்னிலையில் உள்ள மிகையான சொத்துக்கள் + வழக்கிழந்த சொத்துக்கள்.

ஒரு விடயத்தின் தன்மையின் அடிப்படையிலேயே ஓர் சொத்து தொழிற்படும் சொத்தா அல்லது தொழிற்படா சொத்தா என்பதை தீர்மானிக்க முடியும். உதாரணமாக ஓர் சிமெந்துத் தொழிற்சாலையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியர்களுக்காக ஓர் வீடமைப்புத் திட்டம் ஏற்படுத்தப்பட்டிருப்பின் அதன் காரணமாகவே அவ் ஊழியத்தைப் பெறக்கூடிய நிலை இருப்பின் அது சேவைவசதியாகக் (Service facility) கருதப்பட்டு தொழிற்படும் சொத்தாகக் கணிக்கப்படும். அவ்வாறல்ல நிறுவன தொழிற்சாலைகளுக்காக ஊழியம் பெறப்படுவது அவ் வீடமைப்புத் திட்டத்தில் தங்கியிருக்காவிடின் அத்திட்டம் தொழிற்படா சொத்தாகும்.

Assets = Operating Assets + Non Operating Assets

## 2) விடயம் சார்ந்த வகைப்படுத்தல்: (Subjective Classification)

இவ் வகைப்படுத்தலானது சொத்துக்களின் நோக்கங்கள் அல்லது குடுக்கோள்களை (Objects) அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்படாது சொத்துக்களது விடயங்களின் அடிப்படையில் வகைப்படுத்தப்படும்.

A) பௌதீகச் சொத்துக்கள்
Physical Assets)

வியாபாரம் ஒன்றில் பௌதீக அடிப்படையில் வெளிப்படுத்தப்படும் நிலம், கட்டடம், பொறிகள், உதிரிப்பாகங்கள் என்பன பௌதீக சொத்துக்களாகும்.

B) அருவச் சொத்துக்கள்
(Intangible Assets)

இவை பௌதீக வடிவல்லாத நன்மதிப்பு, செயற்படுத்தும் ஆற்றல், விளம்பரச் செலவுகள் போன்றவற்றை குறிப்பனவாகும். இத்தகைய சொற்க்களில் சில முழுமையாகவே ஐந்தொகையில் வெளிப்படுத்தப்படாது இருக்கலாம். மற்றவை ஐந்தொகையில் மதிப்பிடப்பட்ட பெறுமதிகளில் (Estimated Valuation) வெளிப்படுத்தப்படலாம்.

C) பணச் சொத்துக்கள்:
(Money Asset)

காசு மீதி, வங்கி மீதி, முதலீடோள், பணக் கோரிக்கைகள் (Money Claims) என்பன பணச் சொத்துக்களாகக் கருதப்படும் பணம் கோரிக்கை என்பது வருமதிகளையும் (Debts) கடன் மீதிகளையும் (Loan-Biances) குறிப்பதாக அமையலாம்.

பின்வரும் சமயிபாட்டின் மூலமாக இவ் வகைப்படுத்தலை நாம் வெளிப்படுத்தலாம்.
சொத்துக்கள் = பௌதீகச் சொத்துக்கள் | அருவச் சொத்துக்கள் + பணச் சொத்துக்கள் | பணக் கோரிக்கைகள்.

## 3. நடைமுறைச் சொத்துக்களும், நடைமுறை அல்லாத சொத்துக்களும்: Current and Non Current Assets)

வியாபார செயற்பாடுகள் (Activity, இருவகையினதாகக் காணப்படலாம்) அவையாவன:

i) வியாபார தொழிற்பாடுகளை ஆற்றுவதற்கு நிலம், கட்டடம், தொழிற்சாலை போன்ற அடிப்படையான வசதிகளை ஈட்டுதல்.

ii) உற்பத்தி வியாபாரம் போன்ற வியாபார செயற்பாட்டு நடவடிக்கைகள்.

ஓர் வியாபாரம் சட்டப்படியானதாக (Legal) அல்லது அமைப்பு முறையாக (Organisational) உருவாக்கப்பட்டதாக இருக்கலாம். ஆயினும் அவை தொழிற்பாட்டில் இல்லாமலும் இருக்கக்கூடும்.

உதாரணம்: விற்பனைக்கான இருப்புக் குறைவினால் கடை முடப்பட்டிருக்கும் நிலை.

ஆகவே இரு வகையான நடவடிக்கைகள் Transactions காணப்படும்.

a) நடவடிக்கைகள் வியாபார அமைப்புடன் நேரடி தொடர்புடையதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும், வியாபாரத் தொழிற்பாடு களுடன் நேரடி தொடர்பற்றதாக இருத்தல்.

b) நடவடிக்கைகள், வியாபார தொழிற்பாடுகளுடன் நேரடித் தொடர்புடையதாக இருத்தல்.

bஇல் குறிப்பிடப்பட்டிருப்பது நடைமுறை (Current) நடவடிக்கை ஆகவும் மற்றையது நடைமுறை அல்லாததாகவும்( Non Curre t) அழைக்கப்படும்.

நடைமுறைச் சொத்துக்கள் என்பது, மூலப்பொருள் இருப்பு; குறைவேலை இருப்பு. பூர்த்திப் பொருள் இருப்பு, வியாபார வருமதிகள். காசும் வங்கியும் போன்றனவாகும். பொறிகள் போன்றவற்றின் பராமரிப்புக்காக நியாயமான அளவில் வைத்திருக்கப்படும் உதிரிப்பாகங்கள் நடைமுறைத் தொழிற்பாடுகளில் உடனடியாகப் பயன்படுத்தப்படுமாகையால் அவை நடைமுறைச் சொத்துக்களாகும். ஆயினும் மேலதிக இருப்புக்கள், தேவையற்ற இருப்புக்கள், மேலதிகமான காசு வங்கி மீதிகள் நடைமுறைச் சொத்துக்களாகக் கொள்ளமுடியாது. ஏனெனில் அவை நடைமுறைத் தொழிற்பாடுகளுக்கு அடிப்படையாக அமைவதில்லை.

நடைமுறைச் சொத்துக்கள் விற்பனைப் பொருட்களினூடாக குறுங்காலத்தில் காசாகும் தன்மையினைக் கொண்டதாகும். ஆகவே நடைமுறைச் சொத்துக்கள் "குறுங்கால சொத்துக்கள் (Short Term Assets) என குறிக்கப்படலாம். ஆயினும் ஒவ்வொரு குறுங்கால சொத்துக்களும் நடைமுறைச் சொத்தாக இருக்கவேண்டியதில்லை. உதாரணமாக ஊழியர் ஒருவருக்கு வழங்கப்பட்ட குறுங்கால முற்பணம் ஒன்று நடைமுறை தொழிற்பாடுகளை பேணுவதற்கு அடிப்படையானதல்ல என்பதால் அதை நடைமுறைச் சொத்தாகக் கருதுவதில்லை. ஆனால் சட்டரீதியான வேண்டுகோளின்படி அம்முற்பணம் வழங்கப்படுவது நடைமுறையாக இருப்பின் அவை நடைமுறைச் சொத்தாக கருதப்படும். இவ்வாறான க்குழுப்பங்களைத் தவிர்க்க நடைமுறைச் சொத்து அல்லாத விடயங்களை (Other Short Term Assets) என்பதாக வெளிப்படுத்தலாம்.

Assets = Non Current Assets + Current Assets,

Currenr Assets = Stocks + Work in progress + Debts + Cash + Others Assets rel ting to Current operations.

Shorts Term Assets — Current Ass ts + Other Short term Asssets.

★ நடைமுறைச் சொத்துக்களின் விளக்கம் SLAS 15இல் விளக்கப்பட்டுள்ளது.

4) நோக்க அல்லது செயற்பாட்டு ரீதியான வகையீடு Classification By Purpose or Activity / Objective Classification

நடைமுறை, நடைமுறை அல்லாத முக்கியமாக சில நடைமுறை அல்லாத சொத்துக்கள் நோக்கங்கள் அல்லது செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு பயன்தருமுறையில் பாகுபடுத்தப்படும் செயற்பாடுகள் பிரதான செயற்பாடுகளாகவும் Main Activities) சேவை வசதிகளாகவும் Aervices Facilities இருக்கும். உதாரணமாக பெற்றோலியம் கம்பனி ஒன்றின் பிரதான செயற்பாடுகளாக சுத்திகரிப்பு, சந்தைப்படுத்தலும் ஆராய்ச்சி என்பனவும் சேவை வசதிகளாகபோக்குவரத்து, களஞ்சியப்படுத்தல். பராமரிப்பு என்பனவும் இருக்கும்.

## 5) குறுக்கு வகையீடு: Cross Classifieation

இவ்வகையீட்டில் நடைமுறை, நடைமுறை அல்லாத சொத்துக்கள் என்பன பௌதீக சொத்துக்களாகவோ அல்லது பணச் சொத்துக்களாகவோ இருக்கமுடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) மரபுவழி வகையீடு

Conventional Classification

மரபு ரீதியான வகையீட்டின்படி ஐந் தொகையின் சொத்துப் பக்கத்தில் நிலை யான சொத்துக்கள் (Fixed Assets), நடை முறைச் சொத்துகள் (Current Assets) என இரு வகை பிரதிபலிக்கப்படும். நடைமுறைச் சொத்துகள் ஏற்கனவே வரையறுக்கப் பட்டுள்ளன. நிலையான சொத்துக்கள் என் பது பின்வரும் பண்புகளால் அறியப்படும்:

(a) வியாபாரத்தில் பாவனை நோக்க முடையது.

(b) விற்பனை நோக்கற்றது.

(c) நீண்ட கால ஆயுள் தன்மையுடை யது.

நிலையான சொத்துக்கள் யாவும் நடை முறை அல்லாச் சொத்துக்களே. ஆனகல் நடைமுறை அல்லாச் சொத்துக்கள் யாவும் நிலையான சொத்துக்கள் அல்ல.

சொத்துக்கள் யாவும் பல்வேறு அடிப் படைகளில் வகைப்படுத்தப் படினும் கூட எல்லா வகையீடுகளையுமே ஐந்தொகை யில் வெளிப்படுத்துவது சாத்தியமானதல்ல. எனவே, முக்கியம் வாய்ந்த வகையீடுகளை ஐந்தொகையில் வெளிப்படுத்தி; ஏனைய வகைகளின் விபரங்களை வெளிப்படுத்து வதற்கு பிரத்தியேகமான அறிக்கைகளைத் தயாரிப்பது சிறந்த உத்தியாகும்.


வணிகத்தின் மணம் பரப்பி மங்களக்கரமாக
பற்று தொடர்ந்து வெளிவர வாழ்த்துகின்றோம்.

நவநாகரீகத்திற்கேற்ப
ஆடைகளை தைத்துப் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய தையலகம்

★
★
★

# சிற்றி போய் ரெயிலர்ஸ்

181, சிவன் பண்ணை வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

Prop. R. Bala


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகுதிக் கடன் மீட்டல்

## Redemalue of Debunchers.

பா. சண்முகநாதன்
13 ஆம் ஆண்டு, வர்த்தகப்பிரிவு.

பொதுக்கம்பனியொன்று எவ்வளவு முதலை அனுமதித்த முதலாக கொண்டுள்ளதோ அவ்வளவு பங்குகளையுமே வழங்கி பங்கு மூலதனம் திரட்ட உரிமையுடையதாகும். அப்பங்கின்தொகைக்கும் அதிகமான அளவிலே பங்குகளை விநியோகிக்க அக் கம்பனிக்கு உரிமைகிடையாது. எனவே அனுமதித்த முதலிற்கும் அதிகமான அளவு தொகை அக் கம்பனியின் விருத்திக்கு மேலதிகமாகத் தேவைப்படின் கடனகளை பெறுவதன் மூலம் திரட்டிக், கொள்ளலாம். அவவாறு ஒரு கம்பனி பெறும கடன் வகைகளிலே முதன்மையானது இத்தொகுதிக் கடன்களாகும். ஒரு பங்குக்கான பெறுமதி மனு, ஒதுக்கல் அமைப்பின் மூலம் பங்குத்தாரரிடமதிரட்டிக்கொள்ளுவதைப்போன்ற தொகுதிக்கடன பத்திரங்களுக்கான பெறுமதி தொகுதிதொகுதியாக அறவிடப்படுவதனால இது தொகுதிக்கடன எனப்படுகிறது. இத்தொகுதிக்கடன்களை திபெஞ்ஞர்கள்' ணிச்சங்கள என்றும அழைபபர்.

ஒரு கம்பனியினால் வழங்கப்படுகின்ற தொகுதிக் கடன் பத்திரங்கள காவி அல்லது வெற்றுத்தொகுதிக் கடன் ஈட்டுத்தொகுதிக் கடன மீடகத்தக்க தொகுதிக் கடன், மீட்கத்தகாத தொகுதிக்கடன பதியப்பட்ட அல்லது முதல்தர தொகுதிக் கடன் பதியப்பட்டாத 2 ம் தர தொகுதிக் கடன் என்று பலவகையாகப் பிரிக்கப்படுகின்றது. இத்தகைய கடன் வகைகளிலே முதன்மையானது மீட்கத்தக்க தொகுதிக் கடன்களாகும். மீட்புக்காண காலத்தை குறித்து வழங்கப்படுகின்ற பத்திரங்கள் மீட்கத்தக்க தொகுதி கடன்களாகும், ஒரு கம்பனியானது மீட்கத்தக்க தொகுதி கடன்களை மீட்பதற்கு இரண்டு வழிகளை பின்பற்றுகின்றன.

1) தொகுதிக்கடன் ஆழ்நிதி மூலம் மீட்டல்.

2) தெரிபுரிமை அடிப்படையில் மீட்டல்.

மீட்கத்தக்க தொகுதிக் கடன் பத்திரங்கள் எப்பொழுது வழங்கப்பட்டனவோ அந்த ஆண்டிலிருந்து மீட்புக்கான காலம் வரையுள்ள இடைக்காலங்களிலே ஒவ்வொரு ஆண்டு இலாபத்திலிருந்தும் தொகுதி கடன் மீட்டலுக்காக உருவாககப்படுகின்ற நிதியே தொகுதிக் கடன் மீட்பு ஆழ் நிதியாகும். இநத ஆழ்நிதியை பயனபடுததி தொகுதி கடனகள உரிய தவணைகளில் மீட்கபபகின்றன. இவ்வாறு ஆழ்நிதியை பயன்படுத்தி தொகுதிக கடன்களை மீட்கும் போது கம்பனிகள் பின்வரும் வழிமுறைகளை பின்பற்றுகின்றன.

i) பகுதி மீட்டல்.

ii) தொகுதிக்கடன் ஆழ்நிதி முதலீட்டின் மூலம் மீட்டல்

iii) தொகுதிக்கடன் ஆழ்நிதி ஆதார நட்ட ஈட்டு பத்திரததின் மூலம மீட்டல்

iv) தான் விற்ற பத்திரங்களை தானே வாங்கிக் கொள்ளல் (மீண்டும் கொள்வனவு செய்தல்).

i) ஒவ்வொரு ஆண்டும் தொகுதிக்கடன் மீட்டலுக்காக உருவாக்கப்படுகின்ற ஆழ் நிதியை பயன்படுத்தி அதேஆண்டு அதே அளவான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரங்களை ரத்துச்செய்து கொள்வதையே பகுதி மீட்டல் என்பர்.

ii) தொகுதிக்கடன் மீட்டலுக்காக உருவாக்கப்படுகின்ற ஆழ்நிதியானது மீட்புக்கு குறித்தகாலத்தில் தேவைப்படுவதே அன்றி இடைக்காலங்களில் தேவைப்படாது. இதனால் ஆழ்நிதி உருவாக்கத்தின் மூலம் கம்பனிக்கோ தொகுதிக்கடன்தாரருக்கோ எவ்வித பயனும் இல்லை. இதனை உத்தேச நோக்காகக் கொண்ட கம்பனிகள் ஒவ்வொரு ஆண்டும் உருவாக்குகின்ற ஆள் நிதியை வியாபாரத்திற்கு வெளியே முதலீடு செய்து குறித்தகாலத்தின் பின் அவ் முதலீடுகளை பெறுவதன் மூலம் உரிய கடன்களை ரத்துச் செய்து கொள்கின்றன. இதனையே ஆழ்நிதி முதலீட்டின் மூலம் மீட்டல் என்பர்.

iii) ஒவ்வொரு ஆண்டும் தொகுதிக்கடன் மீட்டலுக்காக உருவாக்கப்படுகின்ற ஆழ்நிதியை வியாபாரத்திற்கு வெளியே முதலீடு செய்யாமல் ஆதார ஆயுள் நட்ட ஈட்டு பத்திரத்திலே முதலீடு செய்து உரிய திகதியிலே அம் முதலீட்டை பெறுவதன் மூலம் குறித்த கடனகளை மீட்டுக் கொள்ளலாம். இவ் வகை மீட்டலின்போது இந்த ஆயுள் நட்ட ஈட்டு பத்திர முதலீட்டுக்கு வட்டி வருமானம் மட்டுமன்று பங்குலாபங்களும் பெற வாய்ப்பு ஏற்படுகின்றது. இதனையே ஆழ்நிதி நட்ட ஈட்டு பத்திரத்தின மூலம் மீட்டல் எனபர்.

iv) பொதுக்கம்பனிகள் பங்குச் சந்தையிலேயே தொகுதிக்கடன் பத்திரங்களை விற்கின்றன. அதனால் அந்த சந்தைகளிலேயே அப் பத்திரங்கள் கைமாற்றம் செய்யப்படுகின்றன. ஒரு கம்பனி மீட்கத்தக்க தொகுதிக்கடன் பத்திரங்களை பங்குச் சந்தையிலே என்ன விலைக்கு விற்றதோ அதன் பெறுமதி குறைவாக காணப்படுகின்ற நேரங்களிலே உருவாக்கப்படுகின்ற ஆழ்நிதியை பயன்படுத்தி அவற்றை தானே மீண்டும் கொள்வனவு செய்வதன் மூலம் அவற்றை ரத்துச் செய்து கொள்ளலாம். இதனையே விற்ற பத்திரங்களை தானே கொள்வனவு செய்தல் மூலம் மீட்டல் என்பர்.

**தெரிவுரிமை அடிப்படையில் மீட்டல்**

தெரிவுரிமை அடிப்படையில் மீட்டல் என்பது மீட்கத்தக்க தொகுதிக்கடன் பத்திரங்களை வழங்கிய அன்றே அவை உரிய காலத்திலே எந்த அடிப்படையில் என்ன வழங்கப்பட்டு மீட்கபபடும் என்ற அறிவித்தலை உத்தரவாதத்துடன் வழங்கி பின்னர் மீட்புக் காலத்திலே அத்தொகுதிக்கடன் பத்திரத்தாரரின் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதையே தெரிபுரிமை அடிப்படையில் மீட்டல் என்பர்.

அதாவது மீட்கத்தக்க தொகுதிக்கடன் பத்திரங்களை வழங்கும் போது அவை மீட்கப்படும் நேரத்திலே சாதரண பங்குகளையோ கமபனி சொத்துக்களையோ வேறு புதிய தொகுதிக்கடன பத்திரங்களையோ அல்லது பணததினையோ வழங்குவதாக உறுதியளித்திருந்தால் இவை மீட்பு காலத்திலே தொகுதிக்கடன்தாரரின் விருப்பத்திற்கேற்ப வழங்கப்பட்டு அவை மீட்கப்படும என்பதாகும்.

ஓர் கம்பனியானது தொகுதிக்கடன்களை மீட்கும் போது வட்டத்துடன மீட்பதாக உறுதியளித்திருந்தால ஆழ்நிதி மூலம் மீட்கும் கம்பனியானால் அவ் மீட்பு வட்டத்தை அவ் ஆழ் நிதியிலிருந்தே வழங்க வேண்டும்.

ஆழ்நிதி உருவாக்கல் மூலம் மீட்காமல் வேறு வழிகளிலே மீட்க விரும்புகின்ற கமபனிகள் அவ் மீட்பு வட்டததை இலாபங்களிலிருந்தே வழங்கவேண்டும் (இடைக்காலங்களிலே மீட்கப்படும் பத்திரங்கள் மீட்பு வட்டம் பெறா)

**தொகுதி கடன். ஆள்நிதி முதலீட்டின் மூலம் மீட்டல**

1) வரையறுத்த மாலா கம்பனி ஒவ்வொன்றும்100/=வான6%மீட்கத்தக்கதொகுதிக் கடன் பதிரங்களை 1.1.85லே வழங்கி அவற்றை 5 ஆண்டுகளின் பின்னர் (1.191ல 103/= விலையில் மீட்பதாக உறுதியளித்திருந்தது இதற்காக கம்பனி ஒவ்வொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு இலாபத்திலும் சமதொகையை ஆழ் நிதியாக உருவாக்கி 5% வருமானம் தரும் முதலீடு ஒன்றில் இட்டு வருகின்றது. வருமானம் மீண்டும் முதலிடப்படும் உரிய திகதியிலே முதலீடுகள் பெறப்பட்டு கடன் பத்திரங்கள் ரத்துச் செய்யப்பட்டன.

மேற்படி நடவடிக்கைகளை நாட்குறிப்பிலும் பேரேட்டிலும் பதிந்து காட்டுக.

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| 1) வங்கி க/கு | 500,000 | |
| 6% தொகுதி கடன் க/கு | | 5,00,000 |
| ஒவ்வொன்றும் 100/- வான 5,000 தொகுதி கடன்பத்திரங்கள் வழங்கப்பட்டன. | | |
| 2. இலாப நட்ட பகிர் க/கு | 1,00,000 | |
| தொகுதி கடன் மீட்பு ஆழ்நிதி கணக்கு | | 1,00,000 |
| இலாபத்திலிருந்து மீட்புக்காக 1,00,000/- நிதி உருவாக்கப்பட்டது. | | |
| 3. தொகுதி கடன் மீட்பு ஆழ்நிதி முதலீட்டு க/கு | 1,00,000 | |
| வங்கி கணக்கு | | 1,00,000 |
| உருவாக்கப்பட்ட ஆழ்நிதி முதலீடு செய்யப்பட்டது. | | |
| 4. இலாப நட்ட பகிர் க/கு | 1,00,000 | |
| தொகுதி கடன் மீட்புஆழ் நிதி க/கு | | 1,00,000 |
| இலாபத்திலிருந்து மீட்புக்காக 1,00,000 நிதி உருவாக்கப்பட்டது. | | |
| 5. வங்கி கணக்கு | 5,000 | |
| தொகுதிக்கடன் மீட்பு ஆழ் நிதி க/கு | | 5,000 |
| முதலீட்டிலிருந்து 5,000/- வருவாய் பெறப்பட்டது. | | |
| 6. தொகுதி கடன் மீட்பு ஆழ்நிதி முதலீட்டு கணக்கு | 105,000 | |
| வங்கி க/கு | | 105,000 |
| முதலீட்டு வருமானமும் ஆழ்நிதியும் சேர்ந்து முதலிடப்பட்டது. | | |
| 7. இலாப நட்ட பகிர் க/கு | 1,00,000 | |
| தொகுதி கடன் மீட்பு ஆழ்நிதி க/கு | | 1,00,000 |
| இலாபத்திலிருந்து மீட்புக்காக 100,000, நிதி உருவாக்கப்பட்டது. | | |
| 8. வங்கிக் கணக்கு | 10,250 | |
| தொகுதிக் கடன் மீட்பு ஆழ்நிதி க/கு | | 10,250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலீட்டிலிருந்து 10,250/- வருமானம் பெறப்பட்டது.

| | | |
|---|---|---|
| தொகுதி கடன்'மீட்பு ஆழ்நிதி முதலீட்டு க/கு | 110,250 | |
| வங்கி க / கு | | 110,250 |

முதலீட்டு வருமானமும் ஆழ்நிதியும் சேர்ந்து முதலிடப்பட்டது.

| | | |
|---|---|---|
| 10. இலாப நட்ட பகிர் க / கு | 1,00,000 | |
| தொகுதி கடன் மீட்பு ஆழ் நிதி க / கு | | 1,00,000 |

இலாபத்திலிருந்து மீட்புக்காக நிதி உருவாக்கப்பட்டது,

| | | |
|---|---|---|
| 11. வங்கி கணக்கு | 15,763 | |
| ஆழ்நிதி க / கு | | 15,763 |

முதலீட்டிலிருந்து 15,763 வருவாய் பெறப்பட்டது.

| | | |
|---|---|---|
| 12. ஆழ் நிதி முதலீட்டு க / கு | 115,763 | |
| வங்கி க / கு | | 115,763 |

முதலீட்டு வருமானமும், ஆழ் நிதியும் சேர்ந்து முதலிடப்பட்டது.

| | | |
|---|---|---|
| 13. இலாபநட்ட பகிர் க/கு | 1,00,000 | |
| தொகுதிக்கடன் மீட்பு ஆள் நிதி (க கு) | | 1,00,000 |

மீட்புக்காக இலாபத்திலிருந்து 1,00,000/- நிதி
உருவாக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 14. வங்கி க / கு | 21,551 | |
| தொகுதிக்கடன் மீட்டல் ஆள்நிதி க கு | | 21,551 |

முதலீட்டிலிருந்து 15,763 வருமானம் பெறப்பட்டது.

| | | |
|---|---|---|
| 15. ஆள்நிதி முதலீட்டு க கு | 121,551 | |
| வங்கி க / கு | | 121,551 |

முதலீட்டு வருமானமும் ஆழ்நிதியும் சேர்ந்து முதலிடப்பட்டது.

| | | |
|---|---|---|
| 16. வங்கி கணக்கு | 552,564 | |
| தொகுதி கடன் மீட்பு ஆழ்நிதி முதலீட்டு க / கு | | 552,564 |

முதலீடுகள் யாவும் பணமாக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| 17. 6 வீத தொகுதிக்கடன் க / கு | 500,000 | |
| தொகுதிக்கடன் மீட்டல் ஆழ்நிதி க கு | 15,000 | |
| தொகுதிக்கடன் மீட்பு க கு | | 515,000 |

5,000 பத்திரங்கள் 100 - விலையில் மீட்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 18. தொகுதிக்கடன் மீட்பு க / கு | 515,000 | |
| வங்கி க / கு | | 515,000 |

தொகுதிக்கடனுக்கான முழுத்தொகையும் வழங்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| 19. தொகுதிக்கடன் மீட்பு ஆள் நிதி | 537,564 | |
| பொது ஒதுக்கம் | | 500,000 |
| இலாப நட்ட க / கு | | 37,564 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதிக்கடன் மீட்பு ஆள்நிதி கணக்கு தொகுதிகடன் மீட்பு ஆள்நிதி முதலீட்டு க கு

| | | |
|---|---|---|
| மீ. கீ. செ. | இ. ரு. பகிர் வங்கி | மீ.கீ. செ |
| 100,000 | க/கு 1,00,000 1,00,000 | 1,00,000 |
| | (1-1-86) (1-1-86) | |
| மீ. கி. கொ. | மீ. வ. மீ. கீ. வ | மீ. கீ. செ. |
| செ. 205,000 | 1,00,000 1,00,000 | 205,000 |
| | இற பகிர் வங்கி 105,000 | |
| | க/கு 1,00,000 | |
| | முதலீட்டு | |
| | வருமானம் 50070 205,000 | 205,000 |
| | (1-1-89) | |
| 205,00 | 205,000 மீ. கி. வ 205,000 | மீ. கீ. செ.315,52 |
| மீ. கீ. செ. 315,250 | மீ. கீ. வங்கி 110,250 | |
| | கொ. வ. 205,000 | |
| | (1-1-87) | |
| | இ.ரு.பகிர் 100,000 1-1-88 315,250 | 315,250 |
| | முதலீட்டு மீ. கீ. வ. 315,250 | மீ. கீ. செ. |
| | | 431,013 |
| | வருமானம் 10,250 | |
| | 315,250 315,250 வங்கி 115,763 | |
| மீ. கீ. செ. 431,013 | மீ. வ. 315,250 431,013 | 431,130 |
| | (1-1-88) (1-1-89) | |
| | இ. ற. பகிர் 100,000 மீ. கி. வ. 431,013 | ம கீ வ 5 52,560 |
| | முதலீட்டு | |
| | வரு 15,763 வங்கி 121,551 | |
| 431,013 | 431,013 (1-1-90) 552,564 | 552,564 |
| மீ. கி. வ. 552,564 | மீ. கி. வ 431,013 மீ. கி. வ 552,564 | வங்கி 552,564 |
| | (1-1-89) | |
| | இ. ரு. பகிர் 1,00,000 | |
| | முதளீட்டு வரு 21,531 | |
| 552,564 | 552,564 | |
| தொ. க. மீ. 15,000 | மீ. வ. 532,564 | |
| பொது. ஓது 500,000 | | |
| இ. ரு. க கு 37,564 | | |
| 552,564 | 552,564 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6 % தொகுதிகடன் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| தொகு. க. மீ | 500,000 | மீ. கி. வ | 500,00 |

**தொகுதிகடன்மீட்பு க/கு**

| | | | |
|---|---|---|---|
| வங்கி | 515,000 | 6% தொா. க. | 500,00 |
| | | மீட்புவட்டம் | 15,000 |
| | 515,000 | | 515,0000 |

**தெரிவுரிமை அடிப்படையில் மீட்டல்:**

வரையறுத்த பிரசாந்தியா கம்பனி ஒவ்வொரு 100 -வான 7,500 8 விகிதமீட்கத்தக்க தொகுதிக்கடன் பத்திரங்களை 1-1-85 ல் தெரிவுரிமை அடிப்படையில் அவற்றை 5 ஆண்டு களின் பின் மீட்பதாக உறுதியளித்து பின்வருவனவற்றை முன்வைத்தது

i) ஒவ்வொரு 10 - வான சாதாரண பங்குகளை 2 வட்டத்தில் வழங்கல்

ii) ஒவ்வொரு 10 - வான 9% மீட்கத்தக்க முன்னுரிமை பங்குகளை 1 - கழிவில் வழங்கல்

iii) ஒவ்வொரு 100/ வான 7 % புதிய தொகுதிக்கடன் பத்திரங்களை சமவிலையில் வழங்குதல்

v) காசு அல்லது காசோலை வழங்குதல்.

மீட்புக்கான காலம் நெருங்கியபுடன் மீட்டலுக்கான அறிவித்தல் கம்பனியால் விடுவிக்கப்பட்டது அப்போது தொகுதி கடன்காரர் வருமாறு விண்ணப்பம் செய்தனர்

i) 1800 தொகுதி கடன்காரர் சாதாரண பங்கை ஏற்றல்

ii) 2700 தொகுதி கடன்காரர் முன்னுரிமை பங்கை ஏற்றல்

iii) 1,000 பேர் புதிய தொகுதி கடன் பத்திரங்களை ஏற்றல்

iv) எஞ்சியோர் காசோலையை ஏற்றல்

தொகுதிக்கடன்காரரின் விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு உரியன வழங்கப் பட்டு பத்திரங்கள் ரத்துச் செய்யப்பட்டன.

நாட்குறிப்புகளை எழுதுக.

| | விபரம் | வரவு | செலவு |
|---|---|---|---|
| 1) | வங்கி கணக்கு | 7,50,000 | |
| | 8% தொகுதி கடன் க கு | | 7,50,000 |
| | 7,500 8% மீட்கத்தக்க தொகுதிக்கடன்கள் வழங்கப்பட்டன. | | |
| 2) | 8% தொகுதி கடன் கணக்கு | 180,000 | |
| | இலாப நட்டக்கணக்கு | 9,000 | |
| | தொகுதிக்கடன் மீட்பு க கு | | 189,00 |
| | 1800 பத்திரங்கள் 5% வட்டத்தில் மீட்கப்படல் | | |
| 3) | தொகுதிக்கடன் மீட்பு கணக்கு | 189,000 | |
| | சாதாரண பங்கு முதல் க கு | | 157,500 |
| | பங்கு வட்டக் க கு | | 31,500 |
| | 15,750 சாதாரண பங்குகள் 2/- வட்டத்தில் வழங்கப்பட்டு கணக்கு தீர்க்கப்பட்டது. | | |
| 4) | 8% தொகுதிக்கடன் கணக்கு | 2,70,00 | |
| | இலாப நட்ட கணக்கு | 13,300 | |
| | தொகுதிக்கடன் மீட்பு கணக்கு | | 2,83,500 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2,700 பத்திரங்கள் 5 - வட்டத்தில் மீட்கப்படல்

5) தொகுதிக்கடன் மீட்பு க/கு 283500
பங்கு கழிவுக் கணக்கு 31,500
9% முன்னுரிமை பங்கு முதல் க கு 315,000
31,500 முன்னுரிமை பங்குகள் கழிவில் வழங்கப்பட்டு கணக்கு தீர்க்கப்பட்டது.

6) 8% தொகுதிக்கடன் க/கு 1,00,000
இலாப நட்ட கணக்கு 5000
தொகுதிக்கடன் மீட்பு கணக்கு 105,000
1,000 பத்திரங்கள் 5 ரூபா வட்டத்தில் மீட்கப்படல்,

7) தொகுதிக்கடன் மீட்பு கணக்கு 105,000
7% புதிய தொகுதி கடன் கணக்கு 105,000
1050 தொகுதி கடன் பத்திரங்கள் சமவிலையில் வழங்கப்பட்டு கணக்கு தீர்க்கப்பட்டது.

8) 8% தொகுதி கடன் கணக்கு 2,00,000
இ. ந. கணக்கு 10,000
தொகுதிக்கடன் மீட்பு கணக்கு 2,10,000
எஞ்சிய 2,000 பத்திரங்கள் 5% வட்டத்தில் மீட்கப்படல்

9) தொகுதிக்கடன் மீட்பு கணக்கு 2,10,000
வங்கி கணக்கு 210,000
210,000 ரூபா பெறுமதியான காசோலை வழங்கப்பட்டு கணக்கு தீர்க்கப்பட்டது.

தெரிபுரிமை அடிப்படையில் தொகுதி கடன் மீட்டல் உதாரணம் மூலம் நாட்குறிப்பு பதிவுகள் விளக்கப்பட்டுள்ளது)

## தொகுதிக்கடன் ஆழ்நிதி மூலம் பகுதி மீட்டல்

வரையறுத்த ரவிச்சந்திரன் கம்பனி ஒவ்வொரு 100 ரூபாவான 10,000 9% மீட்கத்தக்க தொகுதிக்கடன்களை 1-1-80 ல் வழங்கி அவற்றை 20 ஆண்டுகளில் 5% வட்டத்தில் மீட்பதாக உறுதியளித்தது. இதற்காக கம்பனி ஒவ்வொரு ஆண்டு இலாபத்திலும் ஒரு தொகையை ஆழ்நிதியாக உருவாக்கி அதனை 5% வருமானம் தரக்கூடிய முதலீடொன்றில் இட்டு வருகிறது. வருமானம் மீண்டும் முதலிடப்படும்.

31-12-87 ல் தொகுதிக்கடன் கணக்கு மீதி 8,00,000
,, தொகுதிக்கடன் ஆழ் நிதி கணக்கு 287,500

தொகுதிக்கடன்களை மீட்கவும் அதற்காக முதலீடுகளை பணமாக்கவும் இயக்குனருக்கு பூரண அதிகாரமுண்டு. அந்த அதிகாரத்தை பயன்படுத்தி பின்வருமாறு கடன்கள் மீட்கப்படுகின்றன.

1) 31-12-88 ல் 75,000 ரூபா முதலீடு 81,000 ரூபாவுக்கு விற்கப்பட்டு அப்பணத்தில் சம அளவிலான தொகுதிக்கடன்கள் மீட்கப்பட்டன.

2) 1-1-90, இல் 90,000 முதலீடுகள் 88,000 ரூபாவுக்கு விற்கப்பட்டு அப்பணத்தைக் கொண்டு 93, 000 ரூபா பெறுமதியான தொகுதிக்கடன்கள் மீட்கப்பட்டன.

1-1-90 ல் உள்ளவாறு பின்வரும் கணக்குகளைத் தயாரிக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) தொகுதிக்கடன் கணக்கு
2) தொகுதிக்கடன் ஆழ்நிதி கணக்கு
3) தொகுதிக்கடன் ஆழ்நிதி முதலீட்டு கணக்கு
4) தொகுதிக்கடன் மீட்பு கணக்கு

**தொகுதிக்கடன் ஆழ்நிதி க / கு**

| | | | |
|---|---|---|---|
| பொது ஓது | 81,000 | மீ. கீ. வ. (1-1-88) | 2,87,500 |
| மீ. கீ. செ. | 276,875 | இ. பகிர் | 50,000 |
| | | முதலீட்டு வ. | 14,375 |
| | | மு. வி. இ. | 6,000 |
| | 357,875 | | 357,875 |
| மீ. கீ. செ. | 340,718 | மீ. கீ. வ. (1-1-89) | 276,875 |
| | | இ. ந. ப. | 50,000 |
| | | முதலீ. வரு. | 13,843 |
| | 340,7180 | | 340,718 |
| முதலீ. நட்டம் | 2,000 | மீ கி. வ (1-1-90) | 340,718 |
| பொது ஓது. | 93,000 | தொ. மீ. க கு | 50,000 |
| மீ. கி. செ. | 308,253 | மு. வரு | 12,535 |
| | 403,253 | | 403,253 |
| | | மீ. கி. வ (1-1-91) | 308,253 |

**தொகுதி க. மீட்பு ஆழ்நிதி முதலீட்டு க/கு**

| | | | |
|---|---|---|---|
| மீ. கீ. வ. (1-1-88) | 287,500 | மு. வி, | 75,000 |
| வங்கி | 64375 | மீ. கீ. செ. | 276 ,87 |
| | 351,875 | | 351,875 |
| மீ. கி. செ (1-1-89) | 276,875 | மீ கீ. செ, | 340,718 |
| வங்கி | 63,843 | | |
| | 340,718 | | 340,718 |
| மீ. கி. வ. (1-1-90) | 340,718 | மு. வி. | 90,000 |
| வங்கி | 62,535 | மீ. கி. செ | 313253 |
| | 403,253 | | 403,253 |
| ப. கீ. வ (1-1-91) | 313,253 | | |

**9 வித தொகுதிக் கடன் க / கு**

| | | | |
|---|---|---|---|
| தொகுதி மீட் | 81,000 | மீ. கி வ | 800,000 |
| மீ. கீ. செ. | 719,000 | | |
| | 800,000 | | 8,00,000 |
| தொ. கு. பிடி | 93,000 | மீ கி வ | 719,000 |
| மீ. செ. | 626,000 | | |
| | 719.000 | | 7.19.000 |

**தொகுதிக்கடன்மீட்பு க / கு**

| | | | |
|---|---|---|---|
| வங்கி | 81,000 | 9 தொகு. க | 81,000 |
| வங்கி | 88,000 | 9 வி. கொ க | 93.05 |
| தொ மீ. கழி | 5000 | | |
| | 93 000 | | 93,000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுக் கம்பனியின் பங்கு வழங்கல் முறைகள்.

★ இ. ரகுமார்
13ம் ஆண்டு வர்த்தகப் பிரிவு.

பொதுக் கம்பனி ஒன்று பொது மக்களுக்கு பங்குகளை வெளியிட்டே முதல் திரட்டி தொழில் தொடங்க வேண்டும் என்ற விதி வரையறுக்கப்பட்டுள்ளதால் அக்கம்பனிகள் பங்குமுதலை திரட்டும் நோக்குடன் சில பங்குவழங்கல் முறைகளை பின் பற்றுகின்றன. அவ்வாறு பின்பற்றப்படும் வழிமுறைகளில் பின்வருவன முக்கியமானவையாகும்:

I) பெயரளவுப் பெறுமதியில் அல்லது முகப்பெறுமதியில் பங்கு வழங்கல்.

II) வட்டத்துடன் பங்குவழங்கல்.

III) கழிவுடன் பங்குவழங்கல்.

IV) விகிதாசாரப்படி பங்கு வழங்கல்.

V) பொது முறையில் பங்கு வழங்கல்.

VI) உறுதிப் பொறுப்புத் தரகு மூலம் பங்கு வழங்கல்.

மேற்படி பங்கு வழங்கல் முறைகளிலே முதல் நான்கு முறைகளிலான பங்கு வழங்கல் நடைமுறையிலே பெரும்பாலான கம்பனிகளினால் பின்பற்றப்படினும் ஏனைய இரண்டு வழிகளிலான பங்கு வழங்கல்களும் வழக்கில் உள்ளன.

பங்கு வழங்கல் நடைமுறை

கம்பனி பங்குகளை வெளியிட தீர்மானித்தவுடன் அது குறித்த விளம்பரத்தை மூன்விபரம் என்பதூடாக தொடர்பு சாதனங்களிற் பிரசுரிக்கும். இவ் விளம்பரங்களை உற்று நோக்கும் பங்குகளில் முதலிட ஆர்வமுள்ளோர் குறிக்கப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து விண்ணப்பக் கடிதத்துடன் பங்குக் கொள்வனவுக்காக கம்பனிக்கு கட்டுப்பணத்துடன் மனுச்செய்வர். இவ் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு பங்குகள் ஒதுக்கப்பட்டதும் அது குறித்து கம்பனியால் ஒதுக்கற் கடிதம் (பகுத்தற் கடிதம்) அனுப்பப்படும். இதன் பின்பே மனுச்செய்தவர் பங்குதாரராகி வருவர். மாறாக மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு பங்குகள் ஒதுக்கப்படாதவர்களுக்கு நிராகரிப்புக் கடிதம் அனுப்பி வைக்கப்படும். அத்துடன் கட்டுப்பணமும் மீள அளிக்கப்படும்.

பகுதி பகுதியாக பங்கு வழங்கல்

வழங்கப்பட்ட பங்கின் பெறுமதி முழுவதும் கம்பனிக்கு உடனடியாக தேவைப்படாவிடின் அது ஒரு பகுதி பகுதியான அழைப்பை மேற்கொள்ளும். இந்த முறையில் வழங்கப்பட்ட பங்கின் பெறுமதியில் ஒரு பகுதி மனுவுடனும் மறு பகுதி ஒதுக்கல், அழைப்புக்களின் போதும் கால இடைவெளி குறித்து பெற்றுக்கொள்ளப்படும். உ+ம்:- (a) 10/- பெறுமதியான பங்கு முகவிலையில் வழங்கப்பட்டு அது பின்வருமாறு பகுதி பகுதியாக அழைக்கப்படலாம்.

| | |
|---|---|
| மனுவுடன் | 4/= |
| ஒதுக்கலுடன் | 3/= |
| முதலாம் அழைப்பின் போது | 2/= |
| இரண்டாம் அழைப்பின் போது (இறுதி) | 1/- |
| | 10/= |

பகுதி பகுதியாக அழைக்கப்படும்போது கணக்குப்பதிவுகள்.

i மனுப்பணம் பெற்றுக் கொள்ளும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ வங்கி கணக்கு வரவு.

மனு ஒதுக்கற் கணக்கு செலவு.

மனுப்பணம் நிராகரிக்கப்பட்டு அதற்கான மனுப்பணம் மீள அளிக்கப்பட்டால்.

★ மனு ஒதுக்கற் கணக்கு வரவு
வங்கி கணக்கு செலவு.

iii மனுவுக்கும் ஒதுக்கலுக்கும் சேர்த்து பங்கு முதலாக்கலின் போது

★ மனு ஒதுக்கற் கணக்கு வரவு
உரிய பங்கு முதற் கணக்கு செலவு

iv ஒதுக்கற் பணம் பெற்றுக் கொள்ளும் போது

★ வங்கிக் கணக்கு வரவு
மனு ஒதுக்கற் கணக்கு செலவு.

v அழைப்புக்கு முதலாக்கும் போது (1ம், 2ம், இறுதி)

★ உரிய அழைப்புக் கணக்கு வரவு
உரிய பங்கு முதற் கணக்கு செலவு

vi அழைப்பிற்கு பணம் பெற்றுக் கொள்ளும் பேபது.

★ வங்கிக் கணக்கு வரவு
உரிய அழைப்புக் கணக்கு செலவு.

vii பங்கு வழங்கற்தரகு, செலவு என்பவற்றிற்கு

★ பங்கு வழங்கற் செலவு, தரகுக் கணக்கு வரவு

வங்கிக் கணக்கு செலவு.

குறிப்பு:- பங்கு வழங்கற் செலவு, தரகு என்பன கம்பனிக்கு ஒரு கற்பனைச் சொத்தாகும்.

விகிதப்படியான ஒதுக்கல் அல்லது விகிதப்படியான பகுத்தல்.

கம்பனி வெளியிடத் தீர்மானித்த பங்குகளிலும் பார்க்க கூடுதலான பங்குகளிற்கு விண்ணப்பங்கள் வந்து சேர்கின்ற பொழுது பங்குகளுக்கு விண்ணப்பித்த சகலருக்கும்' இயனறவரை கம்பனியில் பங்குரிமை கொடுப்பதற்காக கம்பனிப் பணிப்பாளர் கையாளுகின்ற ஒரு பங்கு ஒதுக்கல் நடவடிக்கையே விகிதப்படியான ஒதுக்கல் எனப்படும்.

உ+ம்:- 50000 பங்குகளை வெளியிடத் தீர்மானித்த கம்பனிக்கு 75000 பங்குகளிற்கு விண்ணப்பங்கள் வந்து சேருமாயின் அக்கம்பனி பங்குகளை 312 என்ற விகிதப்படி ஒதுக்கல் செய்யலாம். அதாவது விண்ணப்பித்த ஒவ்வொரு மூன்று பங்குகளிற்கும் இரண்டு பங்குகள் வீதம் ஒதுக்கிக் கொடுக்கலாம்.

$$\frac{75000}{3} \times 2 = 50000 \text{ பங்குகள்}$$

விகிதாசாரப்படி ஒதுக்கலுக்கு கவனத்திற்கு சித்தியுறாத விண்ணப்பங்களுக்கு கிடைத்த மனுப்பணத்தை கம்பனிக்கு திருப்பியனுப்பாது சித்தியுற்ற விண்ணப்பங்கள் சார்பில் பின்னர் திரட்டும் ஒதுக்கற் பணத்கோ அல்லது அழைப்புப்பணத்திற்கோ பகுதிக் பெறுவனவாக பாவிக்கப்பட கம்பனியால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் விகிதாசார ஒதுக்கல் மூலம் கம்பனி நன்மதிப்பை பேணமுடியும். இவ்வாறு செய்தல் பகுதிபகுதியான அழைப்பின் போதே சாத்தியமாகும். மாறாக பங்கின் பொறுமதி முழுவதும் மனுவின் போது பெறப்படின் மேலதிக மனுப்பணம் திருப்பியனுப்ப வேண்டும்.

பங்குகளை வட்டத்துடன் வழங்கல்.

பங்கின் முகப்பெறுமதியிலும் பார்க்க கூடுதலான பெறுமதிக்கு பங்கு வழங்கப்படுமேயானால் அதனை பங்குகளை வட்டத்துடன் வழங்கல் எனலாம். உ+ம்:- 10/- முகப்பெறுமதியுள்ள பங்கு 12/- வுக்கு வழங்கப்படுவதனைக் குறிப்பிடலாம். இங்கு மிகப்பெறுமதிக்கும் வழங்கற் பெறுமதிக்கும இடையிலான உபரித்தொகை ''பங்குவட்டம்'' எனப்படும். இதுபங்குக்கட்டணம் அல்லது பங்குமிகைமதிப்பு அல்லது பங்குஉபரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது பங்குப்பிறிமியம் எனவும் அழைக்கப் படும்.

பணத்திற்காக வேனும் சரி அல்லது வேறு விதமாக வேனும் சரி பங்குகள் வட்டத்துடன் வழங்கப்படுமிடத்து முகப்பெறுமதி பங்குமுதற் கணக்கிலும் மிகைத்தொகை பங்குவட்டக் கணக்கிலும் செலவு வைக்க வேண்டும்.

பங்கு வட்டமானது கம்பனிக்கு ஒரு மூலதன ஒதுக்கமாகும். எனவே இது ஐந் தொகையில் பரிப்புக்கள் பக்கத்தில் ஒதுக்கம் என்ற தலைப்பில் காட்டப்படும்.

பங்குவட்டத்தை பின்வரும் நோக்கங்களுக்கு பாவிக்கலாம். (1982ம் ஆண்டு 17 ம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 58 வது பிரிவின் படி.)

I) முதன்நிலைச்செலவு அல்லது தொடக்கச் செலவுகளை பதிவழிப்பதற்கு.

II) பங்கு வழங்கல் தனிச்சை வழங்கற் செலவையோ அல்லது அத்தகைய வழங்குதற் கழிவையோ பதிவழிப்பதற்கு.

III) முற்றாக இறுக்கப்பட்ட உபகார வழங்கல்.

IV) மீள்தகு முன்னுரிமைப் பங்குகளோ அல்லது தனிச்சங்களோ (தொகுதிக்கடன்) வட்டத்துடன் மீட்கப்படுமால் அந்த மீட்பு வட்டத்தை பதிவழிப்பதற்கு.

V) மூலதன குறைப்பிற்கு.

பங்கு வட்டத்தை பின்வரும் நோக்கங்களுக்கு பாவிக்க முடியாது.

I) நன்மதிப்பை பதிவழிக்க.

II) பங்குதாரருக்கு பங்கிலாபம் வழங்க.

பங்குகளை வட்டத்துடன் வழங்கும் போது கணக்குப் பதிவு

I) வட்டத்துடன் வழங்கப்பட்ட பங்கின் பெறுமதி ஒரே தடவையில் அழைக்கப் பட்டால்.

★ வங்கிக் கணக்கு வரவு.

உரிய பங்குமுதற் கணக்கு செலவு.

பங்கு வட்டக் கணக்கு செலவு.

II) வட்டத்துடன் வழங்கப்பட்ட பங்கின் பெறுமதி பகுதி பகுதியாக அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் பங்குவட்டமானது மனு ஒதுக்கலுக்கு முதலாக்கும் நிலையில் தோற்றுவிக்கப்படும். அத்துடன் பங்குவட்டப்பணமானது ஒதுக்கற் பணத்துடன் சேர்த்து பெற்றுக்கொள்ளப்படும்.

அ) பங்குவட்டக் கணக்கு தோற்றுவிக்கும் போது.

★ மனு ஒதுக்கற் கணக்கு வரவு.
உரிய பங்குமுதற் கணக்கு செலவு.
பங்கு வட்டக் கணக்கு செலவு.

ஆ) வட்டம் உட்பட ஒதுக்கல் பணம் பெற்றுக்கொள்ளும் போது.

★ வங்கிக் கணக்கு வரவு.

மனு ஒதுக்கற் கணக்கு செலவு.

பங்குகளை கழிவுடன் வழங்கல்

பங்கின் முகப்பெறுமதியிலும் பார்க்க குறைந்த பெறுமதிக்கு பங்குவழங்கும் செயறபாடு பங்குகளை கழிவோடு வழங்கல் எனப்படும. இவ்விதம் செய்தல் கம்பனியின் செயற்திறமையின்மை காரணமாக அது உழைக்கின்ற இலாப அளவு குறைக்கபபட்டு கமபனிக்கு நன்மதிப்பு குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் ஏற்படும்.

உ+ம்:- 10/- முகப் பெறுமதியுள்ள பங்கு 8/- விற்கு வழங்கப்படுவதை கழிவோடு வழங்கல எனலாம். இங்கு பங்கின் முகப் பெறுமதிக்கும் வழங்கல் பெறுமதிக்குமிடையிலான குறைவுத் தொகை 2/- பங்குக் கழிவாக கருதப்படும். இது கம்பனிக்கு ஒரு கற்பனைச் சொத்தாகும். எனவே பங்குக் கழிவானது ஐந்தொகையில் ஒதுக்கங்களிலிருந்து கழித்துக காட்டப்படும். ஆனாலும் பங்குக்கழிவானது இலாபநட்ட கணக்கு மீதியிலிந்தோ அல்லது பங்குவட்டக் கணக்கு மீதியிலிருந்தோ பதிவழிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குகளை கழிவோடு வழங்குவது தொடர்பில் கம்பனிச் சட்டத்தின் தேவைப்பாடுகள் (1982ம் ஆண்டு 17ம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 59 வது பிரிவு)

I) கழிவோடு வழங்குவது தொடர்பில் கம்பனியின் பொதுக்கூட்டத்தில் விசேட தீர்மானமொன்று நிறைவேற்ற வேண்டும் அதில் கழிவு வீதம் குறித்துரைக்கப்பட வேண்டும்.

II) நீதி மன்றத்தின் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும்.

III) கம்பனி வியாபாரத்தை ஆரம்பித்து குறைந்த பட்சம் ஒரு வருடத்தையேனும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

IV) நீதி மன்ற அனுமதியைப் பெற்று ஒரு மாத கால எல்லைக்குள் அல்லது நீதிமன்றத்தால் நீடிக்கப்பட்ட காலஎல்லைக்குள் மட்டுமே பங்குகளை கழிவோடு வழங்கலாம்.

V) ஏற்கனவே வழங்கப்பட்ட பங்கின் வகையினைத்தான் கழிவோடு வழங்கலாம்.

பங்குகளை கழிவோடு வழங்குவது தொடர்பான கணக்குப்பதிவுகள்.

I) கழிவுடன் வழங்கப்பட்ட பங்கின் பெறுமதி ஒரே தடவையில் அழைக்கப்படடால்.

★ வங்கிக் கணக்கு வரவு.
பங்குக் கழிவுக் கணக்கு வரவு.
உரிய பங்குமுதற் கணக்கு செலவு.

II) கழிவுடன் வழங்கப்பட்ட பங்கின் பெறுமதி பகுதி பகுதியாக அழைக்கப்படும போது பங்குக்கழிவானது இறுதி அழைப்பில் கழிக்கப்படடு மீதப்பணம் பெறப்படும் அதற்கு.

★ வங்கிக் கணக்கு வரவு.
பங்குக் கழிவு கணக்கு வரவு.
இறுதி அழைப்புக் கணக்கு செலவு.

குறிப்பு:- பங்குகள் கழிவோடு வழங்கப்பட்டாலும் பங்குமுதற் கணக்கில் அதன் முகப் பொறுமதியே செலவு வைக்கப்படும். அத்துடன் பங்கு இலாபமும் முகப்பெறுமதிக்கே கணிக்கப்படும்.

பங்குப் பறிமுதல்

கம்பனியின் பங்குகளைக் கொள்வனவு செய்தவர்கள் அப்பங்குகள் சார்பாக கம்பனிக்குச் செலுத்தவேண்டியிருக்கும் பங்குப் பண நிலுவையை (ஒதுக்கல் நிலுவை, அழைப்பு நிலுவை போன்றன) கம்பனியால் கொடுக்கப்பட்ட கால வரையறைக்குள் செலுத்தத் தவறினால் அவர்களுக்கு பகுக்கப்பட்ட பங்குகளை கம்பனி பணிப்பாளர் உரிமை நீக்கம் செய்வதான நிகழ்ச்சி பங்குப் பறிமுதல் எனப்படும். பறிமுதல் செய்வதற்கான அதிகாரம் கம்பனிப் பணிப்பாளருக்கு கம்பனியின் கூட்டுறவின் கட்டுறுப்பின் பிரகாரம் வழங்கப்பட்டிருக்கும். பறிக்கப்பட்ட பங்கு சார்பில் குறிக்கப்பட்ட பங்காளியால் செலுத்தப்பட்ட தொகைகள் கம்பனியால் மீள அளிக்கப்படுவதில்லை.

பறிமுதல் தொடர்பான கணக்குப் பதிவுகள்

I) பறிக்கப்பட்ட பங்கின் அழைத்த பெறுமதியை பங்கு முதலிலிருந்து குறைக்க வேண்டும் அதற்கு.

★ உரிய பங்குமுதற் கணக்கு வரவு.
பங்குப் பறிமுதற் கணக்கு செலவு.

II) பறிமுதலுக்கு காரணமாக இருந்த ஒதுக்கல் நிலுவை, அழைப்புநிலுவை என்பனவற்றை நீக்க வேண்டும் அதற்கு.

★ பங்கு பறிமுதல் கணக்கு வரவு.
ஒதுக்கல் / நிலுவை, அழைப்பு நிலுவை கணக்கு செலவு.

III) பறிக்கப்பட்ட பங்கு ஏற்கனவே வட்டத்துடன் வழங்கப்பட்டிருந்து வட்டம் சேர்த்துச்செலுத்த வேண்டிய கட்டணம் (ஒதுக்கற்பணம்) நிலுவையில் இருந்தால் மட்டும் அதற்குரிய பங்கு வட்டத்தை நீக்க வேண்டும் அதற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ பங்கு வட்டக் கணக்கு வரவு.

பங்குப்பறிமுதற் கணக்கு செலவு.

IV) பங்குப் பறிமுதல் கணக்கை சமப்படுத்த வரும் மீதி ஐந்தொகையிலே ஒதுக்கம் என்ற தலைபபில் மூலதன ஒதுக்கமாக காட்டப்படும்.

பறிக்கப்பட்ட பங்குகளை மீள வழங்கல்.

பறிக்கப்பட்ட பங்குகளை மீண்டும் கம்பனி வழங்குவதற்கான செயற்பாடு மீள வழங்கல் எனப்படும். மீள வழங்கலின்போது பங்கின் பெறுமதி பகுதி பகுதியாக பெற்றுக் கொள்ளப்படாது ஒரே தடவையிலேயே பெற்றுக்கொள்ளப்படும். மீள வழங்கல் விலையை தீர்மானிக்கும் போது அவ்விலையுடன் பறிமுதல் சார்பாக கிடைத்த தொகையையும் சேர்க்கும் போது அது பங்கின் முகப்பெறுமதியை விட குறைவுபடக் கூடாது. ஆனால் மிகை ஏற்பட்டால் அந்த மிகை பங்கு வட்டமாக கருதப்படும். பறிக்கப்ட்ட பங்குகளை மீளவழங்கும் போது நாட்குறிப்புக்கள்

I) மீள வழங்கலால் கிடைத்த பணத்திற்கு.

★ வங்கிக் கணக்கு வரவு.

பங்குப் பறிமுதற் கணக்கு செலவு.

II) மீள வழங்கலுக்கு முதலாக்கும் போது.

★ பங்குப் பறிமுதல் கணக்கு வரவு.

பங்கு முதற் கணக்கு செலவு.

III) பறிமுதற் கணக்கு மீதியை பங்குவட்டத்திற்கு மாற்றவேண்டும் அதற்கு.

★ பறிமுதற் கணக்கு வரவு.

பங்கு வட்டக் கணக்கு செலவு.

குறிப்பு:- பறிக்கப்பட்ட பங்கின் ஒருபகுதி மட்டும் மீளவழங்கினால் மீளவழங்கப்பட்டதற்குரியதை பங்குவட்டத்திற்கு மாற்றி மீள வழங்கப்படாததற்குரியதை மிகுதியாக வைத்திருக்க வேண்டும்.

பெயரளவு பெறுமதியில் பங்கு வழங்கலுக்கு உதாரணம்:-

வரையறுத்த பாவு கம்பனி ஒவ்வொன்றும் 10/- ரூபாவான 50000 சாதாரண பங்குகளை வழங்கி மனு - 5, ஒதுக்கல் - 3, அழைப்பு - 2 என அறவிடதீர்மானித்தது. 60000 பங்குகளுக்கு விண்ணப்பங்களை பெற்ற கம்பனி மேலதிக மனுக்களை நிராகரித்து கட்டணங்களை அறவிட்டபோது 6000 பங்குகளுக்கு ஒதுக்கலையும் 3000 பங்குகளுக்கு அழைப்பையும் பெறவில்லை. இரு கட்டணங்களும் கட்டாத பங்குகள் யாவும் பறிக்கப்பட்டு அவை 9/50 சதவிலையில் முற்றும் இறுத்த பங்குகளாக மீள வழங்கப்பட்டன.

வங்கி க/கு

| | | | |
|---|---|---|---|
| சா.ப.மனு.ஒது | 300000 | சா.ப.மனு.ஒது | 50000 |
| சா.ப.மனு.ஒது | 132000 | மீ. / செ | 521000 |
| சா. ப. அழை | 82000 | | |
| பங். பறி | 57000 | | |
| | 571000 | | 571000 |

சா. ப. அழை. க/கு

| | | | |
|---|---|---|---|
| சா. ப. முதல் | 100000 | வங்கி | 82000 |
| | | ப.பறி | 12000 |
| | | மீ. செ | 6000 |
| | 100000 | | 100000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சா. ப. மனு. ஒது. க/கு**

| | | | |
|---|---|---|---|
| வங்கி | 50000 | வங்கி | 300000 |
| சா.ப.மு | 400000 | வங்கி | 132000 |
| | | ப. பறி | 18000 |
| | 450000 | | 450000 |

**சா. ப பறி. முதல் க/கு**

| | | | |
|---|---|---|---|
| சா. ப. மனு. ஒது | 18000 | சா. ப. முதல் | 60000 |
| சா. ப, அழை | 12000 | வங்கி | 57000 |
| சா. ப. முதல் | 60000 | | |
| பங். வட். க/கு | 27000 | | |
| | 117000 | | 117000 |

**சா. ப. முதல். க/கு**

| | | | |
|---|---|---|---|
| சா. ப. பறி | 60000 | சா.ப.மனுஒது | 400000 |
| மீ. செ | 500000 | சா. ப, அழை | 100000 |
| | | ப. பறி | 60000 |
| | 560000 | | 560000 |

**ஆரம்ப ஐந்தொகை**

| | | | |
|---|---|---|---|
| பங் மூலதனம் | | | |
| ஒவ் 10/-50000 | | | |
| சா. ப | 500000 | | |
| கழிநிலுஅழை | 6000 | நடைசொத்து | |
| | 494000 | பங்கு | 521000 |
| ஒதுக்கம் | 27000 | | |
| பங்வட்டம் | | | 521000 |
| | 521000 | | |

கழிவுடன் பங்கு வழங்கலுக்கு உதாரணம்:-

வரையறுத்த மீரா கம்பனி ஒவ்வொன்றும் 20/- ரூபாவான 40000 சாதாரண பங்கு களை வழங்கி மனு - 9, ஒதுக்கல் 5 அழைப்பு - 4 அறவிடத்தீர்மானித்து 44000 பங்கு களுக்கு மனுக்களைப் பெற்ற கம்பனி மிகை மனுக்களை நிராகரித்து விட்டு கட்டணங் களை அறவிட்டபோது 12000 பங்குகளுக்கு அழைப்பை பெறவில்லை. இப்பங்குகளில் 8000 பங்குகள் பறிக்கப்பட்டு அதில் 3000 பங்குகள் 19/- ரூபா விலையில் மூற்றும் இறுத்த பங்குகளாக மீள வழங்கப்பட்டன.

**வங்கி க/கு**

| | | | |
|---|---|---|---|
| சா ப.மனு.ஒது | 396000 | சா ப.மனு.ஒது | 36000 |
| சா.ப.மனு.ஒது | 200000 | மீ. செ | 729000 |
| சா. ப. அழை | 112000 | | |
| ப. பறி | 57000 | | |
| | 765000 | | 765000 |

**சா. ப. அழை. க/கு**

| | | | |
|---|---|---|---|
| சா.ப.முதல் | 160000 | வங்கி | 112000 |
| | | ப.பறி | 32000 |
| | | மீ.செ | 16000 |
| | 160000 | | 160000 |

**சா. ப. மனு. ஒதுக் க/கு**

| | | | |
|---|---|---|---|
| வங்கி | 36000 | வங்கி | 396000 |
| சா. ப. முதல் | 560000 | வங்கி | 200000 |
| | 590000 | | 596000 |

**பங்கு கழிவு க/கு**

| | | | |
|---|---|---|---|
| சா. ப. முதல் | 80000 | ப. பறி | 16000 |
| | | மீ. செ | 64000 |
| | 80000 | | 80000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சா. ப. முதல் க/கு**

| | | | |
|---|---|---|---|
| பங்.பறி | 160000 | சா.ப.மனு.ஒது | 560000 |
| மீ.செ | 700000 | சா. ப. அழை | 160000 |
| | | பங்கு.கழிவு | 80000 |
| | | பங். பறி | 60000 |
| | 860000 | | 860000 |

**பங். பறி. க/கு**

| | | | |
|---|---|---|---|
| சா ப.அழை | 32000 | சா. ப. முதல் | 16000 |
| பங்.கழிவு | 16000 | வங்கி | 57000 |
| கா.ப.முதல் | 60000 | | |
| பங்.வட் | 39000 | | |
| மீ செ | 70000 | | |
| | 217000 | | 217000 |

**ஆரம்ப ஐந்தொகை**

| | | | |
|---|---|---|---|
| பங்கு மூலதனம் | | நடை சொத்து | |
| ஒவ்20/-= 35000 | | வங்கி | 729000 |
| சா. பங்கு | 700000 | | |
| கழி | | | |
| நிலு அழை | 16000 | | |
| | 684000 | | |
| ஒதுக்கம் | | | |
| பஸ் வட் | 39000 | | |
| பங்பறிக/கு | 70000 | | |
| | 793000 | | |
| கழி | 64000 | | |
| பங்குகழிவு | | | |
| | 729000 | | 729000 |

வட்டத்துடன் பங்கு வழங்கலுக்கு உதாரணம்:-

வரையறுத்த சரிதா கம்பனி ஒவ்வொன்றும் 25/- ரூபாவான 60000 சாதாரண பங்குகளை வழங்கி மனு-10 ஒதுக்கல் - 12 அழைப்பு - 5 அறவிடத்தீர்மானித்தது 50000 பங்குகளுக்கு விண்ணப்பங்களைப் பெற்ற கம்பனி கட்டணங்களை வசூலித்தபோது 4000 பங்குகளுக்கு அழைப்பைப் பெறவில்லை இப்பங்குகள் யாவும் பறிக்கப்பட்டன.

**வங்கி க கு**

| | | | |
|---|---|---|---|
| சா. ப. மனு. ஒது | 500000 | மீ. செ | 1330000 |
| சா. ப. மனு. ஒது | 600000 | | |
| சா. ப. அழை | 230000 | | |
| | 1330000 | | 1330000 |

**பங்கு வட்டி க கு**

| | | | |
|---|---|---|---|
| ப. பறி | 8000 | மனு. ஒது | 100000 |
| மீ. செ | 92000 | | |
| | 100000 | | 100000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சா. ப. மனு. ஒது. க கு**

| | | | |
|---|---|---|---|
| சா. ப. முதல் | 10,00000 | வங்கி | 500000 |
| பங். வட்டி | 1 00000 | வங்கி | 600000 |
| | 11 00000 | | 1100000 |

**பங். பறி. க கு**

| | | | |
|---|---|---|---|
| கா. ப. அழை | 20000 | சா.ப.முதல் | 100000 |
| மீ. செ | 88000 | ப. வட்டி | 8000 |
| | 108000 | | 108000 |

**சா. ப. முதல். க கு**

| | | | |
|---|---|---|---|
| பங். பறி | 100000 | சா. ப. மனு. ஒது | 10,00000 |
| மீ. செ | 1150000 | சா. ப. அழை | 2 50000 |
| | 1250000 | | 12 50000 |

**சா. ப. அழை க கு**

| | | | |
|---|---|---|---|
| சா. ப. முதல் | 250000 | வங்கி | 230000 |
| | | ப.பறி | 20000 |
| | 250000 | | 250000 |

**ஆரம்ப ஐந்தொகை**

| | |
|---|---|
| **பங் மூலதனம்** | **நடை சொத்து** |
| ஒவ் 25/- = 46000 | வங்கி 1330000 |
| சா- ப 1150000 | |
| **ஒதுக்கம்** | |
| பங். வட்டி 92000 | |
| பங். பறி 88000 | |
| 1330000 | 1330000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமையும் இலங்கையில் அதன் போக்கும்

க. கலாகரன் (B.A.B Hons)
பகுதி நேர விரிவுரையாளர்

முகவுரை:-

இன்றைய உலகில் பொதுவான தொரு பொருளாதார பிரச்சனையாக வறுமை என்பது முக்கியம் பெறுகிறது. அதிலும் இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் இது மிகவும் பிரதானமானதொரு பொருளாதார புற்றுநோயாகப் பரவியுள்ளது. இந்நாடுகளின் வறுமையும் குறிப்பாக இலங்கை நிலையும் அதனை தீர்ப்பதற்கான சமகால அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்களும் அவைபற்றிய போக்கும் இக் கட்டுரையில் ஆராயப்படுகிறது.

வறுமை என்பது:-

ஆசியாக் கண்டத்திலுள்ள இலங்கை போன்ற நாடுகளில் வறுமை என்பது அந்நாட்டு வாழ்க்கைக்கு அடிப்படையான உணவு உடை, வீட்டுவசதி, கல்வி, மருத்துவம், சுகாதாரம் போன்ற தேவைகளை நிறைவு செய்வதற்கு ஏற்ற வருமானமின்மை எனலாம். எனவே தமது உற்பத்தியை அதிகரிப்பதற்கும், வாழ்க்கை தரத்தை உயர்த்திக் கொள்வதற்கும் நிதி வசதியற்ற நிலைமை காரணம் எனலாம்.

கிராமியத்தில் வறுமை:-

இந் நாடுகளில் கடந்த இரு தசாப்தங்களாக நாட்டுப் புறங்களில் விரிவாக்கப்பட்டுள்ள போக்குவரத்து வலய அமைப்பு சிறப்பான தொடர்பாடல், வளர்ச்சி கண்ட நீர்ப்பாசன கட்டமைப்பு, நவீன நிர்மாண அமைப்பு போன்றவற்றால் வேளாண்மை உற்பத்தியிலும் கிராமிய வருமான நிலைகளிலும் அதிகரிப்புகளை எட்டலாம் என எதிர்பார்த்த போதும், அதற்கான கட்டத்தை அடைந்து விட்டதென கூறமுடிதுள்ளது. ஏனெனில் இந்நாடுகளில் தலா வருமான அதிகரிப்புகள் காணப்பட்ட போதும் வறியோரின் நிலைமையில் எத்தகைய மாற்றமும் ஏற்படவில்லை, இந் நாடுகளில் கிராமியத்திலேயே பெருமளவில் வறுமை செறிந்துள்ளது. இலங்கையில் வருமான பரம்பலை பிரதேச ரீதியாக நோக்கின்.

| | சனத்தொகை பகிர்வு | மொத்த வருமானத்தின் துறை ரீதியான பகிர்வு 1981/82 | 1985 |
|---|---|---|---|
| (i) நகர துறை | 22 | 28.1 | 35.6 |
| (2) பெருந்தோட்டத்துறை | 06 | 4.6 | 5.0 |
| (3) கிராமியத் துறை | 72 | 67.2 | 59.4 |
| மொத்தம் | 100 | 100 | 100 |

தகவல்:- சனத்தொகை கணிப்பீட்டு புள்ளி விபர திணைக்களம் இலங்கைமத்திய வங்கி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இத்தகவல்கள் இலங்கையில் மேலும் கிராமியதுறையினருக்கான மொத்த வருமானத்தின் பங்கு குறைவதையும் அங்கே வறுமையின் ஆதிக்கம் கூடுவதையும் காட்டி நிற்கின்றது.

## இலங்கையில் வறுமையின் இயல்புகள்

இலங்கையில் வறுமை என்பது கல்வி அறிவு, உடல் நலவசதி, என்பவற்றுடன் தொடர்பு பட்டதைக் காட்டிலும் வேலையின்மை குறைஉழைப்பு தாழ்ந்த வருமானம் போசாக்கின்மை, சமமற்ற வருமான பங்கீடு என்பவற்றுடனேயே பெருமளவில் தங்கியுள்ளது எனலாம். ஏனெனில் சுதந்திரத்திற்கு பிற்பட்ட கால அரசாங்க நடத்தைகளால் குறிப்பிடத்தக்க அளவில் கல்வி மருத்துவ சுகாதார வசதியில் வளர்ச்சி காணப்பட்டு உள்ளது.

| | | 1988/89 |
|---|---|---|
| கல்வி அறிவு% | ஆண் | 92.2 |
| | பெண் | 85.2 |
| பருமட்டான பிறப்பு% (1000) | | 20.7 |
| பருமட்டான இறப்பு%(1000) | | 5.8 |
| சிசுமரண வீதம் (1000) | | 17-20 |
| சராசரி ஆயுட்காலம் (வருடம்) | ஆண் | 71 வருடம் |
| | பெண் | 74 வருடம் |
| போசாக்கின்மை(2200க்குகுறைந்த கலோரி) அளவு) (சனத்தொகையில்) | | 30-33% |
| வேலையின்மை | | 15-17% |
| தாழ்ந்த வருமானம் பெறும் வறுமை மட்டம் (சனத்தொகை) | | 40-44% |
| கீழ் உழைப்பு 33%(70-75 லட்சம் பேர் | | |
| தங்கி வாழ்வோர் வீதம் | | 72% |

ஆதாரம்:- Economic And Social Statistic of Sri lanka *1988-1989*

ஆனால் வேலையில்லாத் திண்டாட்டம் குறிப்பாக 1983 பின்னர் வளர்ச்சி அடைந்து வருகின்றது. இது இனப்பிரச்சனை, பயங்கரவாத நடவடிக்கைகள். பொருளாதார செயற்பாடுகளின் மந்த போக்கு, அதிகரிக்கும் பாதுகாப்பு செலவால் அபிவிருத்தி தடைப்படல் மற்றும் தற்போதைய நிச்சயமற்ற தன்மையால் தனியார் துறை விஸ்தரிப்பு பாதிக்கப்படல் அரச செயற்பாடு பாதிக்கப்படல் போன்றவற்றால் ஏற்படுகின்றது. இது குறிப்பாக கிராமியயத்திலும் அதிலும் ஆண்களைவிட பெண்களை மோசமாக தாக்கியுள்ளது.

இது கீழுழைப்பு, மறைமுக வேலையின்மைகளை தோற்றுவித்து தாழ்ந்த வருமான நிலைகளை ஏற்படுத்த இதனால் மொத்த சனத்தொகையில் 40-44% 700/- குறைந்த மாதாந்த வருமானம் பெற்று உணவு முத்திரையில் பங்கு கொள்கின்றனர். கிராமிய வங்கிகளில் ஏறத்தாழ 82% இத் தன்மையை கொண்டுள்ளனர். இது மொத்த சனத் தொகையில் 30-33% தினரை 2200 கலோரி வருமானத்திற்கு குறைந்தபோசாக்கின்மைக்கு இட்டு செல்கின்றது.

## கிராமிய வறுமையின் தேவைகள்:-

கிராமியத்தில் வறுமை உள்ளதால் அதன் தேவைகள் அறியப்பட்டு அதன் ஆணிவேர்கள் இனங்கானப்பட்டபின் சிறிய பெரிய மட்டங்களில் உள்ள இடர்பாடுகள் களையபபட வேண்டியது அவசியமாகும். எனவே பொதுவாக கிராமிய வறுமையின் தேவை என்பது.

தமது தேவைக்கு உற்பத்தியை அதிகரிக்கவும், வாழ்க்கை நிலைகளை உயர்த்தி கொள்ளவும் நிதிவசதி அற்றவராய் உள்ளனர். இவர்கள் சனத்தொகை பெருக்கத்தால் நிலதுண்டமாக்கல்,சிற்றளவு உற்பத்தி வேலையின்மை, தங்கிவாழ்வோர் வீதம கூடுகின்றமை என்பவற்றை கொண்டிருப்பதால்உற்றளவுஉற்பத்திவருமானங்கள்நுகர்வுக்கே செலவிடப்பட சிக்கனமற்ற நிலை (சேமிப்பு) காணப்படல் இதற்கு காரணமாகும். எனவே இந்நிலைமையில் இவர்கள் சுய வேலைவாய்பபுக்களை அதிகரிக்கவும் உற்பத்தி வருமான நிலைகளை அதிகரித்து வறுமையை குறைத்து போசாக்கின்மைகளை அதிகரிக்கவும், கஷ்டமான நாட்களில் நுகர்வுமட்டங்களை பேணவும் சொத்துக்களை திரட்டிக் கொள்ளவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுக்கு கடன்களை உதவ முடியும். எனவே இக்கடன்களை வழங்க வங்கிமுறை விரிவாக்கப்பட வேண்டும்.

வறியோர்க்கான வங்கித் தொழில்:-

வறியவர்க்கு உதவும் பொருட்டு வங்கிகள் முன்வர வேண்டும் என்னும் அவசியம் குறித்து வறிய நாடுகளில் பொதுவான எண்ணம் உண்டு. எனவே வறியவர்க்கு உதவுவதில் இவை முக்கிய பங்கு வகிக்க வேண்டுமாயின் அவற்றின் நோக்கம், செயற்பாடு தன்மை, அவற்றின் விசேட இயல்பு பற்றி விளங்கி கொள்வது அவசியம்.

வங்கிகள் தரும நிதியங்கள் அல்ல. அவை நிதி வைப்பாளர்களின் பாதுகாவலர்கள். மத்தியவங்கியின் விதிகட்கு அமைய ஒழுங்குபடுத்தப் படவேண்டின் மத்திய வங்கியின் காசு கடன் வீதங்கள் கடைப்பிடித்தல், ஐந்தொகை சொத்தமைப்பைப் பேணல், சரியான வர்த்தக நடத்தைகளை பேணல் என்பன அதன் கடமையாகும். அத்துடன் இவை இலாபம் உழைக்க வேண்டியன வாய் உள்ளன. இவற்றால் ஏற்படும் பாதிப்புகள் உள்நாட்டு சர்வதேச கொடுக்கல் வாங்கல்களை பாதிக்கும்.

அதேவேளை இவை பொருளாதார அபிவிருத்தி சமூக பொறுப்பை ஏற்றல் என்பன பற்றியும் தெரிதல் வேண்டும். இலங்கை போன்ற நாட்டில் கிராமிய பெரும்பான்மையோர் வறியவராய் அமைவதால் அவ் ஏழை ஜனத்தொகைக்கு உதவிகள் அளிக்கப்படாவிடத்து பொருளாதார அபிவிருத்திக்கு துணை செல்ல முடியாது. எனவே ஏழை ஜனங்களுக்கு கடன்கள் வழங்கப்படுவதுடன் அதில் குறித்த அளவு மானியப் படுத்தலும் அவசியமாகின்றது.

எனவே வறியோர்க்கான வங்கி தொழில் என்னும்போது வறியவர்க்கு சிறிய கடன் கொடுப்பனவு என அதை கருதாது ஏழ்மையை குறைக்கும் உண்மையான அபிவிருத்திப்பணிக்கான கடன்பற்றி சிந்தித்தல் அவசியம். வங்கிகள் நீடித்து நிலைக்கக் கூடியதான கடன் திட்டங்களை ஏழைகட்கு அறிமுகம் செய்தல் வேண்டும். இதற்கு ஏழை மக்களின் கடன்களது

1) நிதி செலவினம்
2) கடன்களை நிர்வகிக்கும் செலவு
3) நட்டஅம்சம்

என்பவற்றை கவனத்தில் கொண்டு அதை ஈடுசெய்ய கூடிய கடன்களை அறிமுகம் செய்தல் அவசியம். இவற்றைக் கவனிக்காது கடன் வழங்கின் வங்கிகள் ஒரு எல்லைக்குள் தமது கடன்களை வரையறுக்க வேண்டியநிலை உருவாகும். இது அக்கடன்கள் நீடித்து பரவலடைய வழி செய்யாது.

எனினும் கிராமிய மக்கள் சிறிதளவு கடன்களையே பெருமளவில் பெறுவதால அதற்கேற்ப செலவினங்கள் இசைந்து செல்வதும் அவசியம். ஆனால் இந்நிலைமை முழு நிறைவான வங்கிகளை பொறுத்தவரை சாத்தியம் குறைவானதையும் நாம் ஏற்றல் வேண்டும்.

இதற்காக இம்முழுமையான வங்கிகள் தமது கீழ் சிறிய அரைவங்கி தாபனங்களை வறுமை பிரதேசங்களில் வளரச்செய்து அவற்றின்மூலம் கடன் வழங்கின் செலவினங்களை குறைக்கலாம் எனவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

வங்கித் தொழில் நடத்தைகள்:-

இலங்கையில் ஏழைகளுக்கான வங்கித் தொழிலின் விருத்தியை ஏற்படுத்த இலங்கையில் உள்ள வங்கிகள் மேற்கொள்ளும் அயரா முயற்சியையும் திட்டமிடும் புது முறைகளையும் நாம் நோக்குவோம்.

கூட்டுறவு கிராமிய வங்கிகள்:

வறுமைக்கான வங்கித் தொழில் எனும் ரீதியில் மக்கள் வங்கியின் ஆரம்ப பரீட்சார்த்த முயற்சி இதுவாகும். மக்கள் வங்கியின் ஆதரவில் இவை 1964ல் உருவாக்கப்பட்டன. இவை கிராமிய வறுமையை தணிக்கும் நோக்கில் சேமிப்பு வைப்புகளை திரட்டி வரையறுக்கப் பட்டகடன்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கி வருகின்றன. இவற்றின் நிர்வாகம் கூட்டுறவுச் சங்கங்களால் மேற்கொள்ளபடுகின்றது.

அப்பாவி கிராமிய மக்கள் தமது கொடுக்கல் வாங்கல்களை கூட்டுறவு சங்கத்துடன் மேற்கொள்வதால் கூட்டுறவு அமைப்புக்கள் அவர்களுக்குப் பரிச்சமாய் இருப்பதாலும், கூட்டுறவு கடன் பெறுவோரின் நம்பிக்கையை அறிந்திருப்பதாலும் இக் கிராமிய வங்கிகள் இயங்குவது இலகுவாய் உள்ளது. இவை சேமிப்புவைப்பை திரட்டுதல், அடகுபிடித்தல், விவசாயம், மீன்பிடி, சிறுவர்த்தகக்கடன் வழங்கல் எனும் பணிகளை ஆற்றுகின்றது. இவை ஆரம்பிக்கப்பட்டு 5 வருடங்களிலேயே முற்பணங்களுக்கு மேலான வைப்புக்களை கொண்டிருந்ததுடன் மிகை நிதியையும் கொண்டிருந்தன. கடந்த 25 வருடங்களில் சுமார் 1000 வங்கிக்கிளைகள் மக்கள் வங்கியால் உருவாக்கபட்டுள்ளன. இவை 1990ல் இறுதியில் 206 கோடி ரூபாவை மிகை நிதியாக கொண்டிருந்தன.

இவை நன்கு வளர்ச்சி நிதி சேகரிப்பை கொண்டிருந்தாலும் வறுமைக்கான வங்கி தொழில் எனும் ரீதியில் வெற்றிபெறவில்லை எனலாம். ஏனெனில் இவை கிராமிய ரீதியில் திரட்டிய வைப்புக்கேற்ப கடன்களை வழங்காமையுடன் நிதிகள் நகர துறைகளைநோக்கி கடன்களுக்காக காவப்படலும் உள்ளது. 1990 ல் வழங்கப்பட்ட 4350 லட்சம் கடனில்வேளாண்மைக்கு 410 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. ஏனையவை வீடு நிர்மாணம். மின்சாரம்தண்ணீர் வசதி குடிசை கைத்தொழிகளுக்கே வழங்கபட்டுள்ளது. இத்தகைய நிலைமைக்குகாரணம்:

★ கூட்டுறவு உத்தியோகஸ்தர்கள் வைப்போரின் நிதியை சிக்கனமாக கையாண்டமை.

★ மதிப்பீட்டு அறிவு குறைவாய் உள்ளதால் இவர்கள் செயற்திட்டங்களை மதிப்பிட்டு கடன்வழங்கல் சாத்தியமற்றதாய் இருத்தல்.

எனவே இவ்வங்கி ஏழைக்கடனாளிக்கு வரையறுத்தகடனை வழங்கும் அமைப்பாக மாறியுள்ளது எனலாம். இதற்கு காரணம் மேற்கூறிய குறைகளுடன் உண்மையான நோக்கில் பல்வேறு நுட்பங்கள், சந்தைப் படுத்தல் சாத்தியங்களும், அவசியமான பொருளாதார முயற்சிகளும் கிராமிய சமுதாயத்திடையே காணப்படாமையும் எனலாம்.

(ii) பிரதேச கிராமியஅபிவிருத்தி வங்கிகள்:-

கிராமிய வறுமையிடையே வணிகவங்கி, அபிவிருத்தி வங்கி போன்றவற்றின் நோக்கைஒருங்கே அடையச் செய்யும் நோக்கில் மத்திய வங்கியின் முதலீட்டுடன் பின் தங்கிய கிராமிய பிரதேசத்தை தெரிந்து உருவாக்கப்படும் புதுமை அமைப்பு இதுவாகும். இது 1985ல் களுத்துறை மாவட்டத்தில் முதலில் உருவாக்கப்பட்டது. தொடர்ந்து 11 மாவட்டங்களில் வழிநடாத்தப்படுகின்றது. 89 கிளைகளை கொண்டுள்ள இவ் அமைப்பு

★ ஏற்கனவே உள்ளவங்கி அமைப்புடன் போட்டியிடாது அவ் வங்கி துறைகள் கடன் வழங்காத துறைகளான சிறு விவசாயம், சிறு வர்த்தகம், மீன்பிடி, சிறு முயற்சிகள் கைவினை உ/திகளுக்கு கடனை வழங்கும்.

★ எனவே இது வறிய துறையிடையே வங்கி தொழிலில் குறை நிரப்பு நிறுவனமாக உள்ளதெனலாம்.

★ புதிய கிராமிய கொடுகடன் திட்டத்தை விரிவாக்கல், கடன்பெறும் விவசாயியை தெரிதல் என்பவற்றுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது.

★ மத்திய வங்கியின் நேரடியான கட்டுப்பாட்டில் கிராமிய வளர்ச்சி அபிவிருத்தி நோக்கில் உள்ள அமைப்புக்களான இவை 1990 இன் இறுதியில் 31.4 கோடி ரூபாவை வைப்பாக திரட்டி உள்ளன. 1985—1990 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

86.3 கோடியை கடனாக வழங்கியுள்ளன. 1990ல் மட்டும் 43 கோடி ரூபாவை கடனாக வழங்கியுள்ளது. இந்நிலையில் இவை வைப்புக்களுக்கு மிகையாக முற்பணங்களை (கடன்களை) கொண்டு சிறப்பாக தொழிலாற்றுவதாகக் கூறலாம். இவை 1990ல் வேளாண்மைக்கு 65%ம், விலங்கு வளர்ப்பு, மீன்பிடிக்கு 5.6%ம் சிறுகைத்தொழிலுக்கு 10%ம்வர்த்தகத்திற்கு 19.4%ம்கடனாக வழங்கியது. இங்கு கூடிய அளவு ஆளணி உள்ளதாலும், அதிக வேதனம் ஊழியர்க்கு வழங்கப்படுவதாலும் செலவின் கட்டமைப்பு உயர்வாய் உள்ளது. காலப்போக்கில் இதன் உரிமையை அப்பிரதேச சமூகத்தினரின் பங்குதாரருக்கு மாற்றும் உத்தேசமும் உண்டு.

iii) 'பிரஜா நய நியாமக்க' முகவர்கள் (சமூக கடன் ஊக்குவிப்பாளர்கள் அல்லது சமூகக்கடன் முகவர்கள்)

வங்கிகளின் கடன் வழங்கல் தொடர்பான செலவின் கட்டமைப்பை குறைத்து முழுமையான வங்கி அமைப்புக்களின் கீழ் முறைசாராத மூலகங்களை அரைவங்கி ஸ்தாபனங்களாக செயல்படச் செய்து நிறுவன அமைப்புடன் நிறுவனமல்லாத அமைப்பையும் ஒருங்கிணைத்து வறுமைக்கான வங்கித் தொழிலை விரிவாக்கும் புதியதொரு வங்கியியல் கலாச்சாரத்தை தோற்றும் அமைப்பாக 1988 ஒக்ரோபரில் உருவாக்கப்பட்டது. இதன்பிரகாரம்;

இரு அரச வங்கிகளும் ஒவ்வொரு கிராமத்துக்கும் இரு பிரஜா நய நியாமக்க (சமூகக்கடன்) முகவர்களை உருவாக்குவதன் மூலம் 14000 முகவரை உருவாக்க திட்டமிட்டுள்ளனர். இதில் 7000 முகவர்கள் நியமிக்க பட்டுள்ளனர். இதன் அடிப்படை அம்சம்.

★ உற்பத்தியை அபிவிருத்தி செய்வதுடன் வறுமையை ஒழிக்கவும் வருமானத்தை அதிகரிக்கவும் ஒரு திட்டமாக இது அமையும்.

★ இதன்படி இருவங்கியாலும் தெரியப்படும் பிரஜா நய நியாமக்க முகவர்களுக்கு வங்கிகள் 100 000/- கடன் முற்பணமாகக்கொடுக்கும். இதற்கு மாதம் 11/2 வீதவட்டியை (18% வருடம்) வங்கி அறவிடும்.

★ நியாமக்க முகவர்கள் இதனை 21/2 வீத மாத வட்டிக்கு (30%வருடம்) மேற்படாமல் கடனாக வறிய மக்களுக்கு வழங்கலாம்.

★ கடனைவழங்க வங்கிகள் முகவருக்கு வழிகாட்டும். ஆனால் முகவர்கள் அதற்கான கடல்வழங்கல் ஆவணங்கள், அத்தாட்சி என்பவற்றைகாட்ட வேண்டியதில்லை. எனவே முகவர் தனது நம்பிக்கைக்கேற்ப பொறுப்புபிணையுடன், பிணையில்லாது கடன் வழங்கலாம். ஒரு விண்ணப்பதாரி (கிராமிய வாசி 5000/- கடனை உச்சமாக பெறலாம் இதன் கால எல்லை 1 வருடம்.

★ எனவே இத்திட்டம் சிறிய கடனாளிக்கு கடன் வழங்குவதை நோக்காக கொண்டது.

★ இத்திட்டம் நிறுவன, நிறுவனமல்லா முகவரை ஒழுங்கமைப்பதால் வறுமையை வங்கித் தொழில் சென்று அடையச் செய்வதுடன் வறிய அப்பாவி கிராமவாசிகள் சிறிய கடன் தொடர்பாக எதிர்கொள்ளும் குறையை நிரப்பச் செய்யும் எனலாம்.

இக்கடன் திட்ட வெற்றி முகவரை தெரிவதில் தங்கி உள்ளது எனலாம். ஏனெனில் முகவர் இலாபத்தை மட்டும் கவனத்தில் கொள்ளாது சமூகப் பொறுப்பையும் ஏற்பவராய் அமைதல் வேண்டும். இரு அரச வங்கிகளும் 200 கோடி ரூபாவை இவ் முகவருக்கு கடனாக வழங்கி உள்ளன. இதில் மக்கள் வங்கி மட்டும் 4700 முகவர் மூலம் 1991 ஏப்ரல் வரை 48,632 பேருக்கு கடன் வசதியை வழங்கியுள்ளது. இதில் கைத்தொழில், விவசாயம் என்பன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையே 33%, 24% ஆகும். வியாபாரம், கால் நடை வளர்ப்பு, வீடமைப்பு போன்றவற்றுக்கும் கடன்வழங்கப்பட்டுள்ளது.

1,) தேசிய சேவைகள் மன்றம் (நிஸ்கோ)

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, சிறு தொழில் முயற்சிகளுக்கு வங்கிகள் கடனே வழங்க வங்கி தொழிலை வறுமை ஒழிப்புக்கு பயன்படுத்த அரச வங்கிகள் தேசிய இளைஞர்சேவை மன்றத்தையும் பயன்படுத்துகின்றன. இவ்நிஸ்கோ அமைப்பு வங்கிகடனை பெறுவதற்கும் அதற்கான திட்டங்களை அமைக்கவும் அதற்கான உள்ளீடுகளை, திறங்களைப் பெற இளைஞர்களுக்கு உதவுவதுடன் தேவையான நிதியின் ஒருபகுதியை கடனாகவழங்கவும் உதவுகின்றன. அத்துடன் வதிகளை சந்தைப்படுத்தவும் நிதிகளை திருப்ப பெறவும் உத்தரவாதம் அளிக்கின்றது. இதன்மூலம் 25 கோடி வங்கிக்கடன் மூலம் 3500 சிற்றளவு செயற்திட்டங்கள்கிராமியத்தில் நிதிபபடுத்த படடுள்ளது.

(V) ஜனசக்தி சார்ந்த வகையில் மக்கள் வங்கியின் வங்கி தொழில் நடவடிக்கைகள்;

இலங்கையில் தற்போது பின்பற்றப்படும் வறுமை ஒழிப்புதிட்டமான ஜனசக்தி கிராமிய வறுமை மக்களிடையே வ/தி பெருக்கம், வேலைவாய்ப்பு, சேமிப்பு, முதலீடு போன்றவற்றை ஸ்தாபிப்பதன மூலம வறுமையை ஒழிக்க நடைமுறைப்படுத்தப் படுகின்றது. இதில் தெரியப்படும் ஒவ்வொரு வறிய குடும்பமும் 2500/= மாதாந்தம பெறும். இதில் 1458 நுகர்வுக்கு பயன்பட 1042/= மாதாந்தம் பெறுபவர் சார்பில் முதலிடப்படும். இது இருவருட காலத்தில் 25000/= சேமிபபை வழங்கும். இதனைக் கொண்டு குறிப்பிட்ட குடும்பம் நிலையான வதியை பெருக்கக்கூடியதும், வேலைவாய்ப்பு வருமான அதிகரிப்புக்குமான உறபத்தி முயற்சியில் அவர்களை ஈடுபடுத்தும்.

இவ் ஜனசக்தி திட்டத்தின் குறிக்கோளைசெயல் படுத்தும் விதத்தில் இலங்கை வங்கிகள் கிராமிய வறுமையிடையே வங்கி தொழில் பரவலாக்கும் விதத்தில் செலவு குறைந்த உடனடியாக கிடைக்கக் கூடிய திட்டங்களை ஆரம்பித்துள்ளன. இதில் முதன்மைப் பணியை மக்கள் வங்கி ஆற்றுவதுடன் பின்வரும் திட்டங்களையும் அமைக்கின்றது.

அ) தொழில் தொடங்குவதற்கான கடன்திட்டம்:-

இதுமக்கள் வங்கியால் அறிமுகப்படுத்தபடும் செய்திட்டநோக்கிலான கடன்திட்டமாகும். இது நிதி மூலம் இல்லாத இளைஞர்களுக்கு தொழில் முயற்சியை ஆரம்பிக்க வகுக்கபட்டதாகும். இது பாடசாலையில் இருந்து விலகுபவர்களுககும், 18—40 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கும் வறுமை ஒழிப்புக்கான திட்டமாக அமைககப் பட்டுளளது. இதன் மூலம் 30000/= உச்ச வரம்பாக வழங்கபபடும்.

★ இவ் உதவி இயந்திரம், உபகரணம், சிறு அளவு தொழிற்படு மூலதனம எனனும் வடிவில் வழங்கப் படுகின்றது.

★ இத்திட்டங்களுக்கு சொத்து பிணைகள் தேவையில்லை. குடும்ப உறுப்பினர் ஒருவரின உத்தரவாதம் மூலம பெறலாம.

★ தையல் நிலையம், ரயர்பழுதுபார்த்தல், தச்சு வேலை, வீட்டு மின் இனைப்பு, பாதணி செய்தல், தோல் வேலை, வியாபாரம், மரமட்பாண்ட வதி பிரம்பு வேலை போன்றவற்றுக்கு வழங்கப்படும், 1991 ஏப்பரல் முடிவில் 25 கோடி 15இலட்சம் ரூபாவில் 20000 செயல்திட்டங்கள உருவாக்கபட்டுள்ளது.

(ஆ) ஜனசக்தி பெற்றிருப்போருக்கான குழுக்கடன் திட்டம்:-

சுயவேலைவாய்ப்பை அதிகரித்து கிராமிய வறுமையை தணிக்கும் வகையில் மக்கள் வங்கியின் வங்கி தொழில் விரிவாக்கமாக இது அமைகின்றது. இதன் பிரகாரம் ஜனசக்தி பெற்றுள்ள 17 லட்சம் பேருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன் வசதி அளிப்பது இதன் திட்டமாகும். இது வரையில் நிறுவனரீதியான கடன்களை பெறமுடியாதுள்ள சிறிய வளம் குன்றிய காணிகளை வைத்திருக்கும் விவசாய குடியானவர், கூட்டாக விவசாயம் செய்வோர், நிலமற்ற தொழிலாளர், சிறு மீனவர், கிராமிய கைவினைஞர்கள், அகதிகள், விதவையர். பொருளாதார ஆதாரமற்றோர் என்னும் ஏழைமக்களுக்கு மூலதனம் அளிப்பதே இதன்திட்டமாகும். இதன்மூலம் ஆகக் கூடிதலாக 5000/= கடன் வழங்கப்படும். வட்டி வருடாந்தம் 30% அறவிடப்படும்.

இங்கு கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் ஜனசக்தி பெறும் 10—20 உறுப்பினரைக் கொண்ட குழுதெரியப்படும். இக்குழு தலைவர் ஒருவரை கொண்டிருக்கும். இக்குழு தமதுசெயல்திட்டத்தை இனம் கண்டு. கண்காணித்து உத்தரவாதமளித்து கடன் பணத்தை வசூலித்து வங்கிக்குச் செலுத்தும் ஒவ்வொரு அங்கத்தவரும் 50/= இட்டு ஆரம்பிக்கும் நிதியம் ஒன்றையும் இக்குழு கொண்டிருக்கும்.

(இ) கைமாற்று கடன் திட்டம்

வசதி குறைந்த பிரிவினருக்கு வங்கி தொழிலைப் பரவலாக்கும் வகையில் மக்கள் வங்கி அறிமுகம்செய்ய திட்டமாகும். சில எளிய நிபந்தனைகளின் பொருட்டு இத் திட்டம் அமைகினறது. சிறு வியாபாரங்களில ஈடுபடுவோர், மீன்விற்போர் மரக் கறிவிற்போர், சிறு விவசாயி போன்ற சமூகப் பிரிவனரே கடன் திட்டத்தில் பங்கு கொள்வர். இத் திட்டத்தில் பெறகூடிய உச்ச கடன் 1000/= ஆகும். இது 12மாத காலப் பிரிவுக்கு வழங்கப்படுவதுடன் சுழல் முறை கைமாற்று கடன் என்பதால் ஒவ்வொரு இருமாத காலத்திலும் திருப்பி கொடுக்கப்படும். இத்திட்டத்தில் கடன்பெற 2நபர் பிணைபோதுமானது. 1990ஜூலை மாதம் வரை இதன் மூலம் 6400 போக்கு 63இலட்சம் கடன் வழங்க பட்டுள்ளது.

இவற்றைவிட மூன்றுசக்கரஸ்கூட்டர் கடன், வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்கடன், மத்திய வங்கியின் அனுசரணையுடன் இடம் பெறும் சுயவேலைவாய்ப்புக்கடன், மின்சார சபையுடன் இணைந்து வழங்கும் மின்மய மாக்கர் கடன் என்பனவும் மக்கள் வங்கியால் மேற்கொள்ளபடுகின்றது.

முடிவுரை:-

நாம் மேற் கூறிய கருத்துக்களை நோக்கும்போது வளர்முக நாடுகளில் கிராமியத்திலேயே வறுமை ஊறியுள்ளது. இதற்கு வங்கி தொழிலின் கடன் விரிவாக்கம் அவசியம். எனினும் வங்கிகள் எதிர்பார்க்கும் பிணைகள், கிராமிய நகர வறியவரிடம் இருப்பதில்லை. அத்துடன் அக்கடன்களை பெறுவதற்கான. முத்திரைப் பணத்தை கொண்டிராமை, வரையறுத்த வங்கி நேரத்தில் வங்கிகளை சென்றடைய முடியாமை. வங்கிகள் கிராமியத்திலிருந்து அன்னியப் படுவதால் போக்குவரத்து சிரமம் போன்றவற்றால் ஆசியாவில் உள்ள வங்கிகள் கிராமிய கடன் தேவையில் 15% மட்டுமே நிறைவுசெய்கின்றன.

அத்துடன் கிராமிய ரீதியில் மேற்கொள்ளப்படும் வங்கி தொழில் விரிவாக்கம் சேமிப்புக்களை அங்கு திரட்டுவதாகவும், ஆனால் முற்பணங்களை அதற்கேற்ப வழங்கமுடியாதனவாயும் உள்ளது. இது வங்கித்துறையைப் பரவலாக்குவதிலும் அக் கிராமிய சமூகத்தில் உள்ள ஒழுங்கமையாத தன்மைகளும் காரணம் எனலாம். அத்துடன் முறைசாராத கிராமிய மூலகங்களில் உள்ள சமூக பாதுகாப்பும் (கிராமியமுதலாளி) வட்டிக்குக் கடன கொடுப்போர், தரகர், உதிகளையே கடனாக வழங்கக்கூடிய வசதி போன்றனவும் கிராமியத்தில் வங்கி தொழில் கடன் வழங்கல் நோக்கில் விரிவடைவதில் சிக்கல்களை எதிர்நோக்ககாரணமாகின்றது. எவ்வாறாயினும் கிராமிய வறுமை என்பது தொழிலின்மை, குறையுழைப்பு போன்றவற்றால் தோன்றுகின்றது என்பதால அதற்கான ஆணிவேர்கள் இனம் காணப்பட்டு அதற்கேற்ப வேலைவாய்ப்பு வருமானநிலைகளை அதிகரிக்கக் கூடியவாறு வங்கி தொழில் விரிவாக்கம் அமைவதுடன் அவை பயன்களை வறிய மக்களிடையே பகிரச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதிலும் தான்வறுமையை ஒழிப்பதாக அமையும். எனவேவங்கித் தொழிலின் தரத்தையும் பரம்பலையும் விரிவாக்குவதுடன் வட்டி வீதத்தைக் குறைத்து சிறு அளவு கடன்களை வழங்காது அவை நிலைத்து நீண்டகால உதி பெருக்கம், வேலைவாய்ப்பு வருமான அதிகரிப்புகளை தருவதாக அமையின் வறுமை ஒழிப்புக்கு வங்கித் தொழில் பயன்படும் எனலாம். இவ்வகையில் இலங்கையின் இரு அரசு வங்கிகளும் செயற்படினும் மக்கள் வங்கியின் செயற்பாடு எழுச்சியுள்ளதாய் உள்ளது.


பற்று மலரே வருக

மாணவர்க்கு பல சுவை தருக

**நேரம் பெறுமதியானது**

"பொன் கொடுத்தாலும், போன நேரம் திரும்பி வராது"




துரித சலவைக்கு மில்க்வைற் சலவைப் பவுடரை வாங்கி உபயோகியுங்கள்.

சிறிய பக்கற் ஒன்று ரூபா 6-00 மட்டுமே.

25 வெற்றுப் பைக்கெற்றுகளிற்கு அப்பியாசக்கொப்பி ஒன்று அல்லது யோகாசனப் படம் பரிசாகக் கொடுக்கப்படும்.

★ ஆரோக்கியமான வாழ்வுக்கு யோகாசனம் செய்யுங்கள்.

★ உள்ளூர் உற்பத்திக்கு ஆதரவு நல்குங்கள்.

**மில்க்வைற் யாழ்ப்பாணம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் ஏற்றுமதி நோக்கிய கைத்தொழிலில் தயாரித்த ஆடையின் பங்கு

இ. ரவிக்குமார்
13-ம் ஆண்டு வர்த்தகப்பிரிவு

1977 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இலங்கையில் ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில் வளர்ச்சி அடைந்து கொண்டு வருவதை அவதானிக்கலாம். இந்த வளர்ச்சிக்கு முக்கிய காரணிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

- i 1977 ஆம் ஆண்டு அரசினால் பின்பற்றப்பட்ட சிறந்த வியாபாரக் கொள்கை
- ii 1977 ஆம் ஆண்டு நாணய மாற்று விதக் கொள்கைகள்
- iii 1978 ஆம் ஆண்டு அரசினால் அறிமுகப் படுத்தப்பட்ட சுதந்திர வர்த்தக வலயம்
- iv ஏற்றுமதி அபிவிருத்தி கிராமிய கம்பனி திட்டங்கள்.
- v ஏற்றுமதி அபிவிருத்தி காப்புறுதி கூட்டுத் தாபனம்
- vi ஜனாதிபதி பரிசுத் திட்டம்
- vii வரிச்சலுகையும் வரி விதிமுறைகளும்
- viii 1992 ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்ட சாவம்பூச பொருள் கண்காட்சி

மேற்கூறப்பட்ட விசேட சலுகைகளை கைத்தொழிலாளர்களிற்கு அரசு வழங்கியதன் காரணமாக அண்மைய ஆண்டுகளில் இந்த ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில் வளர்ச்சி அடைந்து வருவதை அவதானிக்கலாம். இலங்கை மிக நீண்ட காலமாக தேயிலை, இறப்பர், தெங்கு போன்ற பொருந்தோட்ட ஏற்றுமதியிலேயே தங்கி இருந்தது. ஆனால் இவை உலக சந்தையில் உறுதி அற்ற நிலையைக் கொண்டிருப்பதால் கைத்தொழில் ஏற்றுமதிகளைப் பெருக்கிக் கொள்ள வேண்டிய கட்டாய நிலமை அரசிற்கு ஏற்பட்டது. இவ்வாறு மேற்கூறப்பட்ட சலுகைகளும்பெற்ற முதலீட்டாளர்கள், இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயத்தில் அதிக முதலீடு செய்ய முன்வந்துள்ளனர். இவ்வலயத்திற்குப் பொறுப்பாக உள்ள மகாமுப்பு பொருளாதார ஆணைக்குழு அண்மை ஆண்டுகளில் அதிக முதலீட்டினை வழங்கி உள்ளது. இவ்வலயத்தில் உற்பத்தி செய்யப்படும் சில கைத்தொழில் பொருட்கள் பின்வருமாறு:

- i புடவையும் தைக்கப்பட்ட ஆடையும்
- ii தோல் உற்பத்திகள்.
- iii மட்பாண்ட உற்பத்திகள்.
- iv ஆபரணங்கள்
- v தகரத்தில் அடைக்கப்பட்ட விலங்குணவு
- vi இரத்தினக்கல் பட்டம் தீட்டுதல்.
- vii சயிக்கில் உதிரிப்பாகங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். எனினும் இந்த உற்பத்திகளில் பெரும் பங்கு புடவையும் தைக்கப்பட்ட ஆடையாக இருப்பது குறிப்பிடதக்கது. இந்த உற்பத்தி அதிகளவு முதலீட்டை கவரக் காரணம் இவ் உற்பத்திக்கும் தேவையான இன்றியமையாத தொழில் நுட்பம் ஊழியச் செறிவான தொழில் நுட்பம் ஆகும். இலங்கை ஊழியச் செறிவான நாடாக இருப்பதுடன் சர்வதேச ரீதியில் ஒப்பிடும் போது ஊதியம் மலிவாகவும் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனாலேயே அதிக முதலீட்டாளர் களை இவ் உற்பத்தி கவர்ந்துள்ளது.

இலங்கையில் மிக நீண்ட காலமாக சென்மதி நிலுவை பற்றாக்குறை காணப் படுகிறது. இப்பற்றாக் குறையைக் குறைப் பதற்கோ அல்லது நீக்குவதற்கோ கைத் தொழில் ஏற்றுமதிகள் இன்றியமையாதன வாக உள்ளது. அண்மை ஆண்டுகளில் இக் கைத்தொழில் ஏற்றுமதிகள் மூலம் பெறப் பட்ட வருமானத்தை இவ் அட்டவணை காட்டுகிறது.

சிக்கு ஒரு முட்டுக்கட்டையாக உள்ளன. அதாவது உலக சந்தையில் இந்த ஏற்று மதிக்ளிற்கு தீவிரமான போட்டி நிலவு கின்றது. தென் கிழக்காசிய நாடுகள் இதில் முக்கியமானவை. ஹொங்கொங், தென் கொரியா, சிங்கப்பூர், தாய்லாந்து போன்றன பிரதான போட்டி நாடுகளாகும். இலத்தீன் அமெரிக்காவில் பிரேசில், மெக்சிக்கோ ஆகி யனவும் இதில் ஈடுபடுகின்றன. ஐரோப்பிய நாடுகளும் இவ் உற்பத்தியில் ஈடுபடலாயின. இத்தகைய போட்டி நிலையில் இலங்கை தனது ஏற்றுமதியின் தரம், வடிவம், அச்சி

| ஆண்டு | மில்லியன் ரூபாவில் ஏற்றுமதி வருமானம் | மொத்த ஏற்றுமதி சதவீதம் |
|---|---|---|
| 1986 | 15878 | 26.3 |
| 1988 | 22674 | 28.3 |
| 1990 | 41510 | 52.2 |

இத்துறை அந்நியச் செலாவணியினை பெற்றுத் தருகின்ற அதேவேளை பல பிரச் சினைகளையும் எதிர் நோக்குவதனை அவ தானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

(1) இலங்கையின் கைத்தொழில் ஏற்று மதிகளின் வருமானம் அண்மை ஆண்டுகளில் அதிகரித்துக் கொண்டு செல்கின்ற போதும் அதன் தேறிய வருமானம் மிகக் குறை வாகவே உள்ளமை குறிப்பிடத்தக்கது. ஏனெ னில் இவ் உற்பத்திக்கு உள்நாட்டு மூல வளங்களின் சேர்க்கப்பட்ட பெறுமதி மிகக் குறைவாகும். அதாவது இறக்குமதி செய் யப்பட்ட மூலப் பொருட்களையும், இடைத் தரப் பொருட்களையும், மூலதனப் பொருட் களையும், தொழில் நுட்ப அறிவுகளையும அதிகளவு கையாளுவதால் ஏற்றுமதி உழைப் பின பெரும் பகுதி இறக்குமதி உள்ளீடு களிற்குப் பயன் படுத்தப் படுகின்றது. இத னாலேயே தேறிய ஏற்றுமதிச் சம்பாதிப்பு மிகக் குறைவாக உள்ளது.

2) அத்துடன் வளர்ச்சி அடைந்த நாடு களில் சந்தையைப் பாதுகாக்கும் நடவடிக் கைகள் இலங்கையின் கைத்தொழில் வளர்ச் சிக்கு

டல், முடித்தல் போன்றவற்றினைத் திருத்திக் கொள்ளுதல் வேண்டும். ஆனால் இதற்கு அதிகளவு முதலீடு தேவைப்படும். இதனை இலங்கை மேற்கொள்ள முடியுமா என்பது பிரச்சனையாக உள்ளது.

(3) இவற்றை இறக்குமதி செய்யும் நாடு களின் உள்ளூர் நிறுவன உற்பத்திகளை இவை பாதித்தன. அங்கு உற்பத்தி குறைய லாயிற்று, தொழிலின்மை அதிகரித்தது. இலாபங்கள் குறைந்தன. ஆடைக் கம்பனி களின் பங்கு இலாபங்கள் வீழ்ச்சியுற்றன. அந்த நிறுவனங்களின் பங்குகளின் விலை களும் குறையலாயின. அத்தோடு பல தொழிற்சாலைகளும் மூடவேண்டிய நிலை ஏற்பட்டது.

4) இதனால் ஐக்கிய அமெரிக்கா, கனடா, வடமேற்கு ஐரோப்பிய நாடுகள் ஐரோப் பிய பொருளாதார சமூக நாடுகள் அவுஸ் திரேலியா போன்ற நாடுகள் இவ்வகைப் பிரச்சனையை உணர்ந்தன. 1976 இல் முப் பது நாடுகளின் நலன் கருதி பல்நபர் ஒப் பந்தம் செய்யப்பட்டது. அத்தோடு இதற்கு முரணாக இலங்கை போன்ற நாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் ஏற்றுமதிகளிற்கு சுங்கத் தடைகள் விதிக்கப்பட்டன, ஏற்றுமதி அளவிற்கு கட்டுப் பாடுகள் விதிக்கலாயின. ஒப்புக் கொள்ளப்பட்ட அதிகரிப்பிற்கு அனுமதிகள் வழங்கப்படவில்லை. இவ் ஒப்பந்தத்தினை புதுப்பிக்கும் முயற்சிகள் வலுப்பெற்றன. இவ்வாறு இதன் ஏற்றுமதிச்சந்தை பாதுகாப்பற்று வருவதால் தொடர்ந்து இத்துறை விரிவடையுமா என்ற பிரச்சனை எழுகின்றது.

5) இலங்கையின் உள்நாட்டு அரசியல் இனப்பிரச்சனைகள் இத்தொழில் வளர்ச்சிக்குப் பாதகமான நிலைமைகளைத் தோற்றுவித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாக 1983ம் ஆண்டில் ஏற்பட்ட கலவரங்களினால் ஏறக்குறைய 30 நிறுவனங்கள் தமது தொழிலைக் கைவிடவேண்டிய நிலை உருவாயிற்று. இதனால் 1500 தொழிலாளர் வரை தொழில் இழந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய தாக்கங்கள் இக் கைத்தொழிலில் பாதிப்புக்களை ஏற்படுத்துவதனால் இத்துறையின் வளர்ச்சிக்கு தடையினை ஏற்படுத்துகின்றது.

இலங்கையின் கைத்தொழில் ஏற்றுமதி வளர்ச்சி தனித்து ஏற்றுமதி வருமானத்திற்கு மட்டும் பங்களிப்பு செய்தசல் போதுமானதன்று. அதிகரித்து வரும் வேலை இல்லாப் பிரச்சனையை நீக்குவதாகவும் அது அமைதல் வேண்டும்.

இவ்வேலை இல்லாப் பிரச்சனையை குறைக்க அரசு பல அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தி வந்துள்ளது. இந்த வகையில் சுதந்திர வர்த்தக வலயத்தை சார்ந்த கைத்தொழில் ஏற்றுமதிகளில் அண்மம ஆண்டுகளில் வேலை வாய்ப்புப் பெற்றோரின் எண்ணிக்கையை இவ் அட்டவணை காட்டுகிறது.

| ஆண்டு | வேலை வாய்ப்பு பெற்றோர் |
|---|---|
| 1990 | 7,358 |
| 1961 | 85,457 |

இத்துறையானது முக்கியமாக அந்நிய செலாவணியினையும் வேலை வாய்ப்பையும் பெற்றுத் தருவதாகக் காணப்படுகின்றது. அத்தோடு இத்துறை ஒப்பீட்டளவில் குறைவான மூலதனத்தினை வேண்டி நிற்பதாகும். தொடக்க நிலையில் குறைவான தொழில் நுட்பத்தையே எதிர் பார்க்கும் தொழிலாகவும் உள்ளது. மூலப் பொருட்களையும் இலகுவில் பெறக் கூடியதாகவும் உள்ளது. இதன் உற்பத்திக்கு வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி அதிகமாகவும் உள்ளது. இத்தகைய இயல்புகளினால் புதிய நாடுகள் பலவும் எதிர் காலத்தில் இத் தொழிலில் அதிக நாட்டம் செலுத்த வாய்ப்புண்டு. இதனால் இலங்கை ஏற்றுமதிச் சந்தைப் பாதுகாப்புக்களிலும் உள்நாட்டில் சிக்கன நடவடிக்கைகளிலும் தர மேற்பாடுகளிலும் அதிக கவனம் செலுத்தினால் தான் ஏனைய உலக நாடுகளின் போட்டி நிறுவனங்களுடன் போட்டியிட்டு தொடர்ந்தும் பலமானதாக வளர முடியும்.

மேற்கோள் நூல்கள்:-

பொருளியல் நோக்கு. ஏப்ரல் 1989
வெளிநாட்டு வியாபாரம் மா.சின்னத்தம்பி.
இலங்கை மத்தியவங்கி அறிக்கை.

பற்று மலர் வளமுடன் மலர்ந்து சிறப்புடன் பிரகாசிக்க வாழ்த்துக்கள்

# திரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரை
சகல வகுப்புகளும் நடைபெறுகின்றன.

உயர்தர 94, 95 கலை, வர்த்தக, கணித வகுப்புகளும் நடைபெறுகின்றன.

தூயகணிதம் } திரு. கமலசிங்கம்
பிரயோக கணிதம் }
கணக்கியல் — திரு. ஸ்ரீ
அளவையியல் — திரு. S. S. மனோகரன்
புவியியல் — திரு. வேலா
வரலாறு — திரு. பிள்ளை.
பொருளியல் — திரு. உதயன்
வர்த்தகமும் நிதியும் — திரு. தேவா
தமிழ் — திரு. குழந்தை
இந்துநாகரிகம் — திரு. சோதி

'பற்று' தளிர் புதுப்பொலிவுடன்
மிளிர வாழ்த்துக்கள்

# மேவின்

## தையல் நிலையம்

MERVYN TAILORING SHOP

646, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

646, Hospital Road,
JAFFNA.

கல்யாண சூட் (Wedding Suit)
சபாறி சூட் (Suffary Suit)
சர்வாணி
கல்யாண வேட்டிக்குப் பாவிக்கும்
நெசனல்
லோங்ஸ் ★ சேட்
என்பவற்றை தைப்பதற்கு
இன்றே நாடுங்கள்

குறிப்பு: எங்கள் வேலையில் பிழை
இருந்தால் உங்கள் துணி
திருப்பித் தரப்படும்.

வணிக பற்று வளமுடன் வளர
எமது நல்வாழ்த்துக்கள்

பாடசாலை உபகரணங்களையும்,
சஞ்சிகைகளையும் மலிவான விலை
யில் பெற்றுக்கொள்ளவும்.
போட்டோபிரதிகளை உடனுக்குடன்
பெற்றுக்கொள்ளவும் நீங்கள் நாட
வேண்டிய இடம்.

# மக்மிலன்

## புத்தகசாலை

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய்க் கிராமம் : வளங்களும் பயன்பாடும்

★ திருமதி சரஸ்வதி கனகரத்தினம்
(B. A. Diploma in Ed.)

வளங்கள் அருமைத் தன்மையும், பல் பயனும் கொண்டமைந்தவை. அவற்றைச் சிக்கனமாகவும், திறமையாகவும் பயன்படுத்தி உச்சப் பயனைப் பெற்று, மனித தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று பொருளியல் கலை கூறுகிறது. இந்த அடிப்படையில், எமது கல்லூரி அமைந்துள்ள கோப்பாய்க் கிராமத்தின் வளங்களையும், அவற்றின் தற்போதைய பயன்பாட்டையும், மேலும் பயன்பாட்டுக்கான சாத்தியக் கூறுகளையும் சுருக்கமாக எடுத்துக் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

எமது கோப்பாய்க் கிராமம் யாழ்ப்பாண நகருக்கு வடகிழக்காக, யாழ் - பருத்தித்துறை பிரதான வீதியினால் ஊடறுத்துச் செல்லப்படும் ஒரு பிரதான கிராமப் பகுதியாகும். 'உப்பாறு' என்ற கடனீரேரி இக் கிராமத்தின் கிழக்கு எல்லையாக அமைந்துள்ளது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். நான்கு சதுர மைல் பரப்பளவைக் கொண்ட இப்பகுதி பயனுள்ள வளங்கள் நிறைந்தது. மனித வளத்திலும் இப்பகுதி குறைந்தது அல்ல. ஏறத்தாழ 17500 மக்கள் இங்கு வாழ்கின்றனர். ஆயினும், இயற்கை வளமும், மனித வளமும் இணைந்து சிறந்த பயன்பாடு பெறப்படுவதாகக் கொள்வதற்கில்லை.

இயற்கை வளங்களை நோக்கும்போது, இப்பகுதி சிறந்த நீர்வளமும், நிலவளமும், கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. கிராமத்தின் கிழக்குப் பகுதியில் கடல்நீர் ஏரியை அடுத்துள்ள பகுதிகளில் ஆங்காங்கு உவர்த்தன்மை கொண்ட நீர் கிடைக்கின்றது. ஏனைய பகுதிகளில் என்றும் நீர்பெறக் கூடிய நன்னீர்க் கிணறுகளே காணப்படுகின்றன. எனவே இயற்கையாக நன்னீர் வளமுள்ளதாக இப்பகுதியைக் குறிப்பிடலாம்.

நிலவளத்தை நோக்கும்போது, கடல் நீரேரி சார்ந்த பகுதிகளில் உவர்த்தன்மை கொண்ட மண்ணும், அதனை அடுத்துக் களிமண்ணும் நரைமண்ணும், அதனை அடுத்து, எஞ்சிய பகுதி முழுவதிலும் சிறந்த தோட்ட மண்ணாகிய செம்மண்ணும் காணப்படுகின்றன.

இயற்கைத் தாவரங்களாகப் பொதுவாகப் பனை மரங்களும், சிறுபற்றைகள், முட்புதர்கள், போன்றவையும் காணப்படுகின்றன. கிராமத்தின் மேற்குப் பாகத்திலேயே இவை ஓரளவு எஞ்சியுள்ளன. ஏனைய இடங்களில், குடியிருப்பு, பயிர்ச் செய்கை என்பவற்றுக்காகத் தாவரங்கள் அழிக்கப்பட்டு விட்டன.

இப்பிரதேசத்தின் மனித முயற்சிகள் பாரம்பரியமான கிராமியப் பொருளாதார அடிப்படையிலேயே அமைந்துள்ளன. பிரதான செயற்பாடாகப் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளே காணப்படுகின்றன. சுய தேவைப்பூர்த்தியை நோக்கமாகக் கொண்ட இப் பயிர்ச் செய்கை நடவடிக்கை, நீர்ப்பாசன உதவிமூலம் பெருமளவுக்கு மேற்கொள்ளப்படுகிறது. உப்பாறு கடல்நீர்ஏரி அருகிலுள்ள பகுதி உவர்த்தன்மை கொண்ட தரிசு நிலமாக அமைந்திருக்கின்றது. அடுத்துள்ள களிமண் பகுதியில் ஏறத்தாழ 700ஏக்கரில் பெரும்போகத்தில் மானாவாரியாக (மழையை மட்டும் நம்பி) நெல் பயிரிடப்படுகிறது. இவ்வயல்கள் சிலவற்றில் நெல் அறுவடை செய்தபின் பயறு, உழுந்து, சணல், கௌபி போன்ற பயிர்கள் ஓரளவு நீர்ப்பாசன உதவியுடன பயிரிடப்படுவது முண்டு. சிறுதானியங்கள் உணவுத் தேவைக்காகவும், சணல் பசளைத் தேவை, மற்றும் விலங்குகளுக்காகவும் பயிராகின்றன. நெல் உட்பட இப்பயிர்கள் யாவற்றிலும் அக்

களை பெருமளவில் எடுத்து, நவீன முறைகள் பின்பற்றப்படுமாயின் - குறிப்பாக மண் பரிசோதனை செய்து, பொருத்தமான வளமாக்கிகளைப் பயன்படுத்த முடிந்தால் அதிக விளைச்சலைப் பெற்றுக் கொள்ள முடியும். நிலவளத்திலிருந்து மிகச் சிறந்தளவு பயன்பாட்டைப் பெறலாம்.

நரைமண்ணுள்ள பகுதிகளில் தென்னை, மற்றும் காய்கறி வகைகள், - பழவகைகள் குறிப்பாக வாழை, வெங்காயம், மிளகாய் போன்றவை உற்பத்தி செய்யப்படுகின்றன. தென்னை தவிர்ந்த ஏனையவை, செம்மண் பிரதேசத்திலும் வெகு சிறப்பாகப் பயிரிடப் படுகின்றன. செம்மண் பகுதியில் ஆழமான நன்னீர்க் கிணறுகள் மூலம் நீர்ப்பாசன வசதி மேற்கொள்ளப்பட்டு இவை சிறப்பாகப் பயிரடப் படுகின்றன. வாழை மற்றும் திராட்சை ஆகிய பழவகை உற்பத்திக்கும் இப் பிரதேசத்தின் மேற்குப் பகுதி பிரசித்தி பெற்றது. யாழ்ப்பாணப்பகுதியின் வாழைப் பழ உற்பத்தியில், கோப்பாய் நீண்டகால முக்கியத்துவம் பெற்றுள்ள ஒரு ஊர் என்பது இங்கு நினைவு கூரத்தக்கது. இந்த உற்பத்திகள் யாவும், அண்மைக் காலங்களில, நீர்ப்பாசன வசதிகளுக்கு ஏற்பட்ட இடையூறுகளால் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளன, ஆயினும் தற்போது கணிசமான அளவு உற்பத்தி வெளியீடு இடம் பெறுகிறது. இதை மேலும் அதிகரிக்கச் செய்யலாம். மா, பலா, பப்பாசி போன்ற பழவகை உற்பத்தியும் ஆங்காங்கு காணப்படுகின்றன. இவை யாவற்றுக்கும் செம்மண்ணின் வளமே மூலகாரணமாகும். கிராமத்தின் மேற்குப் பகுதியில திராட்சைப் பழ உற்பத்தியும் கணிசமான அளவு இடம் பெறுதலும முக்கிய அம்சமாகும். இதில் மேலும் அக்கறை எடுத்தால் உற்பத்தி பெருமளவு அதிகரிக்கலாம்.

இப்பகுதியில் காணப்படும் சிறுகைத் தொழில்களும் இக் கிராமத்தின் பொருளாதார நடவடிக்கைகளில் முக்கியத்துவம் பெறுகின்றன. பனை ஓலையில் பெட்டி, பாய் இழைத்தல், மற்றும் அலங்காரப் பொருட்கள் செய்தல், பதநீர் சேகரித்தல், கள்ளு இறக்குதல், உப்புச் சேகரித்தல், சுருட்டுச் சுற்றுதல் ஆகிய தொழில்கள் இங்குள்ள மூலவளங்களை அடிப்படையாகக் கொண்டமைந்தவை. பனை மட்டையிலிருந்து தும்பு எடுத்து அதிலிருந்து பொருட்கள் செய்தல், வாழை நார் இழைஎடுத்தல், பனங்கட்டி தயாரித்தல் போன்ற சிறுகைத் தொழில்களும் சில காலங்களின் முன்பு ஓரளவு இடம்பெற்றபோதும், நாட்டின் திறந்த பொருளாதாரக் கொள்கையால் அவை பாதிக்கப்பட்டு மறைந்து விட்டன.

'பீடி' சுற்றுதல், தையல் வேலை, பழங்கள் அடைத்தல், பழச்சாறு தயாரித்தல் போன்ற கைத்தொழிலகள் இன்று வளர்ச்சியடைந்துள்ளன. ''சுரபி'' பானவகை உற்பத்தி குறிப்பிடத்தக்கதாகும். உள்ளூர் வளங்கள் மூலப்பொருளாக அமையாத போதும், இவற்றில் இபபகுதி மனித வளம் பெருமளவு பயன்படுததப்படுகிறது. கடல் நீர் ஏரியில மீன்பிடித்தல் தொழிலும் ஓரளவு வளர்ச்சி பெறறு வருகின்றது. கரையோர மீன்பிடி பாதிக்கப்பட்ட இக்காலத்தில் இதன் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது.

நெசவுக் கைத்தொழிலும் இக்கிராமத்தில் நீண்டகாலம் நடைபெற்று வருகின்ற குடிசைக் கைத்தொழிலாக அமைந்துள்ளது. தறபோது ஆங்காஙகு காணப்படும் கைத்தறி நெசவு ஆலைகளைவிட ''ஸ்ரீராம்'', எனும் கைத்தொழிற்சாலை மின்தறி மூலம் துணிகளை உற்பத்தி செய்து வருவதும் குறிப்பிடத் தக்கதாகும்.

இருக்கின்ற வளங்கள் இவ்வாறு பயன்படுததப்பட்டு வரும் அதே வேளை, அவற்றை மேலும் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதையும் இங்கு சற்றுக் கவனித்தல் அவசியமானதும், பொருத்தமானதுமாகும். நீர்வள, நிலவளம் தொடர்பான அபிவிருத்தி முயற்சி ஒன்று மேற்கொள்ளப் பட்டால் பெருமளவு விவசாய உற்பத்தி அதிகரிப்பைப் பெறலாம். இதற்கு கடல்நீர் ஏரிப்பகுதிக்கு அணை கட்டி, அந்தநீர் உள்ளே வராமல் தடுப்பதன் மூலமும், வேறு இரசாயன முறைகள் மூலமும் கடல்நீர் ஏரியை அடுத்துள்ள பகுதி நிலத்தை உவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீட்புச் செய்து விளைநிலமாகவோ, அன்றிச் சிறந்த மேய்ச்சல் நிலமாகவோ மாற்றலாம். இதனால் பயிர்ச்செய்கை நடவடிக்கை, மற்றும் விலங்கு வேளாண்மை அதிகரிக்கும். ஆங்காங்குகாணப்படும் பல்வேறு சிறு குளங்களை ஆழமாக்குவதன் மூலம், அதிக நீரைத்தேக்கி வைத்து நீர்ப்பாசன வசதிக்குப் பயன்படுத்தலாம். கோப்பாய் பழைய வீதிப் பகுதியிலுள்ள ''உச்சுவில்'' குளம்' இருபாலையிலுள்ள ''மண்டான்'' குளம், கண்ணகை அம்மன் கோவில் பகுதியிலுள்ள ''வேளைக்'' குளம் முதலியவை இவ்வாறு பயன் படுத்த உகந்தவை.

இவை தவிர ஒரு சில குளங்களைச் சிறந்த நீச்சல் தடாகங்களாக மாற்றியமைப்பதுடன், நன்னீர் மீன்வளர்ப்பையும் அவற்றில் மேற்கொள்ளலாம். கட்டைப் பராயிலுள்ள ''வட்டக்குளம்'' கோப்பாய்ச் சந்திக்கு அருகிலுள்ள ''குதியடிக்குளம்" ஆகியவை இந்த வகையில் திருத்தியமைக்கப்படலாம். ''குதியடிக்குளம்'' நீச்சல் தடாகமாக மாற்றப்பட்டால், அதன் அருகிலுள்ள ''பழைய கோட்டைப்'' பகுதியானது வரலாற்றுச் சின்னங்கள் - அழிபாடுகள் கொண்டிருப்பதால் இச்சூழல் ஒரு சுற்றுலா நிலையமாகவும் மாற்றலாம்.

குளங்கள் பல சிறியவையாக ஆங்காங்கு அமைந்துள்ளவற்றை ஆழமாக்கி நீர்ப்பாசன விருத்தியை ஏற்படுத்தி அதிகளவு சிறுதானியங்களைச் சுழல் முறையில் பயிரிடலாம். அத்துடன் இன்று பசளைக்காகப் பயிரிடப்படும் சணலையும், நன்கு முற்றியபின் அறுவடை செய்து, குளங்களின் நன்னீரில் ஊற வைத்து, நாரை எடுத்துக்கைத்தொழில் தேவைக்குப் பயன்படுத்தலாம். பனை மட்டையை ஊறவைத்துத்தும்பு பெறவும் இந்த நீரைப் பயன்படுத்த முடியும். எனவே கைத்தொழில் விருத்திக்கு இதுவும் உதவியாயமையும்.

வெங்காயம், மிளகாய், புகையிலை போன்ற பயிர்வகைகள் செம்மண் பகுதியில் நல்ல பயன் தரக்கூடிய வகையில் நவீன முறைகளை அதிகம் கையாண்டு விளைச்சலைப் பெருக்கலாம். நீர்ப்பாசன வசதியை விஸ்தரிப்பதற்காகக் குழாய்க் கிணறுகளையும் அமைத்து உதவலாம்.

இக்கிராமம் வாழை உற்பத்திக்குப்பிரசித்தி பெற்றதாகையால் வழைநாரிலிருந்து பலவகை அலங்காரப் பொருட்களை உற்பத்தி செய்து அயலூர்களுக்கு விற்பனைக்காக அனுப்பலாம். வாழைக்காய், மரவள்ளி ஆகிய உற்பத்திகளிலிருந்து பலவகையான தின்பண்டங்கள் தயாரித்துப் பைக்கற்றில் அடைத்து வேறிடங்களுக்கு விற்பனைக்காக அனுப்பலாம். இவை பலருக்கு வேலைவாய்ப்புக்களையும் வழங்க முடியும்.

தக்காளிப்பயிர் இங்கு செம்மண் பகுதியிலும், நரைமண் பகுதியிலும் கணிசமான அளவு உற்பத்தி செய்யப்படலால், அதன் உற்பத்தியை அதிகரித்து, அதிலிருந்து ''ஜாம்'' முதலிய உற்பத்திகளை மேறகொண்டு, அவற்றை வெளியூர்களிலும் சந்தைப்படுத்தலாம். சந்தைப் படுத்தலுக்காக இன்று அதிகரித்துள்ள போக்கு வரத்துச் செலவுகளைச் சமாளிப்பதற்காக உப்பாறு கடனீரேரியில் படகுப் போக்கு வரத்தையும் பயன்படுத்தலாம். இதனால் கொண்டு செல்லல் செலவு குறைய வாய்ப்புண்டு. மேலும் இத்தகைய போக்கு வரத்துச் சேவைகள் இடம்பெறும் சந்தர்ப்பத்தில், இறங்கு துறைகள் அமைக்கப்பட்டால், அவற்றை மீன்பிடித் துறைகளாகவும் பயன்படுத்தலாம், மீன் குறிப்பிடத்தக்க அளவில் இங்கு கிடைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பது மட்டுமல்லாது இக்கடனீரேரிப் பகுதியில் இயற்கையாகவே உப்பு விளைவதும் இக்கைத்தொழில் விருத்திக்குச் சாதகமாக அமைய முடியும். அதிகளவு மீன் பெறப்படும் காலங்களில் அவற்றை உப்பிட்டுக் காய வைத்துக் கருவாடாகவும் அயலூர்களுக்கு அனுப்ப முடியும்.

கடல்நீர் ஏரிப் பகுதியில் இயற்கையாகவே உப்பு விளைவதால், அதிலும் அக்கறை செலுத்தி, உரிய முறையில் பாத்திகளை அமைத்து உப்பு உற்பத்தியை ஊக்குவித்தல், மேலும் அதிகளவு உப்பு இங்கு பெறப்பட்டு அயலூர்களுக்கு அனுப்பப்படலாம்.

தரிசு நிலங்களில் விலங்கு வளர்ப்புக்கான தீன்வகைகளைப் பயிரிட முடிந்தால், இன்று தாமாகவே முளைக்கும் புல்வகைகளை மேய்ந்து வரும் விலங்குகள் மேலும் அதிகளவு பயனைப்பெறும் வகையில் மேய்ச்சல் நிலங்களை உருவாக்கி, விலங்கு வேளாண்மையால் அதிக பயன் பெற்று, விலங்குணவுற்பத்தியில் இப்பகுதி தன்னிறைவு பெறமுடியும்.

புகையிலை உற்பத்தியை அதிகரித்தால் அதன் அடிப்படையில் சுருட்டுக் கைத்தொழில் விருத்திபெற்றுப்பலருக்குவேலைவாய்ப்புக்களை வழங்க முடியும்.

இப்பகுதி மக்கள் பரம்பரை பரம்பரையாக விவசாயத்தில் ஈடுபட்டு வருவதால், பாரம்பரிய முறைகளைப் பின்பற்றும் மனப்பாங்கு முற்றிலும் அகன்று விடவில்லை. நவீன முறைகளைப் பின்பற்றும் மனப்பாங்கு ஊக்குவிக்கப் படவேண்டும். கமநலசேவை நிலையம், விவசாயவிரிவாக்கல்உத்தியோகத்தர் ஆகியோரின் உதவிகளை இவர்கள் தயங்காது நாடினால், மேலும் விவசாய உற்பத்திகளைப் பெருமளவில் அதிகரிக்க வழியுண்டு.

இன்று நீர்ப்பாசன வசதிகள் உற்பத்திச் செலவைப் பெருமளவு அதிகரிக்கச் செய்துள்ளமையால், விற்பனையில் அதிக லாபமின்மை ஏற்பட்டு மனச் சோர்வடைந்துள்ள விவசாயி அரச நிறுவனங்களாலும், அரச சார்பற்ற நிறுவனங்களாலும் மேலும் உதவிகளைப் பெற முடிந்தால் ஊக்குவிக்கப்படுவான்.

ஊழியப் படையின் பெரும் பகுதி இன்று வேலையின்மை, கீழுழைப்பு ஆகியவற்றால் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலை காணப்படுகிறது. இருக்கும் வளங்கள் பூரணமாகவும், திறமையாகவும் இங்கு எடுத்துக் காட்டப்பட்டவாறு பயன்படுத்தப் பட்டால், இப்பகுதி பொருளாதார மேம்பாடு பெறமுடியும். கிடைக்கின்ற வளங்களைப் போதியளவு பயன்படுத்தாமைக்கு மூலதனப் பற்றாக்குறையும் ஒரு பிரதான காரணமாகும். நிருவாகத்துறையினர், மற்றும் பொறுப்பு வாய்ந்தவர்கள், வெளிநாட்டு வருவாய் பெற்று வெறுமனே நுகர்வுச் செலவுக்கு அதைப்பயன்படுத்தும் தனியார் ஆகிய வெவ்வேறு தரப்பினர் முன்வந்து மூலதனம் முதலீடு செய்து இவற்றைத் திட்டமிட்டும், ஆலோசனை வழங்கியும், ஊக்குவித்தும் உதவ முடிந்தால் இக்கிராமத்தின் இயற்கையான பொருளாதார வளங்களும், மனித வளமும் இணைந்து சிறந்த முறையில் பயனளிக்க முடியும் என உறுதியாக நம்பலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார வளத்தில் கிராமிய விவசாயம்

கு. சத்தியபாமா

13-ம் ஆண்டு வர்த்தகப் பிரிவு

குறைவான சனத்தொகை செறிவினைக் கொண்ட பிரதேசங்களும் அதனுடன் தொடர்பான தனிமைப்படுத்தலும் விவசாய உற்பத்தியினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார அடித்தளமும் நகர மக்களுடன் ஒப்பிடும்போது வேறுபட்டதும் பின்தங்கியதுமான வாழ்க்கை நிலையினைக் கொண்ட மக்களை உள்ளடக்கியதுமான பிராந்தியமே கிராமியம் என்ற சொல்லினால் வழமையாகக் குறிக்கப்படுகின்றது. புவியியல், தொழில், சமுகப்பண்பாடு என்ற மூன்று அம்சங்களை உள்ளடக்கியதாக கிராமியம் இருந்தபொழுதிலும் குறைவிருத்தி நாடுகளைப் பொறுத்தவரையில் தொழில் அமைப்பு அம்சமே முக்கியத்துவம் பெறுகின்றது.

ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய உற்பத்தி கிராம அபிவிருத்தி, உற்பத்தித்திறன் வருமானம் போன்றவற்றுடனும் அவற்றிற்குத் துணைபுரியும் மறைமுக காரணிகளுடனும் தொடர்புற்று, அவற்றை உள்ளடக்கியதாக இருக்கின்றது. அல்லது கிராம மக்களின் நலன்களை உயர்த்துவதை கருத்தில் கொண்டுள்ளது. அனேகமாக குறைவிருத்தி நாடுகளில் விவசாய அபிவிருத்தி கிராமிய அபிவிருத்தியின் அடித்தளமாகவும் பொருளாதாரத்தினதும் மக்கள் நலனினதும் உயர்ச்சிக்கு தூண்டுதலாகவும் இருந்துவருகின்றது. சாதகமான அரசியல் சூழ்நிலையில் தொடர்பான விவசாயக் கொள்கைகள் தேசியக் கொள்கைகளுடன் இணைக்கப்படவேண்டிய அவசியம் இதனாலேயே எழுகின்றது. இது மொத்த தேசிய உற்பத்தியின் வளர்ச்சி வேகத்தைக் குறைப்பதாக இருந்தபோதிலும் பொதுஅபிவிருத்தி கொள்கைகள் கிராமிய வறுமை நிலையினை கருத்தில் கொண்டே உருவாக்கப்படவேண்டும்.

விவசாய சமுகத்தின் மெய் வருமானத்தை அதிகரிக்கச் செய்யும் வகையில் குறைவிருத்தி நாடுகளின் அபிவிருத்திச் செயற்பாட்டில் விவசாயம் முக்கியமான பங்களிப்பை வகிக்கின்றது, விவசாயத் துறையிலும் ஏனைய துறையிலும் மூலதன வாக்கத்திற்கு திசைதிருப்பப்படுவதுடன் சமுகப் பொதுமுதலீடுகளைச் செய்து அதுவே மீண்டும் விவசாய உற்பத்திக்கு உறுதுணையாக இருக்கப் பயன்படுகின்றது.

கிராமத்துறையானது அபிவிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் சனத்தொகை ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருந்தபோதிலும் கூட அன்னியர் ஆட்சிக்காலத்தில் நீண்டகாலமாக நிராகரிக்கப்பட்ட துறையாகவும் இருந்தது. இத்த கிராமிய விவசாயம் இலங்கை மக்களின் முக்கிய நுகர்வுப் பொருளான நெல்லையும் மற்றும் உபஉணவுப் பொருள்களையும் உற்பத்தி செய்கின்ற விவசாயமாகக் காணப்பட்டது.

இலங்கைப் பொருளாதாரத்தில் கிராமிய விவசாயத்தின் முக்கியத்துவத்தைப் பின்வரும் குறிகாட்டிகளில் இருந்து எடுத்துக் காட்டலாம்,

i) தேசிய உற்பத்திக்கு 16 வீதமான பங்களிப்பைக் கிராமிய விவசாயம் வகிக்கின்றது. இதன் தனியொரு பயிரான நெல் மட்டும் 6 வீதம் ஆகும். நாட்டின் வேலை வாய்ப்பில் 30 வீதமானோர் கிராமிய விவசாயத்தில் வேலை வாய்ப்பினைப் பெறுகின்றனர்.

ii) 75 காலப்பகுதியில் அரிசியின் இறக்குமதி 20 வீதம் ஆகும், தற்பொழுது 2 வீதத்திற்கும் குறைவாகும். புதிய நீர்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசனத் திட்டங்களால் பயிரிடும் நிலப்பரப்புக்கள் அதிகரித்துக்கொண்டு செல்கின்றன, இதனாலேயே அரிசி இறக்குமதி வீழ்ச்சி அடைந்துகொண்டு செல்கின்றது. எனவே அன்னியச் செலவாணி வளத்தை ஓரளவாயினும் மீதப்படுத்துகின்ற ஒரு துறையாக கிராமிய விவசாயம் காணப்படுகின்றது.

இலங்கையின் கிராமிய விவசாயம் பல நூற்றாண்டு காலப் பாரம்பரியத்தைக் கொண்டது. சனத்தொகையின் பெரும்பான்மையினரின் சீவனோபாயமும் அதுவாகும். 19ஆம் நூற்றாண்டில் பிரித்தானியர் கோப்பி பயிர்ச் செய்கையை அறிமுகப்படுத்தியதில் இருந்து இலங்கையில் பெருந்தோட்ட விவசாயம் அறிமுகமாகியது. இந்த நூற்றாண்டில் வளர்ச்சி அடையத் தொடங்கிய பெருந்தோட்ட விவசாயம் கிராமிய விவசாயத்தில் ஏற்படுத்திய தாக்கம் பாரதூரமானது. இதுவரை காலமும் உழைப்பூதிய விவசாயத் துறையில் வேரூன்றியிருந்த பொருளாதாரம் படிப்படியாக நவீன ஏற்றுமதிப் பொருளாதாரமாக உருமாறத் தொடங்கியது. பின்னர் கிராமியப் பொருளாதாரம் சமுதாயத்தின் நாளாந்த தேவைகளை குறைவாகப் பூர்த்திசெய்யும் நிலைக்கு வந்தது. உழைப்பு, கூலி, தொழிற்சாலைகளை மையமாகக் கொண்ட தோட்டம், ஏற்றுமதிச் சந்தைக்கான உற்பத்தி போன்றவற்றைக் கொண்டிருந்த பெருந்தோட்டத் துறை கிராமிய உழவர்களுக்கு வழங்கிய உடனடியான நிலைமைகள் மிகக்குறைவு. இத்துறையில் இருந்து பெறப்பட்ட மிகை ஒன்றில் இத்துறையில் மீள்முதலீடு செய்யப்பட்டது. இதன்விளைவாக எமது கிராமிய நெல் உற்பத்தி ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு காலமாகத் தேங்கியிருந்தது.

பெருந்தோட்டத்துறை நவீனமயமாக்கப்பட்டு முதலாளித்துவக் கட்டுக்கோப்பில் வளர்ச்சிபெற விவசாயத்துறை உழைப்பூதியத்துறையாக மரபுரீதியான தொழில் நுட்பத்தைக் கொண்டதாக இருந்தது. தனிப்பட்ட விவசாயியின் இலட்சியம் சுயதேவைப் பூர்த்தியாக இருந்ததுடன் நெல்லுடன் உப உணவுப் பயிர்களையும் செய்துவந்தனர்.

உலகப் போரை அடுத்து வந்த சில வருடங்களில் இலங்கையின் பொருளாதார அமைப்பைப் பரிமாணங்களுக்கு இட்டுச்செல்லும் ஆக்கபூர்வமான துறையாக இது வளர்ச்சி பெறும்வரை சிறுசிறு மாற்றங்களுடனான பழைய அமைப்பே தொடர்ந்து நிலவி வந்தது. இன்று இலங்கையின் அபிவிருத்தி உத்திகளின் பிரதான மையமாக உணவு உற்பத்தித்துறை விளங்குகின்றது.

இவ்வாறு விளங்கி வருகின்ற கிராமிய விவசாயத்திற்கு அரசு பலவழிகளிலும் உதவி அளித்துவருகின்றது. ஒருபுறம் குடியானவர் பிரச்சினை, மறுபுறம் உணவுப் பிரச்சினை ஆகியவற்றினை கருத்தில்கொண்டு இலங்கை அரசு பலதிட்டங்களை ஏற்படுத்தியுள்ளது. அவையாவன:

## 1] குடியேற்றத் திட்டம்:

இது 1953ஆம் ஆண்டு காணி சீர்திருத்தச் சட்டத்துடன் ஆரம்பிக்கப்பட்டதாகும். இக்குடியேற்றத் திட்டங்கள் விருத்தியடைந்த பகுதியில் உள்ள சனத்தொகை அழுக்கம், வேலையின்மை, பெருந்தோட்ட பயிர்ச் செய்கையினால் நிலமிழந்த குடியானவர் பிரச்சினை போன்றவற்றிற்கு நல்ல பரிகாரமாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டன. ஆரம்பத்தில் ஒரு விவசாயிக்கு 5 ஏக்கர் வயல் நிலமும் 3 ஏக்கர் மேட்டு நிலமும் உப உணவுச் செய்கை, பண்ணை என்பவற்றிற்காக கொடுக்கப்பட்டன. இங்கு நீர்ப்பாசன வசதிகள், வீடுகள், போக்குவரத்து போன்றவற்றை ஏற்படுத்தி ஒரு விவசாயியை குடி அமர்த்த 2000.00 செலவு ஏற்பட்டது. இது வெற்றியளிக்காமல் போனதிற்கு 1958ஆம் ஆண்டு கொண்டுவந்த நெற்காணி மசோதா கிராமிய விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டதே காரணமாகும்.

## 2] உத்தரவாத விலைத்திட்டம்:

ஆரம்பத்தில் மிளகாய், வெங்காயம், பயறு, புளி, மிளகு போன்ற பொருள்களும் உத்தரவாதவிலைத்திட்டத்தில் வந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்திட்டத்தில்:

i) உற்பத்தியாளருக்கு நியாயமான விலை வழங்கல்.

ii) உள்நாட்டு உணவு உற்பத்தியை கூட்டுதல்.

iii) இறக்குமதி பிரதியீடு செய்தல் என்பன அடங்கியுள்ளன.

நெல்லுக்கான உத்தரவாத விலையை உள்நாட்டில் நெல்லுற்பத்தியின் உற்பத்திச் செலவு இறக்குமதி செய்யப்பட்ட நெல்லின் விலை என்பதைக் கருத்தில் கொண்டு நிர்ணயிக்கப்பட்டது. நெல்லுக்கான உத்தரவாத விலை காலத்துக்குக் காலம் கூடி வந்துள்ளது.

## 3] உர மானியத் திட்டம்:

இது 1958ஆம் ஆண்டு எல்லா விவசாயிகளுக்கும் பசளை பெறும் வகையில் மாற்றியமைக்கப்பட்டது. உரத்தை கமத்தொழில் சேவை இலாகாக்கள் மூலம் கொள்வனவு செய்பவர்களுக்கு 50 விகித மானியமும் கூட்டுறவுச் சங்கங்களால் 33 விகித மானியமும் கொடுக்கப்பட்டது. இலங்கையில் உரப் பயன்பாடு வேகமாக அதிகரிப்பதற்கான காரணம் உரமானியத் திட்டமாகும்.

## 4] கிராமியக் கொடுகடன்:

கிராமிய விவசாயிகளை பொறுத்த மட்டில் அவர்கள் எமக்குத் தேவையான நிதியின் பெரும்பகுதியைக் கடன்களில் இருந்தே பெறவேண்டியுள்ளது. ஏனெனில் அவர்கள் உழைக்கின்ற வருமானம் நுகர்ச்சி செலவிற்கே போதுமானதாகவுள்ளது. இதனால் சொந்த சேமிப்புகள் மிகக்குறைவு. ஆகையால் உற்பத்தியின் ஆரம்ப நடவடிக்கையில் இருந்து அறுவடை காலம் வரை கடன்களிலேயே சார்ந்திருக்க வேண்டியிருக்கின்றது. கிராமியத்துறைக்குக் கடன் வழங்கும் மூலாதாரங்களை இருவகைப் படுத்தலாம்.

i) நிறுவன ரீதியான கடன்கள்: கிராமியத்துறைக்கு கடன் வழங்கும் நிறுவனரீதியான மூலாதாரங்களாக கீழ்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

அ) வணிக வங்கிகள்: கற்றன் நாஷனல் வங்கி. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி.

ஆ) கூட்டுறவுச் சங்கங்கள்

இ) அரச திணைக்களங்கள்

ஈ) பிரதேச அபிவிருத்தி வங்கி என்பவையாகும்.

ii) நிறுவன ரீதியற்ற கடன்கள்:

கிராமப்புறத்தில் கடன் வழங்கும் நிறுவனரீதியற்ற மூலாதாரங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

அ) கடன் வழங்குவதைத் தொழிலாகக் கொண்டோர்,

ஆ) கடன் வழங்குவதை உப-தொழிலாகக் கொண்டோர்.

இ) நிலப்பிரபுக்கள்,

ஈ) வர்த்தகர்கள்.

கிராமிய பொருளாதாரத்தின் பிரச்சினைகளும் அவற்றின் வழிவகைகளும்;

i) கிராமிய விவசாயமானது சிற்றுடமை விவசாயமாக காணப்படுவதனால் பாரிய உற்பத்திகளை மேற்கொள்ளமுடியாது.

ii) குறைந்த உற்பத்தித்திறன்; கிராமத்தின் குறைந்த வருமானத்திற்கும் குறைந்த உற்பத்தித் திறனே காரணம். நிலத்தின் உற்பத்தித்திறன் ஊழியத்தின் உற்பத்தித்திறன் என்ற இரண்டையும் சேர்த்து இந்த உற்பத்தித்திறனைக் கணிப்பர். இந்த உற்பத்தித் திறனைக் கூட்டுவதற்கு;

அ) நல்ல விதைநெல்லைப் பயன்படுத்துதல்.

ஆ) செயற்கை உரப்பயன்பாட்டைக் கூட்டுதல்.

இ) நன்முறைநில உழவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியன செய்யவேண்டும், இவ்வாறு செய்வதால் உற்பத்தி கூட இடமுண்டு. என்றாலும் நிலம் உழைப்பு என்ற வகையிலும் குறைந்த உற்பத்தித்திறன் கொண்ட கிராமிய விவசாயத்துறையில் பெருமளவு சனத்தொகையில்தங்கியிருப்பதால் கிராமிய மக்கள் வருமானம் தொடர்ந்தும் பிழைப் பூதிய மட்டத்தில் காணப்படுகிறது.

iii) கடன்பிரச்சினை: கிராமிய விவசாயத்துறைக்குகடன்பிரச்சினையானது விவசாயிகளுக்குத் தேவைப்படும் பெருமளவு கடன் என்ற அடிப்படையில் மட்டும் எழுவதில்லை. இக்கடன் நிரப்பல் செய்யும் நிறுவனங்கள் பெற்ற கடனைத் திரும்பக் கொடுக்கமுடியாத நிலை என்பவற்றுடன் தொடர்புபட்ட பிரச்சினையாக கடன் பிரச்சினை காணப்படுகின்றது,

tv) கீழ் உழைப்பும் பருவகால வேலையின்மையும் காணப்படுகின்றது.

v) நெல் சந்தைப்படுத்தும் பிரச்சினை,

iv) காணி விஸ்தீரணப் பிரச்சனை.

இப்படிப்பட்ட பிரச்சனைகள் தீர்க்கப்படாதவை, கிராமிய பொருளாதார முறைமை அப்படியே இருக்கும். ஆகவே தொழிற் செறிவை ஊக்குவிப்பதற்கான திட்டங்கள்அமையவேண்டும். கூடியவிளைச்சல்தரும் தானியவகைகளை அறிமுகப்படுத்தலும் தொழிற் செறிவை அதிகரிக்க வழிகோலலும், விளைச்சலைஇருமடங்காக்குவதக்கு உதவும்,

ஒவ்வொரு சிறந்த அறுவடையின் பின்னரும் கிராமிய அபிவிருத்தியை மறந்து விடும் விபரீதப் போக்கு பல அரிசி உற்பத்தி நோக்குகளில் நிலவி வருகின்றது, தன்னிறைவு மட்டும் ஒரு குறிக்கோளாக இருக்கக்கூடாது, தன்னிறைவு அடைவதால் ஏற்படும் செலவுகளை அதன் நலன்களையும் நுணுக்கமாக விசாரணை செய்தல் அவசியமாகும். உழவனின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த தாழ்நிலம், மேட்டுநிலம், கால்நடை வளர்ப்பு துறை போன்ற காரணங்களை கருத்தில் எடுந்துக்கொண்டு கொள்கையினை வகுக்கவேண்டும்.

விவசாயம் பன்முகப்படுத்தப்பட வேண்டும், அதன்மூலம் நீண்டகால மூலவளங்களின் உச்சப் பயன்பாட்டை அடைய முடியும். தற்போதைய பாரம்பரிய சேனைப் பயிர்ச்செய்கையின்கீழ் உள்ள அபிவிருத்தி அடைந்த நிலங்களில் நீர்ப்பாசன உள்ளீடுகளை வழங்குதல், விஸ்தரிப்பு நடவடிக்கைகள், ஆய்வு வேலைகள் போன்ற குறித்த நிறுவன அமைப்பு மாற்றங்களில் பொருத்தமான மாற்றங்களைச் செய்தும் போக்குவரத்து களஞ்சிய வசதிகளில் இலகுவில் உள்ளீடுகளைப் பெறுதல் விஸ்தரிப்பு சேவைகள் போன்ற அனுகூலங்களை விரைவாக பெறும் பகுதிகளில் கூடிய கவனம் செலுத்தவேண்டும்.

கல்வி வளர்ச்சியும் துரிதமான சமூக அரசியல் மாற்றங்களும் தோற்றுவித்திருக்கும் புதிய அபிலாசைகளுடன் ஒத்துப் போகும் வகையில் உழவர்களின் வாழ்க்கை தரத்தின் மாற்றத்தினை ஏற்படுத்தக்கூடிய ஸ்திரணமானதும் பொருத்தமானதுமான புதிய உள்நாட்டு விவசாய அமைப்பொன்றினை உருவாக்கவேண்டும். கிராமியத் துறையில் புதிய விவசாய ஒழுங்கு ஒன்று எழுச்சியடையவேண்டும். இவ்விவசாய அபிவிருத்தி இலட்சியங்கள் சில குறிப்பிட்ட வருடங்களில் நிறைவேறும் என பொருளியலாளர்களால் தீர்க்கதரிசனம் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருமான வட்டப்பாய்ச்சல் அல்லது வருமானச் சுற்றோட்டம்.

★ செ. ஜெயசுதா
12 ம் ஆண்டு வர்த்தகப் பிரிவு.

முகவுரை :

ஒரு நாட்டினுடைய தேசிய பொருளாக்கம் அல்லது தேசியவருமானமானது உற்பத்தியுடன் தொடர்புடைய துறைகளுக்கிடையே எவ்வாறு பங்கிடப்படுகின்றது என்பதனை விளக்கும் கோட்பாடாக இது அமைகின்றது.

வரைவிலக்கணம்;

குறித்த ஒரு வருடத்தில் அந்தநாட்டின் தேசியவருமானம் உற்பத்தியுடன் தொடர்புடைய துறைகளுக்கிடையே எவ்வாறு பண வருமானம், பண்டம் சேவை எனும் வடிவில் கொடுப்பனவு, பெறுவனவு செய்யப்படுகின்றது என்பதை விளக்குவதாக அமைகின்றது. அத்துடன் ஒரு நாட்டின் முதலீடு சேமிப்பு மொத்தக்கேள்வி, மொத்தநிரம்பல், அரச கொள்வனவு, அரசு இறைக் கொள்கை தனிநபர் வருமானமட்டம், மாற்றல்வரி, விலைமட்டம் என்பனவற்றை அறிய இது பயன்படுகின்றது.

வருமானச் சுற்றோட்ட அமைப்பை இரு முறைகளில் அவதானிக்கலாம்.

1) மூடிய பொருளாதாரம்
2) திறந்த பொருளாதாரம்.

மூடிய பொருளாதாரத்தில் வருமானச் சுற்றோட்டம்

ஓர் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகள் யாவும் வெளிநாட்டுத்தொடர்பு இன்றி அந்நாட்டின் அரசியல் எல்லைக்குட்பட்ட பகுதியிலேயே கொடுக்கல் வாங்கலில் பயன்படுத்தப்படுமாயின் அது மூடிய பொருளாதாரம் எனலாம்.

இப் பொருளாதார வருமானச் சுற்றோட்ட அமைப்பை நோக்கின் சில எடுகோள்கள் கொள்ளப்படுகின்றன.

1) இங்கு இரண்டு வகையான துறையினர் மாத்திரமே காணப்படுகின்றனர்.

i) வீட்டுத்துறை அல்லது நுகர்வோர் துறை
ii) நிறுவனத்துறை அல்லது உற்பத்தித் துறை.

2) வீட்டுத்துறையினர் ஆக்கச்சாதன உடமையாளராய் இருப்பர்.

3) நிறுவனத் துறையினர் மாத்திரம் உற்பததியில் ஈடுபடுவர்.

4) நிறுவனத் துறையிடம் நுகர்வுக்காகத் தமவருமானம் முழுவதையும் வீட்டுத்துறையினர் செலவிடுவர்.

5) அரசதலையீடு காணப்படாது.


6) வெளிநாட்டுத் தொடர்பற்ற வருமானச் சுற்றோட்டம்.

இங்கு வீட்டுத்துறையினர் எனும்போது அவர்கள் தம்ஆக்கச்சாதனமான நிலம் முதல் உழைப்பு, முயற்சியை உற்பத்திக்காக, நிறுவனத் துறைக்கு வழங்கி, வாடகைப் வட்டி, கூலி, இலாபம் எனும் வகையில் வருமானத்தைப் பெற்றுக் கொள்ளும்.

பெற்றுக் கொண்ட வருமானத்தை நிறுவனத்துறையால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சேவைகளின் நுகர்விற்காகச் செலவு செய்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு காணப்படும் பொருளாதாரமா னது சிக்கனமற்ற அடைபட்ட பொருளா தாரமெனக் கொள்ளப்படுகின்றது; அதாவது இங்கு சேமிப்பு என்பது இல்லாது வருமா னம் முழுவதும் செலவிடப்படும், அடை பட்டது எனும்போது வெளிநாட்டுத் தொடர்பு காணப்படாது. அரசதலையீடு இல்லை எனும்போது செலவுகளான அரச பொதுச்செலவு. மானியச்செலவு என்பனவும் அரசாங்க வரியான வருமானவரி விற்ப னைவரி என்பனவும் இடம்பெறாது. இங்கு வெளிநாட்டுவர்த்தகம் இல்லாமையால் வெளிநாட்டுத்துறையும், அரசதுறையும் காணப்படாது. நிறுவனத்துறையும் வீட்டுத் துறையும் மட்டுமே இயங்கும்.




மேற்கூறிய விளக்கப்படத்தின் மூலம் பொருளாதாரத்தில் வருமானச் சுற்றோட் டத்தை விளக்கலாம்.

இங்கு A என்பது ஆக்கச்சாதனங்களை வீட்டுத்துறைக்கு வழங்கப்படுகின்றது. இது பௌதிகச் சுற்றோட்டம் எனப்படுகின்றது,

B என்பது நிறுவனத்துறையால் வீட்டு துறைக்கு வழங்கப்படும் ஆக்கச்சாதன வெகு மதியைக் குறிக்கும். இது பணவடிவில் அமை வதையும், இதுவீட்டுத்துறை வருமானமாயும் அமையும்.

C என்பது வீட்டுத்துறையினர் தமது நுகர்வுத்தேவையை பூர்த்திசெய்யப்பொருட் களுக்கும், சேவைகளுக்கும் விலையைவழங் குகின்றனர். இது பணவடிவில் அமைகின் றது.

Dயானது வீட்டுத்துறையிடம் இருந்து பண்டவிலை மூலம் வருமானத்தைப் பெற உற்பத்திசெய்த பொருட்கள் சேவை களை உற்பத்தித்துறையினர் வழங்குவதைக் காட்டுகின்றது. இது பௌதிக வடிவமாக அமைகின்றது.

எனவே இது இங்கு,

B என்பதனூடாக மொத்தத்தேசிய வருமானத்தை வருமான வழியில் கணிப்பி டலாம். (G.N.I (OR) G.N.Y)

C என்பதனூடாக மொத்ததேசிய வரு மானத்தைச் செலவீட்டுவழியில் கணிப்பிட லாம். (G.N.S)

D என்பதனூடாக மொத்தத்தேசிய வருமானத்தை உற்பத்தி வழியில் கணிப்பி டலாம். (G.N P)

இங்கு வருமானச் சுற்றோட்டத்தில் இருவகையான பாய்ச்சல்கள் காணப்படு கின்றது. வெளியில் உள்ள இரண்டும் பௌ திகச் சுற்றோட்டமாகவும் உள்ளேயான இரு சுற்றோட்டமும் பணச்சுற்றோட்டமாகவும் உள்ளது. இவ்வாறு வீட்டுத்துறையினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானம் முழுவதையும் செலவிடின் வருமானச்சுற்றோட்டம் சமமாய் அமையும். ஆனால் நடைமுறையில் நுகர்வோர் வருமானம் முழுவதையும் நுகர்விற்குச்செலவிடுவர் எனக்கூறமுடியாது.

அதாவது வருமானம் முழுவதையும் வீட்டுத்துறையினர் நுகர்விற்காகச் செலவிடாத விடத்து அவ்வாறு செலவிடப்படாத வருமானமானது சேமிப்பாக அவர்களினால் ஒதுக்கப்படுகின்றது. இதனால் நிறுவனத்துறையிடம் இருந்து நுகர்வோனால் கொள்வனவு செய்யும் பண்டஅளவு குறையும்.

பண்ட நுகர்வு குறைய நிறுவனத்துறை தமது உற்பத்தியை குறைக்கும். இதனால் நிறுவனத்துறை குறைந்தளவு பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்யகுறைந்தளவு ஆக்கச் சாதனத்தைப் பெற நுகர்வோன் வருமானம் குறையும்.

எனவே நுகர்வோர் சேமிப்பை ஏற்படுத்த இது வருமானச் சுற்றோட்டத்தில் இருந்து வெளிப்பாய்ச்சலாக அமைய வருமான வட்டப்பாய்ச்சல் சுருங்கிச் செல்லும். உதாரணமாக 100/= பெறும் H துறை அதில் 10/- சேமிப்பாக கொண்டு 90/- ஐ செலவிடுமாயின் உற்பத்தி 90/- ஆக குறையும். தொடர்ந்து நுகர்வுத்துறை 90/- வருமானம் ஆக பெற்று 10/- சேமித்து 80/- ஐ நுகர்வுக்காக செலவிடின் உற்பத்தி 80/- ஆக குறைவதைச் காணலாம்.

இவ்வாறு சேமிப்பு வெளிப்பாய்ச்சலாக அமைந்து வருமானச் சுற்றோட்டம் சுருங்குவது தடைசெய்யப்பட நிறுவனத்துறை வீட்டுத்துறையின் சேமிப்புக்கு ஏற்ப சம அளவில முதலீடு மேற்கொள்ளப்படல் வேண்டும். எனவே கூறிய உதாரணத்தின் படி 10/- முதலீடாக இடுவதன் மூலம் வருமானச் சுற்றோட்டத்தை சமமாக்கலாம்.

முதலீடானது சேமிப்பின் வெளிப்பாய்ச்சலை சமப்படுத்தும் உட்பாய்ச்சலாக அமையும் போது சேமிப்பை விட முதலீடு அதிகரிப்பின் வருமானச் சுற்றோட்டம் விரிவடையும். மாறாக முதலீடு குறையின் வருமானச் சுற்றோட்டம் சுருங்கிச்செல்லும். திறந்த பொருளாதார மாதிரி வருமான சுற்றோட்டம்.

திறந்த பொருளாதாரம் என்னும்போது அப் பொருளாதாரத்தில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சேவைகள் வெளிநாட்டு தொடர்புடன் கொடுக்கல் வாங்கல் செய்யப்படும். இதனால் இங்கு வெளிநாட்டு துறையான ஏற்றுமதி இறக்குமதி என்பனவும் அரச தலையீடு காரணமாக அரச பொது (மானியச்) செலவு, அரசவரி என்பன இடம் பெற்றுக் காணப்படும். எனவேஇது சென்மதி நிலுவையுடன் சேர்ந்ததாகும்.

இங்கு வெளிநாட்டுத்துறை காணப்பட்ட நிறுவனத்துறை பொருட்களை ஏற்றுமதி செய்து வருமானத்தைப்பெற உற்பத்தியை அதிகரிக்கும். அதற்காக வீட்டுத்துறையிடம காரணியை பெறவேண்டிநிற்க Hதுறை காரணி வருமானத்தை உயர்த்தும். இதனால் வருமானச் சுற்றோட்டம் விரிவடையும். ஆனால் அங்கு இறக்குமதி காணபபட அதனால் வீட்டுத்துறையினரும் நிறுவனத்துறை இறக்குமதியிலும் ஈடுபட அதனால வருமானச சுற்றோட்டம் சுருங்கும. இறககுமதியும ஏறறுமதியும சமன் ஆனால வருமானச சுறறோட்டம சமமாயின இறககுமதி குறைநதால் விரிந்தும் இறக்குமதி கூடினால சுருங்கியும் செல்லும்.

இங்கு அரச தலையீட்டை நோக்கின் அரசு பொது செலவாக மானியத்தை வழங்க அவை காரணமாக நிறுவனதுறை தமது உறபத்தியை அதிகரிக்கும். அதே போல அரசின பொதுச் செலவில Hதுறையும பங்கு கொண்டு சேவைகளை ஓரளவு பெற அவர்களின பணச்செலவு குறைய நிறுவனததுறையிடம் கூடிய நுகர்வை ஏற்படுததுவர் இதனை சீராகக நிறுவனத்துறை வீட்டுத்துறையிடம் ஆக்கச் சாதனத்தைப் பெறநுகர்வுததுறை வருமானம் கூடநுகர்வு கூட வருமானச் சுறறோட்டம் விரிவடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறாக அரச வரிவிதிப்பால் வீட்டுத் துறை நேர்வரியை தாங்க நுகர்வின் அளவு குறையும். இதே போல உற்பத்தி மீது வரிவிதிக்க உற்பத்தியளவு குறைக்கப்பட நுகர்வோன் வருமானம் குறையதொடர்ந்து உற்பத்தி குறைய வருமானச் சுற்றோட் டம் சுருங்கும்.

இவ்வாறு திறந்த பொருளாதாரமாதிரியில் அமையும் போது இங்கு சேமிப்புவரி இறக்குமதி என்பன வெளிப்பாய்ச்சலாகவும் முதலீடு, ஏற்றுமதி, 'பொதுச்செலவு உட்பாய்ச்சலாகவும் அமையும்' இங்கு சமமான வருமானச் சுற்றோட்டம் இடம் பெறுமாயின் உட்பாய்ச்சல் S+TX+m = IX+GX ஆக அமைய வேண்டும்.

திறந்த பொருளாதாரத்தில் வெளிப் பாய்ச்சல் கூடுதலாக அமையின் வருமான சுற்றோட்டம் சுருங்குவதால் உற்பத்தி குறைவு நாட்டில் வேலையில்லா பிரச்சனை குறைந்த வாழ்க்கைத்தர அமைப்பு என்பன காணப்படும்.

மாறாக உட்பாய்ச்சல் கூடுதலாக அமையின் உற்பத்தி அதிகரிப்பு' நாட்டில் பூரண வேலைவாய்ப்பு, நுகர்வோன் செலவு குறைவு வாழ்க்கைத்தர உயர்வு காணப் படும்.

மாணவ மணிகளுக்கென உழைத்து பெற்றோர் | பாதுகாவலர் பலரின் நம்பிக்கையையும்; வாழ்த்துக்களையும் பெற்ற ஒரு சிறந்த நிறுவனம்.

SELIN INSTITUTE
KNOWLEDGE IS EVERYTHING

**O/L Day,**

11-ம், 10 ம், 9-ம், 8-ம்,
7-ம், 6-ம், 5-ம் 4-ம்,
3-ம். 2-ம், 1-ம்

வகுப்புகளுக்குரிய சகல பாடங்களும் நடைபெறுகின்றன.

Special
**English Class**
(Spoken with Grammar)
RAJANATHAN NILES

நிறைவான ஒழுக்கம்! தரமான ஆசிரியர்கள்!! விரிவான கல்வி வளர்ச்சி!!!
மாணவர்கள் சேரும்போது பெற்றார் | பாதுகாவலருடன் வரும்படி தயவுடன் பணிக்கப்படுகிறார்கள்.

— அதிபர்

# சிக்கன கொடு கடன் கூட்டுறவுச் சங்கங்களும் கிராமியப்பொருளாதாரமும்

ம. சுஜாதா

13- ம்ஆண்டு வர்த்தகப் பிரிவு

நமது நாட்டின் கிராமியப் பொருளாதாரம் நீண்ட காலமாக அரச அக்கறையோ உதவிகளோ இன்றி மிகவும் குன்றிய வளர்ச்சி நிலையிலேயே காணப்பட்டது. நாட்டின் இரட்டைப்பொருளாதார அமைப்பு முறையில் இது மிகப்பின்தங்கிய துறையாகவே அமைந்திருந்தது. எனினும், அண்மைக்காலங்களில் கிராமியப்பொருளாதாரத்தை விருத்தி செய்வதாலேயே நாடு அபிவிருத்தி நிலைய நோக்கிச்செல்ல முடியும் என்ற நம்பிக்கை அரசாங்கத்துக்கு ஏற்பட்டதால், இத்துறைக்கு அதிகளவு அரச அக்கறை செலுத்தப்பட்டது. இம் முயற்சியின் முக்கிய அம்சமே சிக்கன கொடு கடன கூட்டுறவுச்சங்கங்களின் பணி விருத்திபெற்றதாகும்.

'கூட்டுறவு'' என்றால் நாட்டுயர்வு என்று அர்த்தம் கொள்வர். காரணம் இம் முறையினால் நாட்டில் விருத்தி ஏற்படும் என்பதாகும். கூட்டுறவுத் துறையில் சிக்கன கொடுகடன சங்கங்கள் நாட்டின் உயர்வுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாகவே அமைந்துள்ளன. முன்பெல்லாம் கிராமிய மக்கள் தமது தொழிலுக்கு மூலதனம் வேண்டிய போதெல்லாம் நிறுவன ரீதியற்ற துறைகளையே நாடிச்சென்று கடனுதவி பெற்ற நிலை பெருமளவு காணப்பட்டது. ஆனால் 1940களில் சிக்கன கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட பின் நிலைமை சிறிது மாறத்தொடங்கியதும் இச்சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டாலும், 1976 வரை இவற்றின் வளர்ச்சி மெதுவாகவே காணப்பட்டதால், கிராமிய மக்கள் இவற்றால் உரிய பயனைப்பெற்றுக் கொள்ள வில்லை, என்றே கூறலாம். எனினும் இத்தகைய சங்கங்களின் உள்ளார்ந்த ஆற்றல்கள் உணரப்பட்டதால், 1970 களில இது துரித வளர்ச்சி பெறலாயிற்று. நாடு முழுவதிலும் இத்தகைய சங்கங்கள துரிதமாகவளர அரசாங்கமே பல வசதிகளையும் செய்து கொடுத்து ஊக்குவித்துள்ளது. காரணம், இவற்றை வளர்ப்பது கிராமியப் பொருளாதாரத்தையே வளர்ப்பது என்பதேயாகும். இதன் விளைவாகத்தற்போது இலங்கையில் ஏறத்தாழ 1000 கூட்டுறவுச்சிக்கன கொடுகடன சங்கங்கள் காணப்படுகின்றன.

கூட்டுறவுச்சிக்கன கொடுகடன் சங்கங்களின் பண்பு சாதாரண கூட்டுறவு இயக்கத்தின் பண்புகளை ஒத்ததாகவே அமைந்துள்ளது. ஜனநாயக ரீதியிலான முகாமைத்துவத்தைக் கொண்டு இயங்குவதுடன், வைப்புகள், சேமிப்புகள எனபவற்றுக்கு வட்டி கொடுத்து ஊக்கமளிப்பது இதன் முக்கிய அம்சமாகும். தொண்டர் நிறுவனம் போலப் பணியாற்றி மக்களுக்குக் கூட்டுறவு குறித்த கல்வியறிவையும், பங்குகளைப்பெற்றுக் கொள்வதற்கான வெகுமதிகளையும் வழங்குகிறது. மேலும் சர்வதேச உறவுகள் கூட இதன் மூலம் பெறப்படுகிறது.

இச்சங்க உறுப்பினர்கள் தமது சக உறுப்பினர்களுக்கு வேண்டிய நேரத்தில் பொருளாதார உதவி செயவதுடன், தமது பணத்துக்கு மிகக்குறைந்த வட்டியையும் பெறுகின்றனர். மேலும், கடன் மீளளிப்பில் தாமதம் ஏற்படும் நிலையில், சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் நிலை இங்கு மிக ஆறுதலாகவும் அரிதாகவும்ம நடைபெறுகிறது. அங்கத்தவரிடையே காணப்படும் பரஸ்பர நம்பிக்கை

யும், ஒற்றுமை உணர்வும், அவர்கள் தமக்குள்ள அதிகாரத்தைப்பயன்படுத்திச் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கக்கூடிய நிலையினின்றும் தவிர்த்துக்கொள்ள வைக்கின்றன. இதனால் இச்சங்கங்கள் கிராமியப் பொருளாதார விருத்திக்கு மிக உதவுகின்ற ஒரு நிதி நிறுவனமாகவே இன்று அமைந்துள்ளன எனலாம்.

கிராமவாசி ஒருவன் தனது பிழைப்பூதியத்தொழில்களுக்கான சிறிய முதலீடுகளுக்காகப் பெரிய நிதிநிறுவனங்களிலோ அல்நிறுவனரீதியற்ற, கொடுகடன் வழங்கும் தனியாரிடமோ கடன் பெற்றுத் தனது முயற்சிகளை மேற்கொள்ளும்போது, அவன் பல சிக்கல்களை எதிர்நோக்குகிறான். அதிகளவு வட்டியும் முதலுமாகத்திருப்பிச் செலுத்த இயலாத மட்டத்தில் அவன் வருவாய் பெறும் நிலையில், அவ்வாறு செலுத்தத்தவறுதலுக்காக அவன்மீது சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதால் அவன் சோர்வடைந்து முயற்சிகளைக்கைவிடும் நிலைக்குத் தள்ளப்படுகிறான். இந்த நிலையை எமது சிக்கன கொடுகடன் சங்கங்கள் கிராமப்புறங்களில் வெகுவாகக்குறைத்து, விவசாயியை, கிராமவாசிகளை ஊக்குவித்து வருவது உண்மையில் ஒரு பெரும் வரப்பிரசாதமாகவே அமைந்து விடுகிறது.

இத்தகைய சங்கங்கள் கிராமசேவகர் பிரிவுகளில் சிறிய தொகை அங்கத்தவர்களைக்கொண்டு முதல் நிலைச்சங்கம் என்ற வகையிலும், உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டங்களில் பிரதேச சங்கங்கள் என்ற வகையிலும், மேலும் இவற்றைவிடப் பரந்த அளவில் மாவட்டசங்கங்கள் என்ற வகையிலும் இயங்கி வருகின்றன. இவற்றில் உறுப்பினர்களின் அங்கத்துவப்பணம் சங்கத்தின் அடிப்படை நிதியாக அமைகின்றன. மேலதிகமாக அவர்களின் சேமிப்பு வைப்புக்கள், நிலையான வைப்புக்கள் என்பவை நிதி பலத்தை அதிகரிக்கின்றன. அங்கத்தவர்கள் மட்டுமன்றி அங்கத்தவர் அல்லாதோரும் இங்கு வைப்புக்களை வைத்து வட்டிபெற முடியும். இவ் வைப்புக்கள் கொண்ட நிதியே சிக்கனக் கொடுகடனுக்குப் பெருமளவு உதவியாக உள்ளது.

கிராமியப் பொருளாதார விருத்திக்கு உதவுவதற்காக மக்கள் வங்கியின் ஆதரவுடன் அமைக்கப்பட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளும் நாட்டில் 1000க்கும் மேற்பட்ட கிளைகளாக அமைந்து பெரும்பணியாற்றி வருகின்றது. கூட்டுறவுச் சிக்கன கொடுகடன் சங்கங்களும், இத்தகைய கூட்டுறவுக் கிராமிய வங்கிகளும் கிராம மக்களின் வாசற்படிக்கே நிதியுதவிகளையும் வங்கிச் சேவையையும் எடுத்துச் சென்று அவர்களை ஊக்குவிப்பதாக அமைந்துள்ளன.

கூட்டுறவுக் கிராமிய வங்கிகள், பின்தங்கிய கிராமப் புறங்களில் பொருளாதார வசதி குறைந்த மக்களுக்கு வங்கிச் சேவையைப் பெறுக் கொள்ள உறுதுணையாக உள்ளன. இவற்றுடன் இணைந்த ஒரு அமைப்புப் போன்றே சிக்கன கொடுகடன சங்கங்களும் கடன்களை வழங்குவதன் மூலம், பயன்படுத்தப்படாத மனித மூல வளங்களுக்குச் சுய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கவும், தனிப்பட்ட கடன் வழங்குவோர் வட்டி மூலம் மக்களைச் சுரண்டிவரக்கூடிய சந்தர்ப்பங்களைக் குறைக்கவும் பெரிதும் உதவுகின்றன. இதன் அங்கத்தவரிடையே பரஸ்பர நல்லுறவுகளும் வழங்கப்படுகின்றன, அவர்களின் சமூக பொருளாதார சேவைநலன்கள் மேம்படுத்தப்படுகின்றன. வருமானக் குறைவால் ஏற்படுத்தப்படும் நச்சு வட்டம் (வருமானக்குறைவு - சேமிப்புக்குறைவு- முதலீடு குறைவு மீண்டும் வருமானம் குறைவு) இந்த ஸ்தாபனங்கள் மூலமாகத் தகர்க்கப்படுகிறது. அல்லது பெருமளவுக்குக் குறைக்கப் படுகின்றது.

எனவே யாவற்றையும் தொகுத்து நோக்கும் போது கூட்டுறவுக் கொடுகடன சிக்கனச் சங்கங்கள் தற்போது 6800 க்கும் மேற்பட்டவையாக நாட்டிலமைந்து கிரா பொருளாதார விருத்திக்குப் பல்வேறு வழிகளில் உதவி வருவதன் மூலம் நாட்டின் பொதுவான அபிவிருத்தி இலக்கை அடைவதற்கும் வழிவகுக்கின்றன என்று கொள்வது தவறாகாது எனலாம்.

[அடிப்படைத் தகவல்கள் உதவி : பொருளியல் நோக்கு]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நாட்டின் வருமானமும் அது அந்நாட்டின் அபிவிருத்தியில் ஏற்படுத்தும் தாக்கங்களும்

மு, இராதாகிருஷ்ணன் B. A (Hons)
(சிறப்புக்கலை
மாணி-புவியியல்.)

ஒரு நாட்டின் சமூக, பொருளாதார அரசியல் நிலைகளின் அமைப்பு ரீதியான வளர்ச்சியே விருத்தி எனப்படுகின்றது. இவ்வகையில் நாடுகளை அவை அடைந்துள்ள பொருளாதார வளர்ச்சி, அமைப்பு, மாற்றம் போன்றவற்றின் அடிப்படையில் விருத்தியடைந்த நாடுகள் என்றும், விருத்தியடைந்து வரும் நாடுகள் என்றும் வகைப்படுத்துகின்றனர். பொருளாதார வளர்ச்சி என்று நோக்கும்போது அந்நாட்டில் வாழும் மக்களின் வருமானம் ஓர் பரந்த அடிப்படையில் கருதப்படுகின்றது. வருமான உயர்வுக்கேற்ப ஒரு நாட்டின் விருத்தியும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனை விரிவாக நோக்கினால்-

விருத்தி என்பது இரு பிரதான கூறுகளை தன்னுள் அடக்கியுள்ளது. இக்கூறுகள் அல்லது குறிகாட்டிகள் ஒரு நாட்டின விருத்தியை அடையாளம் காணவும் அளவிடவும் பெருமளவு பயன்படுத்தப்படுகின்றன

1] பொருளாதார வளர்ச்சி தொடர்பான அம்சங்கள்.

2] மக்களுடைய நலன் தொடர்பான அம்சங்கள்.

இந்த இரு பிரதான கூறுகளுக்கிடையேயும் நாம் பலத்த வேறுபாடுகளை அவதானிக்க முடியும். ஏனெனில் ஒருகுறித்த பகுதி இரு அம்சங்களில் ஒன்றில் மட்டுமே முன்னேற்றமடையலாம். இன்னொன்றில் பின்தங்கி காணப்படலாம். ஆனாலும் இவ்விரண்டு கூறுகளுக்கிடையேயும் பொருளாதார வளர்ச்சி தொடர்பான அம்சங்களே விருத்தி தொடர்பாக இன்று கூடிய முக்கியத்துவம் உடையதாகவும் காணப்படுகின்றது. இத்தகைய பொருளாதார வளர்ச்சி தொடர்பான அம்சத்தில் பிரதானமானதாகவும், பெருமளவு முக்கியத்துவமுடையதாகவும் காணப்படுவது ஒரு நாட்டின் வருமானம் ஆகும். இன்று உலக வங்கியானது வருமானத்தை அடிப்படையாகக்கொண்டே நாடுகளை அவை அடைந்துள்ள அபிவிருத்தியை வகைப்படுத்துகின்றது.

ஒரு நாட்டின் வருமானத்தை பல்வேறு காரணங்கள் தீர்மானிப்பவையாக உள்ளன. இவ்வகையில் அந்நாட்டின் குடித்தொகை, மூலவளங்கள், ஒழுங்குபடுத்தப்படாத பொருளாதார நடவடிக்கைகள் என்பவை கூடியளவு முக்கியத்துவம் கொண்டுள்ளதுடன் ஒன்றை ஒன்று கட்டுப்படுத்துவதாகவும் ஒன்றில் ஒன்று தங்கியிருப்பதாகவும் காணப்படுகின்றன.

ஒரு நாட்டின் வருமானத்தை நிர்ணயிப்பதில் அந்நாட்டின் குடித்தொகை ஒரு முக்கிய காரணியாக உள்ளது. வரையறுக்கப்பட்ட மூலவளங்கள் வரையறை இல்லாத குடித்தொகையினால் உபயோகிக்கப்படும்போது அங்கு மூலவளப் பற்றாக்குறை ஏற்படுகின்றது. மூலவளப்பற்றாக்குறைவும் அதிகரித்த குடித்தொகையும் நாட்டில் வேலையின்மை, மறைமுக வேலையின்மை, பருவகால வேலையின்மை, குறைந்த வேலை என்பவை பெருமளவு ஏற்படக் காரணமாகின்றன, வேலையின்மை, மறைமுக வேலையின்மை, குறைந்த வேலையின்மை

போன்றவை எந்தளவிற்கு ஒரு நாட்டில் அல்லது பிரதேசத்தில் காணப்படுகின்றதோ அந்த அளவிற்கு அந்நாடு குறைந்த வருமானத்தைக் கொண்டதாகவும் அதனால் குறைந்த விருத்தியை அடைந்ததாகவும் காணப்படும்.

ஒரு நாட்டின் வருமானம் எனும்போது அங்கு நாட்டின மொத்தத்தேசிய வருமானம், தனிநபர் வருமானம என இரு வகை காணப்படுவதைக் காணலாம். மொத்தத் தேசிய வருமானத்தினைக் குறித்த பிரதேச மொத்தக் குடித்தொகையினால் பிரிக்கும் போது பெறப்படுவதே தனிநபர் அல்லது தலாவீத வருமானம் ஆகும். வருமானம் எனும் போது அங்கு தனிநபர் வருமானமே முக்கிய இடம் வகிக்கின்றது. ஒரு பிரதேச பொருளாதார விருத்தியை அளவிடுவதில அப்பிரதேசத்தில் வாழும் மக்களின் தனிநபர் வருமானம் ஒரு பரந்த அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றது. வருமான உயர்வுக்கேற்ப ஒரு நாட்டின விருத்தியும் உயர்வு அடையும் என்று கூறப்படுகின்றது, ஆனால்இது நடைமுறையில் பொருத்தமற்ற தொன்றாகும். குறித்த ஒரு பிரதேசத்தில அதிகளவு குடித்தொகை காணப்படுவதுடன் வேலையற்றோர் எண்ணிக்கையும் அதிகமாக காணப்படும் போது இத்தகைய வேலையற்ற தங்கி நிற்போர்கூட தலாவீத வருமானத்தைப் பெறுபவர்களாகவே கணிக்கப்படுகின்றார்கள். எனவே எந்த ஒரு நாட்டினதும் உண்மை வருமானமோ, தலாவீத வருமானமோ உண்மையான தனிநபர் நிலையை எடுத்துக்காட்ட மாட்டாது. இத்தகையில் பார்க்கும் போது நாட்டின மொத்தத் தேசிய வருமானத்தில் பெரும் அளவை ஒரு சிறு பகுதியினர் பெறுவதனை பல நாடுகளில் நாம் காணமுடிகின்றது. ஆனால் பொருளாதார நிலையின் அடிப்படையில் அபிவிருத்தியை மதிப்பிடுவதற்கு வேண்டிய அலகு அல்லது பெறுமானம், மொத்தத் தேசிய வருமானம் ஆகும். இவ்வருமானம் மொத்தத் தேசிய உற்பத்தியினால் பெறப்படுகின்றது. ஆனால் நாடுகளுக்கிடையே இம் மொத்தத் தேசிய வருமானம் மொத்த தேசிய உற்பத்தி என்பவற்றில் பலத்த வேறுபாடுகள் காணப்படுகின்றன.

ஒரு நாட்டின் குடித்தொகையில் எவ்வளவு பேர் உண்மையான தொழில் வாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ளனர் என்பது அந்நாட்டின வருமானத்தைத் தீர்மானிக்கும் ஒரு காரணியாக உள்ளது. ஒரு நாட்டின கைத்தொழில் அமைப்பு, வேலைவாய்ப்பு, வருமானமட்டம என்பவற்றுக்கிடையே நெருங்கிய தொடர்புண்டு, கைத்தொழிலாக்க நாடுகள இன்று கூடிய வருமானத்தைப் பெற்றுவிருத்திப்பாதையில்முன்னணி வகிக்கின்றன. ஏனெனில் இப்பாகங்களிலேயேவேலை வாய்ப்புக்கள், சந்தர்ப்பங்கள் பெருகுகின்றன. இவற்றை மையமாகக் கொண்டு வளர்முக நாடுகளை நோக்கின இங்கு பயிர்ச்செய்கை முக்கிய தொழில்நடவடிக்கையாகவும், அதிகரிக்கும் குடித்தொகைக்கு ஏற்ப வேலை வாய்ப்புக்கள் பெருகாமையும வேலையின்மை ஏற்படக் காரணமாகின்றது. வேலையின்மை, மறைமுக வேலையின்மை, கீழ் உழைப்பு நிலை என்பன அதிகரித்துக் காணப்படுகின்றன. அத்துடன் பாரம்பரிய அமைப்பிலான பின்தங்கிய விவசாய முறை போதியளவு வாய்ப்பினை வழங்காததுடன் குறைந்த வருமானத்தையே வழங்குவதாகவும் உள்ளது. குறைந்த வருமானம் காரணமாக குறைந்த சேமிப்பும் அதன் காரணமாக குறைந்த முதலீடும் அதனால் குறைந்த உற்பத்தியும் என ஒரு வறுமை வட்ட நிலை காணப்படுகின்றன.

குறைந்த வருமானம்

குறைந்த உற்பத்தி > > குறைந்த சேமிப்பு

< குறைந்த முதலீடு <

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடித்தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப பொருளாதாரம் விருத்தியடையும், இத னால் வேலையின்மையும் ஏற்படுகின்றது. கீழ் உழைப்பு என்பது வேலை செய்யக் கூடிய சக்திக்கும் குறைவாக வேலையை வழங்குதல் ஆகும். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் மொத்தமாக 30%த்தினர் முழுமையாக பயன்படுத்தப்படாமல் உள்ள னர். இதனால் இவர்கள் தங்கிவாழ்வோ ராகவும் காணப்படுகின்றனர்.

அடுத்து நாடுகளின் மொத்த உ | தியில் கைத்தொழில் நடவடிக்கைகளின் பங்கு எத்தகையது என்பதைப் பொறுத்து அந் நாட்டின் வருமானம் தீர்மானிக்கப்படும்.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் மிகச் சிறிய அளவினரே கைத்தொழில் நட வடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். மொத்த வே லைப்படையினரில் 1/3 பங்கிற்கும் குறைந்த வீதத்தினரே மிகச்சிறிய கைத்தொழில்நடவ டிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இதனால் மொ த்தஉற்பத்தியில் கைத்தொழில்நடவடிக்கை யின பங்கு குறைவாக இருப்பதால் கைத் தொழில் உற்பத்தியும் குறைவாக காணப் பட நாட்டின வருமானமும குறைவாக காணப்படும். அட்டவணையிலே இந்தியா, இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகள் ஏனைய நாடுகளில் இருந்து மொத்த உற்பத்தியில் கைத்தொழி லின பங்கினைப் பொறுத்து எவ்வாறு வேறுபட்டுள்ளது என்பதை நோக்கலாம்.

மொத்த உற்பத்தியில் கைத்தொழிலின் பங்கு

| | |
|---|---|
| USA | 29% |
| ஜப்பான் | 40% |
| USSR | 30% |
| இந்தியா | 16% |
| இலங்கை | 14% |

(1977ம் ஆண்டு தரவு)

உலகின் ஏறத்தாள 1/8 நாடுகள் தம்மை விருத்தியடைந்து வரும் நாடுகள் எனக் கூறியிருக்கின்றன. இந்நாடுகள உலக நிலப்பரப்பில் 60% யும் குடித்தொகையில் 70% யும் மொத்த வருமானத்தில் 20% மட்டுமே பெறுகின்றன. இம் மூன்றாம உலக நாடுகள் நுன் ஆய்வு கருதி மிக வறிய நாடுகள் வளர்ந்துவரும் நாடுகள் எனப் பலவாறு பாகுபடுத்த தலாவீத வருமானம் முக்கிய குறிகாட்டியாக அமைந்துள்ளது. LDC நாடுகளின் வாழ்க்கைத்தரக் குறை விற்கும் மெய்வருமானக் குறைவே காரண மாகவுள்ளது. மெய்வருமானம், தலாவீத வருமானம் என்பவை அதிகரித்துக் காணப் படும நாடுகள்வளர்ச்சியடைந்தஅபிவிருத்தி அடைந்தநாடுகளாகவுமவருமானம்குறைந்த நாடுகள் விருத்திகுன்றிய நாடுகளாகவும கா ணபபடுகினறன. 1670 ஆம ஆண்டு UNO விளகணிப்பின்படி3,200,000மில்லியன்அமெ ரிக்கடொலர் மொத்த பொருள்உற்பத்தியில் வளர்ச்சியடைந்தநாடுகள்2,700,000உற்பத் தியினையும் வளர்முக நாடுகள் 5,00,000 உற்பத்தியை மட்டுமே மேற்கொண்டிருந் தன. அதாவது உலக மொத்த உற்பத்தி வருமானத்தில் 15% பங்கையே இந்நாடுகள கொண்டிருந்தன.

| LDC | தளவீத வருமானம் | DC | தலாவீதவருமானம் |
|---|---|---|---|
| வங்காள தேசம் | 90 | ஐக்கியராச்சியம் | 680 |
| இந்தியா | 190 | ஜப்பான் | 8810 |
| இலங்கை | 230 | ஐக்கிய அமெரிக்கா | 10630 |
| எகிப்து | 480 | USSR | 4110 |
| நைஜீரியா | 670 | குவைற் | 171000 |

மேற்குறித்த அட்டவணையின் மூலம் நாடுகளின் தலாவீத வருமானம் விருத்தி யடைந்துவரும் நாடுகளிலும் விருத்திய டைந்த நாடுகளிலும் எத்தகைய வேறு பாட்டுடன் உள்ளது என்பதைக்காணலாம். வளர்முக நாடுகளின் தலாவீத வருமானக் குறைவினால் LDC நாடுகள் மிக வறுமை யான நிலையில் காணப்படுகின்றன. சர்வ தேச வறுமைக் கோட்டின்கீழ் 44 நாடுகள் அடக்கப்படுகின்றன. மொத்த குடித் தொகையில் 30-35% இனர் வறுமையில் உள்ளனர். இவை அனைத்தும் தலாவீத வரு மானக் குறைவின் காரணமாக ஏற்பட்டுள்ள செயற்பாடாக உள்ளது. மேற்கூறப்பட்ட வைகளை நோக்கும் போது வருமானம் ஒரு நாட்டின் விருத்தியில் எத்தகைய தொடர்பைக் கொண்டுள்ளது என்பதை விளங்கிக் கொள்ளலாம்.


COMMERCIAL BANK

வர்த்தக வங்கி சேமிப்பு சான்றிதழ்கள்
சான்றிதழுக்கான அட்டவணை;

| நீங்கள் கொடுப்பது | | | நீங்கள் பெறுவது |
|---|---|---|---|
| 6 மாதங்கள் | 12 மாதங்கள் | 24 மாதங்கள் | முதிர்ச்சியின் போது |
| 14·5 வீதம் | 15·5 வீதம் | 16.5 வீதம் | |
| ரூபா 465/- | ரூபா 433/- | ரூபா 375/- | ரூபா 500/- |
| ரூபா 932/- | ரூபா 866/- | ரூபா 750/- | ரூபா 1000/- |
| ரூபா 4662/- | ரூபா 4330/- | ரூபா 3760/- | ரூபா 5000/- |
| ரூபா 9325/- | ரூபா 8659/- | ரூபா 7519/- | ரூபா 10000/- |
| ரூபா 23310/- | ரூபா 21645/- | ரூபா 18797/- | ரூபா 25000/- |

வாருங்கள்! இணையுங்கள்! வளருங்கள்!, உங்கள் வெற்றி எங்கள் பலம்

வர்த்தக வங்கி
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைவிருத்தி நாடுகளில் பொருளாதார அச்சுறுத்தலை ஏற்படுத்தும் நவகாலனித்துவம்

யோ. ஜெயகாந்தன்

அரசறிவியல் மாணவன்.

20ம் நூற்றாண்டில் நடைபெற்று முடிந்த இரு உலக மகாயுத்தங்களாலும் களைத்துப்போன காலனித்துவ ஏகாதிபத்திய நாடுகள் யுத்தத்தின் பின்னர் தமது நாட்டை எவ்வாறு கட்டியெழுப்புவது என்பதுபற்றியே அதிக கவனஞ்செலுத்தினரெனினும், தொடர்ந்தும் காலனியாதிக்கத்திற்குள் வைத்திருந்த நாடுகளை அவ்வாறேபேணி அதன்மூலம் தமது நாட்டைக் கட்டியெழுப்பமுடியாது போகவே தமது பிடியில் இருந்த ஆசிய, ஆபிரிக்க, லத்தீனமரிக்க நாடுகளில் பெரும்பாலானவற்றிற்கு சுதந்திரம் வழங்குவது தவிர்க்க முடியாமல் போய்விட்டது. இவ்வாறு ஆசிய, ஆபிரிக்க, லத்தீனமரிக்க நாடுகளிற்கு சுதந்திரம்வழங்க பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய இருபிரதான காலனியாதிக்க நாடுகளும் முன்வந்தவிடத்து அதன் பக்கவிளைவுகள காலனியாதிக்க நாடுகளை வெகுவாகப் பாதிக்குமென்பதை அவை நன்குணர்ந்திருந்ததனால் இதுவரை காலமும் சுரண்டிய பொருளாதாரமானது சுதந்திரம வழங்கப்பட்டபின்னர் கிடைக்காதெனக் கருதி அவ்வாறான தமது பழைய வருமானத்தினை சுதந்திரம் வழங்கியபின்னர் இந்த காலனி நுகத்தடியில் ஏற்கனவே இருந்த நாடுகளிடம் இருந்து எவ்வாறு பெறுக்கொள்வதென்று சிந்தித்த காலனியாதிகக நாடுகள் இலகுவாகவ பல விடயங்களை சுதந்திரம வழங்கிய நாடுகளிற்கு சிக்கலாக்கிவட்டன. இவை இந்நாடுகளை விட்டுச்செல்கின்றபோது தமக்குச் சார்பானவர்களிடம் ஆட்சியதிகாரத்தை ஒப்படைத்துச் சென்றதுடன் சிக்கலான பாதுகாப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தங்களையும் ஏற்படுததிச் சென்றனர். இது பிரித்தானியா, பிரான்ஸ் போன்ற நாடுகள் தமது நேரடியான காலனியாதிக்கத்திலிருந்து பெற்ற வருமானத்தினை ஈடுசெய்வதற்கான ஒரு மாற்றுவழியாகக் கொள்ளமுடியும். இதைவிடவும் மறைமுகமான பல வழிகளில் காலனி நுகத்தடியில் முன்பிருந்த நாடுகளை அவை அரசியற் சுதந்திரம் பெற்றபின்னர் பொருளாதாரச் சுதந்திரத்தைத் தடுப்பதாகச் சுரண்டுவதானது நவகாலனித்துவமமெனலாம்.

இந்த மறைமுகமான பொருளாதாரச் சுரண்டலை ஏற்கனவே காலனியாதிக்கத்தினை மேற்கொண்ட ஏகாபத்திய நாடுதான் காலனியில் வைத்திருந்த நாட்டில் மீதுதான் செய்யும் என்ற நிலையில்லாமல் மாறுபட்ட முறையிலும் நவகாலனித்துவத்தை மேற்கொள்ளலாம். அத்துடன் இன்றைய நிலையில் பிரித்தானியா, பிரானஸ் போன்ற நாடுகளைவிட அமெரிக்காவினது பொருளாதாரக்கொள்கைகள் உலகளாவிய ரீதியில் பலத்த தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றதென்ற உண்மை ஏகாதுபத்துயத்தில நேரடியாதிக்கத்திலிருந்து குறைவிருத்தி நாடுகளின எதிர்காலத்தைப் பொறுத்தமட்டில் பெரும் அபாயத்தை உண்டுபண்ணக் கூடியதென்பதை யாவருமறிவர். இந்த அபாயங்கள் பின்வரும் வடிவில் வரும்;

1. உதவிக்காகவும் அல்லாமலும் ஏகாதிபத்தியம் தனது இராணுவத்தை இந்நாடுகளுள் அனுப்பும்.

2. குறைவிருத்தி நாடுகளின் அனைத்து விவகாரங்களிலும் தந்திரோபாய ரீதியில் அரசியல் முறையில் தலையிடுதல்.

3. பெருந்தொகைப்பணத்தை ஏகாதிபத்தியம் குறைவிருத்தி நாடுகளுக்கு வழங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதனூடாகப் பொருளாதார ஆதிக்கத்தைச் செலுத்துதல்.

4. சர்வதேசப் பொருளாதார நிறுவனங்களின் உதவியுடன் குறைவிருத்தி நாடுகளின் பொருளாதாரத்தை தமக்குச் சாதகமாக்குதல்.

5. பல்தேசியக்கம்பனிகளை உருவாக்குவதன் மூலம் குறைவிருத்தி நாடுகளின் பொருளாதாரத்தைச் சுரண்டுதல்.

6. மதங்களின் மூலமாக ஒரு நாட்டின் குறிக்கோளினை மாற்றி அந்நாடுகளைத் தமக்குச் சாதகமாகப் பாவித்தல்.

மேற்கூறிய ஆறுவழிகளில் நவகாலனித்துவ வாதத்தின (Neo - Colonialism) ஆபத்தை ஒரு குறைவிருத்தி நாடுஎன எதிர்கொள்ளலாம். நவகாலனித்துவமானது மேற்கூறியவற்றில் ஒரு வழியையோ அல்லது ஒன்றுக்கு மேறபட்ட பல வழிகளையோ பாவித்து குறைவிருத்தி நாடுகளின் பொருளாதாரத்தைச் சுரண்டலாம. நாமும் ஒரு குறைவிருத்தி நாட்டிற்குள வாழுகினறோம என்பதால் ஏறபடபபோகின்ற அல்லது ஏற்பட்டுக்கொண்டிருக்கின்ற அபாயத்தால நாமும் பாதிப்படையும் பிரஜைகளின் வரிசையில் இடம்பெறுவது தவர்க்கமுடியாதென்பதால எவ்வழிகளில் நவகாலனித்துவம எம்மை ஆபததுக்குள்ளாக்கும் என்பதை விரிவாகத தெரிநதிருப்பது அவசிய மானது. ஆகவே மேற்கூறிய ஆறு வழிகளையும் ஒவ்வொன்றாக நோக்குவோம்.

(i) உதவிக்காகவும் அல்லாமலும் ஏகாதிபத்தியம் தனது இராணுவத்தை குறைவிருத்தி நாடுகளிறகுள் அனுப்புதல்.

ஏகாதிபத்திய அரசுகள் தமது இராணுவத்தை இன்னொரு இறமை கொண்ட ஓர் அரசின் எல்லைக்குள் அனுப்பும் போது அது உதவியாகச் செயறபட்டதொன்று என்பதை உலகத்திற்குக் காட்ட பலபொய்க் காரணங்களைக் கூறுவது. இன்று சில குழந்தைகளும் அறிந்ததொன்று ஒரு ஏகாதிபத்திய அரசானது தனது இராணுவத்தை உதவியாக அனுப்பும்போது பலஉள்க் காரணங்களை வைத்துக் கொண்டுதான் செய்யும் என்பதை உலகத்தின பல நிகழ்வுகள் காட்டி விட்டன. இவ்வாறாக அனுப்பப்பட்ட இராணுவத்துடன் வரும் உழவுப் படைகள் எல்லைக்குள் சென்று நாட்டின் பல விடயங்களையும் தமது புலனாய்வுக்காக மிக இலகுவாகப் பெற்றுக்கொள்ளும். அது மட்டுமல்லாமல் உதவிக்காகவென்று அனுப்பப்படுகின்ற இராணுவ மற்றும் போர்ச் செலவுகளை சென்ற நாட்டின் பொருளாதாரத்தைச் சுரண்டியே பராமரிக்கின்றன.

அண்மையில் நடந்து முடிந்த வளைகுடாப் போரானது எமக்கு ஆக்கிரமிப்பின் நோக்கங்களை வெகு அழகாகவே எடுத்துக் காட்டி விட்டது. பேராசிரியர் அந்ரே குந்தர் பிராங்க் கூறியது போல ஒரு புதிய உலக ஒழுங்கான வளைகுடாப் போரின் கதாநாயகன் பாத்திரத்தை அமெரிக்க ஜனாதிபதி ஜோஜ்புஷ் ஏற்றிருந்தார். என்ன காரணத்திற்காக ஈராககைத் தாக்க அமெரிக்காவும் அதன் நேச அணிநாடுகளும் முயன்றதாகக் கூறினவோ அதே காரணங்களை அந்நாடுகள் செய்து உள்ளதுடன் செய்து கொண்டுமிருக்கின்றன. பனாமாவில நொறீக்காவுக்கு எதிராக அமெரிக்கா 27,000 படைகளை அந்நாட்டிற்குள் அனுப்பிய போது அதற்கு "ஒரு போதைப் பொருள் கடத்தல்காரனைக் கண்டுபிடிக்கவென" காரணம் கற்பிததது. இது போல குறைவிருத்தி நாடுகளுக்குள் ஏகாதிபத்தியங்கள இராணுவத்தை அனுப்பும் போது அதன் சரியான உண்மையான காரணத்தைக் கூறுவதில்லை.

சோவியத் யூனியனின் படைகள் ஆப்கானிஸ்தானுக்குள் சென்ற போதும் ஏகாதிபத்தியத்தின் நோக்கங்களை எமக்கு எடுத்துக் காட்டுவதாக உள்ளது. ஏன் இந்தியாவின் படைகள் இலங்கைக்குள் ஊடுருவியதானது ஒரு வகை நவ காலனித்துவத்திற்கான முன்னோடி நடவடிக்கையாகவே நாம் கொள்ள வேண்டும். இது வரைக்கும் அமெரிக்க இராணுவமானது ஜப்பானுடனோ அல்லது ஜேர்மனுடனோ போரிட்டு தனது வல்லமையை பரீட்சித்துப்

பார்த்தது கிடையாது. ஏன் நாமெல்லாம் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த சோவியத்-அமெரிக்க யுத்தமும் நடைபெறாமல் போய் விட்டதால் அமெரிக்கா அந்த யுத்தத்திலும் தனது பலத்தைப் பரீட்சிப்பதற்கான சந்தர்ப்பத்தை இழந்து விட்டது. இனி நடக்கப்போகும் பலப் பரீட்சையெல்லாம் அமெரிக்காவைப் பொறுத்தமட்டில் அது மூன்றாம் மண்டல நாட்டுடனாகத்தான் இருக்கும். இந்த மாயா ஜாலத்தை அமெரிக்கா தான் விரும்பியபடி செய்யுமென்பது தான் எமக்குக் கசப்பானதாக உள்ளது. அதை விடவும் கசப்பானது அமெரிக்கா நிகழ்த்திய சாகஸங்களும். நிகழ்த்த இருக்கும் சாகஸங்களும் மூன்றாம் மண்டல நாட்டுப் பணத்திலென்பது மிகவும் ஜீரணிக்க முடியாததாகும். தெற்கு மீது போர் தொடுக்க வடக்கு நாடுகள் வளைகுடாவில் வியக்கத்தக்க முறையில் நேச அணிகளாகத் திரண்டிருந்தது. குறைவிருத்தி நாடுகள் எதிர்காலத்தில் அனுபவிக்கப் போகும் இராணுவ அச்சுறுத்தலுக்கான முன்னெச்சரிக்கையாகும்.

(ii) குறைவிருத்தி நாடுகளின் அனைத்து விவகாரங்களிலும் அரசியல் ரீதியாகத் தலையிடுதல்.

பேராசிரியர் வி. நித்தியானந்தன் கூறுவது போல முதலாளி வர்க்கத்தின் பொருளாதார அலுவல்கள் எவ்வாறு ஆட்டங் காணக் கூடிய ஓர் அடித்தளத்தின் மீது கட்டியெழுப்பப் பட்டிருந்தனவோ அது போன்றே அவை ஏற்படுத்திய சமூக அரசியல் அமைப்பும் முதலாளி வர்க்கத்தினரின் அரசியற் தேவைகளைப் பொறுத்தவரை மிகப்பலவீனமான தொன்றாகவே காணப் பட்டது எனக் கொள்ளுமிடத்து அது குறைவிருத்தி நாடுகளில் ஏற்கனவே தோன்றியிருந்த காலனித்துவவாதத்தின் தாக்கமேயின்றி வேறில்லை. குறைவிருத்தி நாடுகளை அடிமைப்படுத்திக் கொண்ட ஏகாதிபத்திய அரசுகள் எப்போதும் அந்நாடுகளிலுள்ள உயர்குழாத்தினரை (Elites) தம்வசமிழுப்பதில் வெற்றியே கண்டனர். உண்மையில் குறைவிருத்தி நாடுகளில் பொதுச் சேவை அதிகாரிகளானாலும் சரி, ஆட்சிபீட அரசியற் தலைவர்களாக இருந்தாலும் சரி அவர்கள் உயர் குழாத்தினரிடையே இருந்து தான் தோன்றியிருக்கின்றார்கள் என்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். ஆகவே நவகாலனித்துவத்தைத் தொடருவதற்கு இவ்வுயர் குழாம் ஏகாதிபத்திய அரசுகளிற்கு துணை நிற்கின்றன. இலங்கையில் இம்முறையில் ஏகாதிபத்தியத்திற்குத் துணைநின்ற ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமானது காலனித்துவம் விலகியபின் திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழும், இதர நடவடிக்கைகளாலும் நவகாலனித்துவத்தை இலங்கைக்குள் தொடர்ந்தும் வாழவிட முக்கிய பங்காற்றியுள்ளது.

ஸ்திரமான அரசியல் நடைபெறுகின்ற நாடுகளில் ஒரு செயற்கைத் தன்மையான பிரச்சினைகளை உருவாக்குவதனூடாகவும் ஸ்திரமற்ற அரசியல் நடைபெறுகின்ற நாடுகளின் அரசியலில் இலகுவாக புகுந்து அதன் அரசியலின் நடவடிக்கைகளில் மிகவும் மோசமான முறையில் தலையிடுவதன் மூலமும் ஏகாதிபத்தியம் நவகாலனித்துவத்தை ஊடுருவப்பண்ணி விடுகின்றது. பிரித்தானியா, இலங்கையை விட்டுப்போகும்போது பலவிதமான வியாபார ஒப்பந்தங்களை இலங்கையுடன் தனக்குச்சாதகமான முறையில் செய்துகொண்டகதை இன்றும் ஓய்ந்துவிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் அமெரிக்காவும் சோவியத்யூனியனும் ஒரு பக்கத்தால் விடுதலைப் போராட்டங்களை ஊக்குவித்த வரலாறும் இன்னொரு பக்கத்தால் விடுதலைப் போராட்டங்களை நசுக்கிய வரலாறும் உலகறிந்த உண்மை. இவ்வாறு இவை செய்ததனூடாக அந்நாடுகளின் அரசியலில் நேரடியாகவும், மறைமுகமாகவும் தாக்கத்தைஏற்படுத்தியுள்ளன. இவை அந்நாடுகளின் ஆட்சியைக்கூட மாற்றியமைப்பதில் வெற்றிகண்டுள்ளன. ஒருமுறை பாகிஸ்தான் தேர்தலில் பெனாஸீர் பூட்டோ தோற்றதற்கு அமெரிக்க உளவுப்பிரிவுதான் காரணமென்று கூறியதை இங்கு சுட்டிக்காட்டுதல் பொருத்தமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii ஏகாதிபத்தியம் பெருந்தொகைப் பணத்தைக் குறைவிருத்தி நாடுகளிற்கு வழங்குவதனூடாகப் பொருளாதார ஆதிக்கத்தைச் செலுத்தல்.

நவகாலனித்துவ ஏற்பாட்டின் சக்தி வாய்ந்த ஆயுதமெனக் கருதப்படுவது வெளிநாட்டு உதவிகள், கடன்கள் என்பனவாகும். காலனித்துவத்தால் ஏற்கனவே வடக்கு நாடுகள், தெற்கு நாடுகளின் பொருளாதாரக் கட்டமைப்பைச் சிதைத்துவிட்ட நிலையில் தெற்கு நாடுகள் தமது விருத்திக்கு வடக்கின் உதவியை நாடிநிற்பது அவசியமானதென்றதொரு நிலையுள்ளதெனில் இந்நிலையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் வடக்கு நாடுகள் பல நிபந்தனைகளை விதித்து நிதியுதவிகளைச் செய்யும்போதும் அவற்றை ஏற்கவேண்டிய நிலையில் தெற்கு நாடுகள் காணப்படுகின்றன. நிபந்தனைகள் பின்வரும் ரீதியில் அமையலாம்:

★ கொடுக்கும் பணத்தை செலவழிக்கும் வழியை வடக்கு நாடுகளே நிர்ணயிகும்.

★ வடக்கு நாடுகள் தாம் சுரண்டுவதற்கு ஏற்ற முறையிலான பொருளாதாரக் கட்டமைவிலான மாற்றங்களைச் செய்யும்படி தெற்கு நாடுகளை நிர்ப்பந்திக்கும் மேற்கூறிய வகையிலான நிபந்தனைகளுடனான

உதவிகளைப் பெறும்போது வடக்கு நாடுகளில் தரக்குறைவான, நவீனத்துவமற்ற, பாவனைக்குதவாத பொருட்களை குறைவிருத்தி நாடுகளில் சந்தைப்படுத்துவதற்கு வடக்கு நாடுகளிற்கு வாய்ப்பளிக்கப்படுகின்றது.

*1983* ஜுலை, ஆகஸ்ட் பொருளியல் நோக்கில் மைனோஸ் ஸோம்பனாகிஸ் எழுதிய ''சர்வதேசக்கடன் பயமுறுத்தல் மீட்சிக்கான வழி'' என்ற கட்டுரையில் ''வளர்முக நாடுகள் தமது வெளிநாட்டுக்கடன்களை அடைப்பதில் கடுமையான கஷ்டங்களைஎதிர்நோக்குகின்றன. இந்த வெளிநாட்டுக் கடன்களின் மொத்தத்தொகை 75,000 கோடி டொலர்களிற்கு மேல் ஏறியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார் " பெரும்பாலான குறைவிருத்தி நாடுகளுக்குக் கிடைக்கும் நன்கொடையின் அளவுகள் இப்போது குறைந்து வருகின்றபோது வட்டியில்லாக்கடனும், நீண்டகாலக் கடன்களையும் இந் நாடுகள் பெற்றுவந்தனவெனின் அவற்றைத் திருப்பிக்கொடுக்கவேண்டிய காலம் வந்த பின்னரும் திருப்பிக்கொடுக்க முடியாமல் வேறு தவணைகளைக் கேட்டுக் கொண்டிருக்கின்றன.

iv சர்வதேசப் பொருளாதார நிறுவனங்களின் உதவியுடன் குறைவிருத்தி நாடுகவின் பொருளாதாரத்தைத் தமக்குச் சாதகமாக்குதல்.

சர்வதேச நிதிநிறுவனங்களென்பவை நவ காலனித்துவ நாடுகளின் முதலீடுகளிலேயே ஆரம்பிக்கப்பட்டு அந்நாடுகளிலேயே இயங்குபவையாகக் காணப்படுகின்றதென்பதுடன் அவை அந்நாடுகளினுடைய நலன்களைப் பேணுவதிலேயே குறியாகவும் இருக்கும். இந் நிறுவனங்களாக நாம் பின்வருவனவற்றை முக்கியமாக இனங்காணலாம்:

★ உலக வங்கி (IBRD)

★ சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் (IFC)

★ சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் (IDA

★ சர்வதேச நிதி நிறுவனம் (IMF)

மேற்கூறப்பட்டவற்றில் உலக வங்கியே (World Bank) பெரியதாகவும் அதனைச் சார்ந்ததாகவே ஏனையவை இயங்குவதையும் காணலாம். வளர்ச்சிக்கும் மறுசீரமைப்பிற்குமான சர்வதேச வங்கியே The International Bank For Reconstruction and Development (IBED) 1945ன் பின் உலக வங்கியாக நிறுவப்பட்டதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த உலகவங்கியில் 139 உறுப்பு நாடுகள் உள்ளன. உறுப்பு நாடுகளின் பங்குப்பணம் பாதித்தொகையாகவும் மிகுதி அடகாகவும் உள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு உலக வங்கியானது தனியார் வங்கிகளிலிருந்து கடன் பெறுகிறது. இவையே குறைவிருத்தி நாடுகளிற்கு கடனாகக் [illegible] டன் படுத்தப்படுகின்றது. இவ்பணவுதவி நேரடியாகப் பணமாகக் கொடுக்கப்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறாக அது இறக்குமதிப் பொருளாகவே பெருமளவிற்கு குறைவிருத்தி நாடுகளிற்குள் செல்கின்றன. உண்மையில் உலக வங்கி மேலைத்தேச நிறுவனங்களையும் வங்கிக ளையும் இலாபத்தில் இயக்கவே இயங்கி வருகின்றதெனலாம். உலக வங்கியின் தலை வர்கள் அமெரிக்கராக இருப்பதுவும் அவரை அமெரிக்க ஜனாதிபதியே தெரிவு செய்ய நியமிப்பதுவும் உலக வங்கியில் தாக்கத்தை அதிகரிக்கச் செய்கின்றது. உலகவங்கியா னது வருடமொன்றிற்கு 60 கோடி டொலர் களை இலாபமாகப் பெறுகின்றதென்ற தக வலை அதன் தலைவர் கிளாசனே ஒரு முறை கூறியிருந்தார்.

சர்வதேச நிதிக் கழகம் (International Finance Corporation) IFC என்பதும் குறை விருத்தி நாடுகளின் பொருளாதார மேம் பாட்டிற்காகவென ஆரம்பிக்கப்பட்டாலும் அதுவும் தனியார் நிறுவனங்களின் வளர்ச் சிக்கு உதவிபுரிவதனூடாக உள்நாட்டு மற் மற்றும் வெளிநாட்டு மூலதனத் தேவைக ளைப் பூர்த்திசெய்ய பிரயத்தனமெடுத்துள் ளது. உண்மையில் IFC அந்நிய நிறுவனங் களாக குறைவிருத்தி நாடுகளில் இயங்கு கின்றவற்றுக்கே கடனுதவிகளை அளிக்கின் றனவெனலாம். அத்துடன் உலக வங்கியில் உறுப்புரிமை பெற்ற நாடுகளே இதிலும் உறுப்புரிமை வகிக்கின்றன. இதன்படி IFC 115 உறுப்பு நாடுகளைக் கொண்டு விளங் குகின்றது.

இது போன்றதே சர்வதேச அபிவிருத் திக் கூட்டுத்தாபனம் (International Development Association) - IDA ஆகும். இந்த அமைப்பிடமிருந்து இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், சூடான் போன்ற நாடுகளே அதிக பணம் பெற்றன என்று ஒரு புள்ளி விபரம் தெரிவிக்கின்றது. இந்த IDAயானது உலகவங்கிபோலல்லாமல் குறைந்த வட்டி யுடனான நீண்ட கால்கடன்களை குறை விருத்தி நாடுகளிற்கு வழங்கி வருகின்றதெ னினும் இதன் நடவடிக்கைகளனைத்தை யும் ஏகாதிபத்தியங்கள்தான் கட்டுப்படுத் துகின்றதென்பது எந்தவகையிலும் குறை விருத்தி நாடுகளை உய்யவிடுமென்று எண்ண முடியாமலுள்ளது.

இதைவிட சர்வதேச நிதி நிறுவனம் அல்லது பன்னாட்டு நாணய நிதியம் (International monetry Fund- (IMF) என்ற சர்வ தேச பொருளாதார நிறுவனம் கூட எந்த வகையிலும் முதல் கூறப்பட்ட நிறுவனங் களிலிருந்தும் மாறுபட்டதொன்றாக இயங் கவில்லை, தன்சானியாவின் ஜனாதிபதி திரு.ஜீலியஸ் நயோரேரே கூறுவது போல ஏகாதிபத்திய எண்ணங் கொண்ட நாடுகள் தமது நவ காலனித்துவத்தின் வேகத்தை அதிகப்படுத்துவதற்காக பயன்படுத்தும் ஆயுதமே சர்வதேச நிதிநிறுவனம் எனலாம். உலக வங்கியில் உறுப்பினராக விரும்பும நாடுகள் முதலில் IMF ல் உறுப்பினராக இருப்பது அவசியமானது. ஆகவே சர்வ தேச பொருளாதார நிறுவனங்களென்று இனங்காணப்படுபவை அனைத்தும் ஈவிரக் கமற்ற முறையில் குறைவிருத்தி நாடுக சுரண்டுபவையாகவே காணப்படுகின்றன. சர்வதேச நிதி நிறுவனத்திலிருந்து ராஜினா மாச் செய்த டேவிற்சன் புதோ (லண்டன்) பின்வருமாறு கூறுகின்றார்:

''பசியாலும் பட்டினியாலும் வாடிய லட்சக்கணக்கான ஏழை மக்களின் இரத்தம் படிந்த என் கரங்களைத் தூய்மையாக்க நான் எடுத்து வைக்கும் முதற்படியாக இது தோன்றுகிறது... உங்களுக்குத் தெரியுமா? அந்த இரத்தம் மிக அதிகமானது ஆறாகப் பெருகி ஓடுகிறது. உறைந்து போய் என் உடலெல்லாம் ஒட்டியுள்ளது. உங்களின் பெயராலும் உங்கள் முன்னோடிகளின் பெயராலும் நான் செய்து வந்த காரியங் களால் என்மீது படிந்துள்ள அசுத்தத்தை நீக்கிச் சுத்திகரிக்க இந்தப் பூவுலகிலுள்ள சோப்புக்களனைத்தையும் சேர்த்துப் போட் டாலும் முடியாது என்றே தோன்றுகிறது. (ஆதாரம் உலகவங்கியும் சர்வதேச நிதி நிறுவனமும் - சவுத் ஏசியன் புக்ஸ் வெளி யிட்ட டேவிற்சன் புதோவின் ராஜிநாமாக் கடிதத்திலிருந்து.)

v பல்தேசியக் கம்பனிகளை உருவாக்குவ தன் மூலம் குறைவிருத்தி நாடுகளின் பொருளாதாரத்தைச் சுரண்டுதல்.

செல்வந்த நாடுகளான வடக்கு நாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின்நிறுவனங்கள் குறைவிருத்தி நாடுகளுக் குள் கம்பனிகளை உருவாக்குவதன் மூலம் குறைவிருத்தி நாடுகளின் பொருளாதாரத் தைச்சுரண்டுகின்றது. இந்தநவகாலனித்துவச் செயற்பாட்டைக்கூடியளவில் நன்மைபயக்க வைப்பதாகக் குறைவிருத்தி நாடுகளின் மூல தன வளங்களும், குறைந்த கூலியுடனான உழைப்பாளிகளும்காணப்படுகின்றனர். அமெ ரிக்கா மற்றும் பிரித்தானியா, கனடா, பிரா ன்ஸ், யப்பான், முன்னைய மேற்குஜேர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளின் 500 பல்தேசியக் கம்பனிகள் உலகெங்கும் காணப்படுவதாக ஒரு புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது. இந்தப் பல்தேசியக் கம்பனிகள் குறைவிருத்தி நாடு களிறகுள் புகுகின்றபோது அந்த நாடுகளில் ஏற்கனவே தமது இயலளவுடன் உற்பத்தி செய்த பொருட்களின் சந்தைப்படுத்தல் மிக மோசமான முறையில் அழிக்கப்படுவதுடன் கவர்ச்சியானபல்தேசியக்கம்பனிகளின்உ.திகள் நாடுகளிற்குள் விற்பனையாகின்றன. இவ் வாறான பல்தேசியக் கம்பனிகள் (Multina tional Corporat on M. N. C) குறை விருத்தி நாடுகளின் பொருளாதாரத்தை மட்டுமல்லாமல் அதன் அரசியல் மற்றும் கலை கலாச்சாரங்களையும் நிர்ணயிப்பவை யாக விளங்குகின்றன. பல்தேசியக் கம்பனி களின் சுரண்டலினால் பாதிக்கப்பட்ட குறை விருத்தி நாடுகளின் சுதேசியக் கம்பனிகள் பல்தேசியக் கம்பனிகளால் தத்தெடுக்கப்படு மளவிற்கு வலுவிழந்துவிடும்.

திறந்த பொருளாதாரக் கொள்கை யின் கீழ் இத்தகைய பாதிப்புக்களையே நாம் காணக்கூடியதாக உள்ளது இலங்கை திறந்த பொருளாதாரத்தை அறிமுகப்படுத் தியதனால் தீப்பெட்டி, தையல் நூல், பாதணிகள் போன்ற கைத்தொழில்கள் செயலிழந்ததுடன் பஸ், லொறி உருவ மைப்பு கைத்தொழில் மற்றும் பெருந் தோட்டத்துறைக்குத் தேவையான இயந் திர உபகரணங்களைச் செய்து வந்த பெரிய பொறியியல் நிறுவனங்கள் போன்றன கடும் நெருக்கடிகளை எதிர்நோக்கின் உண்மையில் பல்தேசியக் கம்பனிகளின் நடவடிக்கை களால் குறைவிருத்தி நாடுகள் இன்று தனது பொருளாதார முன்னேற்றம் பற்றி கற் பனை பண்ணிப் பார்க்க முடியாதளவிற்கு மாறிவிடுகின்றது.

(vi) மதங்களின் மூலமாக ஒரு நாட் டின் ஸ்திரத்தைக் குறைத்து, குறைவிருத்தி நாட்டைப் பொருளாதார சுரண்டலுக் காகப் பயன்படுத்துதல்.

நவகாலனித்துவ செயற்பாடுகளை நாம் மதங்களினூடாகவும் நோக்குவது அவசிய மானது. மேலைத்தேச மதப் பிரிவுகளின் பின்னணியில் அரசியல் ஆதிக்கம் செலுத் தியதை நாம் காணமுடியும். இம்மதப் பிரிவினரின் தலைவர்களை தமது உளவுப் பிரிவின் கடமைகளுக்காக வடக்கு நாடுகள் பயன்படுத்துகின்றன. அண்மையில் நடை பெற்ற வளைகுடா யுத்தத்தின்போது ஈராக் ஜனாதிபதி சதாம் குசேன் கிறிஸ்தவப் பாதிரிகளைத் தனது நாட்டைவிட்டு வெளி யேறும்படி கூறியதால் அமெரிக்காவிற்கு ததாம் குசேன் ஒழித்திருந்பி பதுங்கு குழி யைக் கண்டுபிடிக்க முடியாமல் போய்விட்ட தென்று சில அவதானிகள் கூறியதுண்டு.

புதிய மதங்களினால் மூன்றாம் உலக நாட்டு மக்கள் கவரப்படுவது ஆச்சரியமான தொன்றல்ல. குறைந்த வாழ்க்கைத் தரத் தைக் கொண்ட மக்கள் தமக்கு அதிகமாக ஆதரவு தெரிவிக்கும் மதத்தினைப் பின் பற்றுவதில் ஆவலாக இருக்கின்றனர். இது போன்ற பல பலவீனமான நிலமைகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவத னூடாக மதங்கள் குறைவிருத்தி நாடுகளில் வாழும் மக்களின்மீது ஏகாதிபத்தியக் கருத் துக்களைப் புகுத்துவதில் முன்நிற்கின்றனர். இதற்காகப் பெருந்தொகைப் பணத்தினை ஏகாதிபத்தியம் வழங்கியும் வருகின்றது.

ஆகவே குறைவிருத்தி நாடுகளில் பொரு ளாதார' அச்சுறுத்தலை ஏற்படுத்தும் நவ காலனித்துவவாதம் என்ற கட்டுரையை இறுதியாக நோக்கும்போது அது ஏகாதி பத்தியங்கள் காலனியை இழந்த பின்னரும் பொருளாதார ரீதியில் குறைவிருத்தி நாடு களைச் சுரண்டுமொரு உபாயமாகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றது. காலனித்துவத்தின்கீழ் வைத்திருந்த நாடுகளின் சில பிரச்சினைகள் பற்றி ஏகாதிபத்தியம் பதில் சொல்ல வேண்டியிருந்ததாயினும் அந்த நிலைமை நவகாலனித்துவ காலத்தில் இல்லை. அவர்கள் யாருக்கும் பதில் சொல்லத் தேவையில்லை. தாம் நினைத்ததுபோல சுரண்டலை மேற்கொள்ளலாம். குறைவிருத்தி நாடுகளின் நவகாலனித்துவத்திற்கான செயற்பாடாக நாம் ஒன்றை மட்டும் தான் இனங்காண முடியும். அதாவது ஏகாதிபத்தியங்களை மென்மேலும் வாழ வைப்பதற்கு தமது செல்வத்தை அந்நாடுகளுக்கு பக்குவமாக அனுப்பி வைப்பதுதான் குறைவிருத்தி நாடுகளின் செயற்பாடாக இருக்க முடியும்

❀ ❀ ❀


புதிய பழைய பாடல் யாவற்றிற்கும் எம்மை நாடுங்கள், மற்றும் புதிய பழைய பாடல்கள் ஒலிப்பதிவு செய்து கொள்வதற்கும்,

**Kunam** VIDEO CENTRE
24, Clock Tower Road,
JAFFNA.

T. P. 23665

யாழ்நகரில் சிறந்த இடம்

குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்

**Curu**
**Diesel Engineers**
STANLEY ROAD,
JAFFNA.

சகலவிதமான இன்ஜெக்டர் பம்.
இன்ஜெக்டர் நொசல்
திருத்திக் கொடுப்பவர்.

குரு
டீசல் எஞ்ஜினியேர்ஸ்
338, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்று பல்கிப் பெருகி வணிகத்தை வளம்படுத்த
எமது வாழ்த்துக்கள்

# விக்னா கல்வி நிறுவனம்

## 52. ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**(கலை, வர்த்தக வகுப்புக்களுக்கும், O/L வகுப்புகளுக்கும் தனித்துவம் வாய்ந்த ஒரே ஒரு நிறுவனம்.)**

பிரிவு-2 95 கலை, வர்த்தக வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன

94 DAY CLASSES ஆரம்பமாகவுள்ளது.

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

| | Sat. Sun. Classes | Day Classes |
|---|---|---|
| பொருளியல் | திரு. கலாகரன் | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | திரு. தேவா — தாஸ் | திரு. இரகுநாதன் |
| கணக்கியல் | திரு. எஸ். கே. பிரபாகரன் | திரு. எஸ். கே. பிரபாகரன் |
| அளவையியல் | திரு. விக்கி | திரு. ஏ. பிரபாகரன் |
| இந்துநாகரிகம்<br>இந்துசமயம் | திரு. காரை சுந்தரம்பிள்ளை | திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| தமிழ் | திரு. குழந்தை | திரு. குழந்தை |
| புவியியல் | திரு. குணராசா | திரு. குணராசா |
| அரசியல் | திரு. ஜெயகாந்தன் | திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | திரு. சிறீதரன் | திரு. சிறீதரன் |

**O/L**

| | |
|---|---|
| சனி, ஞாயிறு வகுப்புக்கள் | 8-00 — 3-00 |
| EVENING CLASSES | 3-00 — 6-00 |
| DAY CLASSES | 8-00 — 2-00 |

இறுதி பிரிவுகள் அனைத்தும் ஆரம்பமாகிவிட்டன.

ஆண்டு 6-ம், 7-ம், 8-ம், 9-ம், 10-ம் 3-00 — 6-00

**புதிய பிரிவுகள் ஆரம்பமாகிவிட்டன.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுக்கு முற்பட்ட ஈழத்தில் இந்துமதம்

தி. மதிமோகனா

13-ஆம் ஆண்டு கலைப்பிரிவு

இலங்கை வரலாறு கி. மு. 3ஆம் நூற்றாண்டு காலப்பகுதியிலிருந்து தோன்றுகின்றது. இக்காலப்பகுதியில் ஈழத்தில் பௌத்த மதம் அரசியல் ரீதியாகப் பரப்பப்படுகின்றன. எனவே கி. மு. 3ஆம் நூற்றாண்டு காலப்பகுதி வரலாற்றுக்கு முற்பட்ட காலமெனக் கொள்ளப்படுகின்றது. வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுயில் ஈழத்தில் இடம்பெற்ற சமயம் பற்றிய கருத்துக்களை யறித்துகெகள்வதற்கு தெளிவன சான்றுகள் கிடைக்கவில்லை. எனினும் சமகால இந்திய இலச்சினைகள், தருகின்ற குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டும் இலங்கை வரலாற்றாசிரியர்கள், வெளிநாட்டு யாத்திரிகர்கள்தரும் விளக்கங்களிலிருந்தும் ஓரளவுக்கு வரலாற்றுக்கு முற்பட்ட இந்துமதம் பற்றிய கருத்துக்களை அறிந்து கொள்ளலாம்.

பௌத்தம் இலங்கையில் பரப்பப்படுவதற்கு முன்னர் ''குவான் சுவான்'' என்பவன் பின்வரும் விளக்கத்தைத் தருகின்றான். இவன் ஒரு சீன யாத்திரிகனாவான். இவன் ''முன்பு சிங்கள இராச்சியத்தில் ஒழுக்கக்கேடான சமயவழிபாடே காணப்பட்டது. புத்தர் இறந்தபின்னர் மகிந்தன் இலங்கைக்கு வந்து உண்மையான தர்மத்தைப் போதித்தார்'' எனக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. குவான் சவான் கி. பி. 7ஆம் நூற்றாண்டு காலப்பகுதியைச் சேர்ந்தவன். ஆயினும் தனக்குச்கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இக்கருத்தைத் தெரிவித்திருக்கலாம்.

இலங்கையின் வரலாற்றாசிரியர்களுள் ஒருவரான ''கலாநிதி எஸ். பரணவிதான'' என்பவர் கிறீஸ்துவிற்கு மிக முற்பட்ட காலத்திலிருந்தே இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையே வர்த்தகரீதியாக தொடர்புகள் இடம்பெற்றிருக்கவேண்டும். அக்காலப் பகுதியில் பௌத்தமத நம்பிக்கையற்ற வெளிநாட்டவர் சிலரும் இருந்திருக்க வேண்டும். அவர்களுக்குரிய கோயில்கள் மகாசேனன் காலத்திற்கும் (கி.பி.3ஆம் நூ. முன்) அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்'' எனக் கூறுகின்றார். இக் குறிப்புகளிலிருந்தும் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதியிலே இந்துமத வழிபாட்டம்சங்கள் இடம் பெற்றிருத்தல்வேண்டும் என்பதையறிந்துகொள்ளலாம்.

''பீரிஸ்'' என்பவரின் கருத்துப்படி விஜயன் இலங்கைக்கு வருவதற்கு அதிக காலத்திற்கு முன்னரே முழு இந்தியாவின் வழிபாட்டிற்கு உரியவையும், இலங்கையில் கருத்திற் கொள்ளத்தக்கனவுமான 5 சிவதேவாலயங்கள் இருந்தன. அவையாவன- கோணேஸ்வரம், கேதீஸ்வரம், தண்டேஸ்வரம் முனீஸ்வரம், நகுலேஸ்வரம் போன்ற கோயில்கள் எனக் கூறுகின்றனர். இவரது குறிப்பிலிருந்தும், பௌத்தமதம் இலங்கையில் பரப்பப்படுவதற்கு முன்னர் இந்துமதம் சிறப்புற்று இருக்கவேண்டும் என்பதையும் கோயில் வழிபாடு முக்கியத்துவம் பெற்றிருந்தது என்பதையும் அறிந்துகொள்ளலாம்.

யாழ்ப்பாண வைபவமாலை பின்வருமாறு கூறுகின்றது;

''அரசாட்சியை ஆரம்பிப்பதற்கு முன்பே விஜயன் தன் அரசுக்குப் பாதுகாப்பாக நாலு திக்கிலும் நாலு சிவாலயங்களை எழுப்பிக் கொண்டான். கீழ்த்திசைக்கு தம்பலகாமம், கோணேஸ்வரம் நிறுவி மேற்றிசைக்கு திருக்கேதீஸ்வரம் சிவாலயத்தைப் புதுப்பித்து தென்திசைக்கு மாத்தறையில் சந்திரசேகரஸ்வரம், கோயிலை நிறுவி வடதிசைக்கு கீரிமலை, சாரலில் திருத்தம்பலேஸ்வரன், திருத்தம்பலேஸ்வரி கோயிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும், அதன் பக்கத்தில் கதிரை ஆண்டாள் கோயிலையும், கட்டுவித்தார்'' இவையும் ஈழத்தில் சிவவணக்கத்தின் தொன்மையைக் காட்டும் சான்றுகளாகவுள்ளன.

சிங்கள, பாளி நூல்களிலிருந்து விஜயன் கி. மு. 600ஆம் ஆண்டளவில் இலங்கைக்கு வந்ததாகச் சொல்லப்படுகின்றது. விஜயனின் வருகை ஒரு கட்டுக்கதை என்பதில் எவ்வித ஐயமுமில்லை என இக்கால அறிஞர்கள் கருதுகிறார்கள். ஆயினும் இவனுடைய வரலாற்றுடன் இணைத்துப் பேசப்படுகின்ற செய்திகளிலிருந்து இந்துமதம் தொல் இலங்கையில் மிகப்பழைய காலத்திலிருந்தே நிலவிவருகிறது எனத் தெரிகிறது. விஜயனுக்கு முன்பிருந்த காவல் தெய்வங்களாக விபீஷணன், விஷ்ணு, கதிர்காமமுருகன் உப்பளவண்ணன் (வருணன்) ஆகிய தெய்வங்களை பாளி நூல்கள் கூறுகின்றன.

விஜயனுக்குப்பின் ஆட்சி புரிந்தவர்களாக சொல்லப்படும் மன்னர்கள் சிலருடைய பெயர்கள் இந்துப் பெயர்களாக உள்ளன. சிவன், மகாசிவன், மூத்த சிவன் என்பன அப்பெயர்களுள் முக்கியமானவை. பிராமிக் குகைச்சாசனங்களில் (கல்வெட்டு) 'சிவ' என்ற பெயர்கள் இடம்பெறுவதும், 'சிவ' என்ற பெயரைக் கொண்ட நகரங்கள் குறிப்பிடப்படுவதும் குறிப்பிடத்தக்கவை. விஜயன் இலங்கைக்கு வந்தபோது 3 சாதியினர் இலங்கையின் வடபகுதியில் இருந்ததாகக் கூறப்படுகின்றது. இயக்கர், நாகர், வேடர் என்பவர்களே அச்சாதியினராவார். நாகர் எனும் சாதியினர் இலங்கையின் வடபகுதியில் வாழ்ந்தனர். இவர்கள் நாக வழிபாட்டினர். இவர்கள் தமிழர்களின் மூதாதையர் எனக் கொள்ளப்படுகின்றனர். இன்றும் நாக வழிபாடு தமிழர்களிடையே காணப்படுகிறது.

மகாவம்சம் விஜயன் வருகையை வரலாற்றுப் புகழ்மிக்க ஒரு நிகழ்வாகக் கூறினாலும் இதில் கவனிக்கக்கூடிய ஓர் அம்சம் பிராமணர்கள் மிகுந்தளவில் செல்வாக்குப் பெற்றிருந்தார்கள் என்பதாகும். இந்தியாவிலிருந்து வெள்ளரசக்கிளை இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட சமயம் துறைமுகத்திற்கும் நாட்டுக்குமிடைப்பட்டபகுதிகளில் பல இடங்களில் நிறுத்தப்பட்டு சமயாசார முறைப்படி சடங்குகள் இடம்பெற்றதாக அறியமுடிகிறது. மகாவம்சம் இந்நிகழ்ச்சி பற்றிக் கூறுமிடத்து "திவாகர்'' என்ற பிராமணனது கிராமத்திற்குப் போகும் வழியில் நிறுத்தப்பட்டதாகவும் குறிப்பு காணப்படுகின்றது. பிராமணர்கள் பெரும்பாலும் மன்னர்களுக்கு ஆலோசகராகவும், வைத்தியராகவும், அரசசபையில் சமயசடங்கை நிகழ்த்துபவராகவும் விளங்கினார்கள். இவர்கள் பௌத்தம் இலங்கையில் பரப்பப்பட்ட பின்னர் பல குகைகளை பௌத்த சங்கத்திற்குத் தானமாகக் கொடுத்தனர்என கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவற்றிலிருந்தும் பௌத்த மதத்திற்கு முன்னர் இந்துமதம் இலங்கையில் நிலை பெற்றிருந்ததென்பதனை அறியலாம்.

சமகால இந்திய இலக்கியங்களில் இராமாயணம், இலங்கையோடு நெருங்கிய தொடர்புடையதாக விளங்குகின்றது. இலங்கை மன்னன் இராவணன், தாய் தாரை, மாமன் மகன் ஆகியோர் சிவபக்தி உடையவர்கள் எனவும் இராவணன் காலத்திலும், அவனுடைய தம்பி விபீஷணன் காலத்திலும் பல இந்துக் கோயில்கள் அமைக்கப்பட்டன எனவும் குறிப்புக்கள் காணப்படுகின்றன. வரலாற்றுக் காலத்தில் கோணேஸ்வரம் மிகவும் புகழ்பெற்று இருந்தாலும் அதன் தோற்றம் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதியோடு தொடர்புடையதாக உள்ளது. இக்கோயிலையும், இராவணனையும் தொடர்புபடுத்தும் பல மரபு ரீதியான கதைகள் உள்ளன திருக்கோணமலையில் சிறப்புப்பெற்று விளங்கும் வென்னீரூற்று குறிப்பிட்ட சில தெய்வங்களுடன் தொடர்புபடுத்தப் படுவதுடன்

"ஈன்ற தாய்க்கு ஈமக்கடன் செய்த
இலங்கேசன் தொட்ட வெந்நீர் சுனைகள்"

எனவும்,

"அன்னை தாரைக்கு இராவணனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-அந்தியேட்டி செய்யவென்றே
உன்னை அமைத்தது உண்மையதே''

எனவும் கூறப்படுவதிலிருந்து இராவணனுக்கும் கன்னியா வெந்நீரூற்றுக்குமிடையேயுள்ள தொடர்பினையும் சமயரீதியான சடங்குகளைப்பற்றியும் அறியமுடிகிறது. ஞானசம்பந்தர் ''இராவணன் மேலதுநீறு'' எனக் கூறுவதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் சிவ வணக்கத்தோடு இணைந்து காணப்படும் சூலவழிபாடும் வரலாற்று ரீதியில் நோக்கும்போது மிகத் தொன்மையான வழிபாடு என்பது புலனாகும். ஒரு தலைச் சூலமாகிய வேலைப்போன்ற இருதலைச் சூலம், முத்தலைச் சூலங்களும் வழிபாட்டுப் பொருட்களாக வளங்கியதை ஆதி இந்திய நாணயங்கள் எடுத்துக்காட்டுகின்றன. இருதலைச் சூலம் புத்தளம் மாவட்டத்திலுள்ள "பொம்பரிப்பு'' என்ற இடத்தில் பெருங்கற்கால கலாசாரத்தைச் சேர்ந்த பார்வையில் குறியீடாகக் காணப்படுகின்றது. இத்தகைய இருதலைக்குறியீடு ஈழத்து பிராமிச் சாசனங்களிலும் காணப்படுகின்றது. மேலும் பெருங்கற்கால மட்பாண்டங்களில் முத்தலைச் சூலமும் குறியீடாகக் காணப்படுகின்றது. அண்மையில் ஆனைக் கோட்டையில் கண்டெடுக்கப்பட்ட 3 முத்திரைக் குறியீடுகளில் இக்குறியீடு 2இல் காணப்படுவதும் இக் குறியீடுகள் பழைய பாண்டிய ஈழத்து நாணயங்களில் காணப்படுவதும்ஈண்டுகுறிப்பிடத்தக்கது. இவற்றை ஆராய்ந்த பென்சில்வேனிய பல்கலைக்கழக பேராசிரியர் ''பெருங்கற் பண்பாட்டுக் காலத்திலிருந்தே இலங்கையில் திராவிட மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்றும், அவர்கள் பின்பற்றிய மதம் இந்து மதத்தை ஒத்தது'' என்றும் கூறியுள்ளார். எனவே கி. மு. 3000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்துப்பண்பாடு இலங்கையில் நிலவியதென்பது தெளிவாகின்றது.

மேலும் சிவவணக்கத்தோடும்தொடர்புடைய முருகவணக்கம் காணப்பட்டதற்கு புத்தளம் மாவட்டப் பொம்பரிப்பு என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட சேவல்சிலைகளும். வேற்செதுள்களும் சான்றாகும். கல்வெட்டுக்களிலும் வேலா, விசாகா, குமாரா என்ற முருகனது நாமங்கள் காணப்படுகின்றன.

பண்டைய ஈழத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த தாய்த்தெய்வ வழிபாடு, (Worsnip of the Mother Goddess) இன்றும், சிங்கள மக்கள் மத்தியிலும் செல்வாக்குப் பெற்ற பத்தினி வழிபாட்டுடன் தொடர்பு படுவதனைக் காணலாம். நயினை நாகபூஷணியம்மன் தாய்த்தெய்வ வழிபாட்டினதும், நாகவழிபாட்டினதும் சங்கமிப்பை எடுததுககாட்டுகின்றது. எனவேநாகபூஷணியம்மன் கோயில்கூட பௌத்தத்தின் வருகைக்கு முன்பே இவ்வழிபாட்டின் ஸ்தலமாக வளர்ச்சி பெற்றுவிட்டது எனக் கொள்ளலாம்.

இவ்வாறாக, வரலாற்றுச் சான்றுகள் புதைபொருட் சான்றுகள் மூலமாக வரலாற்றுக்கு முற்பட்ட ஈழத்தில் இந்துமதமானது எவ்வாறு வளர்ச்சிபெற்று உயர்ச்சி அடைந்திருந்தது என்பதனை நாம் அறியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Ananthan
# *motors*

23, CLOCK TOWER ROAD,
JAFFNA, SRILANKA.
Phone: 23859

Dealers in:
WATER PUMP SPARES

---

பற்று பலமுறை வளர
எமது வாழ்த்துக்கள்

கல்வியங்காடு
**நட்சத்திர மாணவர் கழகம்**
**O/L** உட்பட ஆண்டு
10, 9, 8, 7, 6 வகுப்புக்கள்
மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது.
**கணிதம், விஞ்ஞானம்**
**S. K. ஜீவமோகன்**

---

# விஜய்
## தையல் நிலையம்

ஆண், பெண் இருபாலரது
உடைகளும் சிறந்த முறையில்
தைத்துக் கொடுக்கப்படும்

மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

---

# புதிய
# உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

**G. A. Q., B. A.**
**1st IN COM.**

**A/L** சனி, ஞாயிறு
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாயத் தொடை அனுமானம்

வை. தவராஜா

Spe, Maths Trained. B.A (Dip in- Ed)

எடுகூற்றுக்களில் இருந்து அல்லது தரவுகளில் இருந்து முடிவினைப் பெறும் அனுமான முறை நியாயத்தொடை அனுமானமுறை நியாயத் தொடை அனுமானம் எனப்படும்.

அனுமானம் இருவகைப்படும்.

1. உடன் அனுமானம்
2. ஊடக அனுமானம்

உடன் அனுமானம்: ஒரு கூற்றில் இருந்து முடிவைப் பெறுதலாகும்.
ஊடக அனுமானம்: இரு கூற்றில் இருந்து முடிவைப் பெறுதலாகும்.
ஊடக அனுமானம் இருவகைப்படும்.

1. தூய நியாயத் தொடை
2. கலப்பு நியாயத் தொடை

## தூய நியாயத் தொடை

நியாயத் தொடையின் இரு எடுகூற்றுக்களும், முடிவுக் கூற்றும் ஒரே வகை எடுப்புக்களினால் அமைந்து வருதல் தூய நியாயத் தொடை எனப்படும்.
இந்நியாயத் தொடையில் மூன்று வகை உள்ளது.

1. தூய அறுதி நியாயத் தொடை
2. தூய நிபந்தனை நியாயத் தொடை
3. தூய உறழ்வு நியாயத் தொடை

## கலப்பு நியாயத் தொடை

நியாயத் தொடையின் இரு எடு கூற்றுக்களும் முடிவுக் கூற்றும் அறுதி, நிபந்தனை, உறழ்வு ஆகிய எடுகூறுக்கள் கலந்திருத்தல் கலப்பு நியாயத் தொடை ஆகும். இந்நியாயத் தொடை மூன்று வகையானதாகும்.

1. கலப்பு நிபந்தனை நியாயத் தொடை
2. கலப்பு உறழ்வு நியாயத் தொடை
3. இருதலைக்கொள்ளி வாதம்

இதனைப் பின்வருமாறு சுருங்கக் கூறலாம்.

**நியாயத்தொடை வகை**

| தூய நியாயத்தொடை | கலப்பு நியாயத்தொடை |
|---|---|
| 1. தூய அறுதி | 1. கலப்பு நிபந்தனை |
| 2. தூய நிபந்தனை | 2. கலப்பு உறழ்வு |
| 3. தூய உறழ்வு | 3. இருதலைக் கொள்ளிவாதம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூய அறுதி நியாயத்தொடை

யாதேனுமொரு பொது அம்சம் கொண்டிருப்பதுடன் தம்மில் ஒன்றினை யாவது நிறையாக உடையதுமான இரண்டு எடுகூற்றுக்களில் இருந்து முடிவினைப் பெற்ற நியாயத் தொடையின் மூன்று கூற்றுக்களும் அறுதி எடுப்பில் அமைந்திருப்பின் அது தூய அறுதி நியாயத் தொடை எனப்படும்.

இதனை பின்வரும் உதாரணத்தின் மூலம் விளக்கலாம்.

எல்லா மனிதரும் இறப்பவர்களாவர்.
இறப்பவர் எல்லோரும் மோட்சமடைவர்.
ஆகவே மோட்சமடைபவர்களில் சிலர் மனிதர்கள்.

## தூய அறுதி நியாயத்தொடையில் உள்ள வாதங்களை வாய்ப்பு பார்த்தல்

ஓர் வாதம் நியாயத்தொடை அனுமானத்தில் ஒன்பது விதிகள் காணப்படுகின்றன. இவ்விதிகளின்படி அமைந்தால் வாய்ப்பானதாக அமையும். இவ்விதிகளை மீறின் வாய்ப்பற்ற வாதமாக அமையும்.

நியாயத்தொடையின் விதிகளை அறியமுன்னர் ஒரு வாதத்தின் அமைப்பில் காணப்படும் பதங்களை நோக்குதல் வேண்டும். இதில் மூன்று பதங்கள் காணப்படும்

1. பெரும்பதம்
2. சிறுபதம்
3. மத்தியபதம்

பெரும்பதம்:- [P] நியாயத்தொடை ஒன்றின் முடிவுக்கூற்றில் பயநிலையாக அமைந்த பதம் பெரும்பதம் எனப்படும். இது பேரெடுகூற்றில் எழுவாயாகவோ பயனிலையாகவோ அமைந்திருக்கும்

சிறுபதம்:- [S] நியாயத்தொடை ஒன்றின் முடிவுக்கூற்றில் எழுவாயாக அமைந்த பதம் சிறுபதம் எனப்படும். இது சிற்றெடுகூற்றின் எழுவாயாகவோ பயனிலையாகவோ அமைந்திருக்கும்.

மத்தியபதம்:- [M] நியாயத்தொடை ஒன்றின் எடுகூற்றுக்கள் இரண்டிலும் பொதுவாக அமைந்த பதம் மத்திய பதமாகும்.

பேரெடுகூற்று:- நியாயத்தொடை ஒன்றில் பெரும்பதத்தையும் மத்தியபதத்தையும் கொண்டு அமைந்த கூற்று பேரெடுகூற்று எனப்படும்.

சிற்றெடுகூற்று:- நியாயத்தொடை ஒன்றில் சிறுபதத்தையும் மத்தியபதத்தையும் கொண்டமைந்த கூற்று சிற்றெடுகூற்று எனப்படும்.

முடிவுக்கூற்று:- நியாயத்தொடை ஒன்றில் சிறுபதத்தை எழுவாயாகவும் பெரும் பதத்தை பயனிலையாகவும் கொண்ட கூற்றுமுடிவுக் கூற்று எனப்படும்.

## பதங்களின் வியாப்தி விதி.-

வியாப்தி என்பது ஒருபதம் குறிக்கும் வகுப்பின் அங்கத்துவத்தை எடுத்துக் காட்டுவது ஆகும். இதில் ஒருபதம் குறிக்கும் வகுப்பின் முழு அங்கத்துவங்களும் எடுத்துக் காட்டப்பட்டிருப்பின் அப்பதம் வியாப்தியுடைய பதம் என்றும் ஒருபகுதி அங்கத்துவங்களை எடுத்து காட்டப்பட்டிருப்பின் அப்பதம் வியாப்தி அற்ற பதம் என்றும் கொள்ளப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரிய அளவையியலில் எடுப்புகள் 4 வகையாக பிரிக்கப்படும். அதாவது A, E, I, O ஆகிய எடுப்பு வகைகளுக்கு வியாப்தி விதியின் செயற்பாட்டை நோக்கு வோமாயின்.

## நிறைவிதி [A] எடுப்பில்

எழுவாய் (S) - வியாப்தி அடைந்திருக்கும். (✓)
பயனிலை (P) - ,, அடையாது (x)

## நிறைமறை [E] எடுப்பில்

எழுவாய் (S) வியாப்தி அடைந்திருக்கும். (✓)
பயனிலை (P) ,, (✓)

## குறைவிதி [I] எடுப்பில்

எழுவாய் (S) வியாப்தி அடையாது (x)
பயநிலை (P) ,, ,, (x)

## குறைமறை [I] எடுப்பில்

எழுவாய் (S) வியாப்தி அடையாது (x)
பயனிலை (P) வியாப்தி அடைந்திருக்கும் (✓)

## இவற்றை ஓரேபார்வையில் பார்ப்போமாயின்

| எடுப்பு | (S) | (P) |
|---|---|---|
| A | ✓ | x |
| E | ✓ | ✓ |
| I | x | x |
| O | x | ✓ |

## நியாயத்தொடை விதிகள்

நியாயத்தொடை அனுமானவிதிகள் 9இதில் முதல் 6பிரதானநியாயத்தொடை விதிகளாகும். ஏனைய 3 கிளைவிதிகளாகும்,

இதில் முதல் இரு விதிகளும் நியாயத்தொடையின் அமைப்பு பற்றி கூறுவதால் அமைப்பு விதிகள் என அழைக்கப்படும்

### அமைப்புவிதி

விதி 1:- நியாயத்தொடை ஒன்றில் 3 பதங்கள் இருக்கவேண்டும்.
(பெரும்பதம், சிறுபதம், மத்தியபதம்)

விதி 2:- நியாயத்தொடை ஒன்றில் 3கூற்றுக்கள் இருக்கவேண்டும்.
(பேரெடுகூற்று, சிற்றெடுகூற்று, முடிவுக்கூற்று)

அடுத்துவரும் இருவிதிகளும்' அளவு விதி அல்லது வியாப்தி விதி எனப்படும்

### அளவுவிதி

விதி 3:- எடுகூற்றுக்களில்ஒன்றிலாவது மத்தியபதம் வியாப்தி அடைந்திருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதி - 4 :- எடுகூற்றுக்களில் வியாப்தி அடையாத எப்பதமும் முடிவுக் கூற்றில் வியாப்தி அடைதல் கூடாது.

அடுத்துவரும் இருவிதிகளும் எடுகூற்றுக்களின் பண்பு பற்றி கூறுவதால் பண்பு விதிகள்என அழைக்கப்படும்.

## பண்பு விதி

விதி - 5 :- எடுகூற்றுக்களில் ஒன்றாவது விதி எடுப்பாக இருக்க வேண்டும்.

விதி - 6 :- எடுகூற்றுக்களில் ஒன்று மறையாயின் முடிவும் மறையாக அமைதல் வேண்டும்.

அடுத்துவரும் 3 விதிகளும் கிளைவிதிகளாகும்.

## கிளை விதி:

விதி - 7 :- எடுகூற்றுக்கள் இரண்டும் குறை எடுப்பாக இருத்தல் கூடாது.

விதி - 8 :- எடுகூற்றுக்களில் ஒன்று குறை எடுப்பாயின் முடிவும் குறை எடுப்பாக அமைய வேண்டும்.

விதி - 9 :- பேரெடுகூற்று குறை எடுப்பாகவும் சிற்றெடுகூற்று மறையாகவும் அமையக்கூடாது.

## விதிமீறல் போலிகள்:

அமைப்பு விதி 1ன்படி 3 பதங்கள் அமைதல் வேண்டும். இவ்விதி மீறப்படின் அதாவது 3 பதங்களுக்கு கூடுதலாக அமையின் நாற்பதப் போலி ஏற்படும்.

இந்நாற்பதப்போலி (1) வெளிப்படையாக நாற்பதங்களினால் ஏற்படும்.

(2) மொழி காரணமாக நாற்பதப்போலி ஏற்படும்.

அமைப்பு விதி 2 மீறப்படுவதால் அமைப்பு விதி மீறப்பட்ட போலி என்பர்.

### வியாப்தி விதி - 1அல்லது நியாயத்தொடை விதி 3 மீறல்

எடுகூற்றில் ஒன்றிலாவது மத்தியபதம் வியாப்தி அடையாதுவிடின் மத்திய பதம் வியாப்தி அடையாத போலி ஏற்படும்.

### வியாப்தி விதி-2அல்லது நியாயத்தொடை விதி 4 மீறல்

எடுகூற்றில் வியாப்தி அடையாத எப்பதமும் முடிவுக்கூற்றில் வியாப்தி அடைதல்கூடாது. எடுகூற்றில் வியாப்தி அடையாத பெரும்பதம் முடிவுக்கூற்றில் வியாப்தி அடைந்திருப்பின் பெரும்பதப்போலியும் எடுகூற்றில் வியாப்தி அடையாத சிறுபதம முடிவுக்கூற்றில் வியாபதி அடைந்திருப்பின் சிறுபதப்போலியும் ஏற்படும்.

### பண்புவிதி -1 மீறல்

எடுகூற்றுக்களில் ஒன்று விதி எடுப்பாக அமையாதுவிடின் அதாவதுவிதி இரண்டும் மறை எடுப்புக்களாயின் இரு எதிர்மறை எடுகூற்றுப்போலி ஏற்படும்.

### பண்புவிதி 2மீறல்

எடுகூற்றுக்களில் ஒன்று மறையாயின் முடிவும் மறையாக அமையவேண்டும், முடிவு விதியாக அமைந்தால் இவ்விதி மீறப்பட்டு விதிமுடிவு எதிர்மறை எடுகூற்றுப் போலி ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் வாதத்தை பிரதான 6விதிகளை கொண்டு வாய்ப்பினைத் துணிவோமாயின்:-

(M)√ (P)X

எல்லா மிருகங்கள் கொம்புடையன (A)

மிருகங்களில் சில பிராணிகளாகும் (I)

(M)X (S)X

ஆகவே சில பிராணிகள் கொம்புடையதாகும் (I)

(S)X (P)X

இந்நியாயத்தொடை 6விதிகளையும் பின்பற்றி அமைந்துள்ளதினால் வாய்ப்பானதாகும்.

கிளைவிதி

ஏற்கனவே உள்ள விதிகளின்படி. வாய்ப்பான நியாயத்தொடை ஒன்று அமைய வேண்டுமாயின் எவ்வாறு இருக்கவேண்டும் எனவும் சில குறிப்பிட்ட அமைப்பில் நியாயத்தொடை அமைந்தால வாய்ப்பானதாக அமையமாட்டாது என்பதை கூறுகிறது

விதி-7 எடுகூற்றுக்கள் இரண்டும் குறை எடுப்பாக இருப்பின் எவ்வித அனுமானமும் பெறமுடியாது.

இவ்விதியின்படி ஏன் பெறமுடியாது என ஆராய்ந்தால் எடுகூற்றுக்கள் இரண்டு குறை எடுப்பான சந்தர்ப்பங்களை நோக்கினால்

| | | | | |
|---|---|---|---|---|
| பேரெடுகூற்று | O | I | I | O |
| சிற்றெடுகூற்று | O | I | O | I |

என்னும் 4 சந்தர்ப்பங்கள் ஏற்படும் முதலாவது சந்தர்ப்பத்தை நோக்கினால் அதாவது இருகூற்று (O,O) ஆக அமைந்தால பண்புவிதி 1மீறப்பட்டு இரு எதிர்மறை எடுகூற்றுப்போலி ஏற்படும

இரண்டாவது சந்தர்ப்பத்தை நோக்கினால் அதாவது இருகூற்றும் (II) ஆக அமைந்தால வியாபதி விதி1 மீறப்பட்டுமத்திய பத வியாபதிஅடையாப்போலி ஏற்படும மூன்றாவது சந்தர்ப்பத்தை நோக்கின பேரெடுகூற்று I ஆகவும் சிற்றெடுகூற்று O ஆகவும அமைந்தால பேரெடுகூற்றில இருபதமும வியாபதி அடையாது ஒன்று மறையாயல முடிவுக்கூற்றும மறையாக அமையும முடிவு மறையாயின பெருமபதம வியாபதி அடையும. எனவே தரவில வியாபதி அடையாத பெரும்பதம் முடிவுக்கூற்றில் வியாப்தி அடைவதால் பெருமபதப்போலி ஏற்படும.

நான்காவது சந்தர்ப்பத்தை நோக்கின் அதாவது பேரெடுகூற்று O ஆகவும் சிற்றெடுகூற்று 1ஆகவும அமைந்தால சிற்றெடு கூற்றில் எப்பதமும் வியாபதி அடையமாட்டாது. பேரெடுகூற்றில மத்தியபதம வியாபதி அடைய பயனிலையாக அமைய வேண்டும. எனவே பெரும்பதம் எழுவாயாக அமையும் ஆகவே அங்கு பெரும்பதம் வியாபதுஅடையாது எடுகூற்றுல ஒன்று மறைஆதலால முடிவும மறையாக அமையும். ஆகவே முடிவுக்கூற்றில பெருமபதம் விருத்து அடையும் எனவே பொரும்பதப்போலி ஏறபடும இதனை தவிர்த்தால மத்திய பதவியாப்தி அடையாப் போலி ஏற்படும். ஆகவே இரணடும குறை எடுப்பாக இருப்பின் எவ்வித அனுமானமும் பெறமுடியாது.

விதி-8:- எடுகூற்றுக்களில் ஒன்று குறையாயின் முடிவும் குறையாக அமைதல் வேண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும். இவ்விதியின்படி ஒன்று குறையாக அமையும் சந்தர்ப்பங்களை நோக்கின்

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|---|
| பேரெடு கூற்று | A | A | E | E | I | O | I | O |
| சிற்றெடு கூற்று | I | O | I | O | A | A | E | E |

முதலாவது சந்தர்ப்பத்தில் சிற்றெடு கூற்றில் எப்பதமும் வியாப்தி அடையாது எனவே சிறுபதப்போலி ஏற்படாது இருக்க முடிவுக்கூற்று குறைவிதியாக அமையும்.

இரண்டாவது சந்தர்ப்பத்தில் வியாப்திவிதி பண்புவிதிகளுக்கு அமைய முடிவுக் கூற்றுகுறை மறையாக அமைதல் வேண்டும்.

மூன்றாவது சந்தர்ப்பத்தில் பண்புவிதி, வியாப்தி விதிகளுக்கு அமைய குறை யாகவே அமைதல் வேண்டும்.

நான்காவது சந்தர்ப்பத்தில் இருஎதிர்மறை எடு கூற்று போலிஏற்படுகின்றது. முடிவு குறை மறையாகவே இருக்க வேண்டும்.

ஐந்தாவது சந்தர்ப்பத்தில் வியாப்தி விதிக்கு அமைய முடிவு குறைவிதி யாக அமைதல் வேண்டும்.

ஆறாவது சந்தர்ப்பத்தில் பண்புவிதி, வியாப்திவிதிக்கு அமைய முடிவுகுறைமறை யாக அமைதல் வேண்டும.

ஏழாவது சந்தர்ப்பத்தில் பண்பு விதிக்கு அமைய முடிவுமறையாக அமைதல் வேண்டும இதனால முடிவுககூற்றில் பெரும்பதம் வியாபதி அடையும பேரெடு கூற் றில ஒருபதமும் வியாபதி அடையாததால் பெரும்பதம போலி ஏற்படும.

எட்டாவது சந்தர்ப்பத்தில் இரண்டும் மறைஆதலால் இரு எதிர் மறைஎடு கூற்றுப் போல ஏறபடுகினறது. எனவே மொததமாக பார்த்தால

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|---|
| மு.கூற்று | I | O | O | O | I | O | O | O |

எனவே முடிவும் குறையாகவே அமைதல் வேண்டும.

விதி 9-:- பேரெடு கூறறு குறையாகவும் சிற்றெடுகூற்று மறையாகவும் இருப்பின் எவவித அனுமானமும் பெறமுடியாது

இவ்விதியின் படி பின்வரும் சந்தர்ப்பங்களை நோக்க வேண்டும்.

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| பேரெடு கூற்று | O | O | I | I |
| சிற்றெடுகூற்று | O | E | O | E |

முதலாவது சந்தர்ப்பத்திலும் 2வது சந்தர்ப்பத்திலும் பண்புவிதி மீறப்பட்டு இரு எதிர்மறை எடு கூற்று போலி ஏற்படும் மூன்றாவது நான்காவது சந்தர்ப்பத்தில் பேரெடு கூற்றில் எப்பதமும் வியாப்தி அடையாது பண்புவிதிப்படி முடிவும் மறையாக அமைதல் வேண்டும். எனவே முடிவுக்கூற்றில் பெரும்பதம் வியாப்தி அடையும். எனவே பெரும்பதப்போலி ஏற்படும்.

எனவே இவ்விதிக்கமைய எவ்வித அனுமானமும் பெறமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்று மென்மேலும் ஜொலிக்க
எமது வாழ்த்துக்கள்!

# ஆர். வி. ஜி. மருந்தகம்

எங்களிடம் குழந்தைகளுக்கான பால்மா வகைகளும்
மற்றும் ஆங்கில மருந்து வகைகளும்
மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

504, ஆஸ்பத்திரி வீதி, — யாழ்ப்பாணம்.

பற்று சிறப்புற
எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்

உங்களுக்குத் தேவையான அனைத்து வார்ப்பு வேலைகளையும்
சிறந்த முறையில் குறித்த தவணையில் செய்து பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டியது ...—

# நிவீதன் வார்ப்பகம்

உரிமையாளர், அப்பன்

ஸ்ரான்லி றோட், - யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனை வளத்திலிருந்து

பயன்மிகு உற்பத்திகள்...

★ கைப்பணிப் பொருட்கள் ★ ரொபி வகைகள் ★ மென்பான வகைகள்
★ உணவுப் பொருள்கள் ★ வீட்டுப் பாவனைப் பொருட்கள்.

யாழ். விற்பனை நிலையங்கள்:

**கற்பகம்**

நல்லூர், சுன்னாகம், யாழ்ப்பாணம், மாலிசந்தி.

**பனை அபிவிருத்திச் சபை**

தேசிய வீடமைப்புச் செயலகம்,

யாழ்ப்பாணம்.



பற்று புதுப்பொலிவுடன் மிளிர எமது வாழ்த்துக்கள்

# புலவர் வீடியோ

உங்கள் மங்கல வைபவங்களுக்கு சிறந்த முறையில்
படம்பிடித்திடவும், பந்தல் வாடகைக்கு பெற்றுக்கொள்ளவும்

**புலவர் வீடியோ**

கோண்டாவில் வடக்கு,

கோண்டாவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பற்று' மலர் நறுமணம் பரப்ப எம் வாழ்த்துக்கள்

# கோடை வெயிலின் சூடு தணியக் குடித்து மகிழ்வீர் உள்ளம் குளிர

## "சுரபி" பானங்கள்; சுவையின் சிரகம்

ஒறேஞ் நெல்லி திராட்சை எலுமிச்சை

பருகிச் சுவைக்கப் பழரசக் கோடியல்

நெல்லிக்கோடியல் ஒறேஞ் கோடியல்

பாவனையாளர்களின் தேவைக்கேற்ப,

பற்பல அளவுகளில் தயாரிப்பு,

உண்ணத் திகட்டாத உயர் சுவைத் தித்திப்புடன்

பழப்பாகு (ஜாம்) வகைகள்

சாப்பாட்டுக்குச் சுவையூட்டும்

தக்காளிக் கூட்டு மிளகாய்க் கூட்டு

## சுரபி பழரசத் தொழிற்சாலை,

**உணவு பதனிடற் பகுதி,**

கோப்பாய் தெற்கு,

கோப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகக் கலை வளர்க:
வாழ்த்துகிறோம்

சங்கீதம் சங்கமிக்கும்
சங்கீத சாம்ராஜ்யம்

**ஷண் றெக்கோடிங் ஸ்பொட்**

கொம்பக்ட் டிஸ்கில் இருந்து
நாடாவில் பாடல்களைப்
பதிவு செய்திட

**ஷண் றெக்கோடிங் ஸ்பொட்**
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(உட்புறம்)

மலர்ந்து வரும்
பற்றுக்கு வாழ்த்துக்கள்

**விஷ்ணு விஹார்**
(சைவ உணவகம்)

163- மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பற்று இதழுக்கு
இதயம் கனிந்த வாழ்த்துக்கள்

**சரஸ்வதி விலாஸ்**
சைவ ஹோட்டல்
பருத்தித்துறை வீதி
கோப்பாய்

இதயம் கனிந்த
வாழ்த்துக்கள்

**சாலினி**
**வியாபார நிலையம்**
ஆடியபாதம் வீதி,
கல்வியங் காடு

உரிமையாளர்
சி. கதிர்காமநாதன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எமது விளம்பரதாரர்களை

அன்புடன் ஆதரியுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகக் கலையை வளர்க்க வளர்ந்து வரும் ''பற்றே'' வருக!

எங்களிடம்

**L. M. L. வெஸ்பா ஸ்கூட்டர்**

**BAJAJ ஆட்டோ திருத்த வேலைகளையும்**

சிறந்த முறையில் திருத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

**ராதா மெக்கானிக்கல் & வெல்டேர்ஸ்**

208 அர்ச்சுனா (ஸ்ரான்லி) வீதி, யாழ்ப்பாணம்

''பற்று'' விருட்சம் போல் மிளிர வாழ்த்துகிறோம்

**கயல்விழி நகைப் பூங்கா**

தங்கப் பவுண் நகை வியாபாரம்

**224 | B, கஸ்தூரியார் வீதி, — யாழ்ப்பாணம்.**

உங்களின் விருப்பத்திற்கு ஏற்ற நவீன டிசைன்களில் நகைகள் செய்து கொடுக்கப்படும். 18 கரட், 20 கரட், றெடிமேட் நகைகள் உடன்பெற்றுக் கொள்ளலாம். 22 கரட் நகைகள் ஓடருக்கு மட்டும் செய்து கொடுக்கப்படும்.

மங்கையர், சிறுமியர்க்கு ஏனைய நவீன டிசைன்களில் வெள்ளி கால் சலங்கைகள் றெடிமேட்டாக உடன் பெற்றுக்கொள்ளலாம்.

தலைச் சோடனைகள் விரும்பிய டிசைன்களில் வாடகைக்குப் பெற ஒரே ஒரு நிறுவனம்.

**கயல்விழி நகைப் பூங்கா**

தரம் நாடுவோர் தவறாமல் நாடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலவிதமான பலசரக்குப் பொருட்களையும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

## விவேகானந்தா ஸ்ரோர்ஸ்

பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு.

உரிமையாளர்:
S. T. விவேகானந்தன்

பற்றே வருக பல புகழ் பெறுக

சகல விதமான பழைய புதிய பாடல்களையும் ஒலிப்பதிவு செய்து பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

## SKY ROSE

COMBACK DISK மூலம்
ஒலிப்பதிவு செய்து கொடுக்கப்படும்.

பதிவு செய்யப்பட்ட ஒலிப்பதிவு நாடாக்கள் பெற்றுக்கொள்ளலாம்.

HOSPITAL ROAD,
JAFFNA.

பற்று இதழுக்கு இதயம் கனிந்த வாழ்த்துக்கள்

பெண்களுக்கான மனையியல், கைத்திறன் டிப்ளோமா பயிற்சிகள்

★ தையற்கலை ★ சமையற்கலை
★ கைப்பணி ★ கேக் ஐசிங்
★ பூவேலை ★ கூந்தல் அலங்காரம்

6 மாத பயிற்சி முடிவில் தேர்ச்சி பெற்றோருக்கு Diploma in Home Economics Fine Arts சான்றிதழ் வழங்கப்படும்.

## சைன் கல்வியகம்

Rgd No. 26163
பருத்தித்துறைவீதி,
கோப்பாய்.

இதயம் கனிந்த நல் வாழ்த்துக்கள்

## சைன் புத்தகசாலை
கோப்பாய்

மாணவர்களுக்கான பாடசாலைப் புத்தகங்கள், உபகரணங்கள். School Bags வீரகேசரி வாரப் பத்திரிகை, சஞ்சிகைகள், பிறந்த நாள் வாழ்த்து மடல்கள், திருமண வாழ்த்து மடல்கள், அன்பளிப்பு பொருள்கள், தொப்பிகள், மற்றும் அழகு சாதனப் பொருள்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள

## சைன் புத்தகசாலை
பருத்தித்துறை வீதி, கோப்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்று சிறப்புடன் வெளிவர
எமது இதயம் கனிந்த
நல் வாழ்த்துக்கள்

FRANK EMPORIUM
SHOES CENTRE
பிராங் எம்போறியம்

16, (38) கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

16, (38) Kasthuriar Road,
JAFFNA.

Prop. A. F. CHANTHIRARAJA

கிறீஸ்த்தவ கல்லூரியின்
வணிக மன்றத்தின் முதலாவது மலரான
பற்று சிறப்புடன் வெளிவர
வாழ்த்துகின்றோம்.

SINGAM'S
TEXTILES

172, K. K. S. ROAD,
JAFFNA.

'பற்று' இதழை வாழ்த்துகிறோம்

றஞ்சனாஸ்

17, 18, 18A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

ஜவுளி உலகின் நவீன முன்னோடிகள்

RANJANAS

17, 18, 18A, Model Market,
JAFFNA.

பற்று இதழ் பொலிவுடன் மலர
எமது வாழ்த்துக்கள்!

தரமான பாண், கேக் பணிஸ்,
பிஸ்கற் வகைகளை சிறந்த
முறையில் தயாரித்து
பெற்றுக்கொள்ள
(டெல்க்கா பேக்கவுஸ்)

கண்ணியம்
பேக்கரி

இருபாலை, கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லூரிக் கீதம்

வாழிய நற்கலைக் கூடமே வாழ்க
வாழிய வாழிய வாழியவே!

களனிகள் சூழ்ந்திடு கோவையம் பதியில்
விளங்குநற் கிறிஸ்தவ கல்லூரி
உண்மையும் நேர்மையும் உவந்திட அளிக்கும்
உன்புகழ் என்றென்றும் வாழியவே (வாழிய)

பல்புகழ் மலிந்திடும் பலபெரி யோர்களைப்
படைத்துநற் பணிபுரிந் தாய்
அவர்மிகு சேவையை ஏத்திடு நன்னிலை
அடைந்த நல்நா டெமதே (வாழிய)

மனதினி லுன்றிறம் மதிப்பொடு நிலைத்திட
மகிழ்வொடு நாம் முயல்வோம்
கலைபல கவினுறக் கனிந்திட நல்வழி
காட்டிடு வாய் தாயே (வாழிய)

நிலமிசை நின்புகழ் நீடு வாழ்க
நின்பணி தொடர்ந்து என்றும் வாழ்க
நிலைபெறு கலைகளின் நிறைகுட மாக
நீயென்றும் வாழிய வாழியவே (வாழிய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி பாராட்டுகிறோம்

கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி வர்த்தக மாணவர் மன்றத்தினராகிய நாம் எமது வர்த்தக மாணவர் மன்றத்தின் சார்பில் வெளியிடும் கன்னிமலரான பற்று நூலை வெளியிடுவதற்கான கருத்தை முன்வைத்தபோது எமக்கு அரிய பல கருத்துக்ளைக் கூறி இன்னூலை சிறப்பாக உருவாக்க உதவிய எமது கல்லூரி அதிபர், உபஅதிபர், பொர்றுப்பாசிரியர், ஆசிரியர்கள் அனைவருக்கும்-

இக் கன்னி மலர் வெளியீட்டிற்கான ஆசிச் செய்திகளை நாம் கேட்ட போது மறுப்பின்றி எமக்களித்த பேராசிரியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், கட்டுரைகளை எமக்களித்த விரிவுரையாளர்கட்கும், மாணவ சகோதர. சகோதரிகட்கும். சிறந்தவற்றை தெரிவு செய்து தந்துதவிய ஆலோசனைக் குழுவினர்க்கும்-

பற்று சிறப்புற வெளிவர தமது விளம்பரங்களைத் தந்துதவிய வர்த்தக ஸ்தாபனத்தினர் அனைவருக்கும் மேலும் எமது பற்றாக்குறையை ஈடு செய்ய பற்றுச் சீட்டுகளை திறம்பட விற்பனை செய்துதந்துதவிய அனைத்து மாணவ சோதரர்க்கும்-

இச் சஞ்சிகைக்கு நிதியுதவி செய்த அதிபர், உபஅதிபர்' ஆசிரியர்கள் அன்பர்கள், அபிமானிகள், மாணவர்கள் அனைவருக்கும், அட்டைப் படத்தையும் வணிக மன்ற இலச்சினையையும் சிறந்த முறையில் உருவமைத்துத்தந்த எமது கல்லூரி ஆசிரியர் திரு. எம், இராதாகிருஷ்ணன் அவர்களுக்கும் -

சிறந்த முறையில் நூல் உருவாக்கம் பெறுவதற்கு ஆலோசனைகள் வழங்கிய எமது கல்லூரி ஆசிரியர் திரு, சி. சிவலிங்கம் அவர்கட்கும் பற்று நூலிற்கான புகைப்படங்களை சிறந்தமுறையில் ஒளி அமைத்துத் தந்த தாரணி புகைப்பட நிலையத்தினருக்கும், சிறந்த முறையில் புளொக்குகளை செய்து தந்த அழகன் புளொக் தயாரிப்பாளர்களுக்கும் இவ் வண்ணமே பூத்த பற்று கன்னி மலரினை குறுகிய காலத்தில் சிறந்த முறையில் அச்சிட்டுத்தந்த தாசன் அச்சகத்திற்கும் பெருமகிழ்ச்சியுடன் வர்த்தக மாணவர் மன்றத்தின் சார்பில் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

நன்றிகள் பற்பல

''பற்று பயன் தரும் ஐயம் எதற்கு''

**செயலாளர்**

வர்த்தக மாணவர் மன்றம்,
யா/கிறீஸ்தவ கல்லூரி,
கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

For all your Optical Requirements
Just Step Into



# S.M.FERNANDO

*Speialists in handling*
*The latest technology*
*In optical work.*
*Eyes Skilfully tested*
*And the right lens*
*For the right vision*
*Chosen.*

## S. M. FERNANDO

**580, Hospital Road,**
(Near Bank of Ceylon)
**JAFFNA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பாய் கிறீஸ்த்தவ கல்லூரி
வர்த்தக மாணவர் மன்றத்தின்
கன்னி முயற்சியால் மலரும்
"பற்று" வண்ண மலராக
நறுமணம் பரப்ப
எமது வாழ்த்துக்கள்


## தாசன் அச்சகம்

மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.


தாசன் அச்சகம், மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org